# வட இந்திய சுற்றுப் பயணமும் 12 சோதிலிங்கங்களின் வரலாறும்
















சிவநெறிச் செல்வர்
ஈரோடு தங்க. விசுவநாதன்



MAP OF
DWADASA
JYOTHIRLING
IN INDIA
HARIDWAR
RUDRAPRAYAGA
KEDARAM
BADARINATH
DELHI
RUSHIKESH
MADHURA
AGRA
AZMER
NIMUCH
BHOPAL
KASI
GAYA
QUAL
ALHABAD
NAGDA
UJJAINI
NAGANATH
ETARSE
VYDYANATH
ZACIDI
OMKARESWAR
KHANDVA
CALCUTTA
NASIK
TRAYAMBAKAM
SOMANATH
AURANGABAD
GHASMESWAR
WARDA
CUTTACK
BHIMASANKAR
PUNA
BOMBAY
SECUNDERABAD
KAZIPETA
PURI
WALTAIR
CURUDIWADI
SALEM SRI GIRI TRAVEL(Regd)
1/7. Rasi Building. IInd Agraharam,
SALEM - 636 001. ☎: 416528
VIJAYAWADA
SRISAILAM
GUNTAKAL
GUNTUR
MADRAS
TIRCHI
MADHURAI
RAMESWARAM
1,SOMANATH
2,SRISAILAM
3,UJJAINI
4,OMKARESWAR
5,VYDYANATH
6,BHIIMASANKAR
7,RAMESWARAM
o,RAGANATH
9,KASI
10,TRAYAMBAKAM
11,KEDARAM
12,GHASMESWAR

# வட இந்திய சுற்றுப் பயணமும் 12 சோதிலிங்கங்களின் வரலாறும்

சிவநெறிச் செல்வர்
**ஈரோடு தங்க. விசுவநாதன்**



வெளியீடு

**கயிலை மணி மனோகர்**

ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ் 2வது மாடி,

1433, மேட்டூர் ரோடு, ஈரோடு

தொ. எண் : 214877, 223580

## நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வட இந்திய சுற்றுப்பயணமும்<br>12 சோதிலிங்கங்களின் வரலாறும் |
| நூலாசிரியர் | : | ஈரோடு தங்க. விசுவநாதன் |
| விலை | : | ரூ. 60/- |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | கயிலை மணி மனோகர்<br>ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ் 2வது மாடி<br>1433 மேட்டூர் ரோடு, ஈரோடு |
| முதற்பதிப்பு | : | ஜூலை 2001 |
| நூல் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | VIII + 220 = 228 |
| மொழி | : | தமிழ் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| தாள் | : | 10.7 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| ஒளி அச்சுக் கோர்ப்பு | : | ஃபாண்ட்ஸ் டீடிபி சர்வீஸ்,<br>276, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,<br>சென்னை-5. Ph : 5974836 |
| அச்சிட்டோர் | : | K.V.S. ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>2/57, ஐயப்பெருமாள் தெரு<br>ராயப்பேட்டை<br>சென்னை - 600 014.<br>தொ.பேசி எண் : 8130877 |

# நூல் ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்புகள்

ஒருங்கிணைப்பாளர் திருமுறைக் கழகம்

செயலர் தொண்டர்சீர்பரவுவார் இளைஞர் கல்வி நிலையம் நடுநிலைப்பள்ளி

நிர்வாகி அருண் குழந்தைப் பள்ளி

**பெயர் ஈரோடு தங்க விசுவநாதன்**

முகவரி 60, கண்ணகி சாலை ஈரோடு 638 001
தொலைபேசி எண் : 251363

பெற்றோர் தொண்டர்சீர் பரவுவார் தங்கவேலனார்
பார்வதி

பணிகள் தமிழகம் மலேசியா, இலங்கை, ஆகிய நாடுகளில் பலமுறை சென்று பெரிய பராணம் திருமுறைகள், இராமாயணம், கந்தப் புராணம், திருக்குறள் பிற இலக்கியங்கள் பற்றி உரைகளும் தொடர்வுரைகளும் ஆற்றுதல் பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சுழலும் சொல்லரங்கம் ஆகியவற்றில் நடுவராக பங்கு கொண்டு செயல்படல், வானொலி, தொலைக்காட்சி களில் உரை, ஈரோடு அருள்மிகு மாமல்லேவரர்

ஆலையத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டு வழிபாடு, ஞாயிறு தோறும் மாலை திருக்குறள் பெரியபுராணம் வகுப்புகள் நடத்துதல் அடியவர் குரு வழிபாடு, அப்பரடிகட்குச் சித்திரைச் சதயத் திருத்தேர் பெருவிழா அதனையொட்டி தமிழக ஓதுவார்களைக் கூட்டி ஐம்பெரும் பண்ணிசைப் பதிகங்கள் ஓதச் செய்து ஆண்டுதோறும் இரண்டு தேவார ஓதுவார்களுக்கு பண்ணிசைமணி என்ற பொற் பதக்கம் வழங்கல். மூவர் தேவாரத் தமிழ் இசைவிழா ஆண்டு தோறும் நடாத்துதல். ஆண்டுதோறும் 100 அன்பர்களோடு திருத்தலப் பயணம் மேற்கொண்டு அவ்வூர் அன்பர்களோடு இணைந்து உழவாரப்பணி, கூட்டு வழிபாடு, சமய உரை நிகழ்த்துதல், திருவீதிப் பணி செய்தல். தில்லை, திருச்செந்தூர், பழனி திருநடைப் பயணம், திரு நெறிய தமிழ்வழி திருமுறைகளைக் கொண்டே திருக்கோயில்களில் தமிழ் வழிபாடு, தமிழ்மறைத் திருமணம், நீத்தார் வழிபாடு, திருக்குட நன்நீராட்டு நடாத்தி வைத்தல் அன்பர்களுக்கு சிவ தீக்கை வழங்கல்

பட்டங்கள் ''சிவநெறிச் செல்வர்'' ''திருமுறைக் காவலர்'' ''திருத்தொண்டர் பாமணி'' இலக்கியத் தென்றல் இலக்கியச் செல்வர் திருமுறைக் கணநாதர் திருமுறைச் செல்வர் பெரிய புராணப் பேரொளி விரிவுரை வித்தகர் உட்பட பல

எழுதிய நூல்கள்

1. தியாகச்சுடர் திருப்பூர் குமரன்
2. திருமுறைத் தேன்துளிகள்
3. தமிழ்ஞானசம்பந்தர்
4. அப்பரடிகள்
5. வெள்ளாளை வேந்தர்
6. மணிவாசகரும் திருவாசகமும்
7. பலன்தரும் பதிகளும்பதிகங்களும்
8. தெய்வச் சேக்கிழார்
9. திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி உரை
10. தமிழ்மறை சிவ வழிபாடு
11. திருக்கோயில் திருமுறை வழிபாட்டு மலர்
12. திருக்கோவில் திருமுறை வழிபாடு
13. திருவிளக்கு வழிபாடு
14. அண்ணாமலையார் தீப ஒளி வழிபாடு
15. அருட்கனி அம்மை
16. திருமுறைச் சிந்தனைகள்
17. பனிரெண்டு ஜோதிலிங்க வரலாறு
18. அடியவர் அறுபத்தி மூவர் வரலாறு வண்ணப்படங்களுடன் (அச்சில்)
19. மேற்படி நூல் ஆங்கில மொழிபெயர்ப்பு (அச்சில்)

துணைவி மல்லிகா

மக்கள் பண்மொழி, M.A., M.Ed.,
ஆரூரான், M.Com.,
புகழேந்தி, M.B.A.,

உடன்பிறந்தோர் செளந்திரவள்ளி, மங்கையர்க்கரசி, திலகவதி, திருவெண்காட்டுநங்கை திருநாவுக்கரசு

| | | |
|---|---|---|
| 1 ம் நாள் | :- | திருவருள் துணையுடன், காலை 6 மணிக்கு ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து கோவை - (குர்லா) லோக்மான்ய திலக் எக்ஸ்பிரஸில் புறப்படுதல். |
| 2 ம் நாள் | :- | காலை 8 மணிக்கு புனே அடைந்து, தனி பஸ்ஸில் புறப்பட்டு, பீம சங்கரம் அடைந்து, பீம சங்கர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து, மஞ்சேர் தங்கல். |
| 3 ம் நாள் | :- | காலை புறப்பட்டு, எல்லோரா, குகைக் கோவில் பார்த்து, குஸ்ணேஸ்வர் அடைந்து குஸ்ருணேஸ்வர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து ஷீரடி சென்று தங்கல் |
| 4 ம் நாள் | :- | காலை மகான், சாய்பாபா தரிசனம் செய்து, புறப்படட்டு நாசிக் அடைந்து, கோதாவரி நதி நீராடி, இராமர் கோவில், சீதாக் குகை பார்த்து, திரியம்பகம் அடைந்து, திரியம்பகேஸ்வர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து தங்கல் |
| 5 ம் நாள் | :- | காலை புறப்பட்டு, மாலை பம்பாய் அடைந்து தங்கல் |
| 6 ம் நாள் | :- | இன்று அவரவர் இஷ்டம் போல் பஜார் பார்த்தல் |
| 7 ம் நாள் | :- | பம்பாயில் முருகன் கோவில், மகா லட்சுமி கோவில், வேல்ஸ் மியூசியம், கேட்வே ஆப் இந்தியா, நாரிமன் பாய்ண்ட், மலபார் ஹில்ஸ், பூட்ஸ் பார்க் பார்த்து, இரவு 7 மணிக்கு ரயிலில் புறப்படுதல் |
| 8 ம் நாள் | :- | முற்பகல் ராஜ்கோட் சேர்ந்து, தனி பஸ்ஸில் புறப்பட்டு, கோமதி துவாரகை அடைந்து தங்கல் |

9 ம் நாள் :- காலை கண்ணனின் ஆறு அடுக்கு மாளிகை கோவில், கண்ணன் ருக்மணியை திருமணம் செய்த கல்யாண துவாரகை, கண்ணன் குசேலகருக்கு பேட்டி அளித்த பேட்டி துவாரகை பார்த்து தாருகாவனம் அடைந்து, நாகேஸ்வர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து, துவாரகை அடைந்து தங்கல்

10 ம் நாள் :- காலை புறப்பட்டு, நவதுர்க்கைகளில் ஒன்றான ஹரசித்தி மாதா, கண்ணன் சிவபெருமானை வழி பட்ட மூலதுவாரகைக போர் பந்தரில் காந்தி பிறந்த இல்லம் கண்ணனை வேடன் அம்பால் அடித்த பால்கா ஆலயம் (முக்தி துவாரகை) கண்ணனை கபிலர் நதிக் கரையில் அடக்கம் செய்த பிரபாச பட்டினம் (மோட்ச துவாரகை) பார்த்து, சோம்நாத் அடைந்து, சர்தார் வல்லபாய் படேல் புதுப்பித்த சோம்நாத் ஆலயம், சோமேஸ்வர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து தங்கல்

11 ம் நாள் :- அதிகாலை புறப்பட்டு, ராஜ் கோட் அடைந்து, நடுப் பகலில் ரயிலில் புறப்படுதல்.

12 ம் நாள் :- அதிகாலை உஜ்ஜயினி அடைந்து, மகாகாளேஸ்வரர் (ஜோதிர்லிங்கம்) விக்ரமாதித்தன் வழிபட்ட மகா காளி தரிசனம் செய்து, புறப்பட்டு மாலையில் ஓம்காரம் அடைந்து, ஓம்காரேஸ்வர், (ஜோதிர் லிங்கம்) மமலேஸ்வரர், தரிசனம் செய்து தங்கல்

13 ம் நாள் :- காலை நர்மதை நதி நீராடி, புறப்பட்டு, இந்தூர் அடைந்து மாலை 3 மணிக்கு ரயிலில் புறப்படுதல்.

**14 ம் நாள் :-** காலை 7 மணிக்கு ஆக்ரா அடைந்து, தாஜ்மகால், தயாள்பாக் பார்த்து, மதுரா அடைந்து கிருஷ்ண ஜன்மபூமி, பிர்லா மந்திர் தரிசனம் செய்து, ஆக்ரா அடைந்து தங்கல்

**15 ம் நாள் :-** அதிகாலை 6 மணிக்கு புறப்பட்டு, 9-30க்கு டெல்லி அடைந்து, பஜார் பார்த்து தங்கல்.

**16 ம் நாள் :-** டெல்லியில் முருகன் கோவில், தாமரைக் கோவில், பிர்லா மந்திர், குதுப்மினார், இந்தியா கேட், இந்திரா காந்தி மியூசியம், காந்தியடிகள் சுடப்பட்ட இடமான பிர்லா ஹவுஸ், (பார்லிமெணட்), ஜனாதிபதி மாளிகை, செங்கோட்டை, தீன் மூர்த்திபவன், View தோற்றங்கள்) சாணக்யபுரி, காந்தி, நேரு, இந்திரா, ராஜிவ் நினைவிடங்கள் பார்த்து இரவு 7 மணிக்கு புறப்படுதல்.

**17 ம் நாள் :-** அதிகாலை 8 மணிக்கு அமிர்தசரஸ் அடைந்து சீக்கியர்களின் பொற்கோவில், ஜாலியன்வாலாபாக் பார்த்து, இரவு 8-00 மணிக்கு ரயிலில் புறப்படுதல்

**18 ம் நாள் :-** காலை ஹரித்துவார் அடைந்து, கங்கை நீராடி மான்சாதேவி ஆலயம், தரிசனம் செய்து, இரவு கங்கா பூஜை செய்து கங்கா தீர்த்தம் எடுத்து தங்கல்.

**19 ம் நாள் :-** காலை புறப்பட்டு, ராம்பூர் அடைந்து தங்கல்

**20 ம் நாள் :-** அதிகாலை புறப்பட்டு, கௌரி குண்ட் அடைந்து, உஷ்ணகுண்டம் நீராடி, குதிரை மீது கேதாரீஸ்வரம் சென்று கேதார்நாத் தரிசன செய்து, ராம்பூர் தங்கல்

21 ம் நாள் :- காலை புறப்பட்டு, பிப்பல் கோட் அடைந்து தங்கல்.

22 ம் நாள் :- அதிகாலை புறப்பட்டு, பத்ரிகாசம் அடைந்து, ஸ்ரீ பத்ரிநாத் தரிசனம் செய்து, பிப்பல் கோட் தங்கல்

23 ம் நாள் :- காலை புறப்பட்டு, ரிஷிகேசம் அடைந்து, ராம்ஜூலா, கங்காதேவி ஆலயம், இராமேஸ்வர் ஆலயம், காளிகம்பளிவாலா ஆஸ்ரமம் பார்த்து, புறப்பட்டு ஹரித்துவார் அடைந்து தங்கல்.

24 ம் நாள் :- இன்று மதியம் ரயிலில் புறப்படுதல்

25 ம் நாள் :- காலை திரிவேணி சங்கமம் நீராடி நேருவின் ஆனந்த பவனம் பார்த்து, இரவு காசி அடைந்து தங்கல்

26 ம் நாள் :- காசியில் கங்கை நீராடி விநாயகர், காசி விஸ்வநாதர், கால பைரவர் விசாலாட்சி அம்மன், அன்ன பூர்ண தேவி, தரிசனம் செய்து மாலை பஜார் பார்த்து ஓய்வெடுத்தல்.

27 ம் நாள் :- காசியில், துர்கா பரமேஸ்வரி, துளசி மாட கோவில் பிர்லாமந்திர், யுனிவர் சிட்டி, சாரனாத் பார்த்து, இரவு புறப்படுதல்.

28 ம் நாள் :- காலை, வைத்தியநாத் அடைந்து, வைத்தீஸ்வரன் தரிசனம் செய்து, புறப்பட்டு, அஸன்சால் அடைந்து ரயிலில் புறப்படுதல்

29 ம் நாள் :- காலை டாடா நகர் அடைந்து ரயிலில் புறபப்படுதல்

30 ம் நாள் :- ரயில் பிரயாணம்

**31 ம் நாள் :-** காலை பூரி அடைந்து, ஜகன்னாதர், சுபத்ரா, கிருஷ்ணர் தரிசனம் செய்து, சிற்பக்கலை நிறைந்த கோனார்க் சூரியன் கோவில் பார்த்து, இரவு புறப்படுதல்

**32 ம் நாள் :-** முற்பகல் ஓங்கோல் அடைந்து பஸ் மூலம் ஸ்ரீசைலம் அடைந்து, ஸ்ரீமல்லிகார்ஜுனர் (ஜோதிர்லிங்கம்) தரிசனம் செய்து தங்கல்.

**33 ம் நாள் :-** காலை புறப்படுதல்

**34 ம் நாள் :-** காலை சென்னை சேர்ந்து மதியம் புறப்படுதல்

**35 ம் நாள் :-** காலை இராமேஸ்வரம் அடைந்து, ஸ்ரீராமநாத சுவாமி தரிசனம் செய்து (ஜோதிர்லிங்கம்) புறப் படுதல்

**36 ம் நாள் :-** காலை ஈரோடு

## வணக்கம்

அபிமங்களாம்பிகை உடனுறை மாமல்லேசுரர் 12 சோதிலிங்க சிறப்பு வழிபாட்டுடன் திருப்பயணம் நிறைவுறுகிறது

# என்னுரை

**பேரன்பு கொண்ட ஆன்மீகப் பெருமக்களே,**

வணக்கம், வாழ்க.

பாரத நாடு பழம் பெரும் நாடு. நீர் அதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர் என்றார் மகா கவி பாரதி. பாரதப் புதல்வர் என்று நாம் பெருமை கொள்வது உலகம் நம்மை மதிப்பது எதனால் என்றால் அது நம் நாட்டின் ஆன்மீக வாரிசுகள் நாம் என்பதே அன்றோ. உலகம் பாரதத்தை எதிர் நோக்குவது எதனை? நம்மிடம் உள்ள உலகியல் ஆக்கங்களைக் கண்டு அல்ல. அவை எல்லாம் அவர்களிடமே ஏராளமாகத் தாராளமாக உள்ளது. ஆனால் அங்கில்லாத ஆன்மீகச் செல்வத்தை, அமைதியை எதிர் நோக்கியே என்பது தெரிகிறது அல்லவா.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம் தாய்த் திருநாட்டில் வாழ்ந்த நம் மூதாதையர் அன்பு, கருணை நேசம், அருள் ஆகிய அறப்பண்புகளை ஆன்மீக அடிப்படையில் செழித்தோங்கச் செய்தனர். இவ்வறப் பண்புகளை வளர்க்கும் கேந்திரங்களாக ஆலயங்களை உருவாக்கி மனித நேயத்தை உயிர் குலஒருமையென வளர்த்து உலகின் முன் செம்மாந்து நடக்கின்ற மாட்சியை ஈந்தனர். இமயம் முதல் குமரி வரை நான் பலமுறை தலப் பயணம், சுற்றுலா என பயணம் செய்துள்ளேன். அதில் நான் கண்டது இப்பெரிய தேசத்தில் வாழ்கின்ற கடைக்கோடி மனிதன் ஆனாலும் மிக உயர்ந்த பட்டம், பதவி, பணம் இவற்றால் உயர்ந்து வாழ்கின்ற மனிதனானாலும் அவர்களின் உள்ள அடி நாதமாக விளங்குவது பக்தி என்பது தான். பல்லாயிரம் ஆண்டுகளாக இப்பாரதத்தை ஒருமைப்படுத்தியது இப்பக்தியே என்பதனையும் உணர்ந்தேன்.

உலகின் மிகத்தொண்மையான நெறியாக விளங்குவது சிவநெறியாகும். சிந்துவெளி நாகரீகத்தின் தொட்டிலில் மிளிர்ந்தது சிவவழிபாடாகும் என்பதனை வெளிநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் ஒருங்கு ஏற்றதாகும். உலகம் முழுமையும் பரவி மக்களினத்தை ஆட்கொண்டது இவ்வழிபாட்டு முறையே என்பதனை வரலாற்று உலகம் ஏற்றிப் போற்றுகிறது. வட அமெரிக்காவில் கொலராடா என்னும் ஆற்றின் கரையில் உள்ள குன்றின் மேல் இன்றும் ஓர் சிவன் கோவில் உள்ளது. இது பத்தாயிரம் ஆண்டு தொண்மை உடையது. மத்தியத் தரைக்கடல் பகுதியில் கிரீட் என்ற தீவு உள்ளது. அங்கு சிவன் என்ற நகர் உள்ளது. அங்கு ஆய்வு மேற்கொள்ளத் தோண்டியபோது எண்ணற்ற சிவலிங்கங்கள் கிடைத்தனவாம். ஆசியாவில் சிவாஸ் என்பது மிகத் தொண்மையான நகரம். உறிட்பைட் என்ற நாட்டின் நாணயத்தில் சிங்க ஊர்தியில் அம்மையும் இடப வாகனத்தில் சிவனும் உள்ள நாணயம் கிடைத்துள்ளது. காலம் கடந்த சிவ பெருமானும் அவனுக்குரிய வழிபாடும் காலம் கடந்தது.

இத்தொண்மையான சிவ வழிபாட்டு நெறி நம் பாரதத்தை இணைத்தது என்றால் அது மிகையன்று. பாரத நாடு மிகப் பெரிய நிலப்பரப்பாக இன்று உள்ளது போல் ஆட்சிவழி என்றும் இருந்தது இல்லை. ஆங்கிலேயர் அதனை உருவாக்கித் தோற்றனர் என்பதே வரலாறு. ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இப்பாரதம் அன்பு நெறியால் வழிபாடுச்செந் நெறியால் ஆண்மீக உணர்வால் கலாச்சாரத்தால் இணைக்கப் பட்ட காட்சியினைத் தெளிவாக உணர்ந்தேன். தமிழகத்தின் தென் கடை கோடியில் ராமநாதர். வடகோடியின் இமயத்தின் சிகரத்தில் கேதார நாதர், கயிலை நாதர் கடைகற்கரையில் அமைந்த ராமநாதரைப்பாடிய ஞானசம்பந்தர் இமய மலைச் சிகரத்தில் உள்ள கேதார நாதரையும் பாடிப் பரவுகின்றார். தெற்கிலும் வடக்கிலும் ஒரே மாதிரியான வரலாறுகள் இதிகாசச் செய்திகள் உள்ளதனை இந்நூலில் பல இடங்களில்

எடுத்துக் காட்டியுள்ளேன். சேரன் செங்குட்டுவன் வடபுலத்தின் மீது படையெடுத்துச் சென்று இமயத்தின் சிகரத்தில் கல்லெடுத்து காவா நாவினரான கன விஜயர் தம் தலை மீது வைத்துக் கொணர்ந்து கற்பரசி கண்ணகிக்குச் சிலை எடுத்தான் என்மீது சிலம்பு காட்டும் வரலாற்றுச் செய்தியாகும். வடபுலத்திற்கு படை நடாத்திச் செல்லும் படைத் தலைவர்களையும் படைவீரர்களையும் ஒருங்கிணைத்து சேரன் செங்குட்டுவன் படை முன்னே உரையாற்றுவான் அப்போது அவன் வீரர்களே நீங்கள் படை எடுத்துச் செல்லும் போது இமயமலையையும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் சிவ புங்கவர்கள் சிவனடியார்கள் சிவயோகிகள் இருப்பர். அவர்களுக்கு எந்த தொல்லையும் தராமல் அவர்களை வணங்கிச் செல்லுங்கள் என்று உரையாற்றுவதாக இளங்கோ அடிகள் கூறுவதாகச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

அதுபோலவே வான்மிக ராமாயணத்தில் அநுமனும் வானரச்சேன்னகளும் தெற்கே சீதையைத் தேடி போகின்றனர். அப்போது இராமபிரான் வானரச் சேனைகளைப் பார்த்து வானர வீரர்களே நீங்கள் தென்னாடு செல்லும் போது பொதிய மலையைக் காண்பீர்கள். அம்மலை தமிழ் முனிவர் அகத்தியர் வாழ்ந்த மலை அம்மலையைச் சுற்றி வணங்கிச் செல்லுங்கள் என்று சொன்னதாக கவி வான்மிக முனிவர். இப்படி நம் பாரதத்தின் வடக்கினையும் தெற்கினையும் அன்பால் பண்பால் மதத்தால் கலாச்சாரத்தால் அவசியம் கருதி முன்னோர் உருவாக்கினர். அது இன்றும் சிதையாமல் சீரோடு இருப்பதனையும் இப்பயணத்தில் கண்டேன். மக்கள் அனைவரும் திருநீறு அணிவது இமயத்தில் பல்லாயிரம் அடி உயரத்தில் செல்லும் நம்மை பார்க்கும் மொழி தெரியாத சிறுவர், பெண்கள், பெரியவர்கள் ஓம் நமச்சிவாய என்னும் மந்திரச் சொல் நம்மை மெய் சிலிர்க்க வைப்பதனை உணரலாம்.

பேசும் மொழியால் பிறந்த மாநிலத்தால் பின்பற்றும் மதத்தால் வேறுபட்டிருந்தாலும் சாமானிய மக்களிடமும் அன்பு, சகோதர நேயம், கருணை இவற்றினைக் கண்டேன். நம் பாரதக் கலாச்சாரம் சகிப்புத் தன்மை, பரஸ்பரம், ஒப்புரவு கொள்வது, விட்டுக் கொடுப்பது, மனிதநேயம், அன்புடைமை ஆகிய தூண்களால் உருவாக்கப்பட்டது என்பதனை இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளேன். அவ்வப்போது சில அத்துமீறல்கள் நடந்தாலும் அதுவே உண்மையாகும். வட இந்தியப் பயணம் மேற்கொள்ளும் அன்பர்களுக்கு இந்நூல் ஓர் சிறந்த வழிகாட்டியாய் அமையும் என்று என்னால் உறுதி கூற முடியும். பாதத்தின் சிறப்புடைய 12 சோதி லிங்கங்களின் வரலாறும் வழித்தடமும் இதில் தெளிவாக எழுதியுள்ளேன் வேற்று மதத்தாரின் கொடுமைகளையும் அவர்கள் உருவாக்கிய கலைச்செல்வங்களையும் விரிவாக எடுத்து கூறியுள்ளேன். தன் இமை மூடும் வரை பயணம் செய்வதே குறிக்கோள் என வாழ்ந்து வழிகாட்டிய என் தந்தை தாய் குரு என விளங்கிய தொண்டர்சீர் பரவுவார் அவர்களுக்கும், அண்மையில் சிவனடி எய்திய என் தாயார் பார்வதி அம்மையாருக்கும் இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன். இந்நூல் சிறப்புற வெளி வரத் தோன்றாத் துணையாய் விளங்கும் பொன்னம்பலக் கூத்தனை என் மனம், மொழி, மெய்யால் வணங்கி மகிழ்கின்றேன். இப்பயணநூல் வடபுலத்தில் பயணம் மேற்கொள்வோர்க்கும் சிறந்த வழிகாட்டியாயும், அவர்தம் சிந்தையிலே சிவ நெறியையும், தேசபக்தியையும் தேச ஒற்றுமையையும் தோற்றுவிக்குமானால் அதுவே இந்நூலின் வெற்றியாகும். எப்பொழுதும் என் நூல்களை வாங்கி ஆதரிக்கும் தமிழ் பெருமக்கள் இந்நூலையும் வாங்கி ஆதரவினை நல்க வேண்டுகின்றேன்.

அன்பு மறவா,

ஈரோடு தங்க. விசுவநாதன்,
60, கண்ணகிசாலை, ஈரோடு - 1
தொ.எண். 251363

# வட இந்திய சுற்றுப் பயணமும் 12 சோதிலிங்கங்களின் வரலாறும்

## அருஉருவத் திருமேனி

ஜோதிலிங்கம் என்பது இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் நாடு முழுக்கப் பரந்து காணப்படுகிறது. சிவலிங்கத் திருமேனி என்பது ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மில்லா அரு உருவத் திருமேனி. உருவத் திருமேனி என்றால் ஒரு புறம் மட்டுமே கரமும் திருமுகமும் திருவடிவும் இருக்கும். ஆனால் சிவலிங்கத் திருமேனி எல்லாத் திசைகளிலும் திருமுகம் கொண்ட பெருமான். நம் திருக்கோயிலில் உள்ள உருவத் திரு மேனிகளில் முன்புறம் மட்டுமே நின்று வழிபாடு செய்தல் வேண்டும். சிவலிங்கத் திருமேனி எல்லாத் திசைகளையும் நோக்கி இருப்பதால் சிவலிங்கத் திருமேனியை எந்தத் திசை யிலிருந்தும் சுற்றி நின்றும் வழிபாடு செய்யலாம் என நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

சிவலிங்கத்தின் உச்சி பாகம் பூமியின் வடிவில் வான் கவிழ்ந் திருப்பது போல அரை வட்ட வடிவமுள்ளது. ஐம்பொறி அடை யாளம் ஏதும் கிடையாது. சுற்றி வளைத்த முகமும் அல்ல. ஆனால் எல்லாத் திசைகளிலும் திருமுகம் கொண்டு உள்ள பெருமான் சிவலிங்கம். கண், காது, கை, கால், முகம் கொண்டிருப்பபது உருவத் திருமேனி ஒன்றுமேயில்லாமல் பரந்த வெளியைக் குறிப்பது அருவம். கை, கால், முகம் அல்லாமல் ஒன்றுமில்லா அருவமும் இல்லாமல் இருப்பதால் சிவலிங்கத் திருமேனி அரு உருவமாகும்.

## ஒளி வழிபாட்டின் கூறு

ஒளிமயமான உருவ நிலை பெற்ற லிங்க வடிவமே ஜோதி லிங்கமாகும். அன்னை பராசக்தி வெவ்வேறு காலங்களில் அடிய வர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வெவ்வேறு பெயர்களில் நாமெல்லாரும் உய்வதற்காக எழுந்தருளி, சிவபெருமானை நோக்கித் தவமிருந்து அப்பெருமானையே திருமணம் செய்து கொள்ள அப்பெருமான் திருமேனியில் மீண்டும் ஒன்றினாள் என்பது நம் பாரதத்தில் நிலவும் பல்வேறு வகையான வரலாறு களாகும். அப்படி அன்னை பராசக்தி பல்வேறு அடியவர்களின் வேண்டுதலுக்காக பல்வேறு பெயர்களோடு தோன்றிப் பெரு மானை நோக்கித் தவமிருந்து அப்பெருமான் திருவடியோடு ஒன்றினார்.

இப்படி இமவான் மகளாகத் தோன்றியபோது பார்வதி என்னும் நாமத்தோடும், தட்சன் மகளாகத் தோன்றிய போது தாட்சாயினியாகவும், பிறிதொரு காலத்தில் துர்க்கா என்ற நாமத் தோடும், சைலா, உமா, காத்திகாயினி, கௌரி முதலிய திரு நாமங்களோடும் பல்வேறு காலங்களில் தோன்றி இறைவனைப் பூசித்துப் பெருமானை நோக்கிப் பன்னெடுநாள் தவம்செய்து அவனோடு மீண்டும் ஒன்றிய போது பெருமான் அனல் பிழம் பாய்த் தோன்றிக் காட்சி கொடுத்தான். அதுகாறும் வழிபட்டு வந்த சிவலிங்கத் திருமேனியில் அம்பிகை அந்த அனற்பிழம்பின் ஆற்றலை எழுந்தருளச் செய்தார். அதுவே ஜோதிலிங்கங்களாகும்.

இப்படி அன்னை பராசக்தி மோனத் தவமிருந்த இடங் களெல்லாம் - இயற்கை அழகும் உயர்ந்த மலை முகடுகளும் மனம் ஒன்றி இருக்கின்ற வகையில் இயற்கைச் சூழலும் மிகுந்த 12 இடங்களில் அமைத்தன. இப்படி அன்னை பார்வதி இன, மொழி வேறுபாடு இன்றித் தவம் செய்த இடங்களே 12 ஜோதி லிங்கத் தலங்களாகும். அன்னை பராசக்தி தவம் இருந்து இறை வன் திருமேனியில் ஒன்றி மங்கைபங்கன் என்னும் நாமம் பெற்

றார். அவ்வடிவம் வடமொழியில் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் என்று வழங்கப்படுகிறது. அன்னை பராசக்தி போன்று நம்முடைய முன்னோர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், முனிபுங்கவர்கள், பெருமானை நோக்கி பன்னெடுங்காலம் தவம் புரிந்தார்கள். அந்தப் பெருமக்களுக்கு இறைவன் ஜோதி வடிவாகக் காட்சி கொடுத்தார்.

நம்முடைய பெருமக்கள் இறைவனை ஜோதி வடிவாகவே கண்டார்கள். சேக்கிழார்பெருமான் 'அலகில் சோதியன்' என்றே அழைத்தார். அருணகிரிப் பெருமான் 'தீபமங்கள ஜோதி' என்றார். மணிவாசகப் பெருமான் 'ஜோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே' என்றார். அவரே 'ஓராதார் உள்ளத்தில் ஒளிக்கும் ஒளியானே' என்றார். அப்பர் அடிகள் 'விறகில் தீயினன்' என்றார். ஞான சம்பந்தப் பெருமான்' அனல் உரு அல்லவோ எம் இறை' என்றார்.

இவற்றால் நாம் தெரிந்து கொள்வது இறைவன் ஜோதி வடிவாகத் தோன்றி அருள் செய்கின்றார் என்கிற பேருண்மை யாகும். அப்படி நம் அருட் பெருமக்களுக்கு இறைவன் அனற் பிழம்பாகக் காட்சி கொடுத்தார். அடியவர்கள் வேண்டிக் கொள்ள அவர்கள் வழிபட்ட சிவலிங்கத் திருமேனியில் அச்சோதி வடிவு கலந்தமையாலும் ஜோதி லிங்கம் என்று அழைக்கப்படுகிறது.

பிரம்மா, விஷ்ணு இருவரும் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதத்திற்கு விடையாகப் பெருமான் ஜோதி வடிவாகத் தோன்றினார். அப்படி அவர்களுக்கு அனற்பிழம்பாய்த் தோன்றிய பெருமான் அந்த அனல் குளிர்ந்த இடமே - குளிர்ந்து மலையான இடமே - தமிழகத்தில் அண்ணாமலை எனவும், வடநாட்டில் பிரம்மபுரி எனவும் வழங்கப்படுகிறது. பெருமான், பிரும்மா விஷ்ணு அடிமுடி தேடியதற்காகத் தோன்றியதே ஜோதி லிங்கம் என்று அழைக்கப்பட்டது. அந்த வகையில் 12 சோதிலிங்கங் களின் வரலாற்றைத் தெளிவாகவும் விரிவாகவும் அறிந்து கொள்ளப் புறப்பட்டுப் பயணம் செய்தபொழுது திரட்டிய விவரங் களை இனிக் காணலாம்.

பயணம் மேற்கொண்ட பயணத்தின் முதல்நாளே 12 சோதி லிங்கத் திருமேனிகட்கும் மங்களாம்பிகை உடனமர்மாமல்லேசுவரப் பெருமானுக்கு சிறப்புத் திருமுழுக்கு வழிபாடு செய்தும், அய்யா தொண்டர்சீர் பரவுவார் அவர்கள் சமாதியில் வழிபாடு செய்து அவர் ஆசியோடு இல்லம் சென்றோம்.

நான் அடுத்த நாள் மாலை 7 மணிக்கு மல்லேசுரப் பெரு மான் திருக்கோயில் சென்றேன். அங்கு கூடியிருந்த கூட்ட் என்னை வியப்பில் ஆழ்த்தியது. திருக்கோயில் முழுக்க பெரும் கூட்டம். அதே அளவு கூட்டம் கோயிலுக்கு வெளியிலும் கூடி யிருந்தது. ஆலயத்தில் இறைவழிபாடு செய்து திரும்பினேன். பழனி சண்முகசுந்தரமும் கௌமார மடம் கெங்காதரன் அவர் களும் மாலை சூட்டித் திருநீறு பிரசாதம் வழங்கி 'வேயுறு தோளி பங்கன்' பாடலையும் திருப்புகழையும் பாடி மெய்சிலிர்க்க வைத் தனர். அன்பர்கள் மாலைகள் சூட்டி நூற்றுக்கணக்கில் எலுமிச்சம் பழம் வழங்கினர். ஈரோட்டில் அன்பர்கள் வழங்கிய எலுமிச்சை நாசிக் வரை கைவசம் இருந்தன.

**பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்து**

பின்னர் கோயிலிலிருந்து திருமுறைப் பாராயணத்துடன் ரயிலடியை நோக்கிச் சென்றோம். ரயிலடியின் நுழைவாயிலில் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சௌந்திரம் அவர்கள் ''ஆண்ட வனும் அடியாரும் வேறல்ல. அடியவரும் ஆண்டவனும் ஒன்றே என்பது நம் மரபு. ஆண்டவனைத் தேடிச் செல்லும் அடியவர் களான உங்களை நான் ஆண்டவனாகவே போற்றி வணங்கு கிறேன்'' என்று வாழ்த்திப் பயணத்தைத் தொடங்கி வைத்துப் பேசியது நெஞ்சை நெகிழ்வித்தது. அம்மையாரின் சிவநெறிப் பற்று போற்றற்குரியது. ரயில் பெட்டியை நோக்கிச் சென்றால் நாம் செல்லும் ரயில் நிற்கும் மேடை (பிளாட்பாரம்) முழுக்க மக்கள் வெள்ளம் 'பரந்த வெண்ணீற்றொளி' என்பாரே சேக்கிழார், அதுபோல ரயில் நிலைய மேடை முழுக்க வெண்ணீற்று மயமாக இருந்தது.

## உணர்ச்சி வெள்ளம்

நான் மிகவும் உணர்ச்சி வயப்பட்டிருந்தேன். பேச நாவெழ வில்லை. மக்கள் இறைவன்பாலும், இறைவன் நாமம் சொல்லும் அன்பர்கள் பாலும் காட்டும் அன்பினை, பக்தியை, உணர்ந்து நெகிழ்ந்து போனேன் என்றாலும் ஆயிரக்கணக்கில் கூடி மாலை யணிவித்து மகிழ்ச்சியும் உணர்ச்சியும் பொங்க "தென் னாடுடைய சிவனே போற்ற! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என முழங்கி தென்னாட்டுச் சிவனை எல்லா நாட்டிலும் தேடிச் செல்லும் நம்மை வழியனுப்ப வந்தவர்க்கு நன்றி சொல்லும் வேளையல்லவா? இச்சமயம் தவறினால் பிறிதொரு சமயம் இது போல் வாய்ப்து அரிதல்லவா? எனவே நாத்தழு தழுக்கக் கூறினேன்; "அன்பார்ந்த பெருமக்களே! தாய்மார்களே! உங்கள் அன்பினை நெஞ்சம் நிறையச் சுமந்து செல்லும் நாங்கள் பயணம் முடிந்து வரும்போது இறைவன் அருளோடு வர ஆசி தாருங்கள். எங்கள் பயணம் சிறக்க நாடோறும் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்யுங்கள். பிரார்த்தனையின் சக்தியால் எதையும் சாதிக்கலாம். அதைவிட வலுவானது உலகில் இல்லை. எனவே எங்களுக்காகப் பிரார்த்தியுங்கள் எனப் பிரார்தத்திக்கின்றேன்!" என்றேன்.

அத்தோடு "நீங்கள் காட்டிய அன்பு மயமான உணர்ச்சி பூர்வமான இவ்வழியனுப்பு விழாவினை வாழ்வில் ஒருநாளும் மறக்க மாட்டோம். அனைவருக்கும் என் வணக்கம். நன்றி" எனக் கூறி முடித்தேன்.

வந்திருநத மக்கள் வெள்ளத்தைக் கடந்து ஏற்காடு துரித வண்டி 9.30 மணியளவில் "தென்னாடுடைய சிவனே போற்றி, என் நாட்டவர்க்கும் இறைவா போற்றி" "கேதாரநாதன் திரு வடிகள் வாழ்க! வாழ்க!!" என்ற அருள் முழக்கத்தோடு ஈரோடு நகரப் புகைவண்டி நிலையத்திலிருந்து புறபப்பட்டது.

## குளியல் பிரச்சனை

அதிகாலை சென்னையைச் சென்றடைந்தது ஏற்காடு துரித வண்டி. இப்பயணம் தொடங்கியபோதே எல்லாரும் மிகவும் பயந்தது. குளிக்க நீர் கிடைக்காது என்ற செய்தியாகும். நம்மில் 15 பேர் சிவ பூஜை செய்பவர்கள்; மற்றும் பலர் சமய தீட்சை வாங்கியவர்கள். காலை உணவு உண்ணாது முதலில் குளிக்க வேண்டும். பின்னர் பூசை முடிக்க வேண்டும். சென்னை சென்ற வுடனேயே குளிக்கும் பிரச்சனை தொடங்கியது.

எவனோ ஒருவன் தனக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது என்றும் அந்தக் கஷ்டம் எப்போது நீங்கும் என்றும் சோதிடரை நாடிச் சென்று கேட்டானாம். அதற்குச் சோதிடர் ''3 ஆண்டு களுக்கு உன் துன்பம் தொடரும்'' என்றாராம். அதன் பின்பேனும் நீங்குமா என்ற பேராவலில் அவன் ''அதன் பிறகு எப்படி யிருக்கும்?'' என்று கேட்க, அதற்கு சோதிடர் ''அதுவே உனக்குப் பழகிவிடும்'' என்றாராம். அதுபோல எங்களுக்கும் குளிக்கும் பிரச்சனை பழக்கமாகிவிட்டது.

## புனாவும் மதுரையும்

புனா என்ற நகரின் பழைய பெயர் புண்ணிய நகரம் என்ப தாகும். புண்ணிய நகரம் என்பது காலப்போக்கில் சிதைந்து புண்ய என்றாகிப் பின் ஆங்கிலேயரால் புனையை என்றாகி அதன் பின்னர் புனா என்றாயிற்று. புனா ஓர் புண்ணிய நகர்தான்.

மராட்டிய மாவீரன் வீர சிவாஜியும், அவனுக்கு அருள் புரிந்த அன்னை பவானியும் 'சுதந்தரம் என் பிறப்புரிமை' என வீர முழக்க மிட்ட லோகமான்ய பால கங்காதர திலகரும் தோன்றிய இந்நகர் புண்ணிய நகர் என்று சொன்னால் தவறேதும் இல்லையல்லவா?

உலகத்திலேயே அழகான திருநகரம் மதுரை மாநகராகும். நம் பாண்டி மன்னனான மலையத்துவச பாண்டியன் ஆலவாய் அண்ணல் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை மையமாக்கி நான்கு திசைகளையும் 12 மாதங்களாகவும் 27 நட்சத்திரங்களையும்

கொண்டு சுற்றிச் சுற்றித் தெருக்களை அமைத்தான். அதனால் எந்த திசையில் எந்த வீதியில் செசன்றாலும் கோயிலை நோக்கி எளிதில் வந்து தேவையான பாதையில் சென்றுவிடலாம். அன்றைய மன்னர்களின் நகர் அமைப்பு (டவுன்பிளேனிங்) முறை வியந்து பாராட்டுதற்குரியது எனவும் உலகிலேயே இது போன்ற அமைப்புள்ள நகரம் வேறேதுமில்லை என்றும், மேலை நாட்டவரும் வியந்து பாராட்டுகின்றனர். அதே போன்று புனாநகரும் வாரத்தின் பெயர்களைக் கொண்டு சனிவார்பேட், ஆதிவார்பேட், மங்கள்வார்பேட், புதவார் பேட் என்று அமைக்கப்பட்டுள்ள சிறந்த நகராகும்.

வீர சிவாஜியின் கோட்டை மிகவும் எடுப்பாகவும் அழகாகவும் உள்ளது. கோட்டை வாயிலில் மாவீரன் சிவாஜியின் வீரத்திரு உருவம் எழில் மிக்கதாகக் காட்சியளிக்கிறது. வண்ண விளக்குகள் கவர்ச்சியாக உள்ளன.

**தவச்சாலை**

இங்கு இன்னும் ஓர் அதிசயம், நம் முருகன் இங்கு கார்த்திகேயன் என்ற பெயரோடு உள்ளார். அங்கு ஒரு சிறப்பு இக்கார்த்திகேயன் திருக் கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பதில்லை. ஆண்களே வணங்குகின்றனர். அன்னை பவானியின் திருக்கோயிலும் சிறப்பானது. அது மட்டுமல்ல, நம் பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகான் பலமுறை சிறையில் தவமிருந்த 'எரவாடா' சிறைச் சாலையும் இங்குதான் உள்ளது. புனாவிலிருந்து 135 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பீமசங்கரம் என்னும் திருக்கோயில், இது நாங்கள் முதலில் வழிபட்ட 12 சோதிலிங்கங்களில் முதலாவதாகும். புனாவிலிருந்து 15வது கிலோ மீட்டரில் இந்திராணி நதி உள்ளது. மழைக் காலங்களில் பெரு வெள்ளம் பெருக்கெடுத்தோடும். நாங்கள் சென்ற போது சிறிதளவு நீரே இருந்தது. அதில் நீராடிக் கரையிலேயே காலை உணவை முடித்து பீமசங்கரம் நோக்கிச் சென்றோம்.

பீமசங்கரம் செல்லும் பாதை கரடுமுரடானது. காடும் மலையும் கலந்தது. வானோக்கி வளர்ந்த மரங்கள் சூழ்ந்த அழகான இடம். காடும் மலையும் கடந்து வந்தேன் என்பது போல் கடந்து சென்றோம். பீமா என்ற ஆற்றின் தோற்றுவாயில் இந்தச் சோதி லிங்கத் தலம் அமைதியான சூழலில் அமைந்துள்ளது. இச்சிவ லிங்கத் திருமேனி ஒரு முழு உயரத்துடன் அதிகப் பருமன் இல்லாமல் அழகோடு விளங்குகிறது. 'போலாசிரி' என்பது பெருமான் எழுந்தருளியுள்ள ஊராகும்.

## புராண வரலாறு

கும்பகர்ணனுக்கும் கற்கபி என்ற அரக்கிக்கும் பிறந்தவன், பீமன் அவன் தன் தாய் வழிப்பாட்டன் மற்றும் தன் முன்னோர், சில முனிவர்களால் கொல்லப்பட்டனர் என்பதை அறிந்து வெகுண்டான். முனிவர் குலத்தையும் அரச குலத்தையும் அடியோடு அழிக்க நினைத்தான். நான்முகனை நோக்கிக் கடும் தவம் புரிந்தான். அவன் அருள் பெற்று சிறந்த வலிமை பெற்றான். பின்னர் பல அரசரை சென்றான். காமரூபத்து அரசனான பிரியதர் மனையும். அவனுடைய மனைவி தட்சணா தேவியையும் சிறையில் அடைத்தான்.

## சிறையிலும் சிவபூசை

இவ்வரசனும் தேவியும் நாடோறும் சிவபூசை செய்த பின்னரே உணவு கொள்ளும் வழக்கம் உடையவர்கள். இவ்வுலகில் தாம் யாக்கை எடுத்ததன் பயன் சிவபூசை செய்தலும், சிவன் அடியாரைப் பேணலுமே என்ற அசையாத நம்பிக்கை உடையவர்கள். மலையே வந்து வீழினும் தன் நிலையினின்றும் வழுவமாட்டார்கள். என்றாலும் அந்தச் சிறையில் என்ன வசதி இருக்கக் கூடும்? மண்ணினால் சிவலிங்கம் செய்த அதில் பெருமானை எழுந்தருளச் செய்தனர். "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு; பச்சிலை இடினும் பரமர்க்கு அஃது ஆமே" என்பன போன்ற மொழிகளை நன்கு உணர்ந்தவர்கள் ஆதலின். தங்

களால் முடிந்த அளவு, ஆனால் மன அளவில் சிவபூசை செய்து வந்தனர். இவர்தம் சிவ பூசையினை அறிந்த அரக்கன் அச்சம் கொண்டான்.

''இவ்வரசன் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்து வரம் பலவும் பெறுவான். சிவனடியார்க்கு இந்த உலகில் கைவராத செயலே இல்லை. அடியவர்க்காக ஆலமே அமுதமாகக் கொண்டவன் சிவபெருமான்; அவனில்லாத ஒரு பொருள் இல்லை. அவன் நினைத்தால் இவ்வுலகம் நொடியில் பொடியாகிவிடும்; மாலறியா நான்முகனும் காணா மலை; தக்கனையும் எச்சனையும் தலையறுத்து தேவர்கணம் தொக்கன வந்தவர்தமைத் தொலைத்தவர்; இப்பெருமானைப் போற்றும் அடியார் திறமும் சொல்லுந்திறமன்று; சந்திரனைத் தேய்த்ததுவும், கதிரோன் பல்லை உடைத்ததும், கலைமகள் மூக்கை அரிந்ததும் சிவபெருமானின் திருமகனாரான வீரபத்திரர்தானே! எனவே அடியாரான இவ்வரசன் நினைத்தால் நம்மை விரைவில் அழித்து விடுவான்'' என்று பலவாறு எண்ணித் துன்புற்றான்.

பின்னர் அவ்வரசனும் தேவியும் சிவபூசை செய்தல் கூடாது என்று ஆணையிட்டான். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். உயிர் போனாலும் போகட்டும்; சிவபூசை செய்யாமல் இருக்க மாட்டோம் என்று சொல்லி அரக்கன் ஆணையை மறுத்துவிட்டனர். அரக்கன் பலவேறு சொல்லி அச்சுறுத்தினான்; அடித்தான்; வதை செய்தான்.

வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்? மால்வரையும் தானம் துளங்கித் தலை தடுமாறில் என்? தண்கடலும் மீனம் படில் என்? வேலை நஞ்சுண்டு ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே என்றும் மண் பாதலம்புக்கு மால்கடல் மூடி மற்று ஏழுலகும் விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சேல் நெஞ்சே! என்று கண்பபாவு நெற்றிச் சுடரான் சூழல் இணைகளையே சிந்தித்து வந்தித்து நின்றனர்.

## வந்தான் சிவன்

தம் ஆணையை மதிக்காத அரசனைக் கொல்ல எண்ணித் தன் வாளை உருவினான். அதற்கு மேல் சிவபெருமான் சும்மா இருப்பாரா என்ன? தன் கழல் எண்ணிடில் அஞ்சுவது யாதொன்று மில்லை; அஞ்சவருவதும் இல்லை என்று தன்னடியார். இருமாந் திருக்கிறார் என்பதை பெருமான் உணரமாட்டாரா என்ன? அடியார்க்காகக் காலனையே காலால் காய்ந்த அப்பெருமான் அரசன் வழிபட்டு ஏந்திய சிவலிங்கத்ததினின்றும் வெளிப்பட்டு பீமனை அழித்தார். அரசன், மக்கள் அனைவரின் வேண்டுகோட் கிணங்க பெருமான் அங்கேயே கோயில் கொண்டார் பீமனைச் சங்கரித்ததால் பீமசங்கரம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

பீமசங்கரம் திருக்கோயில் மிகவும் அழகானது. இக்கோயி லின் கருவறை ஒரு தேர்போல் அமைக்கப்பட்டுள்ளது.

## முப்புரம் எரிந்தது

முன்பொரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித் தியுன்மாலி என்ற அரக்கர்கள் மூவர் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவர் தம் தவத்ததிற்கு இரங்கிய பெருமான் யாது வரம் வேண்டுமெனறு கேட்டான். அப்போது அவர்கள் "இவ்வீரேழு உலகங்களையும் நாங்கள் ஆள வேண்டும். அங்கே செல்ல எங்களுக்கு பபறக்கும்படியான தங்க, வெள்ளி, இரும்புக் கோட்டைகள் வேண்டும்" என வேண்டினர்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பரமன் அவ்வாறே அளித்தோம் எனக் கூறி மறைந்தான். காலம் சென்றது. அவரக்கர் களம் கருணை மறந்தனர். கடவுளைத் துறந்தனர். மக்களுக்கும் தேவர்களுக்கும் சொல்லொணாக் கொடுமைகளைப் புரிந்தனர். மக்களும் தேவரும் பரமனை வேண்டி அழுது தொழுது அரற்றி னர். பெருமான் கருணை கொண்டு அடியவர்களை, அன்பர் களைக் காக்க முடிவு செய்தார்.

சிவன் அம்மூன்று அரக்கர்களை வெல்ல, போர்க்களம் செல்ல தேவர்களை அழைத்து திருத்தேர் அமைக்க ஆணையிட்டான். சந்திர சூரியர்கள் சக்கரமாகவும், பிரம்மா தேர்ச் சாரதியாகவும், மேருமலை வில்லாகவும் வாசுகி எனும் பாம்பு நாணாகவும், திருமால் அம்பாகவும் செயல்பட முடிவு செய்யப்பட்டது. தேரும் தேர்ப்பாகரும் அம்பும் வில்லும் தயாராயின.

என்றாலும் தேவர்களும் திருமாலும் பிரமனும் மற்றையோரும் ''பரமசிவன் என்ன உயர்வு? நம் துணை கொண்டு தான் இம் மூவரையும் அழிக்க வேண்டியுள்ளது? இவரென்ன - முழுமுதற் கடவுள்?'' என எண்ணினர். உள்குவார் உள்கிற்றெல்லாம் உடன் இருந்து அறியும் பெருமான் தேவர்களின் மனக் கருத்தை உணர்ந்தார். இவர்கள் உதவி எத்தகையது என்பதனை உணர்த்த விரும்பி பெருமான் இவர்களது அறியாமையை நினைத்துச் சிரித்து தேர் மீது கால் வைத்தார். தேரின் அச்சு முறிந்தது. அதே விநாடியில் முப்புரமும் எரிந்தது. தேவர்களின் ஆணவமும் குறைந்தது. இதனை மாணிக்கவாசகர் மிக அழகாகக் கூறுவார்;

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற
தச்சு விடுத்தலும், தாமடியிட்டலும்
அச்சு முறிந்ததென்றுந் தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற

எனப் பாடிக்களித்தார்.

### தமிழகத்து வீரட்டமும் பீமசங்கரமும்

நம் தமிழகத்தில் இறைவன் வீரச் செயல்கள் புரிந்த இடங்கள் எட்டாகும். அதிலே ஒன்று முப்புரம் எரித்த வரலாறு நிகழ்ந்த இடமாகப் போற்றப்படுவது அதிகை வீரட்டானம் எனும் அரிய திருத்தலமாகும். அப்பரடிகளின் கடும் நோய் தீர்ந்ததும் அப் பெருமான் 'கூற்றாயினவாறு' என அருந்தமிழ்ப்பதிகம் பாடிய

அருட்தலமாகும். ஞான சம்பந்தருக்குப் பெருமான் நடனக் காட்சியளித்த அற்புதத் தலமாகும். இவ்வரிய திருத்தல வரலாற்றில் முப்புரம் எரித்த வரலாற்று சம்பவத்திற்கு ஒப்ப அதிகை விரட்டானப் பெருமான் கருவறை போர்க்களம செல்லும் தேர் போலச் சக்கரத்தோடு அமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

அதே வரலாற்றினைப் பீமசங்கரத்திலும் கூறி முப்புரம் எரித்த இடம் இது எனக் கூறிகின்றனர். அதே போல் கோயில் கருவறையும் போர்க்களத் தேர் போல் அமைந்துள்ளது. அது மட்டுமல்ல.

## அன்னையின் தவம்

எம்பெருமாட்டி சிவபெருமானை நோக்கி பன்னெடு நாள் தவமிருந்தாள். திருச்செங்கோடு எனும் கொங்கு நாட்டுத் திருத்தலத்தில் பெருமானும் அன்னையின் தவத்திற்கு இரங்கி வெளிப்பட்டு யாது வரம் வேண்டுமெனக் கேட்டார். அதற்குப் பெருமாட்டி ''பெருமானே! உம்மை என்றும பிரியாமல் உம் உடலிலே ஒரு பாதியாக நானிருக்க வேண்டும்'' என வேணடினார். பரமனும் அவ்வாறே அருள் புரிந்து தன் உடலில் சரிபாதியை அம்மைக்கு ஈந்து மங்கை பங்கன் என்னும் திருநாமம் பெற்றார்.

ஆம். நம் தமிழ் மங்கைபங்கனே - மாதொருகூறனே - வடமொழியில் 'அர்த்தநாரி' என அழைக்கப்படுகிறார் ஆண்டுதோறும் திருச்செங்கோடு மலையில் பெருமாட்டி தவமிருந்து இடப்பாகம் பெற்ற விழா இன்றும் சிறப்பாக நடைபெறுகிறது. கருவறையில் ஐந்தரை அடி உயர மங்கை பங்கன் திரு உருவத்தினைக் காண்கிறோம். இதன் அழகில் மயங்கிய ஞானசம்பந்தர் அக்கோலத்தை

வெந்த வெண்ணிறணிந்து
விரிநூல் திகழ் மார்பின் நல்ல
பந்தனவும் விரலார்
ஒருபாகம் அமர்ந்தருளிக்

கொந்தனவும் பொழில் சூழ்
கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார்
அவலம் அறுப்பாரே

எனப் பாடிப் பரவினார். ஆனால் இதே வரலாற்றினை பீம சங்கரத்திலும் கூறி அங்குள்ள சிவலிங்கம் இரண்டு கூறாக இருப்பதனைக் காட்டி ஒரு பகுதி பரமசிவன் மற்றொரு பாதி பார்வதிதேவி என்கின்றார்.

பெருமானுக்கு தங்கக் கவசம் அணிவிக்கின்றனர். அதில் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுரன், பார்வதி என ஐந்து முகங்கள் உள்ளன. பார்க்க மிக அழகாக உள்ளது.

## திருவருளின் செயல்

அங்கு மதியம் 2 மணி வரைதான் பெருமானுக்கு அபிசேகம் நடைபெறுகிறது. அதன்பின் நடைபெறுவதில்லை. எனவே அங்கு செல்வோர் நண்பகல் 1 மணிக்குள் செல்ல வேண்டும். நாங்கள் சென்றபொழுது அக்கோயில் அர்ச்சகர் அன்போடு வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தார். நாம் மொழியால் மாறு பட்டாலும் சிவநெறியால் ஒன்று என்பதனை உணர்ந்தோம். இந்தியில் கூறுவதையெல்லாம் நண்பர் திரு. தங்கவேல் தமிழிலே எனகு மொழி பெயர்த்தார். ஆம். அவர்தான் மொழி பெயர்ப் பாளர். இந்தி தெரியாவிடில் வடபுலத்தில் நமக்கு வேலையில்லை; எவ்வளவு அவர்கள் அன்பு பபாராட்டினாலும் ஆர்வம் காட்டி னாலும் நம்மாலே உணர முடிவதில்லை. இது மொழியின்றி உணர்ச்சிகளே பேசும் புதிய விந்தையாகும்.

அர்ச்சகரிடம் பேசி திருநீற்றால் பெருமானுக்கு திரு முழுக்குச் செய்தோம், ஈரோட்டிலிருந்து புறப்படும் போதே 12 சோதி லிங்கங்களுக்கும் தவறாது திருநீற்றால் திருமுழுக்காட்டி அதனை அன்பர்க்கெல்லாம் அருட்செல்வமாக வழங்குவது என முடிவு செய்து '12 சோதிலிங்கத் திருவருட் செல்வம்' என அச்சிட்ட கூடுகள் தயார் செய்திருந்தோம்.

பெருமானுக்குத் திருநீற்றுத் திருமுழுக்கு செய்து புத்தாடை புனைந்து மலர்களால் நாங்களே அலங்கரித்து பெருமான் அழகினைக் கண்டு களித்து அன்பர்களிடமும் வில்வம், மலர்கள் கொடுக்கப்பட்டு கருவறையில் அனைவரும் நின்று உணர்வு பொங்க உள்ளம் சிலிர்க்க ''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி'' ''உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி'' என்ற இரண்டு போற்றி திருத்தாண்டகங்களையும் சொல்லி அர்ச்சித்து வழிபாடு செய்து நாமே பெருமானுக்கு தூபதீப உணவூட்டல் எல்லாம் செய்து மகிழ்ந்தோம். பின்னர் முப்புரம் எரித்தற்கு அடையாளமான இடமல்லமா? எனவே அங்கு முப்புரம் பற்றிய குறிப்புகள் கொண்ட ஐம்பெரும் பதிகங்களைப் பாடி வழிபாட்டினை நிறைவு செய்தோம். வழிபாட்டிற்குப் பின் வழக்கம்போல் திருக் கோயில் விளக்கம் கூறப்பட்டது.

### ஆமை கூறும் அறிவுரை

கருவறையின் முன் நம் பகுதிகளில் திருநந்திதேவர் இருப் பார். ஆனால் அங்கு புதுமையாக ஆமையின் உருவம் அமைத் துள்ளனர். அதுபற்றிக் கேட்டபோது அந்த குருக்கள் கூறிய விளக்கம் அருமையானது. ''ஆண்டவனை வழிபாடு செய்யும் அன்பர்கள் வெகு வேகமாகச் சென்று அவசர அவசரமாக வணங்கு வது முறையல்ல. அது முழுமையான பலனையும் தராது. அதனால் மக்கள் ஆமைபோல் மிக மெதுவாகப் பெருமான் திருநாமத்தை வாயிலும், அவன் புகழை நெஞ்சிலும், அவன் திருமேனி அழகைக் காண்பதிலுமாக மிக மெதுவாகச் சென்று வழிபட வேண்டும்'' என்றார்.

அது மட்டுமல்ல ஆமையின் இயல்பு தன் கூட்டிற்கு வெளியே தன் நான்கு கால்களையும் வெளியே நீட்டிச் செல்லும்; தனக்கு ஏதேனும் ஆபத்து என்றால் உடனே கால்கள் நான்கையும் தலை யையும் உள்ளே இழுத்துக் கொள்ளும். அதுபோல இந்த உயி ரானது பிறவியாகிய ஆபத்திலிருந்து விலக வேண்டுமானால் ஐம்புலன்களையும் உள்ளே இழுத்து அடக்கி ஆண்டவனை

ஆமைபோல் வழிபட்டால் அவன் அருளை எளிதில் பெறலாம் என்ற உன்னதத் தத்துவத்தை விளக்கவே ஆமையை அமைத்தார் போலும். வள்ளுவப் பெருந்தகையும் இந்த ஆமை உவமை கூறுவதைக் காண்கிறோம் அல்லவா?

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
ஏழுமையும் ஏமாப் புடைத்து.

ஆமையானது ஆபத்து வரும்போது தன் ஐந்து உறுப்பு களையும் எப்படி உள்ளே இழுத்துக் கொள்கிறதோ அதுபோல் ஒரு பிறப்பில் எவன் அவன் தன் ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றை அடக்கிக் கொள்வதில் வல்லவரா கின்றாரோ அவனுக்கு ஏழு பிறப்பும் பாதுகாப்புடையது என்றார் ஆம், ஆமைபோல் புலன்டக்கி வாழ்ந்தால் என்றும் இன்பம் தரும் இறைவனை அடையலாம் என்றார் வள்ளுவர். அதனை வட புலத்துத் திருக்கோயிலில் ஆமையை அமைத்து நமக்கு அறி வுறுத்துகின்றனர்.

## 2

எங்கள் பணத்தின் கதை மீண்டும் தொடர்கிறது. படிப் பதற்குச் சுவையாக இருக்கும் என நம்புகிறேன். நாங்கள் பீம சங்கரத்திலிருந்து மண்மாடு என்னும் ரயில் நிலையத்தை நோக்கிச் சென்றோம். எங்கள் வண்டி முன்னாறிலிருந்து மண் மாடு வந்து சேர்ந்திருந்தது. ரயிலிலேயே உறங்கி காலையில் குளித்து வழிபாடு முடித்து 27 மையல் தொலைவிலுள்ள அவுரங்காபாத் என்ற இடத்தை அடைந்தோம். அவுரங்காபாத் என்ற நகரம் அவுரங்கசீப்பால் உருவாக்கப்பட்ட நகரம்.

### போலி தாஜ்மகால்

அவுரங்காபாத்தில் உயர்ந்த கட்டடங்களும் கோட்டை களும் கண்டு களித்தற்குரியன, இங்கு தாஜ்மஹாலைப் போன்ற ஒரு சிங்காரக் கட்டடம் நம் சிந்தையைக் கவர்கிறது. இதைப்

போலி (டூப்ளி கேட்) தாஜ்மஹால் என்று மக்கள் அழைக்கின்றனர். தோற்றத்தில் கட்டிட அமைப்பு பாணி முறை அனைத்தும் தாஜ்மஹாலைப் போன்றே இருந்தாலும் தாஜ்மஹாலுக்குரிய பேரழகும் கவர்ச்சியும் விலைமதிப்பபற்ற கற்களைப் பதித்த ஆடம்பரமும் இதற்கு இல்லை. இது அவுரங்கசீப்பின் மனைவியான பாத்திமா பேகமின் நினைவாக அவுரங்கசீப்பின் மகன் ஆஷம்ஜா என்பவன் கட்டியிருக்கிறான் என்று சரித்திர ஏடுகள் பேசுகின்றன. இந்த நகரத்திலிருந்து 14 மைல் தொலைவில் உல்தா பாத்தில் அவுரங்கசீப்பின் சமாதி இருக்கிறது.

அவுரங்கசீப் இந்தியாவில் இஸ்லாமிய மன்னர்களில் தலை சிறந்தவர் ஒழுக்கமிக்கவர். ஆடம்பரமற்றவர் மக்கள் சொத்தைத் தன் சொத்தாகக் கருதி சூறையாடாமல் சிக்கனமாக வாழ்ந்தவர். நபிகள் நாயகம் கூறிய நன்னெறியில் நடந்த நல்ல முஸ்லிம். அரசின் கஜானாவில் இருந்து ஒரு காசையும் கூட எடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து தன் வாழ்க்கைச் செலவுக்கும் தான் இறந்த பிறகு எழுப்பப்பட இருக்கும் சமாதிக்கு ஆகும் செலவுக்கு ஆகவும் அரசு நேரம் போல மிஞ்சிய நேரத்தில் தன் கையால் குல்லாய் தைத்து விற்று அதன் வருமானத்திலேயே தன் வாழ்க்கைச் செலவையும் நடத்தி வந்தான் என்றால் அவனுடைய தூய்மைக்கும், நேர்மைக்கும், நாணயத்துக்கும் வேறு என்ன சான்று வேண்டும்? இன்றைய அரசியல்வாதிகளுக்கு அவுரங்கசீப்பின் வாழ்க்கை ஒரு புனிதமான எடுத்துக்காட்டு.

## நீரேற்றும் வழி

தாஜ்மஹால் போன்ற கட்டடத்தின் முன்புறம் மிகச் சிறந்த நீரோடும் பாதை உள்ளது. அந்த நீரோடும் பாதைக்குத் தண்ணீர் வரச் சுமார் 30 அடி பள்ளத்திலே இருந்து தண்ணீர் மேலே கொண்டு வந்து செலுத்துவதற்குச் சக்கரம் வைத்து ஆட்கள் சுற்றுவதன் மூலமாக தண்ணீரை மேலே கொண்டு வந்து அந்தப் பாதையில் செலுத்துகின்ற அமைப்பு அழகாக உள்ளது. அன்றே

நீரேற்றும் முயற்சியில் மனிதச் சக்தியைப் பயன்படுத்தினான் ஆஷம்ஜா இந்த அழகிய கட்டடத்தைக் கண்டு களித்து அங்கிருந்து 14 மைல்தொலைவிலே உள்ள எல்லோரா என்ற மிகச் சிறந்த குடைவரைக் கோயிலைக் கண்டு களிக்கச் சென்றோம்.

## எல்லோரா

எல்லோரா என்கின்ற அழகிய இடம் எல்லா என்ற ஆற்றின் கரையில் இருப்பதால் இந்த இடம் எல்லோரா என்று அழைக்கப் படுகிறது. எல்லா என்ற இந்த ஆறு கங்கையாற்றின் கிளை நதிகளில் ஒன்று. எனவே இதை 'எல்லா கங்கா' என்று மக்கள் அழைக்கின்றனர். எல்லோரா என்பது மிகச்சிறந்த கலை நுணுக் கம் மிக்க குடைவரைக் கோயிலாகும். இப்படிக் குடைவரைக் கோயில்கள் 34 உள்ளன. அவற்றில் 17 குடைவரைகள் இந்து சமயச் சார்புடையவை. 12 புத்தமதச் சார்புடையவை. எல்லாக் குடைவரைகளுமே காணக் கண் கோடி வேண்டும் என வியந்திடும் வகையில் அழகு மிளிரும் சிற்ப வேலைப்பாடு அமையப் பெற்ற இடங்களாகும்.

## கயிலாயநாதர் கோயல்

இதிலே நடுநாயகமாக இருப்பது கைலாயநாதர் திருக் கோயிலாகும். இந்தக் கயிலாய நாதரின் வரலாறு விந்தையானது. நம்முடைய திருமுறைகளில் பெருமக்கள் அனைவரும் சொல்லி உள்ள மிகச்சிறந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது; ஒருநாள் கயிலாய மலையிலே சிவபெருமான் உமாதேவியோடு அமர்ந்து அடியவர்களும் தேவர்களும் வாழ்த்தி வணங்க அருள் பாவித்துக் கொண்டிருந்தார். அப்போது கயிலை மலையின் புறத்தே பறந்து சென்ற இராவணன் தான் பறந்து செல்லத் தடையாக இருக்கிறது; இந்த மலை என்று அந்த வலையை முட்டிப் பெயர்க்கத் தொடங்கினான். இதனை நாவுக்கரசு பெருமான் தன்னுடைய தேவாரத்தில் 'கடுகிய தேர் கயிலாயம் செலாது தடுக்க அதனை எடுத்தான்' எனக் கூறினார்.

## கயிலை மலையும் இராவணனும்

இராவணன் மலையை முட்டிப் பெயர்த்து எடுத்தபோது மலையும் மரங்களும் மாணிக்கக் கற்பாறைகளும் ஆட்டம் கொடுத்தன. ஆடிய ஆட்டம் கண்டு உமை அம்மை அஞ்சினாள். அச்சத்தால் அருகிலிருந்த பரமன் மீது விழுந்து பிடித்தாள். மோனத் தவத்திலிருந்த பெருமான் தன் கால் கட்டை விரலால் மெல்ல அழுத்தினார். அவ்வளவுதான்! பத்துத் தலை இராவணன் மலை அடியில் சிக்கி நொறுங்கி விழி பிதுங்கி பயங்கரமாக அலறினான்; இராவணன் என்ற சொல்லுக்கே பயங்கரமான அழுகை உடையவன் என்று பொருள்.

இராவணன் பட்ட துன்பத்தைக் கண்டு அவன்பால் இரக்கம் கொண்ட ஒரு முனிவர், "சிவபெருமான் சாமகானப் பிரியன். இசை வடிவானவன். நீ சாமகானம் இசைத்தால் இறைவன் கருணையைப் பெற்று இந்த இடுக்கண்ணிலிருந்து விடுபடலாம்" என்று கூறினார் வீணைக்கொடியுடைய வேந்தனான இராவணன் அந்த இடத்தில் வீணைக்கு எங்கே போவான்? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அல்லவா? தன் பத்து தலையில் ஒரு தலையைப் பறித்தெடுத்து இருபது கரத்தில் ஒரு கரத்தை எடுத்துச் செருகி தன் நரம்பையே இணைத்து நாத வெள்ளத்தில் உலகமே மூழ்கும் வண்ணம் சாமகானம் இசைத்தான். இசை வெள்ளத்தில் இதயம் பறிகொடுத்த ஈசன் அழுத்திய கால்களைச் சற்று தளர்த்த மலையடியில் சிக்கித் தவித்த இராவணன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று எழுந்து ஓடினான். இந்த வரலாற்றை ஓவியமாக - காவியமாக - கவிதையாக நாவுக்கரசு பெருமான்;

"மருவுற்ற மலர்க்குழலி மடவான்
அஞ்ச மலை குலுங்க திசை நடுங்க
செறுத்து நோக்கி செருவுற்ற வால்
அரக்கன் விழிவான் மாள திருவடியில்
விரல் ஒன்றால் அலற ஊன்றி"

என அழகாகப் பாடி மகிழ்கிறார். அப்பர் அடிகளின் இந்த அற்புதப் பாட்டைப் படித்த ஒரு கலைஞன் சோழநாட்டுத் திருக்கோயி லான பழையாறைக் கோயிலிலே சிற்பமாக வடித்தெடுத்தான். அந்த அற்புதக் காட்சியை வடநாட்டிலுள்ள விந்தியத்திற்குத் தெற்கே எல்லோராகுடையவரையிலும் காண முடிகிறது. இந்த அற்புத சிற்பம் உள்ள இடமே கயிலாய நாதர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் குடைவரையைக் காண்பவர்கள் மலையைக் குடைந்து எடுத்த ஒன்று என்று எண்ண இயலாத வாறு மிகப் பொலிவோடும் அழகோடும் தனித்து விளங்குகிறது.

## விண்ணிலிருந்து வந்த சிற்பி

மற்ற குடைவரை போல மண்ணிலே இருந்து மனிதன் பக்கவாட்டில் இருந்து குடைந்தெடுக்கப்பட்டதல்ல இது.

இக்குடைவரையை உருவாக்கிய சிற்பி வான் உலகிலிருந்து இறங்கி இருக்க வேண்டும். அப்படி மலை முகட்டில் இறங்கிய மாமனிதன் மலையின் உச்சியில் இருந்து மலையை வெட்டிச் செதுக்க முயன்றிருக்கிறான். அப்படிச் செதுக்கியே மலை முகட்டி லிருந்து மண்ணுக்கு வந்திருக்கிறான். எனவே சாரம் கட்ட வேண்டிய தேவையே இல்லாமல் போயிற்று.

இக்குடைவரையை உருவாக்க 100 வருஷமாவது ஆகி யிருக்க வேண்டும் என்றும் இக்குடைவரையைக் குடைய கிட்டத் தட்ட 300 லட்சம் கன அடி அளவுக்குக் கற்கள் அப்புறப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்றும் கட்டட நிபுணர்கள் கணக்கிட்டுள்ளனர் என்றால் இந்தக் குடைவரை எவ்வளவு பிரும்மாண்டமானது என்பது விளங்கும். இது சிற்ப உலகின் மகத்தான சாதனை.

இந்தக் குடைவரையின் முன்னால் நின்றபோது மனக் கண் ணின் முன்னால் பல்லாயிரம் சிற்பிகளின் ஒளிமிகுந்த சிற்றுளி களின் ஓசை கேட்டது. அவர்கள் சிந்திய இரத்தத் துளிகள் என் கண் முன்னே காட்சி அளித்தன. பல்லாயிரம் சிற்பிகள் சிந்திய

இரத்தமும் கொட்டிய வியர்வையும் உழைப்பின் உயர்வையும் எண்ணி எண்ணி மனித குலத்தின் முயற்சியை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

## திருமகள் திருக்கோலம்

இந்தக் கயிலாயநாதன் ஆலயத்திற்குள்ளே நுழைந்ததும் அழகான தாமரைக் குளம். அதன் நடுவே மலர்ந்து விரிந்த செந்தாமரை. அந்த செந்தாமரையின் மீது நான்கு கரத்தோடு திருமகள் வீற்றிருக்க அந்தப் பெருமாட்டியை நீராட்ட பக்கத்துக்கு இரண்டாக ஒவ்வொரு யானையும் ஒன்றன் மீது ஒன்றாக நின்றிருக்கக் குளத்திலிருக்கின்ற ஒரு யானை மேலுள்ள யானைக்கு நீர் எடுத்துக் கொடுக்க அடுத்த யானை அதை வாங்கி அபிசேகம் செய்யும் அற்புதக் காட்சி அழகான சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இன்று நம் தாய்மார்கள் கழுத்தில் அணியும் கஜலட்சுமி பதக்கத்துக்கு முன்னோடி இந்த எல்லோரா சிற்பமே. துவார பாலகரர் இருவர் இருமருங்கும் இருப்பதனைக் காண்கிறோம். அவையிரண்டும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் துவார பாலகரை விடப் பெரியன. கங்கை, யமுனை, சரஸ்வதி சிற்பங்கள் உள்ளன. இவை குடைவரையின் மேற்கு நோக்கி உள்ளன.

நாம் வலப்புறமாகத் திரும்பி நடந்தால் விஸ்தாரமான பெரிய பிராகாரம் தெரியும். அப்பிராகாரம் 250 அடி நீளம் 150 அடி அகலம் உள்ளது. வடக்குப் பிராகார ஆரம்பத்திலும் ஒவ்வொரு யானையும் துவஜ ஸ்தம்பமும் உள்ளது. இதில் துவஜ ஸ்தம்பத்தின் உயரம் 45 அடி. அங்குள்ள யானைச்சிலை கால்கள் ஒவ்வொன்றும் நம் திருமலை நாயக்கர் மகால் தூண் போன்று உள்ளது. கயிலாய நாதர் கோயில் 150 அடி நீளம், 100 அடி அகலமும், 100 அடி உயரமும் உடையதாக உள்ளது. இந்த பிரதான கோயில் நம் சோழ நாட்டுக் கோயில் போன்று 25 அடி தூரம் ஏறி உள்ளே செல்ல வேண்டும். இக்கோயிலின் தென் புறச்சுவரில் இராவணன் கயிலையை எடுத்த சிற்பம் உள்ளது.

**கல் படைத்த கவிதை**

"கருத்தவன் கண்டு வந்த கயிலை மலையைக் கையால்
மறித்தலும் மங்கை அஞ்ச வானவர் இறைவன் நக்கு
நெறித்தொரு விரலால் ஊன்ற நெடுவரை போன்று வீழ்ந்தான்"

- என்ற அப்பரின் அமுதப் பாடலுக்கு கல்லிலே காவியமாக வடிவம் கொடுத்தான் அந்தக் காலத்துச் சிற்பி. இந்தச் சிற்பத்திலே ஒரு சிறப்பு நவரசங்களையும் தேக்கிக் கொடுத்திருக்கிறான். சாந்தத்தை சிவனுடைய வடிவிலே காண்பித்தவன், அந்தச் சிவனை அணைக்கும் பார்வதியின் முகத்தில் சிருங்கார ரசத்தை வடித்தெடுத்தான். விழி பிதுங்கி அலறும் இராவணன் முகத்திலே பய உணர்வைக் காண்பித்தான். கயிலை மலையிலே உள்ள தேவர்களின் முகத்திலே எஞ்சிய ரசங்களை எல்லாம் வடித்தெடுத்தான். மரங்களிலே ஓடி ஒதுங்கும் மந்திகள், அச்சத்தோடு அஞ்சி ஒதுங்கும் சேடிப் பெண்கள் என்ற சிற்பங்கள் எல்லாம் நம் சிந்தனையைக் கொள்ளை கொள்கின்றன. கல்லில் வடிக்கப் பெற்ற இசச் சிற்பங்களின் அழகை, அற்புதத்தைச் சொல்லில் வடிக்க எனக்கு ஆற்றல் இல்லை. நேரில் காண்பதின் மூலமே முழுமையாக உணர முடியும்.

**கயிலாய நாதனைக் காணலாமே**

சிற்பத் திறத்தை சிந்தையை விட்டு அகல பக்கத்திலே உள்ள படிகளிலே ஏறிச் சென்று அங்குள்ள கயிலாய நாதனைக் கண்டு வணங்கலாம். நாம் வந்து சேரும் இடம் மணி மண்டபம்; அம்மண்டபத்தை 6 தூண்கள் தாங்கி இருக்கின்றன. அதனை அடுத்த கீழ்ப்புறத்திலேதான் கயிலாய நாதர் இருக்கிறார். இந்த சிவலிங்கத் திருமேனி 7,8 அடி உயரம் உள்ளது. நம் நாட்டுக் கோயிலைப் போல் ஆவுடையார் வட்ட வடிவமாக இல்லாது சதுர வடிவிலே உள்ளது. பொங்கழல் உருவமாக இருக்கிற பெருமானையே லிங்கோற்பவர் என்று குறிப்பிட்டு அரு உருவ வழிபாட்டை அறிமுகப்படுத்திய நம் ஆன்றோர்களின் பெருமைதான்

என்னே கர்ப்பக் கிருகத்தின் விமானம் நில மட்டத்திலிருந்து 96 அடி உயரம் உள்ளது. இம்மண்டபத்தின் விமானத்தின் வழியே வந்தால் கயிலாய நாதர் கோயிலின் முழுத் தோற்றத்தையும் படம் எடுக்கலாம். இதன் முன்னே அற்புதமான அழகான மிகப்பெரிய நந்தியையும் பெருமானையும் காணலாம். அடுத்தடுத்த குடை வரையை நான் உங்களுக்குக் காட்ட வேண்டாமா?

## சிற்பக் குவியல்

இந்தக் கயிலாய நாதர் கோயிலில் மண்டப வெளிப்புறச் சுவர்களில் இராமாயண, பாரத இதிகாச வரலாற்றுச் சிற்பங்கள் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. மண்டபச் சுவர்களில் அர்த்தநாரி; அடங்காத வேகத்தோடு வரும் கங்கையாற்றைத் தலைமுடியில் தாங்கும் கங்காதரன், முப்புரம் எரித்த திரிபுராந் தகர், ஹரியும், ஹரனும் ஒன்றெனக் காட்டும் சங்கர நாராயணர் திருக்கோலத்தை எல்லாம் கண்டு வணங்கி வெளியே வந்தால் ஓர் அந்தப்புரத்தைக் காணலாம். அதிலே அரசமாதேவியும் அரசனும் சேடியரும் நிற்கின்ற அற்புதத்தைக் காணலாம்.

அடுத்த குடைவரையில் இறைவன் இறைவி திருமணக் 'கோலம் தேவர்கள் புடைசூழ தேவமாதர்கள் இணைந்து நிற்க இருக்கின்ற அற்புதச் சிற்பங்கள் மிளிர்கின்றன. அந்த தேவ மாதர்கள் அணிந்திருக்கும் நகைகளின் வடிவங்கள் (டிசைன்) ஆயிரமாயிரம் ஆகும். இன்றைக்கும் டிசைன் வேண்டுவோர் அங்கே சென்று வடித்தெடுத்து வரலாம்.

## காரைக்கால் அம்மை

இதனை அடுத்த குடைவரையில் காணும்போது தமிழகத் தின் கைதேர்ந்த சிற்பிதான் செய்திருக்க வேண்டும் என்ற எண் ணம் நமக்குத் தோன்றுகிறது. ஆலங்காட்டு அப்பன் ஆனந்தத் தாண்டவம் புரியக் காரைக்கால் அம்மை அப்பெருமான் திரு அடியிலிருந்து தாளம் இட்டுப் பாடும் அற்புத சிற்பத்தைக் கண்டு

அக மகிழ்கின்றோம். இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்.

"மீண்டும் பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க"

என்ற சேக்கிழார் செந்தமிழ்ப் பாடலுக்குச் சிந்தையைப் பறி கொடுத்த சிற்பியின் வேலைப்பாடல்லவா அது! இனி அடுத்த குடைவரைக்குச் செல்லலாம்.

## ஆறுமுகனின் அழகிய கோலம்

அடுத்த குடைவரையில் கந்தபுராணப் பாடலுக்கேற்ற அற்புதமான சிற்பம் வடித்தெடுக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலே இருந்து ஆறு தீப்பொறிகள் வாயுவினால் ஏற்கப்பபட்டு சீத பாகீரதியில் விடப் பட்டு ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறின. அந்த ஆறு குழந்தைகளையும் கார்த்திகைப் பெண்கள் எடுத்து ஒரு குழந்தையை ஒருத்தி முத்தமிட்டுக் கொஞ்ச, இன்னொருத்தி கையிலே வைத்துத் தாலாட்ட, மற்றொருத்ததி மார்போடு அணைத்து மகிழ, வேறொருத்தி கையிலே தூக்கிப் பிடித்துக் கொஞ்சி மகிழ, இன்னொருத்தி குழந்தையோடு கொஞ்சி விளையாட, ஆறு குழந்தைகளை ஆறு கோணத்திலே ஆறு பேர் கொஞ்சி மகிழ் வதாகக் கந்தபுராணம் சொல்கிறது.

இதனை அப்படியே அற்புதமாக சித்திரித்துள்ளார். இதனைக் காணக் கண் கோடி வேண்டும். தம்பி முருகனை ஆறு பேர் கொஞ்சிக் குலாவுவதை அண்ணன் விநாயகப் பெருமான் தன் பாசக் கண்ணால் கண்டு மகிழும் அற்புதத்தையும் காணலாம். எதிர்ப்புறத்திலே சிவனும் பார்வதியும் இந்தக் காட்சியையெல்லாம் கண்டு களிக்கின்ற அற்புதத்தையும் காணலாம்.

## எதிரொலிக்கும் குடைவரை

இந்தக் குடைவரையை முடித்துவிட்டு புத்த குடைவரைக்குச் சென்றால் மிகப் பெரிய விசாலமான அறையிலே 40 அடி உயரத்திலே புத்த பெருமான் காட்சி கொடுக்கிறார். அந்தப் புத்தத் திரு உருவத்தின் முன்னாலே நின்று புத்தம் சரணம் கச்சாமி, சாமி சரணம் கச்சாமி என்று சொன்னால் அது பலமுறை எதிரொலிக்கின்றது. அடுத்தடுத்த குடைவரைகளில் சமண தீர்த்தங்கரர்களின் திரு உருவங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. எல்லோராவைப் பற்றி எழுதிக் கொண்டே போனால் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதுவே தனி நூலாகிவிடும். அதைப் படிக்க உங்களுக்கும் பொறுமை இருக்காது.

## குருஷ்னேஸ்வரம்

எல்லோராவைப் படிப்பதை விடப் பார்ப்பதே சிறப்பு எல்லோராவிலே இருந்து 2 மைல் தொலைவிலே உள்ளது நமது அடுத்த ஜோதிலிங்கமான குருஷ்னேஸ்வரம். இந்தத் திருக்கோயில வேரூள் என்ற கிராமத்தில் உள்ளது கிருஷ்ணம் என்றால் மராட்டியில் குங்குமம் என்று பொருள். இறைவனை இறைவி குங்குமப் பூவினால் வழிபட்டதால் இம்மூர்த்திக்கு குருஷ்னேஸ்வர் என்று பெயர் உண்டாயிற்று. இம்மூர்த்தியும் செம்மை நிறமாகவே உள்ளது. இக்கோயில் கட்டிய கற்கள் எல்லாம் செம்மை நிறக் கற்களாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இக் கோயிலில் உள்ள தூண்களில் உள்ள சிற்பங்கள் தேக்கு மரத்தாலும் செய்ய முடியாதவை. அவ்வளவு அழகு உள்ளவை சாமியின் தலைக்கு மேல் தாராபாத்திரம் அமைக்கப்பட்டு பெருமான் மீது இடைவிடாது நீர் ஒழுகுகின்ற அற்புதத்தைக் காண முடிகின்றது. இங்கு கருவறையின் பின்புறச் சுவரில் உமை அம்மையின் திருஉருவம் உள்ளது. இக் கோயிலின் புராண வரலாறு படித்து மகிழ்வதற்குரியது. சிந்திப்பதற்கும் உரியது அந்த வரலாற்றைத் தொடர்கிறேன். தொடர்ந்து வாருகிறீர்களா? வாருங்கள்!

## குஷ்மேசம் அல்லது குஷ்னேசம்

தண்டகாரண்யத்தில் சிவபெருமானும் அன்னை பார்வதியும் பவனி வந்தபொழுது அன்னை நாமெல்லாரும் உய்வதற்காகத் தனக்குத் தாகம் ஏற்படுவதாயும் குடிக்கத் தண்ணீர் வேண்டுமெனவும் கேட்டார். சிவன் தம் சூலத்தால் நிலத்தை அகழ சுவையான நீர் வந்தது. தம்முடைய தாகம் நீங்க அம்மை அந்த நீரைப் பருகி தாகம் தணிந்தார். நமக்கெல்லாம் அருள் பாலிக்க அங்கேயே சில காலம் தங்கியிருக்க ஆவல் கொண்டார். அதை அய்யனிடம் சொல்ல, அய்யனும் அதை ஆமோதித்தார். ஒரு நாள் உமையம்மை தனது இடக் கையால் குங்குமப் பூவை வைத்து வலது ஆள் காட்டி விரலால் தேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அன்னையின் கையில் ஒருவித தீப்பிழம்பு தோன்றியது. உமையம்மை சிவபெருமானிடம் இதன் இரகசியம் என்ன என்று வினவத் தான் அம்மைக்காக பாதாளம் ஏழினிற்கு அப்பால் இருந்து கொணர்ந்த சிவலிங்கமே உமையின் கையில் அனற்பிழம்பாகத் தோன்றியது என விளக்கம் அளித்தார். அம்மை, தான் வழிபடும் லிங்கத்துள் அச்சோதியை எழுந்தருளச் செய்த இடமே இன்றைய குஷ்மேசம். இது நாளடைவில் குங்கும வடிவம் என பெயர் ஆகி பின்னால் குஷ்மேச்வரம் என்று ஆயிற்று. குஷ்மேசம் என்றால் உள்ளங்கையில் விரலால் தேய்த்த பொழுது எழுந்த தீப்பிழம்பு என்பது பொருள்.

## குழந்தை வேண்டி திருமணம்

தேவகிரி என்ற மலைச்சாரலில் சுதர்மர் என் அந்தணன் வாழ்ந்து வந்தான். சுதேகை அவர் மனைவி. இருவரும் இல்லறம் வழுவாமல் செந்நெறியில் வாழ்ந்தனர். தானம், தர்மம், அடியவர் உபசரனை, விருந்தோம்பல் ஆகியவற்றில் சிறந்து வாழ்ந்தனர். மனைமாட்சி மங்கலமாக இருந்தது. ஆனால் மக்கட்பேறு கிட்டவில்லை. அக்குறையைச் சுதர்மர் பொருட்படுத்தவில்லை. சிவ பூசை மற்றும் அறச் செயல்களில் ஈடுபட்டிருந்தார். ஆனால்

சுதேகை மட்டும் எல்லாப் பெண்களையும் போல, தனக்குக் குழந்தையில்லாக் குறையை எண்ணி எண்ணி மாய்ந்தாள். மறு மணம் செய்து கொள்ளுமாறு கணவரை வற்புறுத்தினால். "குழந் தை இல்லாத வாழ்வு நிறைவாழ்வு ஆகாது. நம் இல்லத்தில் குழந்தை தவழ வேண்டும். இட்டும் தொட்டும் கல்வியும் துழன் றும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்க்கும் மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே" என்று இலக்கியங்கள் சொல்லுகின்றனவே எனப் பலவாறு பேசி கண வனின் மனத்தைக் கரைத்து மறுமணம் செய்து கொள்ள இசை வித்தாள். தன் தமையன் மகள் குசுமையை இரண்டாம் மணம் செய்வித்தாள்.

## சிவபூசையும் குழந்தையும்

குசுமை சிவனடிமை பூண்டவள். நாடோறும் மணலாற் சிவலிங்கம் பிடித்துப் பூசித்த பின்னரே உணவு உண்ணும் வழக் கம் உடையவள். அந்தச் சிவலிங்கங்களைப் பின்னர் குளத்தில் விடுவாள். இந்த வழக்கத்திலிருந்து ஒரு சிறிதும் பிறழ மாட்டாள்.

காராரும் கரைமிடற்றான் கருணையினால் குசுமை ஓர் ஆண்மகவை ஈன்றாள். அவனுக்குச் சுப்ரியன் என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்ந்து வந்தனர்.

## குழந்தையைக் கொல்லச்சதி

சுதேகையும்,குசுமையும் மிக்க அன்புடனும் பரிவுடனும் சுமுகமாகவும் முதலில் பழகினார்கள். குழந்தை பிறந்த பிறகு தங்கள் இல்லத்தில் குசுமையின் செல்வாக்கு மிகுதியாவதை உணர்ந்த சுதேகை அவளைச் சக்களத்தியாகக் கருதினாள். நன் மக்கட்பேறு வேண்டும் என்று பெருவேட்கை கொண்ட அதே

சுதேகை இப்போது அந்தக் குழந்தையைக் கொன்று விட வேண்டும் என்று பொறாமை எண்ணம் கொண்டாள்.

ஒரு நாள், சுதேகை யாருக்கும் தெரியாமல் தான் நினைத்த வாறே குசுமை நாள்தோறும் சிவலிங்கத்தை இடும் குளத்தி லேயே குழந்தையைப் போட்டு விட்டாள். விடியற்காலை, வழக் கம் போல் குசுமை மணலாற் சிவலிங்கம் பிடித்து சிவ வழிப்பாடு செய்தாள். முதல் நாளைய சிவலிங்கத்தைக் குளத்தில் இட்டுத் திரும்பும் போது குசுமை தன் பிள்ளையின் குரல் கேட்டுத்

திரும்பினாள். '' அம்மா நான் செத்துப் பிழைத்தேன் என்று சொல்லிக் கொண்டே சுப்ரியன் குளத்திலிருந்து ஓடிவந்தான்.

**ஈசனின் கருணை**

நடந்தைச் சற்றும் அறியாத குசுமை 'என்ன விடியற் காலை யிலே நம் மகன் குளத்திலிருந்து வருகிறானே ' என்று திகைத் தாள். அவள் பூசித்த சிவலிங்கத்தினின்று வெளிப்பட்ட கண் ணுதற் பெருமான் நடந்ததைக் கூறினான். பொறாமையால் பிள்ளையை அழித்த சுதேகையை அழிக்க எண்ணி சூலத்தை எடுத்தார்.

ஆனால் குசுமை ''அண்ணலே எனை ஆண்டு கொண்டு அருளிய கோதிலா அமுதே தேறலின் தேறலே சிவபெருமானே குணப்பெருங்குனறே இன்னா செய்தார்க்கும் இனியவே செய் யாக் கால் என்ன பயத்தோ சால்பு என்பது அருளாளர் வாக்கு. அவ்வழி நடப்பவள் நான். எனவே சீற்றம் வேண்டா. என்ன இருந்தாலும் அவள் என் அக்காள். அவளை அழிக்க வேண்டாம். நல்லறிவு புகட்டி அருளல் வேண்டும்'' என்று மனம் உருகி வேண்டினாள். அவளுடைய பெருந்தன்மையைக் கண்டு அவள் விருப்பப்படியே அங்கையே 'குச்மேசர்' என்ற பெயரில் கோயில் கொணடார். பக்தையின் பெயரையே பரமன் ஏற்றுக் கொண்டார். விவரங்களை அறிந்து கொண்ட சுதேகையும் தன் தீய எண்ணம் நீங்கிப் புனிதம் அடைந்தாள்.

தீர்த்தம்– ஆலயத்திற்குப் பின்னுள்ள கிணறும் குசுமை நாடோறும் சிவலிங்கத்தை இட்ட சிவாலய தீர்த்தமாகிய குளமும் சிறந்த தீர்த்தங்களாக விளங்கி வருகின்றன.

# 3

## தமிழகமே சிறப்பானது

மண்மாடிலிருந்து விட்ட இடத்திலிருந்து தொடர்கிறேன். குருஷ்ணேசுவரப் பெருமானை வணங்கி நெடிய பயணம் செய்து இரவு 1 மணி அளவில் மண்மாடு ரயிலடியை வந்து சேர்ந்தோம். இங்குள்ள பாதைகள் மிக மோசமானவை. தமிழகத்துப் பாதை களை எண்ணிப் பார்க்கிற போது இங்கு இருப்பவை பாதைகளே அல்ல. உருண்டு திரண்டு கிடக்கும் கூழாங்கற்களின் மீதே வாகனங்களை ஓட்டிச் செல்கின்றனர். அது மட்டுமல்ல, காடும் மலையும் கடந்து வந்தேன் என்று ஆறு சொல்வதைப் போல் காடும் மலையும் கடந்து அடிக்கடி பேருந்தின் தகடுகளில் அடிப் பட்டுப் பயணம் செய்வது மிகுந்த வேதனைக்குரியது.

இப்பகுதி மக்கள் மிகுந்த தீரமும் பேராற்றலும் மிக்கவர்கள். பஸ்ஸின் உள்ளையே நம்மால் பயணம் செய்ய இயலவில்லை. ஆனால் அவர்களோ பஸஸின் கூரையின் மீது இருபது முப்பது பேர் ஏறி அமர்ந்து கும்மாளமிட்டுக் கூத்தாடிக் களித்து வரு கின்றனர். நான் கூட அருகில் இருந்த நண்பர் திரு. பழனிச்சாமி அவர்களிடம் சொன்னேன். ''பஸ்ஸின் உள்ளே பயணம் செய் வதைவிட கூரையின் மேல் செல்வதுதான் இங்கு தகுதியானது போல் இருக்கிறது;நாமும் கூரைக்குப் போவோமா?'' என்றேன் . அதற்கு நணபர் ''உங்களை நாங்கள் பத்திரமாக வீடு சேர்க்க வேண்டும் . எனவே அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள்'' எனறார்.

எப்படியோ இப்பகுதி மக்கள் ரயிலிலும் பஸ்ஸிலும் கொளுத் தும் வெயிலிலும் குண்டும் குழியுமான பாதையிலும் உல்லாச மாகச் செல்கின்றனர். பயணம் செய்வதில் இவர்கள் நம்மைவிட வல்லவர்கள்தான்.

**கோதாவரிக் கரை**

மண்மாடிலிருந்து 90 கிலோ மீட்டர் பயணம் செய்து கோதா வரி ஆற்றின் கரைக்குச் சென்றோம். அங்கு அன்னை கோதா வரிக்கு அழகிய கோயில் உண்டு. அக்கோயில் என்றும் திறந் திருப்பவில்லை. வருடம் ஒருமுறை மாசி மகத்தின் போது தான் திறந்து வழிப்பாடு செய்வார்கள்.

இந்தக் கோயிலை அடுத்து ராமகுண்டம், லட்சுமணகுண்டம், சீதாகுண்டம், தனஷ்ய குண்டம், அகல்யா குண்டம் எனப்பல குண்டங்கள் உண்டு.

குண்டம் என்றாள் நீர்த்தடுப்பு என்று பொருள். கோதாவரியில் குளித்தால் எண்ணில்லாத புண்ணியங்கள் சேரும் என்பார்கள். எல்லாக் குண்டங்களிலும் சிறப்பானது ராம குண்டம், கங்கையில் அறுபதாயிரம் ஆண்டு குளிப்பதும், குருபகவான் சிம்மராசியில் இருக்கும்போது கோதாவரியில் குளிப்பதும் ஒரே பலனைத் தரும் என்பார்கள். இதற்காக

நாங்கள் சிம்மராசியில் குருபகவான் வரும்வரை காத்திருக்க முடியுமா? காலம்தான் இடம் கொடுக்குமா ? மளமளவென்று இறங்கி ராமகுண்டத்தில் குளித்தோம். ராமகுண்டம் 83 அடி நீளமும் 40 அடி அகலமும் 4 அடி ஆழமும் கொண்ட பெரிய தொட்டி போன்ற அமைப்பினைக் கொண்டது நில மட்டத்தில் சிமெண்ட் தளம் அமைத்து மணலைக் கொட்டி இருக்கிறார்கள் நீர் ஓடிக் கொண்டே இருப்பதால் சுத்தமாக இருக்கிறது.

கணவன் மனைவி இருவரும் ஒரு சேரப் பயணம் மேற் கொவோர் இருவரும் ஒரே ஆடையை அணிந்து இறங்கி நீராட வேண்டும் அதை ‘ஏக வஸ்திர ஸ்நானம்’ என்று சொல்வார்கள். நம்மோடு தனியாக வந்த நண்பர்கள் வருந்துவார்களே என்று இந்தக் கதையை நான் அங்கே சொல்லவே இல்லை. ஆனால், கணவன் மனைவியாக இணைந்து வந்தவர்கள் இதைப் படித்த விட்டு, ஏன் இதை அங்கையே சொல்லவில்லையே என்று என்னைக் கோபித்தாலும் கோபிக்கலாம்

## கபாலீஸ்வரர் கோயில்

ராம குண்டத்திற்கு எதிரிலேயே கோதாவரியின் இடப்புறக் கரையில் கபாலீஸ்வரர் கோயில் என்ற திருக்கோயில் உள்ளது. இங்குள்ள கோயில்களில் பழமையானது இதுதான். பிரும்ம தேவனுக்கு முன்னாளில் 5 தலைகள் இருந்தன. சிவபெருமானுக்கும் 5 தலைகளே இருந்தன. பிரும்மா, ''சிவபெருமான் என்ன என்னை விட உயர்வு? நான் படைப்புத் தொழிலைச் செய்கிறார். இதிலே சிவனுக்கு மாத்திரம் என்ன உயர்வு.? எனக்கும் 5 தலை. அவருக்கும் 5 தலைதான் '' என்று தலைக்கணம் கொண்டு திரிந்தார்.

இதனைக் கண்ட அடியார்கள் பெருமானிடத்திலே சென்று வணங்கி ''பெருமானே தலைக்கணத்தால் தடுமாறும் பிரும் மாவுக்கு நீங்கள் தக்கதைச் செய்து அவன் செருக்கினை அடக்கி அருள வேண்டும்'' என்று வேண்டினார்கள். அடியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி சிவன் பிரம்மாவினுடைய 5 தலை களிலே ஒன்றினைக் கிள்ளியெடுத்து, ''உனக்குத் திறமை இருந் தால் இன்னொரு தலையை நீ படைத்துக் கொள்'' என்றார். நம் எல்லார்க்கும் தலையைப் படைக்கும் பிரும்மாவுக்கோ, தனக்கு ஒரு தலையைப் படைக்க முடியவில்லை. வெட்கித் தலை குனிந்து சிவபெருமான் திருவடிகளில் வீழ்ந்து மன்னிக்குமாறு வேண்டி னார். அப்படி சிவன் கிள்ளிய பிரும்மாவினுடைய தலையைக் கையில் ஏந்தி பிச்சாடனராகப் பவனி வருகிறான் என்று நம் திருமுறைகள் எடுத்துக்காட்டும். இப்படி பிரமன் சிரம் கொய்த இடம் தஞ்சை மாவட்டத்தில் கண்டியூர் என்ற திருத்தலமாகும். இவ்வரலாற்றினை வடபுலத்திலும் ஏற்று, காபாலி எனப் போற்று வது மிகவும் மகிழ்வதற்கு உரியதாய் உள்ளது.

## நோட்டடிக்கும் நாசிக்

சில படிகள் ஏறினால் இந்த காபலீஸ்வரனை தரிசிக்கலாம் கோயில் வாயிலில் செந்நிறத்தில் ஒருபுறம் ஹனுமாரும் மறுபுறம்

வெள்ளைப் பளிங்கில் ஒரு விநாயகரும் காட்சி அளிப்பார்கள். அவர்களை வணங்கி அனுக்கிரகம் பெற்று கபாலியை வணங்க வேண்டும். நாங்கள் கபாலியை வணங்கி அக்கோயிலிலேயே சிவ பூஜையை முடித்து நாசிக் என்னும் நகரை அடைந்தோம். நாசிக் என்பதும் பஞ்சவடி என்பதும் இரண்டும் ஒன்றே. அடுத் தடுத்து உள்ளவை. நாசிக் என்றால் நம் அனைவருக்குமே தெரியு மே! இந்தியாவின் பொருளாதாரத்தை நிலைநாட்டிக் கொண்டு, நம்மையெல்லாம் திண்டாட வைக்கும் ரூபாய் நோட்டுகளை அச்சிடும் இடம் உள்ள இடம்தான் நாசிக். இப்படி சொல்லு வதாலே அங்கு பலபேர் இதைச் செய்வாரோ என்று கருதிவிட வேண்டாம். அரசாங்கம் அச்சிடும் நோட்டுகள் அங்கேதான் தயாரிக்கப்படுகின்றன. நாசிக் என்றால் என்ன பொருள் என்று நீங்கள் கேட்க நினைப்பதை நான் உணர்கிறேன்.

**பஞ்சவடி தீரம்**

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணிதன்னைத்
தீவினை என்ன நீத்து"

கானகம் நோக்கி காகுத்தன் புறப்பட்டபோது தம்பி லக்கு மணனும் தன் துணைவி சீதையும் உடன் வந்தனர். சித்திரகூடத் தில் சிலநாள் தங்கி தண்டகாரண்யத்தில் சில நாள்கள் இருந்து அகத்திய முனிவரால் இராமன் தங்கி தவம் புரிவதற்கு ஏற்ற இடம் என்று சொல்லப்பட்ட இடமே பஞ்சவடி என்ற இடம்.

பஞ்சவடி என்றால் 5 ஆலமரம் என்று பொருள். இன்றும் அந்த ஐந்து ஆலமரங்கள் நிழல் பரப்பி வருவதைக் காணலாம் இந்த 5 ஆலமரங்களின் அடியில் பர்ணகசாலை அமைத்து 'அல்லையாண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச வில்லை ஊன்றிய கையோடு கண் உறக்கம் இன்றி விழித்துக் காத்திருந்தான் இலக்குவன். இதனை 'இமைத்திலன் நயனம்' என்று சொல்வார் கம்பர். அங்கு பர்ணக சாலையிலே இராமனும் சீதையும் இலக்குவனும் வீற்றிருக்க அவர்கள் முன்னே அழகான மான் ஒன்று இங்கும் அங்கும் ஓடியாடியது. அந்த அழகிய மானைக்

கண்ட சீதை தனக்கு அந்த மான் வேண்டும் என்றாள். இலக்குவனோ, ''இது உண்மையான மான் அல்ல. இது ஒரு மாயமான்'' என்றான். ஆனால் சீதை விடவில்லை. இராமனிடம் அந்த மான் எனக்கு உடனே வேண்டும் என்றாள். கடவுள் அவதாரம் ஆனாலும் கணவன் என்று ஆகிவிட்டால் மனைவி சொல்லே மந்திரம் என்று கட்டுப்பட வேண்டும் போலும்! மனைவி சொல்லை ஏற்று மானின் பின்னே சென்றான் மாவீரன் இராமன்.

**மானின் சாகசம்**

அந்த மான் ஜாலம் காட்டி ஓடி ஓடி கானகத்தின் நடுப் பகுதிக்குச் சென்று சீதா - லட்சுமணா லட்சுமணா என்று கத்ததி மறைந்துவிட்டது. அந்தக குரல் இராமனின் குரல் போல் இருக்க வே இலக்குமணனை நோக்கி இராமனைப் பார்த்து வருமாறு பணித்தாள். சீதை. இலக்குவன், ''இராமனை யாரும் என்றும் வெல்ல முடியாது. மூவேழு உலகமும் முனைந்து இருந்தாலும் தன் வில்லினால் வீழ்த்தி விடக் கூடியவன்'' என்று சொன்னான். சீதை விடாது வற்புறுத்தவே வேறு வழியின்றி அண்ணனை நோக்கிச் சென்றான். அண்ணனாகிய இராமனோ ஏதோ சூழ்ச்சி என்று கருதி பர்ணகசாலையை நோக்கி வந்தார். இந்த இடைப் பட்ட நேரத்தில்தான் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். அந்த இடமே பஞ்சவடி என்பதாகும். இராமனுடைய பர்ணக சாலை இருந்த இடம், சீதா குகை என வழங்குகிறது.

சீதை குகையில் 15 அடி ஆழம் கீழே இறங்கிச் சென்றால் குகை போன்ற அமைப்பின் உள்ள பாறையில் இராமர், சீதை, லட்சுமணர் திருவுருவங்களைப் பார்க்கலாம். வெளியே இராவணன் சீதையைத் தூக்கிச் செல்கின்ற காட்சிகளை ஓவியமாக அமைத்து இருக்கிறார்கள்.

**சூர்ப்பனகையின் சூழ்ச்சி**

இந்தப் பஞ்சவடியில் இவர்கள் தங்கி இருந்தபோது ஒருநாள் ராமன் பர்ணகசாலைக்கு வெளியே அமர்ந்து தியானத்தில் இருந்

தான். அப்போது அந்த வழியாக வந்த தசமுகன் தங்கையாகிய சூர்ப்பனகை இராமனுடைய மேனி அழகைக் கண்டு மோகித்து அவன் முன்னர் காமவல்லியாக கன்னி வடிவில் தோன்றி, தன்னை மணந்து கொள்ள வேண்டினாள். இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்னும் செவ்வறம் பூண்ட இராமபிரான், அவள் இச்சைக்கு இணங்க மறுத்தான். சூர்ப்பனகையின் மூளையோ வேறு விதமாக வேலை செய்தது. 'சீதை என்ற ஒருத்தி இருப்பதால் தானே தன்னை எற்க மறுக்கிறான் இராமன், எனவே சீதையைத் தொலைத்துக் கட்ட வேண்டும்' என முடிவு எடுத்து சீதையைத் தூக்க முனைந்தபோது இலக்குவன் இடையில் புகுந்து சூர்ப்பனகையின் மூக்கை அரிந்து விடுகின்றான். இததனைக் கம்பன்,

''மூக்கும் காதும் வெம்முதான்
முலைக் கண்களும் முறையால்
போக்கி, போக்கிய சினத்தோடும்
புரிகுழல் விட்டான்''

எனக் குறிப்பிட்டார்.

சூர்ப்பனகையின் நாசி அரியப்பட்ட இடமே, அன்று முதல் இன்று வரை 'நாசிக்' என்று அழைக்கப்படுகிறது. மூக்கு அறுப்பட்ட சூர்ப்பனகை அழுது கொண்டே சொல்லுவாள், ''இலக்குமணா! என் மூக்கை நீ அரிந்து விட்டாய். இந்த மூக்கு எவ்வளவு சிறப்பானது என்று உனக்குத் தெரியுமா? இது ஆக்கரிய மூக்கு. என் மூக்கை அரிந்தார் என்று யாரேனும் சொன்னால் சொன்னவர்கள் நாக்கை அரியும் தன்மை உடையவர் என் அண்ணன்'' என்று அடிப்பட்ட புலியாகப் புலம்பினாள்.

இதனைக் கம்பன் வெகு அழகாக,

''ஆக்கரிய மூக்கு அரியுண்டால் என்பார் நாக்கரியும்
தசமுகனார் தன் தங்கை''

என்று கூறுவதாகக் கூறுவார்.

இந்த நாசிக் நகரத்திற்கு பழைய புராணங்களில் ஹரிஹர சேத்திரம், பத்ம நகரம், திரிகண்டபுரம் எனக் குறிக்கப்பட்டுள்ளது மொகலாய சக்ரவர்த்தி அவுரங்க சீப் இந்த ஸ்தலம் மிகவும் ரம்மியமான இடம் என்று கருதி 'குல்ஷணாபாத்'' என்று அழைத் தான். இனி கோதாவரி நதியின் வரலாற்றைச் சற்றுக் காண் போமே!

## இங்கும் ஒரு பண்டரிநாதன்

இங்கோதாவரி பார்வதி திருமண காலத்தில் பிரம்ம தேவனின் கமண்டலத்திலிருந்து வழிந்து வருகிறாள் கோதாவரி கங்கை யுடன் சிவபெருமானின் ஜடா மகுடத்திலேயே தங்கி இருக்கும் பெருமையும் பெற்றாள். பகீரதன் தவத்திற்கு இரங்கி கங்கையை வழியவிட்ட சிவபெருமான் கௌதமர் விரும்பியபடி கோதா வரியை பிரம்மகிரியிலிருந்து பிரவேசிக்கச் செய்கிறார். இந்தப் பஞ்சவடியிலிருந்து ஒரு கிலோ மீட்டரில் கபில நதியும் கோதா வரியும் சங்கமமாகிறது. அங்கே கபிலர் தபோவனம் உள்ளது. இங்கு பண்டரிநாதன் திருக்கோயில் ஒன்று உள்ளது. பண்டரி புரத்து நாதனுக்காக வைணவராகிய கிருஷ்ண தேவராயார் ஹம்பியில் அழகான கோயிலைக் கட்டி அங்கே வர வேண்டினார்.

ஆனால் பண்டரிபுரத்து விட்டலர் அங்கே வர மறுத்து விட்டார். ''எனக்கு என்று அமைந்துள்ள பண்டரிபுரச் சிறு குடிலை விட்டு இவ்வளவு பெரிய கோயிலுக்கு வர விருப்பம் இல்லை'' என்று கூறி விட்டார். ஆம் அவன் ஏழை பங்காளன் அல்லவா? அதே பண்டரிநாதன் இங்கே பஞ்சவடியில் எதிர் புறத்தில் உள்ள திருக்கோயிலுக்கு வந்து எழுந்தருளி அருள் பாலிக்கின்றான். பாண்டுரங்கன் பண்டரிபுரத்தை விட்டு வர விருப்பம் இல்லாதவன் என்றால் அதே பாண்டுரங்கன் இங்கு மாத்திரம் எப்படி வந்தான் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதற்கு அழகான ஒரு கதை உண்டு.

## அன்புக்கு அடிமையான பாண்டுரங்கன்

பஞ்சவடியில் விஸ்வநாத சர்மா என்பவர் வாழ்ந்தார். அவர் ஆண்டு தோறும் யாத்திரிகர் பலருடன் சென்று பண்டரிபுரநாதனை அழுது, தொழுது, பாடிப் பரவிட, பண்டரிபுரம் நோக்கிச் சென்று, பண்டரிநாதனை மனம் மொழி, மெய்களால் வணங்கி மகிழ்ந்த பெருமகன். வயது வந்தது. முதுமை வந்தது. உடல் தளர்ந்தது. முதுமை காரணமாக உடல் தளர்ந்த விஸ்வநாத சர்மா பயணத்தைத் தொடங்கி தொடர்ந்து நடக்க சக்தியற்றவராக வீழ்ந்து விட்டார்; என்றாலும் பண்டரிநாதனைக் காணும் வரை உண்ணேன், உறங்கேன் என்று சத்தியம் செய்தார். அதன்படி உண்ணாது, உறங்காது மயங்கிய நிலையில் கிடந்த விஸ்வநாத சர்மாவைக் கை விடுவானா பாண்டுரங்கன்? அந்த அப்பனுக்குக் காட்சி கொடுத்து, அவர் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கேயே தங்கி விட்டான்.

அந்தப் பாண்டுரங்கன் இன்று நமக்கும் தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கிறான். இந்த வரலாற்றிலே தெரிந்து கொள்வது இறைவனை நோக்கி நாம் ஓர் அடி முன்னோக்கி வைத்தால் அவன் நம்மை நோக்கிப் பல அடிகள் ஓடி வருகிறான் என்பதையே உணர்த்துகிறது. கயிலையைக் காண விரும்பிய அப்பர் அடிகளுக்கு கயிலை நாதன், 'நீ துன்பப்படாதே. நீ இக்குளத்தில் மூழ்கி அய்யாற்றுக் குளத்திலே எழு. அங்கே உனக்கு கயிலைக் காட்சியைக் காட்டுகிறேன்' என்று காட்டினான் அல்லவா?

## கறுப்பு ராமர்

இங்கே நாம் காண வேண்டிய மற்றொரு கோயில் காளே ராமர் கோயில், இராமனுடைய மேனி அழகைக் கூற வந்த கம்பன்,

"மையோ, மரகதமோ மரிகடலோ மழை முகிலோ
அய்யோ இவனோர் அழியா அழகு உடையான்" என்பன்

அதனையே இங்குள்ள மக்கள் காளே ராமர் என்று அழைக்கின்றனர். காளே ராமர் என்றால், கறுத்த ராமன் எனப் பொருள்.

இங்குள்ள ராமர், இலக்குமணர், சீதை மூன்று உருவங்களும் கறுப்புச்சலவைக் கல்லினால் அமைக்கப்பட்டு இருக்கிறது. நல்ல அழகான திருமேனி, கோயில் சபா மண்டபம் 72 அடி நீளமும் 32 அடி அகலமும் உடையது 40 தூண்கள் இதைத் தாங்கி இருக்கின்றன.

## புனிதமான கோடித் தீர்த்தமும் காந்தியாரும்

இங்கு கோதாவரி ஆறு உற்பத்தி ஆகும் இடம் உள்ளது. பிரம்மகிரி என்ற மலையிலிருந்து கோதாவரி அம்மன் சிலையின் திருவடியிலிருந்து சிறு துளியாகத் தோன்றி பின் மறைந்து கால் வாயாகப் பெருகி மலையடி வாரத்திலுள்ள கோடி தீர்த்தம் என்ற குளத்தின் வழியாக வெளியே செல்கிறது. இக் குளத்தை மிகத் தூய்மையானதாகவும், மிகப் புனிதமானதாகவும் போற்றிப் பாது காக்கின்றார்கள். சோப்பு போடுவதற்கும், துணி துவைப்பதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறது. இக்குளத்தைச் சுற்றிலும் பல திருக் கோயில்களும் சிவலிங்கத் திருமேனிகளும் உள்ளன.

அண்ணல் காந்தியடிகள் லண்டன் மாநகரத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது அவரது தாயார் புத்லிபாய் அம்மையார் இறந்தார்கள். அந்தச் செய்தியைக் காந்தியாருக்குச் சொன்னால் அவர் படிப்பில் கவனம் குறையும் என்று அவரது சகோதரர்கள் அவருக்குத் தெரிவிக்கவில்லை. படிப்பை முடித்து ஊர் திரும்பிய காந்தியாருக்கு அன்னையாரின் இறப்பு அதிர்ச்சியைத் தந்தது. மனதைத் தேற்றி, தாய்க்கு தான் செய்ய வேண்டிய கடமையை ஆற்ற எண்ணிய காந்தியடிகள் ''இந்தப் பிரம்ம புரிக்கு வந்து இக்குளக்கரையில் சங்கல்பம் செய்து என் தாய்க்குச் செய்ய வேண்டிய நீத்தார் கடனைக் கண்ணீர் சிந்தியபடியே செய்தேன்'' என்று தன் சுயசரிதையில் குறிப்பிடுகிறார் என்றால் இத்தலத்தின் மகிமை எததகையது என்று எண்ணிப் பாருங்கள். இந்த பிரம்ம புரிதான் 'திரியம்பகம்' என்று சொல்லப்படுகிற ஊர் ஆகும்.

திரியம்பகேஸ்வரர் என்ற பெருமான் நாம் வாழ்த்தி வணங்கு கின்ற ஜோதி லிங்கங்களின் ஒன்றாகும்.

**யார் பெரியர்?**

"செங்கண் நெடுமாலும், சென்றிடந்தும் காண்பரிய
பொங்கும் மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி"

நின்றவன் அண்ணாமலையான் என்று மணிவாசகர் தம் திருவாசகத்தில் கூறுவார் வையதத்தையெல்லாம் படைக்கின்ற பிரம்மனுக்கும், படைத்த உயிர்களையெல்லாம் காக்கின்ற திருமாலுக்கும் தங்களுக்குள் யார் பெரியவர் என்ற விவாதம் தோன்றியது. படைத்தல் தொழிலைச் செய்கின்ற நானே பெரியவன் என்றார் பிரம்மா. படைத்தல் மட்டும் போதுமா? படைத்தவற்றைக் காக்கின்ற நானே பெரியவன் என்றார் திருமால்.

இருவரின் விவாதத்திற்கும் முடிவு காண முடியாது சிவ பெருமானை நோக்கிச் சென்று. "பெருமானே! எங்களில் யார் பெரியவர்? படைக்கும் நானா? காக்கும் இவரா? நீங்களே தீர்ப்புச் சொல்ல வேண்டும்" என்றார் பிரம்மா.

**அற்புதச் சோதி**

சிவபெருமான் அனற்பிழம்பாய்த் தோன்றி, "இச் சோதியின் அடியையும், முடியையும் யார் காண்கிறீர்களோ அவர்களே பெரியவர்" என்று அசரீரியாக உரைத்தார். திருமால் பன்றி உருத் தாங்கி பூமியைக் குடைந்து பாதாளத்தை நோக்கிச் சென்று பரிதவித்து காண முடியாமல் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு "பெருமானே என்னால் உன்னடியைக் காண முடியவில்லை" என்று ஒப்புக் கொண்டார்.

இறைவனின் திருமுடியைக் காண முனைந்த பிரம்மன் அன்ன உருத் தாங்கி விண்ணிலே பறந்து பறந்து சென்றார். பல்லாண்டு காலம் பறந்து உயர்ந்து சென்ற பின்புப் பிரமனுடைய முடியைக் காணும் வழியைக் காணோம். மெய்சோர்ந்து இறக்கை ஓய்ந்து கீழே விழுகின்ற போது மேலே இருந்து ஒரு தாழம்பூ கீழே வந்து கொண்டிருந்தது.

அந்தத் தாழம்பூவைப் பார்த்து பிரம்ம தேவன் கேட்டான். "நீ எங்கிருந்து வருகின்றாய்?" என்று. அப்போது தாழம்பூ "நான் சிவபெருமான் திருமுடியிலிருந்து வருகின்றேன்" என்றது. தளர்ந்து போன பிரம்ம தேவன் மனதில் நம்பிக்கை உணர்ச்சி ஏற்பட்டது. "தாழம்பூவே! நான் இறைவனுடைய திருமுடியைக் காணப் போகிறேன். அது எவ்வளவு தூரம்?" என்று கேட்டார். அதற்குத் தாழம்பூ சொல்லிற்று. "உன்னால் முடியாது. நான் இறைவன் திருமுடியிலிருந்து இறங்கி பல்லாயிரம் ஆண்டு காலம் ஆயிற்று" என்றது.

நம்பிக்கை இழந்த பிரம்ம தேவன் அந்தத் தாழம்பூவைக் கொண்டே தன் திட்டத்தை நிலை நாட்ட முடிவு செய்து, தாழம் பூவைப் பார்த்து, "நான் சிவபெருமான் திருமுடியைப் பார்த்தேன் என்று சொல்லப் போகிறேன். அது உண்மை என்று நீ சாட்சி சொல்ல வேண்டும்" என்று கேட்டான். படைக்கும் கடவுளாயிற்றே என்று அதற்குத் தாழம்பூவும் இசைந்தது. உலகத்திலே முதல் முதலில் ஒரு பொய் சாட்சியை உருவாக்கியவனே பிரம்ம தேவன் தான். அண்ணாமலைப் பெருமானிடத்திலே வந்து பிரம்ம தேவன் சொன்னான். "நான் தங்கள் திருமுடியைக் கண்டேன். அதற்கு இதோ இந்தத் தாழம்பூ சாட்சி" என்று சொன்னான்.

பொய்யுரை கண்டு சினந்த சிவபெருமான், "பொய்யுரைத்ததால் உனக்கு எங்கும் திருக்கோயில் வழிபாடு இல்லாமல் போவதாக!" என்று சபித்தான். பொய் சாட்சி சொன்னதால் தாழம்பூ என் வழிபாட்டுக்குரியதல்ல என்று தாழம்பூவையும் சபித்தார். அழல் உருவில் நின்ற பெருமான் குளிர்ந்த அண்ணாமலையாக காட்சி அளிக்கிறார் என்பது நம்முடைய தமிழ்த் திருமுறைகள் காட்டுகின்ற காட்சியாகும்.

## வரலாற்று ஒற்றுமையும் வேற்றுமையும்

வேங்கடத்துக்கு அப்பால் திரியம்பகத்திலே இதே வரலாற்றைச் சொல்லி முடிவிலே ஒரு மாற்றத்தை வைத்து இருக்கிறார்கள். அது சாபம் பெற்ற பிரம்மன் வேண்டிக் கொண்டபடி

இறைவன் அவன் பெயரால் பிரம்மபுரி என்ற மலையாக காட்சி யளிக்கிறான். அண்ணாமலையை எப்படி நாம் கிரிவலம் வரு கிறோமோ அதைப்போல இங்கே பிரம்ம கிரியையம் கிரி வலம் வருகிற பக்தர் பெருமக்கள் உள்ளனர். ஆனால் சுற்றி வரவேண்டிய தூரம் 20 மைல். நாம் 20 மைல் சுற்றி வரத் தொடங்கினால் நம்மோடு இருப்பவர்களுக்குத் தலை சுற்றும் அல்லவா?

## திருவீதியில் தமிழ் முழக்கம்

கோதாவரித் திருக்குளத்தில் நீராடி சிவபுராண பாராயணத் துடன் நமது திருக்கூட்டம் திரியம்பகத்தை நோக்கிச் சென்றது. கோயில் கிழக்கு நோக்கிய கோயில் என்றாலும் நாம் வடக்கு வாயிலின் வழியாகத்தான் உள்ளே நுழைய வேண்டும். திறந்த வெளிப் பிராகாரம் விரிந்து பரந்து உள்ளது. அப்பிராகாரம் கருங் கற்களால் கட்டப்பட்டு இருக்கிறது. அது கரும்பலகைக்கல். அதனால் பளபளப்பாக உள்ளது. மிக உயர்ந்த விமானம். அதன் மேல் தங்கக் கவசம் ஒன்று உள்ளது. கவசத்தை ஒட்டி திரிசூலம் உள்ளது. கோயில் மாட கோயிலைப் போல் மிக உயரமாகக் சுட்டி இருக்கிறார்கள். அதனால் படியேறித்தான் உள்ளே செல்ல வேண்டும்.

கோயிலுக்கு உள்ளே செல்லும்போது கோவணம் தரித் திருக்கிற பழனியாண்டியைப் போல் கோவணம் கட்டியிருக்கிற விநாயகரையும் காணலாம். தமிழகத்தில் இருந்து பல தலை முறைக்கு முன்னாலே திரியம்பகப் பெருமானை வழிபட்டுச் சேவிக்கச் சென்று அங்கேயே தங்கிய தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணிய குருக்கள் நம் திருக்கூட்டத்தை அன் போடு வரவேற்று வழிபாட்டுக்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்.

## நீர் ஊரும் பெருமான்.

கருவறை ஒரு 7 அடி பள்ளித்தில் இறங்கி உள்ளே வணங் கும் வகையில் உள்ளது. என்றாலும் மிக விசாலமான பெரிய அறை. இங்கே கருவறைக்குள் பெண்களை அனுமதிப்பதில்லை. இங்கே உயர்ந்த லிங்கமோ ஆவுடை யாரோ கிடையாது. ஒரு

சிறிய பள்ளமே காட்சியளிக்கிறது. அந்தப் பள்ளத்தைச் சுற்றி ரோஜா மொட்டு போன்ற மூன்று திருவுருவங்கள் உள்ளன. அந்தப் பள்ளத்தில் எப்போதும் நீர் ஊறிக்கொண்டே இருக்கிறது மும்மூர்த்தி ஸ்வரூபமானவரே இப்பெருமான் என்பதனை உணர்த்தவே இவ்வாறு அமைந்திருக்கிறது போலும். நீர் அள்ள அள்ளக் குறையாமல் வந்து கொண்டிருக்கிறது.

இதிலே ஓர் அதிசயம் என்னவென்றால் 40 அடி பள்ளத்திலே கோதாவரி ஓடுகிறது. இத்திருக்கோயில் ஒரு மலைமுகட்டில் உள்ளது. இறைவன் நினைத்தால் மேட்டிலிருந்து தான் நீர் பள்ளத்தில் வர வேண்டும் என்பது இல்லை. பள்ளத்திலிருந்தும் மேட்டிற்கு வரவழைக்க முடியும் என்பதைக் காட்டுவதைப் போல் நீர் சுரந்து கொண்டே இருக்கிறது. நம்முடைய திருக்கூட்டம், திரியம்பக நாதனுக்கு எல்லா அபிஷேகமும் செய்து புத்தாடை அணிவித்து வில்வத்தாலும், மலர்களாலும் போற்றி வழிபாடு செய்து ஆனந்தக் கண்ணீர் பெருக வழிபாடு செய்தது. திரியம்பக நாதன் நமக்கு மரணமில்லாப் பெருவாழ்வு அளிக்க வல்லவர். அவரது தோத்திரத்தில் சிறப்பானது மிருயுத்ஞ்சய மந்திரம் ஆகும்.

## அருணகிரியாரின் அலங்காரம்

இந்த திரியம்பக நாதனைப் பற்றி நமது அருணகிரிப் பெருமான் தம் கந்தர் அலங்காரத்தில் அழகுபடச் சொல்லியிருக்கிறார் என்றால் அந்தப் பாடலை அறிய எவ்வளவு ஆவலாக இருக்கும் என்று நான் அறிவேன். இதோ அந்த அலங்காரப் பாடல்:-

"மாகத்தை முட்டி வருநெடுங்கூற்றன் வந்தால் என் முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய் தந்த நித்தமுத்தித்
தியாகப் பொறுப்பை திரிபுராந்தகனைத் திரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே."

திரியம்பகநாதன் கோயிலில் நம் அண்ணாமலையில் நடப்பதைப் போலவே கார்த்திகைப் பௌர்ணமியன்று திருத்தேர் நடக்கிறது. மாசி மாதத்தில் பெருவிழா நடக்கிறது.

கும்பகோணத்தில் நடப்பதைப் போலவே மகாமகமும் அதையொட்டி கும்பமேளாவும் நடக்கிறது.

## ஐம்முகச் சிவன் அலங்காரம்

இப்பெருமானுக்கு 5 முகங்கள் கொண்ட தங்கக் கவசத்தைத் திங்கள் தோறும் பெருமானுக்குச் சூட்டி மகிழ்கின்றனர். இரத் தினம் பதிக்கப்பட்ட தங்கத் திருமுடியும் பெருமானுக்கு உள்ளது. நாங்கள் சென்ற நாள் திங்கட் கிழமை. பெருமானுடைய தங்கக் கவசத்தையும் இரத்தினம் பதிக்கப்பட்ட தங்கத் திருமுடியையும் மேளதாளத்தோடு கோயிலை வலமாக வரச் செய்து. பெருமானுக்கு அணிவித்தனர். அதனைக் காணுகின்ற பெரும் பேற்றினைப் பெற்றோம். இத்திரியம்பகம் ருக்கோயிலின் புராண வரலாற்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

## பார் வாழத் தவம்

ஒரு சமயம் வான் மழை பொய்த்து பசும்புல் தலை காண் பதும் அரிதாகி உலக உயிரினங்கள் எல்லாம் ஒரு காலத்தில் துன்புற்றன. ஞானிகள் எப்போதும் உலக நன்மைக்காவே வாழ் பவர்கள். அதனாலே வான் மழை வழாது பெய்து மண் வளம் சுரந்து குறைவில்லாது உயிர்கள் வாழ, நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க மேன்மை கொள் சைவ நீதி உலகம் எல்லாம் விளங்க கௌதம முனிவர் தம் மனைவி அகல்யையுடன் இம்மலைச் சாரலில் கடும் தவம் செய்தார். பெருமான் திரு வருளால் பெரு மழை பெய்தது. குளங்கள் நிரம்பின. ஆசிரமம் செழிக்கத் தொடங்கியது. அதனால் மற்ற முனிவர்களும் தங்கள் பத்தினிகளுடன் இங்கே வந்து தங்கினர். சில நாள்களில் முனி பத்ததினகளுக்குள் கருத்து வேறுபாடு உண்டாயிற்று.

## பொறாமைத் தீ

அகல்யை செருக்குக் கொண்டு இருக்கிறாள் என்று அவள் மீது பொறாமை கொண்டு அம் முனிபத்தினியை அந்த இடத்தை

விட்டே துரத்த வேண்டும் என ஏனைய முனி பத்தினிகள் தீர் மானித்தனர். இருப்பிடம் கொடுத்து அவர்கள் வாழ்வுக்கு வழி செய்த அகல்யையின் நல்ல குணத்தை இம் முனி பத்தினிகள் உணரவில்லை. காலத்தினாற் செய்த நன்றியை மறந்தனர். இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து பிள்ளையாரிடம் சென்று "பெருமானே! கௌதமனும் அகல்யையும் இந்த இடத்தை விட்டே போக வேண்டும்" என்று வேண்டினார்.

பிள்ளையார் திடுக்கிட்டு, "முனி பத்தினிகளே! மழையின் துளி விழாது வானம் வறண்டு உலக உயர்கள் துன்புற்ற போது உலக மக்கள் நன்மைக்காக கௌதமர் மழை வளம் பெருகச் செய்தார். உங்களுக்குப் புகலிடம் தந்தார். அந்த நன்றியை மறவாதீர்கள். அவர்கள் உங்களுக்கு ஏதும் துன்பம் செய்ததாகத் தெரியவில்லை. நீங்கள் அவர்கள் மேல் அழுக்காறு கொண்டீர் கள். செய்யாமற் செய்த உதவிக்கு நீங்கள் எவ்வளவோ கைம்மாறு செய்ய வேண்டும். மாறாக அவர்களைத் துரத்து நினைப்பது பெரும் பிழை" என்பன போன்ற சிறந்த மொழிகளை அம் முனி பத்தினிகளுக்கு எடுத்துச் சொன்னார். அதற்கு முனி பத்தினிகள் செவி சாய்க்கவில்லை. 'கொன்றன்ன இன்னா செய்யினும் அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும்' என்ற மறை மொழியை மறந்த முனி பத்தினிகட்கு அறிவு புகட்ட எண்ணினார். எனவே அம் முனி பத்தினகளின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தார்.

**சதித்திட்டம்**

பிள்ளையார் பெருமான் பசு உருத்தாங்கி கௌதரமர் பயிர் செய்து இருந்த செடிகளை மேய்ந்தார். பசுவைத் துரத்த ஒரு சிறு கோலை எடுத்துக் கொண்டு கௌதமர் போனார். அந்த மாயப்பசு அவர் வருவதன் முன்னமே கீழே விழுந்து உயர் துறந்தது. வாய்ப்பை எததிர்பார்த்திருந்த அம் முனி பத்தினிகள், தங்கள் கணவர் களிடம் கௌதம முனிவர் பசுவை அடித்துத் துன்புறுத்த வதை செய்து விட்டதாகக் கூறினர்.

அம் முனிவர்களும் "பெண் ஏவல் செய்தொழுகும் ஆண் மையின், நாணுடைப் பெண்ணே பெருமை உடைத்து" என்னும மாமறைகளை நினையாமல்கௌதம முனிவரிடம் சென்று அவர் பசு வதை செய்து விட்டார் என்று அந்தத் தீவினை அவரைப் பற்றியுள்ளது என்றும் கூறினர். அவ்வினை நீங்க அங்குள்ள பிரம்மகிரியை 101 முறை வலம் வரவேண்டும். எனவும், 1 கோடி மண் லிங்கங்களைப் பிடித்து வைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனவும் கூறினார்கள். கௌதமர் மறுப்பு ஏதும் கூறாமல் சிவபெரு மானை நோக்கிக் கடுந்தவம் புரியலானார்.

## தவத்தின் பெருமை

தூய வெண்ணீறு அணிந்த பொன் மேனியும் தாழ்வடமும் நாயகன் சேவடி நைந்துருகும் சிந்தையும் நைந்துருகிப் பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும் பததிகச் செஞ் சொல் மேய செவ்வாயும் உடையவராய் சிவபெருமானைப் போற்றி கை தலை மேல் குவித்து நின்றார். கௌதமர் தவத்திற்குக் கனிந்த மரகதக் கொடியுடன் வெள்ளியம் பொருப்பின் அண்ணலார் இருக்கும் கோலத்தை கௌதமனார் கண்டார். களி கூர்ந்தார். பெருமானிடம் பசுவைக் கொன்ற தம் தீவின்னையை பொருத்தருளுமாறு கூறினார்.

அதற்குப் பெருமானார் முனிபத்தினிகளின் சதித் திட்டத் தைக் கூறி முனிவர் தீவினை ஏதும் செய்யவில்லை என்றார். மேலும் அவர் வேண்டுகோட்கிணங்கி நில்லாத நீர் சடை மேல் நிற்பித்த பெருமான் தம் சடை முடியிலிருந்து சிறிதளவு கங்கை நீரைக் கொடுத்தார். அந்த நீரைப் பெற்று பிரம்மகிரியில் வளர்ந்து இருந்த அத்தி மரத்தின் வேரரில் விட்டார் கௌதமர். கங்கை பெருகத் தொடங்கிற்று. முனிவர்கள் கௌதமர் திருவடிகளிலும் அகல்யையின் திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கித் தம்மை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

அவர்கள் பொறாமையினால் தானே கொன்றைவார் சடை யார் அண்ணலைக் காணும் வாய்ப்பு பெற்றோம். அன்று அம்

முனிவர்கள் மீதோ, அம் முனி பத்தினிகள் மீதோ சிறிதும் கோபம் கொள்ளாமல் அவர்கள் தூய்மையடைய தம்மிடம் இருந்த தர்ப்பைப் புல்லினால் கங்கையின் போக்கை மாற்றித் தூய்மை அடையச் செய்தார் கௌதமர். இந்த நதியைக் கௌதமர் கொண்டு வந்ததனால் இந்நதி கௌதமி என்றும் கோதாவரி எனவும் அழைக்கப் படுகிறது.

## சிறப்பு

இததலத்தைச் சுற்றிலும் கோடித் தீர்த்தம் முதலான பல தீர்த்தங்கள் அமைந்துள்ளன. இத் தீர்த்தங்களில் நீராடி நீராடி சோதிலிங்கத்தைத் தரிசித்தவர்கள் தம் மன மாசுகள் அகன்று ஆன்ம ஒளி சிறக்க வாழ்வார்கள் என்கின்றனார்.

## தந்தை தாய்ப் பேண்

திரியம்பகத்திலிருந்து நாங்கள் திரும்பி வரும்போது நாசிக் நகரின் அண்மையில் ஒரு பன்னிருவது ஆண்டுகளுக்கு முன் செல்வர் ஒருவர் முழுக்க முழுக்க பளிங்கினால் தன் பெற்றோர் நினைவாக மிகச்சிறந்த ஆலயம் ஒன்றை நிர்மாணித்து அதற்கு 'முக்திதாம்' என்று பெயர் சூட்டியுள்ளார். பலகோடி ரூபாய் செலவிட்டு தன் பெற்றோருக்கு மிகச் சிறந்த நினைவுச் சின்னத்தை உருவாக்கியுள்ளார். அத்திருக்கோயிலில் ஒரு சேர வணங்குவதற்கு ஏற்ற வகையில் 12 சோதிலிங்கங்களும் திருக்கயிலாய நாதனும் அமைக்கப்பட்டிருக்கிறது சிறப்பாகும்.

மிகச் சிறந்த அழகும், எழிலும் மிக்க திருக்கோயிலாக அது காட்சியளிக்கிறது. அன்றாடம் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களும் நூற்றுக்கணக்கான உள்ளூர்ப் போது மக்களும் வந்து வணங்குகிறார்கள். தன் பெற்றோரே முழு உருவத்தில் சிவ லிங்கத் திருமேனிகளை வணங்குவது போல் அமைத்து இருக்கின்றார். அவர் பெயரும் அவர் தம் புகழும் என்றும் அழியாது; இத்திருக்கோயில் உள்ளவரை நீடித்து நிற்கும். மக்களைப் பத்தி

வழியில் ஈடுபடுத்துகிடின்ற மிகச் சிறந்த சிவ புண்ணியமாகும். இந்தப் பெரு மகனைப் பெற்ற பெற்றோரின் புகழ் நீடு வாழ் வதாக! நாங்கள் நாசிக்கிலிருந்து மண்மாடு சென்று மறுநாள் பம்பாயை நோக்கிச் செலல்லத் திட்டமிட்டோம்.

# 4

அதிகாலை ஏழரை மணி அளவில் மண்மாடு புகைவண்டி நிலையத்திலிருந்து பம்பாய் நகரை நோக்கிச் சென்று, நண்பகல் 12 மணியளவில் பம்பாயை அடைந்தோம். பம்பாய் செல்வச் செழிப்பு மிக்க பெருநகரம். மிகப்பெரிய துறைமுகம். இந்தியா வும், தமிழகமும் ஒரு காலத்தில் கிழக்காசிய நாடுகளோடு மட்டு மே வாணிப உறவு கொண்டிருந்தது. அப்போது தமிகத்தின் கொற்கை பூம்புகார், தூத்துக்குடி, தொண்டி ஆகிய துறைமுக நகரங்கள் செல்வச் செழிப்போடு, வளத்தோடு வாழ்வாங்கு வாழ்ந்தன.

இக்கடற்கரையின் செல்வச் செழிப்பினைப் பட்டினப் பாலை என்னும் நூல் மிக அழகுபடப் பேசும். இத் துறைமுகங்களில் வரும் கப்பல்கள் பொன்னைக் கொணர்ந்து கொட்டிவிட்டு நம் நாட்டு மிளகினை ஏற்றிச் சென்றனவாம். அதனை 'யவனர்தம் மரக்கலம் பொன்னோடு வந்து கரியொடு ஏகும்' எனப் பட்டினப் பாலை பேசும்.

இன்று இத்துறைமுகங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தும் போது கிரேக்க, சீன, ரோம நாணயங்கள் இருப்பதனைக் கண்டு அராய்ச்சியாளர்கள் வியக்கின்றனர். அந்நாளில் தமிழகம் மிகச் சிறந்த கப்பற் படையைக் கொண்டு வாணிபம் செய்தது. வர லாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக் கொடியை நாட்டியது. ராஜராஜ னும் ராஜேந்திரனும் கங்கை வென்று கடாரம் கொண்டு மாளவம், ஜாவா, சுமத்ரா, போர்னியா, மலேயா, இலங்கை போன்ற நாடு களையெல்லாம் வென்று நம் தமிழ்க்கொடியைப் பறக்க விட்டு

தமிழர் தம் நிலைக்களனான திருக்கோயில்களை அங்கெல்லாம் எழுப்பினர்.

ஆம், தமிழகத்தின் பொற்காலம் அது, கால வெள்ளத்தால் அது பொய்யாய் பழங்கதையாய் செல்லரித்து ஏடுகளாய்ச் சென்று ஒழிந்தது. இந்தியாவும், தமிழகமும் அடிமைப்பட்ட, கிழக்காசிய நாடுகளோடு இருந்த தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. நம் பண்டைச் சிறப்புமிக்க துறைமுகங்களின் சிறப்பொழிந்தது. செல்வம் சிதைந்தது. வறுமை தலை எடுத்தது. துறைமுகங்கள் அதன் பெயரையே இழந்து வெறும் கடற்கரைச் சிற்றூராய்த் தேய்ந்தது. உலகெலாம் தமிழர் தம் பண்டைய நாகரிகத்தைக் கலாச்சாரத்தைப் பறைசாற்றிய இத்துறைமுக நகரங்கள் கேட்பாரற்று அநாதையானது, விதியின் கோர விளையாட்டாகும். அதனால் பாரதி, விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்? என வருந்திப் பாடினார்.

### அவமானச் சின்னம்

நமக்கு மேற்கத்திய நாடுகளோடு உறவு வந்த பிறகு புதிய துறைமுகங்கள் புதிய பொலிவும் அழகும் சிறப்பும் பெற்றன. அப்படி புதிய பொலிவோடு அழகோடு தோன்றிய புதிய துறைமுகம்தான் பம்பாய்த் துறைமுகம். நம்மை அடிமைப்படுத்தி ஆளவந்தார் எல்லாம் நுழைந்த நுழைவாயில் பம்பாய்த் துறைமுகம். எனவே பம்பாயை (கேட் வே ஆப் இந்தியா) இந்தியாவின் நுழைவாயில் என்றனர். வேல்ஸ் என்ற ஆங்கிலேயர் நம்மை அடக்கி ஆள இங்கிலாந்து நாட்டு மன்னரால் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் கப்பலிலிருந்து காலடி வைத்த இடத்தில் வாயில் போன்ற உயர்ந்த கட்டடம் அமைத்துள்ளனர். அதுவே கேட் வே ஆப் இந்தியா என்றழைக்கப்படுகிறது. ஊரெல்லாம் இப்பெருமகனை வரவேற்றபோது காங்கிரஸ் மகாசபை அதனை எதிர்த்து ஊர்வலம் விட்டு கண்டனக் கூட்டங்கள் நடத்தியது. அதனால் அடிபட்டு, உதைபட்டு ஏராளமான நம் காந்தியத்

தொண்டர்கள் ரத்தம் சிந்தினர். எனவே இந்தியாவின் நுழை வாயில் எனப்படும் அச்சின்னம் இந்தியாவின் அடிமைச் சாசனச் சின்னமாகவும், அவமானச் சின்னமாகவுமே எனக்குக் காட்சி யளித்தது.

அக்கடற்கரைக்கு எதிர்புறம் இருக்கிறது தாஜ்மஹால் என் றொரு மிக உயர்ந்து தங்கும்விடுதி அதனைத் தூர இருந்தே பார்த்தோம். ஏனென்றால் அது நம் போன்ற சாதாரண மக்களால் அதனுள் நுழைய முடியாது. ஒருநாள் தங்குவதற்கு அறை வாடகை மட்டும் ரூ.1000க்கும் மேல், ஓர் இட்லியின் விலை ரூ.10 காபி யின் விலை ரூ.10 இத்தகைய விடுதிகளெல்லாம் பணத்திற்கு என்ன செய்வது என்ற நம் போன்றோர்க்கு உரியதன்று. பணத்தை என்ன செய்வது எனத் தெரியாமல் விழிக்கும் பேர் வழிகளுக்கு ஆனது.

## கிருபளானியின் எச்சரிக்கை

இத்தகைய பெரிய விடுதிகளில் வேட்டி கட்டிய சாதாரண மக்களை அனுமதிக்க மறுத்த காலம் ஒன்று உண்டு.

அதனைப் பாராளுமன்றத்தில் பண்டிதர் நேருவின் முன் னால் ஆச்சாரிய கிருபளானி கூறினார். பிரபல சுந்தரப் போராட்ட மாவீரரான அவர், "நம் நாட்டு உடை அணிந்து செல்ல மறுக்கும் இப்பகுதிகள் இந்தியாவில் இருக்கத் தகுதியற்றது. இந்த நடை முறை பின்பற்றப்படுவதனால் விடுதலை பெற்ற நாம் இன்னும் அடிமைதானா? இதனை நீக்க, மக்களை அழைத்து அவ்விடுதி களில் இந்திய உடைகளோடு, தடை மீறிச் செல்வேன்" என அறிவித்தார். ஜனநாயகவாதியான பிரதமர் நேரு அந்த விதி நீக்கப்படுவதாக அறிவித்தார். ஆம் விடுதி நடப்பது இந்தியா வில்; நடத்துபபவரோ இந்தியர். அங்கு செல்வோரும் இந்தியர். என்றாலும் இந்த நாட்டு உடை அணிந்து செல்ல மறுக்கப்பட்டது எவ்வளவு பெரிய கொடுமை பாருங்கள்! அதற்குக் காரணம் நாடு விடுதலை பெற்றாலும், நம்மவரின் அடிமைப்பப்புத்தி போகாமையே

ஆகும். இத்தகைய பெரிய விடுதிகளில் பெரும்பாலோர் தங்கள் சொந்தப் பணத்தில் செலவு செய்து தங்குபவர்கள் அல்லர். அரசு பணத்திலும் அநாமத்துப் பணத்திலும் தொழிற் கூடங்களின் நிர்வாகிகளும், தொழிற்சாலைகளின் செலவில் தங்குபவர்கள் தான். நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இத்தகைய ஆடம்பரங் களும் அதன்மோகங்களுமே காரணம்.

**வேல்ஸ் மன்னரின் அருங்காட்சியகம்**

இத்தகைய ஆடம்பர தாஜ் ஓட்டலை தூர இருந்தே பார்த்து விட்டு கிராமியக்காட்சிச் சாலைக்குச் சென்றோம். அங்கு பதப் படுத்தப்பட்ட பறவை, மிருகங்கள் மிக ஆழகாக அற்புதமாக உள்ளன. சிற்பங்களை இந்தியா முழுக்கத் தேடியலைந்து கொணர்ந்து சேர்ப்பித்துள்ளனர். மூன்று மாடிக் கட்டடம். பல கோடி ரூபாய் மதிப்புள்ளது. காட்சிச் சாலையின் சிறப்பினைசச் சொல்ல இயலாது. அவ்வளவு மகத்தானது; மனிதன் குரங்கி லிருந்து வந்தான் என்பதனைக் கூறியவன் டார்வின் என்ற விஞ் ஞானி. அதனை விளக்க முதலில் குரங்கின் படம். அதனைத் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியைப் பல படங்களில் காட்டி இறுதியில் மனித வடிவம் காட்டப்பட்டுள்ளது மிக அருமை. அத்தோடு நம் தமிழர் நாகரிகத்தை இறைவழிபாட்டினைக் கட்டடக் கலையை உலகுக்குப் பறை சாற்றும் உன்னத 'மொகஞ்சதாரோ - ஹரப்பா' என்ற சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்தும் காட்சிக்கூடம் மிக அற்புதமானது. குளியலறை, பாதாளச் சாக் கடை, நகர நிர்மாணம் இவற்றையெல்லாம் அற்புதமாக அமைத் துள்ளனர். 15000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படும். சிந்து சமவெளி நாகரிகம் தமிழர்களின் நாகரிகம் என உலக வரலாற்றுப் பேராசிரியர் கூறியதை நினைத்துப் பார்க்கும்போது நமக்கு சற்றுப் பெருமிதம் வருகிறது. தலை நிமிர்கிறது. 'தமிழ னென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என உள் மனம் முணுமுணுப்பதை உணரலாம்.

**நாகரிக வளர்ச்சி**

அதுமட்டுமல்லாது ஆதிமனிதன் கற்கால மனிதனில் தொடங்கித் தற்கால மனிதன் தற்காப்புக்குச் செய்த ஆயுதங் களை வரிசை வரிசையாக அமைத்திருப்பது அற்புதமானது. ஆடைக் கலையின் வளர்ச்சி சாதாரண மனிதன் வளரத் தொடங்கி மன்னர் வரை ஆடை வளர்ந்த வரலாற்றை அற்புதமாக விளக்கு கிறது. பல நாள் காண வேண்டிய காட்சி அது.

**தமிழ்க் கடிகாரம்**

அங்கு புதுமையான முறையில் காட்சி தரும் ஒரு கடிகாரம் உண்டு. அது மிகப் பழைமையானது. அதில் என்ன அதிசயம் என்கிறீர்களா? அதிசயம்தான். ஆனால் அது உண்மை. சென்று பாருங்கள் தெரியும். ஆம், அக்கடிகாரம் தமிழ் எண்களான க.உ. போன்ற எண் வடிவத்தில் அமைந்துள்ளது. எலிபெண்டா குகை அழகியது. அதனைப் பற்றிப் பின்னர் விவரிக்கிறேன். அதற்கும் இந்தக் காட்சிச் சாலைக்குமுள்ள செய்தியைக் கூறி விடுகின் றேன். போர்ச்சுக்கீசிய நாட்டுக்காரர்கள் எலிபெண்டா குகை இருக்கும் இடத்திற்குச் சென்றனர். அங்கு மிகப் பெரிய கல் யானை கண்டு எலிபெண்டா என்றனர். அதனால் அத் தீவு எலிபெண்டா என அழைக்கப்பட்டது. இப்போது நாம் எலிபெண்டா சென்றால் அதனைக் காண இயலாது. ஏன் என்றால் 13 அடி நீளமும் 7 அடி உயரமும் கொண்டு அந்த யானையை வெடி வைத்து உடைத்துவிட்டனர். அதனை எடுத்து அதன் பாகங்களை ஒட்டி இந்த வேல்ஸ் இளவரசர் காட்சசிச் சாலையின் முன்புறம் வைத்துள்ளனர். வேல்ஸ் இளவரசர் தொல் பொருள் ஆய்வில் மிக்க ஆர்வம் கொண்டவர்; காலத்தையும் பொருளையும் கரு தாது மிக அற்புதமான இக்காட்சிச் சாலையை உருவாக்கியுள்ளார். இந்த அரிய கலைச் சேவை செய்ததற்காக நாம் அவருக்கு நன்றி கூறலாம். அடுத்து காண வேண்டியது சௌபாத் மிக என்ற கடற்கரை.

வளமுற வானுயர ஓங்கி வளர்ச்சி பெற்ற பல மாடிக் கட்டடங்கள் ஒருபுறம். மறுபுறம் ஓங்கி அலை எழும்பி ஆரவாரிக்கும் ஆழ்கடல். இதற்கிடையில் சீறிச் செல்லும் வாகனங்கள்; சிந்தித்த படி நடக்கும் மக்கள். சிந்தனையே இன்றி ஓடும் இயந்ததிர மனிதர்கள். எறும்புக் கூட்டம் ஊர்வதுபோல் தொடர்ச்சியாக ஊர்ந்து செல்லும் ஊர்திகள் இவற்றையெல்லாம் மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டே இருக்கலாம். இப் பம்பாய் திருமகள் நினைவாக வாழுமிடமல்லவா? செல்வச் செழிப்பிற்குக் கேட்பானேன் இந்தியாவின் தலைசிறந்த நகரங்களில் இரண்டாவது இடத்தைப் பெறுவது இப் பம்பாய். அதற்குக் காரணம் திருமகள் இங்கு நீங்காது குடியிருப்பதுதான் என்பர். என்ன திகைப்பு? திருமகளாவது பம்பாயில் குடியிருப்பதாவது என்கிறீர்களா? உண்மைதான்.

நம் தமிழகத்தில் செல்வத்திற்குத் திருமகளையும், கல்விக்கு கலைமகளையும், வீரத்திற்கு மலைகளையும் கொண்டாடுகின்றோம். வாழ்த்தி வணங்குகின்றோம். மலைமகளான அன்னை பராசக்தியைச் சிவாலயங்களிலே கருவறையில் வைத்து வழி பட்டாலும், மலைமகளுக்கு எனத் தனிக் கோயில்கள் உண்டு. அன்னை காமாட்சிக்கு தனிக் கோயில் உண்டு. அதுபோல் கலை மகளுக்கும் தனிக் கோயில் உண்டு.

ஆம், தஞ்சை மாவட்டக் கூத்தனூரில் கலைமகளுக்கெனத் தனிக் கோயில் உண்டு. அக் கலைமகளே ஒட்டக்கூத்தருக்கு அருள் செய்த பெருமாட்டி. திருமால் கோயில்களில் திருமகளுக்கு இடம் உண்டு. பூமாதேவி. சீதேவி, ஆண்டாள் என்ற பல மங்கைய ரோடு போராடி வாழ்கின்றார்.

பம்பாயில் அப்படியில்லை. மிக அற்புதமாக 'மகாலாட்சுமி' திருக்கோயிலை அமைத்துள்ளனர். அக் கோயிலில் திருமகள் எழுந்தருளி இருப்பதைப் பார்த்தாலே செல்வச் செழிப்பு தெரி கிறது. இக் கோயில் இருப்பதே பம்பாயின் செல்வச் செழிப்பிற்குக் காரணம் என்கின்றனர் பம்பாய் வாசிகள். அது உண்மை என்றே

நமக்கும் எண்ணத் தோன்றுகிறது. நடு நாயகமாகத் திருமகளே இருந்தாலும் வலமும், இடமும் கலைமகளுக்கும், மலைமகளுக்கும் இடம் ஒதுக்கியுள்ளனர். கீழே சிவபெருமானும் உள்ளார். மக்கள் எப்போதும் வந்த வண்ணம் உள்ளனர்.

திருமகள் திருக்கோயிலுக்குப் பின்புறம் சென்று பார்த்தால் கடல் நடுவே ஓர் அழகிய மசூதி உள்ளது. மேட்டுப் பகுதியிலிருந்து மசூதிக்கு செல்ல ஒரு தனிப்பாதை உள்ளது. அங்கு ஓர் அதிசயம் என்னவென்றால் மதியம் வரை அப்பாதை கடல்நீரால் மூழ்கி உள்ளது. மாலையில் கடல்நீர் இருபுறமும் வழிந்து பாதை தெரிய மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று தொழுகை நடத்துகின்றனர். காலையில் கடல்நீர் மூழ்கடிப்பதும், மாலையில் தானே வழிவிடுவதும் நாடோறும் நடக்கும் அதிசயம் ஆகும்.

## திருமகள் கோயில் தோற்றம்

இத் திருமகள் கோயில் அழிந்து பின் உருவாக்கப் பட்டதாகும். இக்கோயில் எப்படி அழிந்தது என்பதை அறிவது அவசியம். இந்த பம்பாயில் 'ஓர்லி காஸ்வே' என்ற பாலம் கட்டியிருக்கின்றனர். இந்தப் பாலத்தைக் கட்டிய போதெல்லாம் பலமுறை முயன்று கட்டியும் முடிக்க முடியவில்லை. கட்டடக் காண்ட்ராக்டர் கலங்கினார். அப்போது பிரபு என்பவரது கனவவில் மகாவிஷ்ணு தோன்றி தானும், தன் துணைவியாரும் கடல்நீரில் கிடப்பதாகவும் அந்தப் பிரபுவே பாலம் கட்டும் காண்ட்ராக்ட் எடுத்து பாலம் கட்டுவதோடு தங்களையும் வெளிக் கொணர்ந்து கோயில் கட்டினால் துணை புரிவததாகவும் கூறி மறைந்தார்.

கனவிலிருந்து விழித்த பிரபு உடனடியாகச் செயல்பட்டார் குறித்த இடத்திலிருந்த தேவியர் சிலையை எடுத்து வந்த கோயில் அமைத்து அவர்களை நிர்மாணித்துப் பாலத்தையும் கட்டி முடித்தார். எனவே இக்கோயிலில் உள்ள மகாலட்சுமி மிகவும் சக்தி வாய்ந்தவள். கேட்டவர் கேட்டவரம் அருளும் பெருமாட்டி, எனவே இக்கோயிலில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடிப்

பிரார்த்திக்கின்றனர். நம் திருக்கூட்டம் திருமகளை மனமார வணங்கி மகிழ்ந்தது.

## இறைவன் கைவண்ணம்

இங்கு ஓர் அழழகான மீன் கண்காட்சி சாலை உள்ளது. உலகில் உள்ள பல்வேறு வகையான நூற்றுக்கணக்கான மீன் வகையை அமைத்துள்ளனர் காண வேண்டிய ஒன்று. இறை வனின் படைபப்பின் அற்புதத்தைக் காண ஒரு காட்சி. 1 அங் குலம் அளவுள்ள மீன், மிகப் பெரிய மின், ஒளி பாய்ச்சும் மீன், மின்னும் மீன், வண்ணமீன் என எத்தனை வகை அப்பப்பா! சொல்லி முடியாது. இறைவனின் கைவண்ணம்!

## பம்பாயின் மூலதேவதை

இன்னும் பம்பாயில் காணவேண்டிய முக்கியமான கோயில் மும்பாதேவி கோயிலாகும். இதுவே பம்பாயில் பிரதான கோயி லாகும். மும்பாய் என்பதே பின்னர் பம்பாய் என ஆனது என்பர். இங்கும் மக்கள் கூட்டம் மிக அதிகம். சிறிய கோயில். ஆனால் மிக அழகானது. இங்கு மும்பாதேவி நடுநாயகமாக உள்ளார். நம் முருகன் பன்னிரு கரங்களுடன் செல்வச் செழிப்போடு நின்று ஆபரரணங்களோடு காட்சியளிக்கிறான். விநாயகர் சிவபெரு மான், அம்பிகை அனைவரும் உள்ளனர். அருள் நிறைந்த திருக் கோயில்.

## பம்பாய் ஆளுநரின் ஆசி

நம் தாயகத்தின் மிகச்சிறந்த தலைவர்களுள் ஒருவரான திரு சி.சுப்பிரமணியம் அவர்கள் பம்பாய் மாநில ஆளுநராக உள்ளார். அவரைச் சந்திக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது ஆசி பெற விருபப்பம் தெரிவித்தோம். அவரும் இசைவு தெரி வித்தார். நம் திருக்கூட்டம் ஆளுநர் மாளிகைக்குச் சென்றது. அங்கு ஆளுநரின் செயலர் வரவேற்று தர்பார் ஹாலில் அனை வரையும் அமர வைத்தார். உடன் திரு சி.சுப்பிரமணியம் அவர்கள்

வந்து அனைவருக்கும் குளிர்பானம் வழங்கினார். என்னைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

## இந்திய ஒருமையும் சிவநெறியும்

ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. அந்த தர்பார் ஹால் மிகவும் அழகானது. விசாலமானது. அமைச்சர்கள் பதவி ஏற்பது அங்குதானாம். சகோதரி சரஸ்வதி அவர்களும், தனம் அவர்களும் இறைவணக்கமாகச் சில திருமுறைப் பாடல்களைப் பாடினர். அதன்பின் நான் ''காந்தியத்தின் எஞ்சிய நேரடி வாரிசுகளில் ஒருவரான நம் தலைவர் திரு சி.சுப்பிரமணியம் அவர்கள் தொண்டால், தூய்மையால், தியாகத்தால், அறிவாற்றலால், சிறப்புற்று விளங்குபவர். நம் திருப்பயணம் சிறப்புற வெற்றி பெற அவர் வாழ்த்து நமக்குத் தேவை. அது நமக்குத் துணை புரியும்'' எனக் கூறி அவரை ஆசி கூற வேண்டினேன். அவரும் மிக அழகாகப் பேசினார்.

''இத்திருப்பயணத்தில் சில சிரமங்கள் உங்களுக்கு வரலாம். அதற்குக் கலங்காதீர்கள். அப்போது ஆண்டவன் உங்களோடு இருந்து உங்களைக் காப்பான். சோதனைகள் வரும் போது இறைவன் உங்கள் உடனிருந்து உங்களைக் காப்பதுடன் அதனையே சாதனையாகவும் மாற்றியமைப்பான்.

இந்திய ஒருமைப்பாட்டினை நிலை நாட்டிட நம் முன்னோர்கள் நாட்டின் பல பாகங்களில் சிவாலயங்களை நிறுவி நம் சிவன் பெயரால் ஒன்றுபட்டு வாழ பழிகாட்டினர். ஆதிசங்கரர் நான்கு திசைகளில் நான்கு திருமடங்களை அமைத்து வழி காட்டினார். உங்கள் பயணம் சிறக்க இறைவனை வேண்டி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்'' என வாழ்த்தினார். அதன்பின் அதிகாரிகளை அழைத்து மாளிகையைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லப் பணித்து விடைபெற்றார்.

மிக அழகான மாளிகை. கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. மலபார் ஹில்ஸ் என்ற பகுதியில் அம் மாளிகை அமைந்துள்ளது.

மலபார் ஹில்ஸ் பகுததியில் மிக அழகான பூங்கா பார்க்க வேண்டிய ஒன்று. எங்கள் பஸ் ஓட்டுநர் இடையில் வண்டியை எடுக்க மறுத்துத் தகராறு செய்தார். நாள் முழுக்க பஸ் அமர்த்தப்பட்டிருந்தாலும் ஆளுநர் மாளிகை போகப் பேசவில்லை என்று மறுத்துத் தகராறு செய்தனர். இதில் அரை மணி நேரம் விரையமானது. பின்னர் 500 ரூபாய் கூடுதலாகக் கொடுப்பதாகப் பேசிய பின் வண்டியை எடுத்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் பறிப்பதில் ஓட்டுநர்கள் வழிப்பறிக் கொள்ளையர்களை விட எந்த வகையிலும் தாழ்ந்தவரர்கள் அல்லர் என்பதனை நான் உணர்ந்தேன்.

## வறட்சியின் பிடியில் பம்பாய் மாநிலம்

பம்பாய் நகரம் மிகப் பெரிய நகரம். 20 க்கு மேற்பட்ட ரயில் மேடைகளை (பிளாட்பாரம்) கொண்ட மிகப்பெரரிய புகை வண்டி நிலையம் மணிக்கு பல்லாயிரம் மக்கள் வரவும் போகவும் உள்ள பெரிய வண்டித் தொடர் கொண்டது. நாங்கள் சென்ற போர்து மராட்டிய மாநிலம் முழுக்க வறட்சிப் பிடியின் கோரப் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. புகைவண்டி நிலையங்களிலெல்லாம் ஒரு குவளைத் தண்ணீர் 50 காசுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் தலையிலே அடுக்கடுக்காக 3 குடங்களைச் சுமந்து கொண்டு பல மைல் தூரம் நடந்து கொண்டு வருவது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. இறைவன் கருணை இந்த மக்களுக்கு வான்பொழி கருணையாக வரவேண்டும் என்று மனதார விரும்பி வேண்டினோம்.

## சோதனை தொடங்கியது

நம்முடைய திருக்கூட்டம் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் வேண்டிக் கொண்டார்கள். "எங்களுக்கு மழை வரவேண்டும். அதற்காக நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று வேண்டினர். அவ்வளவு கடுமையான வறட்சியான சூழ்நிலை. நாங்களும் அதற்கு விலக்கல்ல. தண்ணீரின்றி மிகவும் இடர்ப்பட்டோம். எங்கள் ரயிலை பல மைல்களுக்கு அப்பால் உள்ள தனி இடத்தில்

நிறுத்தி விட்டாரர்கள். வண்டியில் விளக்கு இல்லை. குடிநீர் இல்லை. எந்த வசதியும் இல்லை. மிகவும் துன்புற்றோம்.

ஏற்கெனவே மராட்டிய மாநில ஆளுநர் திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் ஆசி வழங்கியபோது 'பயணத்தில் உங்களுக்கு சில இடர்பாடுகள் வரும்; அதனை நீங்கள் தாங்கி, மேற்கொண்டு சென்றால் இறைவன் உங்களுக்குத் துணை இருப்பார் என்றார். அவர் சொன்னபடி துன்பம் தொடர்ந்து. துணைக்கு ஆண்டவன் உதவி தேவையாயிற்று. எனவே சி.எஸ். அவர்களுடன் தொடர்பு கொண்டு, எங்கள் நிலைமையை எடுத்துச் சொன்னேன்.

எங்கள் ரயில் பெட்டியை எந்த ரயிலுடன் இணைப்பது என்பபதே முடிவு செய்யப்படாமல் இருந்தது. சி.எஸ். அவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர் தனது செயலர் மூலமாக ஆணைகள் பிறப்பித்து வண்டியை உடனடியாக ரயிலடிக்குக் கொண்டு வரவும். தண்ணீர் கிடைக்கவும், அடுதத்த நாள் மாலையில் ரயிலோடு இணைக்கவும் தேவையான ஆணைகளைப் பிறப்பித்தார். எங்கள் பயணம் அந்தப் பகுதியை விட்ட (ஜோனல்) முடியும் வரை (வடபுல ரயில்வே) ஒவ்வொரு ரயில் நிலையம் தோறும் அதிகாரிகள் வந்து சந்தித்துது, என்ன வசதிகள் வேண்டும் என்று கேட்டு உரிய வசதிகளும் செய்தார்கள். அப்போது தான் எனக்கு அரசின் பலம் என்னவென்றும் அதிகார வர்க்கத்தின் சலனப் போக்கும், சந்தர்ப்ப வாதமும் விரிவாகப் புரிந்தது.

## சோதனை மேல் சோதனை

இதற்கிடையில் பம்பாய் ரயிலல் நிலையத்தில் நின்ற நம்முடைய ரயில் பெட்டியிலிருந்து அதிகாலை 2 மணிக்கு எழுந்து எல்லோருக்கும் முன்னே பூஜையை முடித்து விடலாம் என்று கருதி, நம்முடைய வன்தொண்டரான பாலசுப்பிரமணியம் செட்டியார், பிளாட்பாரத்தில் குளித்துக் கொண்டிருந்தார். வண்டி அங்கிருந்து புறப்பட்டு அடுதத ரயில் நிலையத்திற்கு செல்லாமல் இடையிலேயே கொண்டு போய் நிறுத்தி விட்டனர்.

விடிந்ததும் நாங்கள் பார்த்தால் பாலசுப்பிரமணியம் செட்டியாரைக் காணவில்லை. உடனே பம்பாய் ரயில் நிலையத்திற்குச் சென்று தண்டவாளமெல்லாம் தேடி, பிளாட்பாரம் முழுவதும் தேடி அவர் எங்கும் கிடைக்காமையால் பெரிதும் கவலையுற்றேன். ரயில் நிலைய அதிகாரரிகளோடு பேசி அவர் உடனே வரவேண்டும் என்று ஒலிபெருக்கி மூலம் பலமுறை அறிவிப்புச் செய்தும் பலன் எதும் இல்லை. பிறகு நானே ரயில் நிலைய அதிகாரிகளிடம் பேசி தமிழில் பல முறை அறிவித்தேன். அதிகாரிகள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் அறிவித்தனர். அது புரியாமல் தவிப்பார் என்று நான் தவித்து தமிழிலும் அறிவித்தேன். பலன் என்னவோ ஒன்றும் இல்லை.

**கண்டேன் வன்தொண்டரை!**

மிகவும் சோர்ந்து 11 மணி அளவில், பூஜையை நடத்தி முடித்தேன். பிளாட்பாரத்தில் குளித்துக் கொண்டிருந்த வன் தொண்டர் ரயில் சென்றதைக் கண்டு திகைத்திருக்கிறார். ரயில் நிலையத்ததில் உறங்கிக் கொண்டிருந்த நம்மோடு வந்த சமையல்யாரர், இந்தி நன்கு தெரிந்தவர். அவரும் திடீரென்று விழித்து ரயில் போவதையும் பார்த்து, இந்தப் பெரரியவரையும் பார்த்து, ''பயப்படாதீர்கள். அடுத்து ரயில் நிலையத்தில் சென்று நாம் சேர்ந்து கொள்ளலாம்'' என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு, அடுத்த ரயில் நிலையம் சென்று விட்டார். இந்தக் கதையெல்லாம் தெரரியாத நாங்கள் பரிதவித்தோம்.

உடனே எங்களோடு இருந்த வழிகாட்டியை அடுத்த ரயில் நிலையத்திற்கு அனுப்பி அங்கே அறிவிப்புச் செய்தும் அங்கும் அவர் கிடைக்கவில்லை. இதந்தக் குழப்பத்தால் எலிபெண்டா செலல்ல வேண்டிய நாங்கள் ரயில் நிலையத்தின் மேடையிலேயே சிக்கி தவித்தோம். ஒரு வழியாக மதியம் பன்னிரண்டே கால் மணி அளவில் பெரியவரை அழைத்துக் கொண்டு சமையல்காரர் நாங்கள் இருக்கும் ரயில் பெட்டிக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது

தான் எங்கள் முகங்களில் தெளிவு பிறந்தது. அதற்கு முன்னர் பார்த்தால் வாடிய மேனியும் வருத்தம் தோய்ந்த முகமுமாக மகிழ்ச்சி என்பதே என்ன என்று அறியாத நிலையிலே இருந் தோம். மொழி தெரியாத இடத்தில் வயதான பெரியவர் என்ன ஆனாரோ என்பதிலே கவலை உண்டாயிற்று.

அங்கு பம்பாயில் மணித்துளிக்கு ஒரு வண்டி வீதம் நூற்றுக் கணக்கான மின்சார வண்டிகள் அங்குமிங்கும் ஓடிக் கொண் டிருந்தன. என்னுடைய கவலையை உணர்ந்த ரயில்வே அதி காரிகள் 20 பேரை அனுப்பி ரயில்வே தண்டவாளங்களுக்கு இடையே அவரைத் தேடி அலைந்தார். அதற்குப் பிறகு அதிகாரி எனக்கு உறுதி கூறினார். 'இந்தப் பகுதி முழுக்க நாங்கள் தேடிப் பார்த்தாயிற்று. எங்கும் யாரும் அடிபட்டதாக இல்லை. நீங்கள் தைரியமாக இருக்கலாம்' என்று கூறினார்.

ஏற்கெனவே நான் துணிச்சலுக்குப் பெயர் போனவன் என் பதாக என்னோடு வந்தவர்களும் அறிவார்கள். பழகுவோரும் அறிவார்கள். ஆனால் துணிவு, வீரம் என்பதெல்லாம் அடுத்தவர் களுக்கு வரும்போதுதான். நமக்கு வரும் போது அவையெல்லாம் காற்றிலே பறந்து விடும். அச்சமே தலை தூக்குகிறது. ஒரு வழியாக இத்தனை வேடிக்கைகளுக்குப் பிறகு அவரைப் பார்த் ததிலே நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

**பம்பாய்க் கடைத்தெருவில்...**

அன்று முழுக்க பம்பாய் ரயில் நிலையத்தில் இருக்காமல், உள்ள நேரத்தை பம்பாயிலே மிகச் சிறந்த இடமான கடைவீதிக்குப் புறப்பட்டு, 'மங்கள் தீப், மார்க்கெட்', ஆகியவற்றைப் பார்வை யிடச் சென்றோம். அதைப் போல மணி மார்க்கெட் என்ற பகுதிக்குச் சென்றோம். சென்றவர்கள் பொருள்களை வாங்கிக் குவித்தார்கள். அவர்கள் வாங்கிய பொருள்களை எல்லாம் ரயில்பெட்டியில் அடைத்த போது, படுக்கவும், உட்காரவும் சிரமப்பட்டோம். நம்முடைய மக்களுக்கு பொருள் வாங்குவதிலே எந்தப் பொருள்

என்பது பற்றிக் கவலை இல்லை. நம்மோடு வந்த ஓர் அமையார் சில துடைப்பங்களை வாங்கினார்.

தமிழகத்தில் கிடைக்காத பொருள் இந்தியாவில் எங்கும் கிடைக்காது. புத்தம் புதியதாகக் கண்டுபிடித்ததனால் 10 நாளில் அது தமிகத்துக் கடைவீதிக்கு விற்பனைக்கு வந்துவிடும். சில ரூபாய்களே வித்தியாசம். ஆனால் நம்மவர்கள் விந்தைப் பொருள் களை வாங்குவதில்லை. சந்தையிலே விலை மலிவைப் பார்த்தே வாங்குகின்றனர். இதற்கு என் மனைவியும் விலக்கல்ல. பம்பாய் கடைவீதியிலே 6 தட்டுகள் சென்னையை விட இரண்டு ரூபாய் மலிவாக இருக்கிறது என்று வாங்கினார். ரயில் நிலையத்தில் சென்று பார்த்தபோது அதில் இரண்டு தட்டுகளில் விரிசல் இருந் தது. இப்படித்தான் மலிவு விலையில் வாங்கி எமாறுகிறோம். இது உலகம் முழுக்க நடப்பது ஒன்று.

## மலிவு விலையில் மயக்கம்

அமெரிக்க ஜாதிபதியான ஒருவர் தம் மனைவியை அழைத்துக் கொண்டு ஒருமுறை கடைவீதிக்குச் சென்றார். தள்ளுபடி விலை யில் கிடைக்கிறதே என்று அந்த அம்மையார் நம்மவர்களைப் போலவே தள்ளுபடி விலையில் பொருள்களை வாங்கிக் குவித் தார். அதிபர் தடுத்தார். ஆனால் ஜனாதிபதியாய் இருந்தால் என்ன, யாராயிருந்தால் என்ன, கணவன் சொல்லி எந்த மனைவி கேட்டாள்? அதிபரும் விட்டுவிட்டார்.

பிறகு மாளிகை சென்று பார்த்தபோதுதான் தெரிந்தது. அவையெல்லாம் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப் பட்ட பொருள்கள் என்பது, பிறகு தெரிந்து என்ன பயன்? நம்மவர் கள் தரமான பொருள்களை வாங்குவதை விட மலிவான பொருள் கள் வாங்குவதிலேயே மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள். இந்த மனோ பாவம் வர்த்தகச் சூதாடிகளுக்குத் துணையாகின்றது. இந்த எண்ண ஓட்டம் உலகம் முழுக்க ஒரே சீராக இருக்கிறது.

**எலிபெண்டா குகை**

மறுநாள் பம்பாய் கடற்கரையையொட்டி ஓர் அழகிய தீவைப் பார்த்தோம். அதன் பெயர் எலிபெண்டா குகை ஆகும். எலி பெண்டா என்று ஏன் பெயர் வந்தது என முன்பே விளக்கியுள்ளேன். அந்தத் தீவு மிகவும் தொன்மையானது. வரலாற்றுச் சிறப்பு மிக் கது. பகாசுரனும் அவனது மகள் உஷையும் அங்கு வாழ்ந்தனர். உஷை கன்னியாகவே வாழ்ந்தாள். அவள் காலத்தில் இத்தீவில் பொன்மாரி பொழிந்ததாம்; ஆம் மழைக்குப் பதில் பொன்னாகப் பெய்ததாம். இப்போது அப்படி ஒரே முறை பொன்மாரி பெய்தால் போதுமெனக் கருதுகிறீர்கள் என நினைக்கின்றேன். எல்லாத் திருக்கோயில்களின் திருப்பணிக்கும் உதவும் என நிங்கள் முணு முணுப்பதும் என் காதில் விழுகிறது. இறைவனே விரும்பி அப்படி பொன்மாரி பொழியச் செசய்தாலும் அரசாங்கம் விடாது ஆம். அது திருப்பணிக்குப் பயன்படாது. அவ்வளவும் அரசு எடுத்துச் சென்றுவிடும்.

உஷைக்காக அத்தீவில் பொன்மாரி பொழிந்தால் அத்தீவுக்கு ஸ்ரீபுரி என்ற பெயரும் உண்டு. போர்ச்சுகீசியர் இத்தீவிற்கு வரு முன் இத்தீவை மக்கள் கரபுரி என்றே அழைத்தனர். கர என்றால் கோட்டை என்று பொருள். கோட்டை நகர் என்ற பொருளில் கரபுரி என்றனர். 'கேட் வே ஆப் இண்டியா'வின் கரையில் இப் பகுதி உள்ளது. கடலில் இத்தீவினை அடைய 2 மணி நேரப் பயணம் மேற்கொள்ள வேண்டும். கடலில் செல்லும் போது அற்புதமான இயற்கை அழகினை ரசிக்கலாம். கடலின் நடுவில் கோட்டை போன்று நமது அரசு கடல் நடுவே பாதுகாப்பு அரண் அமைத்துள்ளது.

**தேசபக்தர் நேரு**

இந்தியாவில் முதன் முறையாக பெட்ரோல் எடுக்கப்பட்டது இக்கடற்கரையில்தான். பாரதப் பிரதமர் நேருவின் காலத்தில் முதல்முறையாக இக்கடற்கரையில் பெட்ரோல் கண்டுபிடிக்கப்

பட்டது. அச்செய்தி பண்டிதர் நேருவிடம் தெரிவிக்கப்பட்டது. நேருபெருமகனார் உடன் டெல்லியிலிருந்து புறப்பட்டு பம்பாய் வந்து சேர்ந்தார். அதிகாரிகள் அவரிடம் முதன் முதலில் வந்த பெட்ரோலை அளித்தனர். நேரு பெருமகனார் நாற்றம் வீசும் பெட்ரோலை உடம்பின் பல பாகங்களிலும் பூசிக் கொண்டு மகிழ்ச்சியோடு சிறு பிள்ளையைப் போல் குதித்து இந்தியாவின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்குமெனக் கூறினாராம். என்னே அவரது தேசபத்தி!

வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தீவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்தது இத்தீவில் உள்ள குடைவரைக் கோயில் களாகும். இத் தீவில் உள்ள குடைவரைகள் ஆறு. முழுமை பெற்றவை நான்கு; அரைகுறையானவை இரண்டு இக்குடை வரைக் கோயில்களை 8ஆம் நூற்றாண்டில் குப்த மன்னர்கள் உருவாக்கினர் எனச் சரித்திரம் சொல்கிறது. கலையறிவற்ற வெறி பிடித்த போர்ச்சுகீசியர் 17 ஆம் நூற்றாண்டில் அச்சிற்பங்களின் சிறப்பறியாத மூர்க்கர்கள் உடைத்துச் சிதைத்துச் சின்னா பின்ன மாக்கி விட்டனர். கலையழகும் ரசனையும் பக்தியும் உள்ளவர் களின் கண்களில் ரத்தக் கண்ணீர்தான் வரும்.

இங்குள்ள குடைவரைகளில் முதல் குடைவரை பெரியது. முழுமை பெற்றது. மிக்க அழகுடையது, அது இத்தீவின் வட மேற்குப் பகுதியில் 250 அடி உயரமுள்ள ஒரு குன்றில் உள்ளது. இக்குடைவரை சுமார் 120 சதுர அடி அளவில் உள்ளது. குடை வரையைத் தாங்கி நிற்பது போல பெரிய பெரிய தூண்களையும் செதுக்கியுள்ளனர். இக்குடைவரைகளை மூன்று பகுதியாக அமைத் துள்ளனர். வடக்கே பார்த்து பிரதான வாயிலை அடுத்துப் பெரிய மண்டபத்தோடு கூடிய் பகுதியொன்று, அதன் இருபுறமும் இரு பகுதிகள் கொண்டது.

### ஆனந்தத் தாண்டவம்

பிரதான வாயிலைத் தாண்டியதும் வலப்புறச் சுவரின் பிர மாண்டமான வடிவில் ஆனந்தத் தாண்டவமாடும் சிவபெருமான்

நின்றாடும் அற்புதக் காட்சியைக காணலாம். ஆடும் பெருமானின் பத்து அடி உயரத் திருமேனி காலிரண்டும் சிதைக்கப்பட்டுள்ளது. கொடுமையிலும் கொடுமையாகும். முன் கைகளும் சில சிதைந் துள்ளன. தாண்ட வேந்தர் தனித்தாடுவாரா என்ன? அவர்தான் எப்போதும் சேக்கிழார் குறிப்பிடுவாரே அதுபோல் மாதொரு பாகம் நோக்கி ஆடுகிறார். அன்னை சிவகாமியோ பெருமானின் ஆனந்தத் தாண்டவத்தில் லயித்து நாணிக்கோணி நிற்கிறார். ஒரு புறம் விநாயகர். மறுபுறம் முருகன், மற்றைய இடங்களில் தேவாதி தேவர்களெல்லாரும் கூடி நின்று திருக்கூத்துக் காணும் அற் புதத்தைக் காண்கின்றோம்.

இத் தாண்டவ மூர்த்தியின் எதிர்ப்புறம் சென்றால் சிவ பெருமான் மோன நிலையில் யோக நிலையில் பத்மாசனம் இட்டு அமர்ந்துள்ள அற்புதக் கோலம் உள்ளது. ஆனால் கொடுமை என்னவென்றால் பெருமான் திருமேனி மார்பிலிருந்து உள்ளது. இக்குடைவரையில் சிவலிங்கத் திருமேனி அமைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத் திருமேனியை வலம் வந்து வழிபடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. நாங்களும் வலம் வந்து வழிபட்டோம்.

**மகேசமூர்த்தி**

இக்குடைவரையில் தென் கோடியில் தலைவாயிலுக்கு நேர் எதிரே நடுநாயகமாக இருப்பவர்தான் மகேசமூர்த்தி. இவரையே திருமூர்த்தி என்கின்றனர். மூன்று திருமுகத்தோடு மார்பு வரை செதுக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 8 அடி கவிச் சக்கரவர்த்தி கம்பன் கூறுவானே,

‘உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா

அலகிலா விளையாட்டு உடையவனான’ பெருமானையே சிற்பி வடித்துள்ளார். ஆம் படைத்து, காத்து, அழிக்கும் முத் தொழிலுக்கும் முதல்வன் மகேசனே என்பதனை உணர்த்த மூன்று திருமுகங்களையும் அமைத்துள்ளார். மணிவாசகர், ‘மூவர் கோனாகி

நின்ற முதல்வன் மூர்த்தி' எனக் குறிப்பிடுவாரே அந்தத் திரு மூர்த்தி தான் இவர். சிற்ப உலகில் காணக் கிடைக்காத அரிய பொக்கிஷம்.

இம்மூன்று முகம் கொண்ட திருமுகத்தில் நடுநாயகமாக உள்ள முகத்தில் சாந்தம் தவழ்கிறது. அதுதான் படைத்தல் கடவுள் போலும்! வலப்புறமுள்ள திருமுகத்தில் புன்னகை தவழ்கிறது. அவர்தான் காத்தருள்பவராக இருத்தல் வேண்டும். இடப்புற முள்ள திருமுகத்தில் உருத்திராம்சம் உள்ளது. இம் மூவரும் சேர்ந்த மூர்த்தியே மகேச மூர்த்தியாக உள்ளார்.

இம் மகேச மூர்த்தி சிதையாமல் சிறப்பாக உள்ளார். மகேச மூர்த்தியைப் பார்த்த களிப்போடு அவருக்கு வலப்புறம் சென் றால் அங்கு நம் கொங்கு நாட்டுச் சிறப்பு மூர்த்தியான 17 அடி உயரமுள்ள மங்கைபங்கனைக் (அர்த்தநாரீஸ்வரன்) காணலாம். ஆனால் முழுமையாகக் காண முடியாது. இவரது இடைக்குக் கீழே சிதைந்த கோலத்தில் உள்ளது.

## குடைவரைப் பாறை சுனை நீர்

மகேச மூர்த்தியின் இடப்புறம் கங்காதர மூர்த்தி மிகப்பெரிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளார். இவரது வல்க்காலைக் காணோம். இவரது வலப்பக்கத்தில் அன்னை பார்வதி நாணிக்கோணி புது மணப் பெண்ணாகக் காட்சியளிக்கிறார். வானவீதியில் விண்ண வர் மலர்மாரி பெய்கிறார்கள். இந்தப் பிராதன கோயிலிலே கயிலை மலையெடுத்தத இராவணனும் உள்ளான். அந்த சூரசம்கார மூர்த்தி மிகப்பெரிய வடிவில் கோபாவேசத்தோடு காணப்படுகிறார்.

இக்கோயிலின் அருகே ஓர் அற்புதமான சுனை உள்ளது. சுனை நீர் சுவையானது. இங்குள்ள தூண்களெல்லாம் கலை அழகோடு உள்ளன. மிகப் பெரிய சிங்கம் ஒன்று கலைவேலைப் பாட்டோடு உள்ளது காண வேண்டிய ஒன்றாகும். எஞ்சிய குடை வரை இரண்டில் நல்ல தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. மற்ற இரண்டும் சுமாரானவை. சிற்ப வேலை ஏதும் இல்லை.

இக்குடைவரை அமைந்துள்ள தீவின் இறங்கு துறை 'அடப்பல் லோத' துறைமுகம் என வழழங்கப்படுகிறது; நல்ல இறங்கு துறை உள்ளது. சிறுகுண்டு ஒன்று இரரண்டு பர்லாங் தூரத்திலுள்ளது. படிகள் அமைக்கப்பட்டள்ளன. படிகளின் இரண்டு பக்கமும் கலைப் பொருள்களும் மற்றும் பலவகைப் பொருள்களும வைக்கப் பட்டுள்ளன. படிகள் ஏறுவதொன்றும் கடுமையானதல்ல படி ஏறிச் சென்றால் நாம் சுவையழகைக் காணலாம்.

## துவாரகைக் கண்ணன்

பம்பாயிலிருந்து புறப்பட்டு ஹாபா ரயில் நிலையம் வந்து துவாரகை என்று சொல்லக் கூடிய கண்ண பெருமான் வாழ்ந்த இடத்தைப் பார்க்கச் சென்றோம். இந்தத் துவாரகை முக்திப் பெருநகர்களில் ஒன்று. ஆதி சங்கரர் அமைத்த திருமடங்கள் நான்கினில் ஒன்று இங்கே உள்ளது. ஆழ்வார்கள் பாடி மகிழ்ந்த 108 திருப்பதிகளில் இந்தத் துவாரகையும், இதில் எழுந்தருளி இருக்கும் மணிவண்ணனும் அடங்குவர். இந்திய நாட்டின் வட கோடியில் பத்ரி நாராயணனும் கிழக்கே பூரியில் ஜகந்நாதரும் காப்பது போல் மேற்குக் கோடியில் இத்துவாரக நாதனாகிய மணிவண்ணன் இருந்து மக்களைக் காக்கின்றார்.

வசுதேவன் மைந்தனாக சிறைச்சாலையில் பிறந்த கண்ணன் தன் தாய் மாமன் கம்சனின் கொலை வெறியில் இருந்து தப்ப, பெற்றோரால் கோகுலத்தில் விடப்பட்டு இங்கு யசோதையின் மகனாக வளர்கிறார். தன் தாய் மாமனான கமம்சன், தன் பெற் றோரைச் சிறையில் இட்டு தனக்கு முன்னே தோன்றிய எழு வரையும் வெட்டிக் கொன்ற பாதகத்தைக் கேட்டுத் துடித்து கம்சனைக் கொன்றார். இதனை நம் ஆழ்வா, 'ஒருத்தி மகனாய் ஓரிரவில் பிறந்த கோகுலத்தில் ஒளிந்து வளர்ந்து' என்று குறிப் பிட்டார்.

## பழிக்குப் பழி

கம்சனின் மனைவியான அஸ்தியம் பிரஸ்தியும் தன் கண வனை கொன்ற கண்ணன் மேல் கோபங்கொண்டு, தன் தந்தை

யாகிய சராசந்னை, கண்ணனுக்கு எதிராகப் போர் புரியுமாறு தூண்டினர். கண்ணன் பிறந்த மதுரா மீது சராசந்தன் பதினேழு முறை படையெடுத்துக் கண்ணனைதத் தோல்வியடையச் செய் தான். பதினெட்டாவது தடவையாக போருக்கு வந்த பொழுத கண்ணன் படையைச் சார்ந்த யாதவர்கள் மிகவும் களைத்துப் போனார்கள். அத்தோடு யாதவர்கள் மது அருந்தி ஒருவரோடு ஒருவர் அடித்துக் கொண்டு நலிந்திருக்கிறார்கள் ஆதலால் சரராசந்தன் மதுராவை எளிதாகக் கைப்பற்றிக் கொண்டான்.

போர் நிலைமை தங்களுக்குச் சாதகமாய் இல்லாமையை உணரர்ந்த கண்ணன் தன் அண்ணன் பலராமனுடன் எஞ்சி யிருந்த யாதவர்களுடன் மேற்கே பயணம் செய்து இந்தத் துவார கையை நிர்மாணித்து அங்கே அரசு புரிந்தார். இப்படித்தான் கண்ணன் கோயில் கொண்ட துவாரகை உருவானது. இந்தத் துவாரகை கோமதி நதி கடலோடு கலக்கும் மிடத்தில் அழகாக அமைந்துள்ளது கோயிலுக்குச் செல்லும் முன் பக்தர்களெல்லாரும் இக்கடலில் நீராட வேண்டும் என்பது நியதி. அதன்படி நாங் களும் நீராடினோம்.

இச் சங்கமத்தில் பன்னிரண்டு துறைகள் உள்ளன. இங்கு விஷபாகுண்டம் என்ற ஓர் இடம் இருக்கிறது. கோமதியின் துறை யிலும் விஷபாகுண்டத்திலும் குளித்து, கோயிலை நோக்கிச் சென்று பெருமானை நோக்கி வணங்க வேண்டும். கோமதி நதியிலிருந்து விஷபாகுண்டத்தை 56 படிகள் ஏறி வந்தால் கண்ணன் கோயலை அடையலாம். இங்குள்ள கண்ணனே ரன் சோட்ராய என்று அழைக்கப்படுகிறார். ரன்சோட் என்றால் ரத்தக் காயம். ரத்த வாடை வீசும் பெருமாள் என்று பொருள். கண்ணனுக்கும் ரத்த வாடைக்கும் என்ன சம்பந்தம் என் வினவத் தோன்றுகிறது அல்லவா? அது ஒரு சுவையான கதை.

### கண்ணனின் பக்தர்

தக்கோர் என்னும் திருத்தலம் பம்பாயிலிருந்து ஆமதாபாத் செல்லும் பாதையில் இருக்கிறது. தக்கோர் என்னும் டங்கபுரத்தில்

கோயில் கொண்டிருப்பவர் துவாரகையில் உள்ள கண்ண பரமாத் மாவே என்பது ஒரு ரசமான வரலாறு. டங்கபுரம் என்னும் இத் தலத்தில் விஜயசிம்மன் என்ற கண்ணின் தீவிர பக்தர், மனைவி கங்காபாயுடன் வாழ்ந்து வந்தார். அவர் இராமர், கிருஷ்ணனிடத்தில் அளவில்லலா பக்தியுடையவர். இராமரிடம் உள்ள அளவற்ற பக்தியினால் இராம பக்தர் என்றே அழைக்கப்பட்டார். ஆண்டுக் கொரு முறையேனும் துவாரகை சென்று கண்ண பெருமானைக் கண்டு தொழாவிட்டால் அவருடைய ஆத்மா திருபப்தியடையாது. தன் கையாலேயே துளசிச் செடி வளர்த்து அச்செடியைக் கொண்டே துவாரகை நாதனை வாழ்த்தி வணங்குபவர்.

## தளர்உறு மூப்பும் தளரா உள்ளமும்

விஜயசிம்மருக்குத் தண்டூன்றி நடக்கும் பருவம் வந்தது. வயது 80 ஆயிற்று. இருந்தாலும் தான் துவாரகை செல்லும் நியமத்தை விடவில்லை. இவரது கஷ்டத்தை - அடியவரர் படும் துன்பத்தை - ஆண்டவன் சகித்துக் கொள்வாரா? எனவே விஜய சிம்மனின் கனவில் தோன்றி "இனி நீர் துவாரகைக்கு வர வேண்டி யதில்லை. நாமே உமது ஊரான டங்கபுரத்திற்கு வருகின்றோம். நாம் அங்கு எழுந்தருளுவதற்கு ஒரு வண்டி கொண்டு வாரும், பார்க்கலாம்" என்று கூறி மறைந்தார்.

உடனே கண் விழித்த விஜயசிம்மன் ஆனந்தக் கண்ணீர் வடித்து ஆண்டவனின் கருணையை நினைந்து நினைந்து உரு கினார். தமக்கு வேண்டிய ஒரு நண்பரிடம் வண்டி பெற்றுத் தள்ளாத வயதில் வண்டியிலேறித் துவாரகை சென்றார். துவார கையில் ஓர் இல்லத்தில் விஜயசிம்மர் தங்கினார்.

## கனவில் கண்ணன்

அன்று இரவு மீண்டும் துவாரகைநாதன் அவர் கனவில் தோன்றி, "நான் உம்முடன் கிளம்பத் தயாராக இருக்கிறேன் எம்மை வந்து இட்டுச் செல்லும்" எனக் கூறி மறைந்தார். விஜய சிம்மர் நள்ளிரவில் ஊரிலுள்ளோர் உறங்கும் போது துவாரகைக்

கண்ணன் கோயிலுக்குச் சென்றார். இவரது கைபட்ட உடனே கதவுகளெல்லாம் தாமாகத் திறந்து கொண்டன. கருவறையில் இருந்த துவாரகாதநாதனை 'பன்னெடுநாள் குழந்தையில்லாத் தாய் தனக்கொரு சேயைப் பெற்றால் எப்படி ஆனந்தக் கூத்தாடி அள்ளி எடுத்து அணைத்து மகிழ்வாளோ' அதுபோல கருவறையில் இருந்த கண்ணனை எடுத்து, தன் வண்டியில் வைத்து டங்கபுரம் நோக்கிப் பயணம் மேற்கொண்டார்.

இதில் அதிசயம் என்னவென்றால் கண்ணன் அருளால் பொழுது புலரும் முன்னே வண்டியும் விஜயசிம்மரும் துவாரகை நாதனும் ஊர் வந்து சேர்ந்து விடுகின்றனர். விஜயசிம்மர் டங்கபுரத்திலுள்ள தன் வீட்டிலேயே துவாரகைநாதனை எழுந்தருளச் செய்து தானும், தன் மனைவியும் பெருமானைப் பல்வேற வகையாக அலங்கரித்து ஆடிப் பாடிக் கண்ணீர் சொரிந்து வழிபாடு செய்தனர். அன்றாடம் இப்படி வழிபாடுகள் செய்து மகிழ்ந்தார்கள்.

**துவாரகையில் மணிவண்ணனைக் காணோம்**

துவாரகைப் பூசாரிகள் காலையில் ஆலயத்தில் சென்று பார்த்தபோது துவாரகா நாதனைக் காணாது துயருற்றனர். தொடர்ந்து பல இடங்களில் தேடியும் காணாது தவித்தனர். சில நாள் கழித்து டங்கபுரத்திலிருந்து வந்த விஜயசிம்மர்தான் எடுத்துச் சென்றார் என்று அறிந்தனர். அப்போது துவாரகையை ஆண்ட அரசனும் விஜயசிம்மனைப் பிடித்து வரத் தன் வீரர்களை அனுப்பினார். இந்தச் செசய்தி விஜயசிம்மரின் காதுகளுக்கு எட்டியது. விஜய சிமமர் என்ன செய்வது என்று தெரியாமல் கதறி அழுதார். அப்பொழுது துவாரகை நாதன் கனவில் எழுந்தருளி, "நீர் எம்மைப் பக்கத்தில் உள்ள புஷ்கரணியில் போட்டு விட்டு அங்கு வரும் வீரர்களுடன் போராடிப் புஷ்பகத்தில் ஏறி வைகுண்டம் வந்து எம் திருவடியில் இரும்" என்றார்.

**கங்காபாயின் துன்பம்**

விஜயசிம்மரும் பெருமானின் சுற்றுப்படி பெருமானைப் புஷ்கரணியில் விட்டு விட்டு வீரர்களை நோக்கிச் சென்றார்.

துவாரகையிலிருந்து வந்த வீரர்கள் விஜயசிம்மரைக் குத்திக் கொன்று விட்டனர். அவருடைய ஆன்மா வைகண்டம் சென்றது விஜயசசிம்மருருடைய துணைவி. தம் கணவருக்கு வேண்டிய ஈமக் கடன்களைக் கண்ணீருடன் செய்தார். துவாரகைப் பூசாரி கள் கங்காபாயின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பல துன்பங்களைக் கொடுத்தனர். துன்பம் தாங்காத கங்காபாய் துவாரகைநாதன் புஷ்கரணியில் கிடப்பதைச் சொல்லி விடு கிறார். பூசாரரிகளும், மற்றவர்களும் புஷ்கரணியில் கிடக்கும் துவாரகாநாதனை வெளிக் கொணர முயன்றனர். அவரோ கிளம்ப மறுக்கிறார். அவர்களாலல் வெளிக் கொணர முடியவில்லை. எல்லலாரும் வற்புறுத்த கடைசியில் கங்காபாயே துவாரகை நாதனை வெளிக் கொணர்ந்தார்.

இப்படி வெளிவந்த துவாரகைநாதனைப் பார்த்தால் அவரர் திருமேனியெல்லாம் இரத்தக் காயமாக இருந்தது. விஜயசிம் மரைக் குத்திய காயங்களெல்லாம் துவாரகை நாதன் உடம்பில் இருந்தன. துவாரகைநாதனைத் துவாரகைக்கு எடுத்துச் செல்ல முடியாத பூசாரிகள் எடைக்கு எடை தங்கம் கொடுக்க வேண்டும் என கங்காபாயைத் துன்புறுத்தினர். ஏழைமையில் இருந்த கங்கா பாயிடம் தங்க மூக்குத்ததியைத் தவிர வேறு தங்கம் எதுவும் கிடையாது.

கடைசியில் ஒரு துலாக்கோல் அமைத்து ஒரு தட்டில் தான் மூக்குத்தியை வைத்து மற்றொரு தட்டில் துவாரகை நாதனை வைத்தார். எல்லாரும் அதிசயிக்கும் வண்ணம் மூக்குத்தி இருந்த தட்டு தாழ்ந்தது. துவாரகை நாதனை இருந்த தட்டு உயர்ந்தது. அவர்கள் எல்லாரும் ''பெருமானே! நீ துவாரகைக்கு எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டினார்கள் . ஒருநாளில் 5 நாழிகை மட்டும் துவாரகையில் இருப்பேன். மற்ற நேரமெல்லாம் டங்க புரத்தில் இருப்பேன் என்று துவாரகைநாதன் அரள் செய்தான். இதுதான் 'ரன்சோட்ராய்' என்ற பெயருக்கு உரிய கதை.

### கண்டறியாதன கண்டோம்

இந்த துவாரகையில் எழுந்தருளியுள்ள கண்ணனை 'ஜலத் மந்திர்' என்கிறார்கள். இக்கோயில் பளிங்குக் கற்களால் கட்டப் பட்டது. கோயிலின் முக்கியப் பகுதி ஐந்து மாடங்களைக் கொண்டது. ஐந்தாவது மாடம் நூறு அடி கொண்டது. அதன் மேலுள்ள விமானத்தை 6 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இக்கோயிலை இவ்விமானம் அழகுபடச் செய்கிறது. அந்த விமானத்தின் மேல் வெள்ளைக் கொடி ஒன்று பறந்து கொண்டிருக்கிறது. கருவறை யில் கண்ண பரமாத்மா நான்கு திருக்கரங்களோடு வெள்ளை மஞ்சத்தில் இருக்கிறார். மேற்கு நோக்கிய திருக்கோலம். நல்ல கரிய திருமேனியோடு மூன்றடியுள்ள இந்த உருவத்தை நவரத் தினங்களால் அலங்கரித்திருக்கின்றனர்.

இக்கோயிலுக்கு எதிரே கண்ணனின் தாயான தேவகிக்கு ஒரு கோயில் இருக்கிறது. கண்ணன் திருவடிகளில் நாமே துளசி இலை இட்டு அர்ச்சிக்கலாம். உரிய தொகை கட்டினால் நாமே அபிசேகமும் செய்யலாம். சர்வ அலங்கார வடிவான கண்ணனுக்குத் தினமும் 11 தடவை பூசை நடக்கிறது. முக்கியமான படைப்புப் பொருள் வெண்ணெய்தான் என்பதனை நான் சொல்ல வேண்டுமா! கோகுலத்தின் ஆய்ச்சியர் இல்லத்தில் வெண்ணெயைத் திருடி உண்ட மாயக் கண்ணனுக்கு அதுதானே பெரு விருப்பம்!

### துவாரகை விழாக்கள்

கண்ணனின் அண்ணனான பலராமனுக்கும் இங்கே கோயில் இருக்கிறது. இக்கோயிலில் கண்ணனுடைய ஜென்மாஷ்டமி, ஆம்கட், ரத யாத்திரை, தீபாவளி, ஹோலி ஆகிய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் இலட்சக் கணக்கான பக்தர்கள் கூடி வழிபாடு செய்கிறார்கள் இக் கண் ணனுடைய கோயிலை ஆதியில் கண்ணனுடைய பேரன் வஜ்ர நாபன் என்பவனே கட்டினான். தமிழ்நாட்டில் வைணவ மதத்

தைத் தீவிரமாகப் பரப்பிய இராமானுஜர் கி.பி.1050 இல் துவார கைக்கு வந்து தமிழக முறைப்படி பூசைகள் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார். வியூக மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்தார். 1240 ஆம் ஆண்டில் மத்வாச்சாரரியார் துவாரகைக்கு வந்திருக்கிறார்.

## துவாரகையும் பேட்டி துவாரகையும்

ஞானேசுவரர், மல்லேசுவரர், மீராபாய் முதலிய பக்த கோடி கள் துவாரகைக்கு வந்து துவாரகை நாதனை வணங்கி அருள் பெற்றிருக்கிறார்கள். துவாரகையில் இருந்தபோது தான் போரிட்டு ருக்மணி தேவியை ரதத்தில் ஏற்றி வந்து திருமணம் செய்து கொண்டார். இந்தத் துவாரகநாதன் கோயிலுக்கு வடக்கே ஒரு மைல் தூரத்தில் ருக்மணிதேவி கோயில் இருக்கிறது. அழகிய சிற்ப வேலைப்பாடுடைய திருக்கோயில் இங்கு சித்தேசுவரர் என்ற சிவன் கோயிலும் இருக்கிறது.

இந்த துவாரகையிலிருந்து ஒரு மைல் தூரம் படகில் சென் றால் பேட்டி துவாரகை என்கிற இடம் இருக்கிறது. பேட்டி என் றால்அரண்மனை என்று பொருள். கண்ணன் ஆட்சி செய்த இடம் துவாரகை. அவன் அரண்மனை இருந்த இடம் பேட்டி துவாரகை. இந்த ருக்மணி கோயிலுக்கு அருகில் ஒரு குளம் இருக்கிறது. இங்கிருக்கின்ற மண் சந்தனம் போல் இருக்கிறது. வருகின்ற பக்தர்கள் இந்த சசந்தன மண்ணை எடுத்து நெற்றிலம், மார்பிலும் அணிந்து கொண்டு செல்கின்றனர்.

துவாரகையிலிருந்து பேட்டி துவாரகை செல்ல நீராவிப் படகுகள் உள்ளன. இந்தப் பேட்டி துவாரகையில் கண்ணனின் அரண்மனை. ருக்மணியின் வீடு, சத்யாபாமாவின் வீடு ராதை யின் வீடு என்று தனித்தனியே இருக்கின்றன. ஆங்காங்கே அவர்களது சிலைகள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் பெரியது ராதையின் வீடுதான். அதை நாராயணி வீடு என்று அழைக் கின்றனர். அன்றே கண்ணன் ஆட்சி அலுவலகம் வேறு, அரண் மனை வேறு எனத் தனித்தனியே அமைத்தது அற்புதமானது.

## ஆழ்வார்கள் பாடிய துவாரகை

கண்ணனின் பள்ளித் தோழனான சுதாம என்று அழைக்கப் படும் குசேலர் தன் வறுமையைப் போக்கத் தன் பழந் துணியில் கட்டிய அவலோடுவந்து கண்ணனுக்குக் கொடுத்த மகிழ்ந்த திருந்த இடமும் இந்த பேட்டி துவாரகையேயாகும். இவற்றை யெல்லாம் விட இந்த துவாரகை நம் தமிழகத்து ஆழ்வார் பெரு மக்களால் பாடப்பட்ட திருக்கோயில் ஆகும். பெரியாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய நால்வரும் துவாரகை நாதனைப் பாடி மகிழந்திருக்கின்றனர்.

அன்னை என் செய்யில் என்?
ஊரென்சொல்லி என்? தோழிமீர்?
என்னை இனி உமக்கு ஆசையில்லை
அகப்பட்டேன்
முன்னை அமரர் முதல்வன்
வண்துவராபதி
மன்னன் மணிவண்ணன்
வாசுதேவன் வலையுளே!

## அதிசய மண்ணும் வழிபாடும்

இந்த துவாரகையில்தான் கண்ணபெருமானைக் குசேலர் சந்தித்து அவல் வழங்கினார் என்று பார்த்தோமல்லவா? அதற்கு ஏற்றாற்போல் துவாரகையிலுள்ள கடற்கரை மண் சாதாரண மண்போல் அல்லாமல் அவல்போல் இருப்பது அதிசயமாக இருக்கிறது. இங்கு உள்ள மடாதிபதி காலில் தண்டையும், பட்டுப் புடவையும் அணிந்து பெண் வேடம் தாங்கி வந்து ஆராதனை செய்கின்றார். கோபியர் போற்றும் கோபாலனல்லவா! எனவே பெண் வேடம் தாங்கி வழிபாடாற்றுகின்றனர்.

துவாரகையிலுள்ள கண்ணன் திருமேனி அழகு படைத்தது என்று முன்பே சொன்னோம். மாலை வேளையில் கண்ணபிரான் படத்தில் பச்சைக்கல் நவரத்தினங்ள் பதித்த புல்லாங்குழலும்,

மாடு மேய்க்கும் கோலமும் வைத்து அலங்கரிக்கின்றனர். அத்திரு மேனிக்கு முன்பு பானையின் தயிர் கடைந்து, வெண்ணெய் எடுப்பது போல் நிகழ்ச்சி நடந்து கொண்டே இருக்கிறது.

**நாகேசம் எது?**

நாகேசம் என்பபது பலராலும் பல இடங்கள் குறிப்பிடப் படுகிறது. நம் தமிழகத்ததிலும் திருநாகேஸ்வரம் என்ற பாடல் பெற்ற திருத்தலம் உண்டு. நாகேசம் தாருகா முனிவர்கள் வர லாறு நடைபெற்ற இடம். தாருகாவனம் என்பது தருகா என்ற மரம் மிகுதியுள்ளது. இமயச்சாரலில் உள்ளது அங்கும் ஓர் நாகேசம் என்னும் திருக்கோயில் உள்ளது. அதுதான் நாகேசம் என்று சிலர் கூறுகின்றனர். குஜராத் மாநிலத்தில் துவாரகைக்கு 18 மைல் தொலைவில் உள்ள நாகேசம்தான் சரி என்றும் சிலர் கூறுகின்றனர்.

நாங்கள் துவாரகைக்கு அண்மையில் உள்ள நாகேசம் சென்று வழிபட்டோம் துவாரகையில் கோதாவரரி கடலோடு கலக்கும் இடத்தில் குளித்து நாகேசம் நோக்கிப் புறப்பட்டோம். நல்ல அழகான காட்சியும் அழகற்ற சீர் இல்லாப் பாதையும் கண்டோம். ஆனால் எங்களுக்கு அப்பாதைய ஒன்றும் கடினமாக இல்லை. ஏன் என்றால் பாதையே சரியாக இல்லாது கரடுமுரடான சூழாங் கற்கள் நிறைந்த பகுதியிலேயே 150 கிலோமீட்டர் சென்ற எங் களுக்கு இது மிகவும் எளிதாக இருந்தது.

நாகேசம் சிறிய கோயிலல். தருகா மரத்திற்கம் தாருகா வனத்திற்கும் சம்பந்தமில்லை. "தாருகா என்ற அரக்கி உருவாக்கி வனம் தாருகாவனம்" என்று அக்கோயில் குருக்கள் கூறி அதற்கு ஆதாரமாக பல வடமொழி நூல்களின் சுலோகங்களைக் கூறி னார். நமக்கு வடமொழிவாசகங்கள் ஏதும் தெரியாமையால் சரி என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. நாகேசம் என்பத வேறு எங்கும் இல்லை. இதுதான் முதன்மையானது என்றுரைத்தார்.

நாகேசுரபப் பெபருமான் திருமுன்பு சிவபூசை செய்தோம். எங்களுக்கு வேண்டிய பூ முதலியவற்றை மிகுந்த ஆர்வத்துடன்

ஆலயக் குருக்கள் வழங்கி வழிபாட்டினை மிகவும் பக்தியோடு அமர்ந்து பார்த்தார். ஆத்மார்த்தமாக வழிபாடு முடித்தபின் நாகேசுரப் பெருமானுக்கு திருமுழுக்காட்டி மலரிட்டு வழிபாடு நிகழ்த் தினோம். நம் பயணத்தை நடந்தும் திரு. பத்மநாபன் அவர்கட்கு திருமண நாள் என்று திருக்கூட்டம் வாழ்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வழிபாட்டின் நிறைவில் நம் பொருளாளர் திரு ஆர்.எம்.ராமசாமி அவர்கள் திரு.பதத்மநாபனுக்கு ஆடை அணிவித்து மாலையிட்டார். அனைவரும் மனதார வாழ்த்தி ஆலய வரலாற்றைச் சிறிது சிந்தித்து துவாரகை செசன்று காலை உணவு முடித்து போர் பந்தர் நோக்கிப் புறப்பட்டோம்.

# 5

## வரலாறு

தாருகையும், தாருகனும், தங்கி வழிபட்ட தலமாதலின் இத்தலத்திற்கு தாருகாவனம் என்ற பெபயர் உண்டாயிற்று.

## அடியார்க்கு எளியன்

இத்தலத்தில் லிங்கம் தெற்கு முகமாகத் திரும்பியுள்ளது அதாவது கோமுகம் கிழக்கு நோக்கியுள்ளது. கிழக்கு நோக்கி யுள்ள கோமுகத்தோடு சிவலிங்கம் வேறு எங்கும் இல்லை. நந்தி, பலிபீடம் முதலியன கிழக்குப் புறத்திலேயே உள்ளன. திரு நாளைப் போவாருக்காகத் திருப்புன்கூர்' என்னும் தலத்தில் நந்தி விலகியது போன்று இங்கும் ஒரு சிவஞானியாருக்காக கருணைக் கடலான சிவபெருமான் திரும்பபியுள்ளதாக வரலாறு உள்ளது.

## ஈசன் திசை எது?

ஸ்ரீநாம்தேவ் சுவாமிகள் என்ற சிவனடியார் ஒருவர் ஒருநாள் இத்தலத்திற்கு வந்து சிவலிங்கத்திற்கு எதிரில் இருந்து தன் பஜனையை நடத்திக் கொண்டிருந்தார். அந்நேரத்தில் அங்கு சந்நியாவந்தனம் செய்ய வந்த சில பார்ப்பன அன்பர்கள், அடி

களாரை நோக்கி, ''சிவன் சந்நிதியை மறைக்காமல் உமது பஜனையை நடத்துங்கள்'' என்று சொன்னார்கள். அதற்கு நாம்தேவ் அடிகள், ''ஈசன் எத்திசையைப் பார்க்கவில்லை. அவருக்கு எத்திசையில் முகம் இல்லை என்று கூறுங்கள். நான் அத்திசையில் நின்று பாடுகிறேன்'' என்றார். இதைக் கேட்ட அப்பார்ப்பன அன்பர்கள் சினம் கொண்டு, அவரை ஒரு அதிகப்பிரசங்கி என்று எண்ணி எல்லாரும் சேர்ந்து அவரைத் தூக்கிக் கொண்டு போய் தென்புறத்தில் விட்டனர்.

## திரும்பிய திருமேனி

திரும்பி வந்த அவர்கள், அதுவரை வடக்கு முகமாய் இருந்த கோமுகம். கிழக்கு முகமாய்த் திரும்பிவிட்டதையும், சுவாமி கழக்குப்புறம் பார்த்தபடியிருப்பதையும் கண்டனர். தாங்கள் நாம்தேவ் அடிகளாரைத் தென்புறத்தில் கொண்டு போய்விட்டதால், சிவனும் தென்புறம் திரும்பிவிட்டார் என்று அறிந்து அச்சம் கொண்டு அடியார்க்கு அபசாரம் செய்து விடடோம் என்று வருந்தி அவர் திருவடிகளில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து வணங்கி, கோயிலுக்குள் அழைத்துச் சென்றனர். அடிகளாருக்குத் தென்புறம் திரும்பிய லிங்கம் இன்றும் அடியாளருக்கு எளிவந்தவன் என்பதனைக் காட்ட, தென்புறம் நோக்கியே உள்ளது.

முற்காலத்தில் இந்தச் சிவலிங்கம் நீருள் மறைந்திருந்தது; வழிபட வந்த பாண்டவர் சிவலிங்கம் எங்கிருக்கிறது என்று அங்கிருந்தோரை வினவினர். அவர்கள் அது எப்போதும் நீருள் மறைந்திருக்கிறது என்று சொல்ல, உடனே சிறந்த சிவனடியாரான பீமன் தன் 'கதை' என்ற ஆயுதத்தால் நீரை அப்புறப்படுத்தினான். நீராரும் சடை முடி மேல் நிலவணிந்த பெருமானார் காட்சசி தந்தார். பாண்டவரும் மற்றவரும் எப்போதும் இப்படியே காட்சி தரவேண்டும் என்று வேண்டிக் கொள்ள, பெருருமான் நீருள் மறையாது காட்சிக்கு எளியவராய் இன்னும் இவ்வாறு உள்ளார்.

தாங்கள் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப அச்செயல்களே பலன் அளிக்கும். கடவுள் என்று எதுவும் கிடையாது என்ற துணி

வுடன் நாத்திகம் பேசி நாத் தழும்பேறி வாழ்ந்தனர் தாருகா வனத்து முனிவர்கள். அம்முனிவர்களுக்கு உண்மையை உணர்த்த எண்ணினான் எம்பெருமான். அவர் பிச்சாடனார் திருமேனி கொண்டும், திருமாலை மோகினி உருவம் எடுத்து வரச்செய்தும், தாருகாவனத்து முனிவர்களின் தேவியர் நிலையழியச் செய்து, அவர்கட்டு இறைஉணர்வை உணர்த்தினார். இந்நிகழ்ச்சி நடந்த இடம் இத்தலம் எனவே தாருகாவனம் என்ற பெயரும் இத்தலத் திற்கு உண்டு.

### சிவமஹாபுராணத்தில் அரக்கனும் அன்பரும்

ஆதிகாலத்தில் தாருகன் என்னும் பெயருடைய ஓர் அரக்கன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் தாருகா. அந்த இருவரும் துர்கா தேவியினால் தரப்பட்ட அழகான ஒரு வனத்தில் வசித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வனம் மேற்கு சமுத்திரக் கரைக்கு அருகில் இருந்தது. 64 மைல் நீளமும், 64 மைல் அகல மும் கொண்டது இந்த வனம், அந்த வனத்தில் குடியிருந்த மக்கள் அந்த இரண்டு அரக்கர்களின் உபத்திரவங்களினால் மிகவும் துக்கமடைந்து கொண்டிருந்தார்கள். ஔரவ என்னும் முனி வரிடம் சென்று தங்களின் துன்பங்களைத் தெரிவித்தனர். அப் பொழுது ஔரவ முனிவர், ''பயப்படாதீர்கள்! எப்போது அந்த இரண்டு அரக்கர்கள் உங்கள் உயிர்களுக்கு ஹம்ஸை தரவும், சிவனை நோக்கிச் செய்யும் யாகத்தை அழிக்கச் செய்யவும் தொடங்குகிறார்களோ, அப்பேது அவர்களுக்கு மரணம் ஏற்பட்டு விடும்'' எனக் கூறினார்.

### கடலுள் நகர்

முனிவரின் சாபத்தை அறிந்த தேவர்களும் யுத்தம் செய் வதற்காக தங்களுடைய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு யுத்த பூமிக்கு வந்தனர். தேவர்கள் வந்த விவரம் அறிந்த அரக்கர்கள் ஆலோசனை செய்தார்கள். துர்காதேவி தனக்கு அளித்த வரத்

தினை அறிந்த தாருகா என்னும் அரக்கி ஒரு நகரத்தை எடுத்துக் கொண்டு போய் சமுத்திரத்தின் நடுப்பகுதியில் வைத்து, அங்கே போய் மூர்க்கத்தனமான அறையில் வசிக்கத் தொடங்கினர்.

## துன்பம் தொடர்ந்தது

ஒருநாள் ஏராளமான மனிதர்கள் கடலில் நீந்திக் கொண்டிருந் தார்கள். அரக்கர் கூட்டம் அங்கே வந்து அந்தக் கூட்டத்தினரை யெல்லாம் பிடித்துக் கொண்டு தங்களுடைய நகரங்களுக்கு எடுத்துச் சென்றனர். அவர்களுக்கு கால் விலங்கு போட்டுக் கொடுமைப்படுத்தினர். அந்த மனிதர்களில் ''சுப்ரிய'' என்னும் பெயரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் சிறந்த சிவபக்தன். அவன் சிறைச்சாலையில் இருந்து கொண்டு சிவபூஜை செய்யத் தொடங்கினான். மற்றவர்களும் சிவபூஜையில் ஈடுபடத் தொடங் கினர்.

## நாகேசன் தந்த வரம்

ஒருநாள் அரக்கனான தாருகன் சுப்ரியனுடைய சிவபூஜை யைப் பார்த்துக் கொண்டான். தாருகன் சுப்ரியனிடம் கேட்டான். ''பக்தனே! நீ உண்மையைச் சொல் நீ எந்தத் தெய்வத்தைப் பூஜிக்கிறாய்? உண்மையை நீ கூறினால் உன்னை விட்டு விடு கிறேன். பொய் சொன்னால் உனக்கு இறப்பு தான் ஏற்படும்'' என்றான். ஆனால் சுப்ரியன் அவனுக்கு மறுமொழி கூறாமலல் கண்ணை மூடிக் கொண்டு, எப்போதும் சிவனுடைய தியானத் தில் மூழ்கி பிரார்த்தனை செய்யத் தொடங்கினான்.

''மூன்று லோகங்களை அழித்து அருள் செய்த பெருமானே! நான் தங்களைப் பிரார்த்திக்கிறேன். எனக்கு அடைக்கலம் தாருங் கள். என்னுடைய கஷ்டதத்தை விலக்குங்கள்'' என வேண்டி னான். அவனுடைய பிரார்த்தனை கேட்ட சிவன் தன்னுடைய பாசுபதி அஸ்ததிரரத்தை எடுத்தார். அந்த அரக்கர்களைக் கொன் றார். சிவபக்தர்களுக்கு நிம்மதி கிடைத்தது.

"இந்நகரத்தில் தர்ம வழியில் என்றும் வழுவாது செல்லக் கூடிய அன்புடைய மக்களே! நீங்கள் இங்கு வாழுங்கள் இங்கே சிவனுடைய உபதேசங்களைச் சொல்லக்கூடிய சிவபக்தர்கள் தங்கியிருக்கட்டும். நான் என்னுடைய பக்தர்களைக் காப்பதற்கு இங்கேயே நிலையாக இருப்பேன். எந்தவொரு மனிதன் அற நெறி வவழி நடந்து அன்பு, பக்தி மார்க்கத்துடன் இவ்விடம் வந்துது என்னை வணங்குகிறார்களோ அவர்களை அவசியமம் பெரிய ஐசுவரரியவனாக்குவேன்" எனச் சொல்லி பகவான் சங்கரரும், பகவதி பார்வதியும் ஜோதி வடிவம் கொண்டு நாகேஸ் வரர் என்கிற பெயரிலே இங்கே நிலையாக இருந்து அருள் செய் கின்றனர்.

# 6

## நண்பனின் நினைவாக நகரின் பெயர்

துவாரகையிலிருந்து போர்பந்தர் என்று சொல்லக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க திருநகருக்குச் சென்றோம். கண்ண பெருமானது பள்ளித் தோழரான குசேலருக்கு பெற்றோர் வைத்த பெயர் சுதாமர். கண்ணன் தன் நண்பன் நினைவாக அந்தக் காலத்தில் போர்பந்தருக்குச் சுதாமபுரி என்று பெயரிட்டார்.

தனக்கு வேண்டியவர்களின் பெயர்களை நகருருக்கு இடு வது என்ற நடைமுறை அன்றே தொடங்கி இன்றும் தொடர்கிறது. போர்பந்தரில் இன்றும் குசேலருக்கு தனிக்கோயில் இருப்பதைக் கண்டு வழிபட்டோம். அங்கிருந்து போர்பந்தரில் இன்னொரு சிறப்புமிக்க இடத்திற்குச் சென்றோம்.

பாழ்பட்டு நின்ற பாரரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த அண்ணல் காந்தி அடிகள் பிறந்த இடமும் இந்தப் போர்பந்தரே. நாங்கள் அனைவரும் காந்தி அடிகள் பிறந்த அவரது இல்லத் திற்குச் சென்றோம். அங்கே அப்பெருமகன் பிறந்த இடத்தை ஓர் அறையின் மையத்தில் சுவஸ்திக் அடையாளமிட்டு மலர்களால்

அலங்கரரித்து வைத்திருக்கிறார்கள். அங்கே நாங்கள் செசன்று அபப்பெபருமகனுக்டகு அஞ்சலி செலுத்தி சில விநாடிகள் மெனமாக இருந்தோம்.

அண்ணல் காந்தி அடிகளைப் பற்றி சிறிது பேசினேன். அவர் வீட்டைஅடுத்த காந்திமந்திர் என்ற இடத்தில் அண்ணல் காந்தியாரின் வாழ்க்கை வரலாற்றுப் படங்கள் உள்ளன. அண்ணல் காந்தி அடிகளின் இதயங்கவர்ந்த கீதையின் சுலோகம் பளிங்குக் கல்லில் பதிக்கப்பட்டுள்ளது.

போர்ப்பந்தரிலிருந்து 260 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பிரவேசப் பட்டணமும், சோமநாதமும் உள்ளன.

அங்கிருந்து நாங்கள் முதலில் பிரவேசப் பட்டணம் என்ற சரித்திரப் புகழ்பெபற்ற இடத்தைச் சென்று பார்த்தோம் கண்ண பிரான் காலத்தில் இந்நகரம் உன்னத நிலையில் இருந்தது. கோட்டைகளும் பழைய கட்டடங்களும் இடித்து கிடக்கின்றன. இந்தப் பிரவேசப் பட்டணத்திற்கு அரை கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பிரவேசப் பட்டணமும், சோமநாதமும் உள்ளன.

அங்கிருந்து நாங்கள் முதலில் பிரவேசப் பட்டணம் என்ற சரித்திரப் புகழ்பெற்ற இடத்தைச் சென்று பார்த்தோம். கண்ண பிரான் காலத்தில் இந்நகரம் உன்னத நிலையில் இருந்தது. கோட்டைகளும் பழைய கட்டடங்களும் இடிந்து கிடக்கின்றன. இந்தப் பிரவேசப் பட்டணத்திற்கு அரை கிலோ மீட்டர் தூரத்தில் திரிவேணி என்ற இடம் உள்ளது.

**நதிகளின் தூய்மைக்கேடு.**

அங்கு கிரண்யா நதியும் கபில நதியும் இணைகின்றன. இந்த இரு நதிகளுக்கு சற்று முன்னால் சரஸ்வதி நதியும் கலப்பதாகக் கூறுகிறார்கள். இது மிகப் புனிதமான சிறந்த தீர்த்த நிலை என்று கருதப்படுகிறது. நாங்கள் அனைவரும் சென்று அதிலே நீராடி மாலை வழிபாடு செய்யலாம் என்று பார்த்தால் அதில் கால் வைக்கவே கூசிற்று. சுற்றுப் புறச் சாக்கடைகளும் அங்கே வந்து

கலக்கின்றன. ஒரு கால் பெரு வெள்ளம் வந்தால் இவை எல்லாம் அகலும் போலும்! நம்முடைய நாட்டில் நதிகளை, அதன் புனிதத்தை, சுகாதாரத்தைப் போற்றிக் காப்பதென்பது அரிதென்றாகி விட்டது. நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய மிகப் பெரிய கடமை நம் நதிகளைத் தூய்மைப்படுத்துவதாகும். இது தலைசிறந்த பணி. இன்றியமையாத பணி.

அண்மையில் சுற்றுப்புறச் சூழல் இயக்கம் தோன்றி ஆறுகளைத் தூய்மைபடுத்த முயன்றார்கள். அது முழுப் பலன் அளிக்கவில்லை. நாகரிகத்தின் பெயரால் வளர்ந்து வருகின்ற தொழற் கூடங்களின் கழிவுநீரை ஆற்றில் கலப்பதைத் தடை செய்ய வேண்டு. மக்களின் அறியாமையைப் போக்க ஆற்று நீரின் புனிதம், தூய்மை, சுகாதாரத்தில் அவசியம் பற்றி எடுத்துக் கூறி விழிப்புணர்ச்சியூட்ட மாபெரும் பிரசார இயக்கம் உடனடியாகத் தேவை. மனமாற்றமின்றி தூய்மை செய்வதென்பது இயலாத காரியம். பல இடங்களிலம் தேடித் தண்ணீர் கிடைக்காமல் மாலை வழிபாடு செய்ய முடியாமல் தவித்தோம்.

இங்கிருந்து இரண்டு பர்லாங் தூரரத்தில் கண்ணபிரான் முக்தி பெற்ற சொர்க்காரோனம் என்ற இடத்திற்குச் சென்றோம். கிரண்யா நதிக்கரையில் ஒரு குறா மரம் உள்ளது. கண்ணபெருமான் அந்தக் குறா மரத்தடியில் படுத்துக் கொண்டு கால் மேல் கால் போட்டு காலை ஆட்டிக் கொண்டிருந்தார். தூரத்தே பார்த்த ஒரு வேடன் அதனைப் புறாவென நினைத்து அம்பை எய்தான். அம்பின் அடிபட்டு கண்ணபெருருமான் அந்தக் குறாமரத்தடியிலிருந்து சிரசிலிருந்து ஜோதி வடிவாக அங்கிருந்து வைகுண்டம் சென்றார் என்பது வரலாறு. அம்பு எய்ய வேடன் முற்பிறப்பில் வாலி. கண்ணனே முற்பிறப்பில் இராமன் என்பது புராண வரலாறு.

## வரலாறும் சான்றும்

கண்ணபிரானின் அண்ணன் பலராமன் அதற்கு அருகிலே தன் சரீரத்தை விடுத்து பாம்பு உருத்தாங்கி வைகுண்டம் போனார். இப்பொழுது அங்கே பல தலைகளுடன் கூடிய பாம்பின் சிலை

இருக்கிறது. கண்ணபிரான் முக்தி அடைந்த இந்த இடத்திற்கு அருகில் ஒரு சிறு குகை இருக்கிறது. அங்கே கண்ணபிரான் பயன்படுத்தியதாகக் கூறுகின்ற அரியணை படுக்கை முதலியன இருக்கின்றன.

அங்கே மூன்று கோயில்கள் இருக்கின்றன அந்தக் குறாமரம் அதற்கு எததிர்ப்புறத்திலே ஒரு சிவலிங்கத் திருமேனி. அதற்கு அருகில் ஒரு பெரிய கூடத்தோடு கூடிய ஒரு திருக் கோயில் இருக்கிறது. அங்கே மகாவிஷ்ணுவின் திருவுருவம் சங்கு சக்கரத் தோடு உள்ளத. குறா மரத்தடியிலே இருந்து அடிபட்ட கண்ணன் திருமேனியை எடுத்து வந்து மகா விஷ்ணு சிலையுள்ள இடத்தில் கிடத்தியுள்ளார்கள். அந்த இடத்திலே இருந்துதான் கண்ணன் வைகுண்டம் சென்றார். எனவே அந்த இடத்திலே மகாவிஷ்ணு வின் திருவுருவத்தை அமைத்துள்ளார்கள். குறா மரத்தின் எதிர்ப் புறம் உள்ள சிவலிங்கத் திருமேனி உள்ள இடத்தில்தான் கண் ணன் திருமேனி தீக்கிரையாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இந்தப் பிரவேசப் பட்டணத்தின் அருகிலேதான் 12 சோதி லிங்கங்த்தில் ஒன்றான சோமநாதம் என்ற அரிய திருக்கோயில் உள்ளது. இந்த சோதமநாதர் கோயில் சரித்திரப் புகழ் பெற்றது. இந்த சோமநாதபுரத்ததிற்கு எற்கெனவே சொன்ன பிரவேசப் பட்டணம், தேவப் பட்டணம் என்று வேறு பெயர்கள் உள்ளன. இங்கிருக்கிற சோமநாத கோயில் பல்வேறு மன்னர்களால் பல் வேறு காலங்களில் படையெடுக்கப்பட்டு அழிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது சோமநாதத்தில் இரண்டு கோயில்கள் இருக் கின்றன. ஒன்று மிகப் பழைமையானது. நல்ல வெளிப்பிராகாரம் உள்ளது. இந்த சோமநாதர் கோயில் வேதகாலத்தில் தோன்றியது என்று கூறுகிறார்கள். பாண்டவர்களும், பலராமனும், கிருஷ் ணனும் இங்கு வந்து நீத்தார் கடன் செய்திருக்கின்றனர் என்று சொல்லுகிறார்கள்.

**பாதாளக் குகையில் ஈசன்**

இந்தக் குகையில் மலை போல் உள்ள மாடியில் ஏறினால் மேலே ஒரு சிவலிங்கம் இருக்கிறது. அதற்குக் கீழே ஒரு சுரங்கம் போல் உள்ளே இறங்கிச் சென்றால் 25 அடி பள்ளத்தில் ஒரு சிவலிங்கம் உள்ளது. படையெடுப்புக்கு அஞ்சிய மக்கள் பழைமை யான மூர்த்தியை இருந்த இடத்திலேயே வைத்து பார்த்த உடனே சிவலிங்கம் தெரிகின்ற வகையில் அமைந்திருக்கிறார்கள். நம் முடைய திருக்கூட்டம் இரவு எட்டரை மணியளவில் அங்கு சென்று பெருமானுக்கு எல்லாப் பொருள்களும் கொண்டு திரு முழுக்காட்டி, புத்தாடை அணிவித்து போற்றித் திருத்தாண்டகம் சொல்லி அர்ச்சனை செய்து, ஐம்பெரும் பதிகங்கள் பாடி வழி பாடு செய்தோம். பிரபலமான இக்கோயிலுக்கு நம்முடைய சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் மிகப் பெரிய கோயிலை எடுத் திருக்கிறார்கள்.

இந்தக் கோயிலில 1959 ஆம் வருடம் மே மாதம் 11 ஆம் தேதி வைகாசி 5 ஆம் தேதி காலை 9.57 நிமிடத்திற்கு இந் தியாவின் முதல் குடியரசுத் தலைவர் அமரர் இராஜேந்திர பிரசாத் தம்கையால் இச்சோமநாதரை எழுந்தருளச் செய்தார். இந்த சோமநாதத்தைப் பபற்றிய புராண வரலாறும் சரித்திரர ஏடுகள் சொல்லுகிற சாகசச் செய்திகளையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? முதலிலே புராண வரலாற்றைத் தெரிந்து கொள் வோம்.

**சந்திரனுக்கு வந்த சங்கடம்**

தக்கன் 27 பெண்களைப் பெற்றான். கலைகள் மலிந்த சந்திரனுக்கே 27 பெண்களையும் மணம் செய்து கொடுத்தான். முதலில் அனைத்து மனைவியரிடமும் சமமான அன்புடைய வனாக இருந்த சந்திரன் பின்னர், ரோகிணி என்பவளின் அழகி னால் மிகவும் கவரப்பட்டு, அவளிடம் மட்டும் நிறைந்த அன் புடையவனாக விளங்கினான். இதனைக் கண்ட எனைய 26

பெண்டிரும் தம் தந்தையிடம் சென்று தங்கள்பால் சந்திரன் அன்பு செலுத்தாதிருப்பதைப் பற்றி முறையிட்டுக் கலங்கினர்.

தம் மக்கள் வருந்துவதைப் பொறுக்காத தக்கன், சந்திரனிடம் சென்று ''நீ நல்ல குலத்தில் பிறந்தவன்; அழகும் அறிவும் உடையவன். 27 மனைவியரும் உன் அன்பை நாடி இருப்பவர்கள். அவர்களுள் ரோகிணியிடம் மட்டும் நீ அதிக அன்பு செலுத்துவது முறையல்ல. எல்லா மனைவியருடனும் சமமான அன்புடையவனாக இரு'' என்று அறிவுரை சொல்லிப் பார்த்தார். அது 'செவிடன் காதில் ஊதியசங்கு போல்' ஆயிற்று. சந்திரன் மதிகெட்டுப் போயிருந்ததால், மாமனாரின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் முன்பு போலவே இருக்கலானான்.

### அழகால் வந்த ஆபத்து

தன் மருமகனின் நடத்தையை நேரில் கண்டு அறியும் பொருட்டுத் தக்கன், சில காலம் கழித்து சந்திரன் இல்லம் சென்றான். அவனுடைய நடத்தையில் மாற்றம் இல்லை. முன்புபோல் ரோகிணியிடம் மட்டுமே அன்போடு இருக்கிறான் என்பதறிந்து வருந்தினான். கடும் சினம் கொண்டான். மனைவியரைச் சரியாக நடத்தாததினாலும், தன் அறிவுரையை ஏற்காததாலும் 'என் புருக்கு நோயால் தேய்வாயாக' (உன் கலைகள் தேயட்டும்) என்று சபித்தான்.

சாபத்தினால் சந்திரனின் ஒளி குன்றத் தொடங்கியது. சந்திரன் திகைத்தான். கலங்கினான். சாபத்தின் ஆற்றல் தாங் முடியாது துன்புற்றான். தேவர்களிடம் சென்றான். தேவர்கள் இயலாமையைத் தெரிவித்தனர். எனினும் அவர்கள் எல்லாரையும் வேண்டி அழைத்துக் கொண்டு நான்முகனிடம் சென்றான். நான்முகனிடம் தேவர்கள் யாவரும் முறையிட்டனர். நான்முகன், ''குரு மனைவியிடம் இவன் தகாத முறையில் முன்னர் நடந்து கொண்டான். இப்போது இறைவன் முன்னால் மனைவியாக ஏற்றுக் கொண்ட மனைவிகளிடம், தக்கன் அறிவுரை சொல்லியும், பண்புடன்

நடந்து கொள்ளவில்லை. பெரியோர் அறிவுரையை இவன் மதிப்பதே யில்லை. அறன் அறிந்து மூத்த அறிவுடையோர் திறன் அறிந்த தேரும் சீர்மை இவனிடம் இல்லை. எனவே இந்த தண்டனை இவனுக்கு வேண்டியதுதான். இவன் துன்பம் மற்றவர்க்கு பாட மாய் இருக்கட்டும்'' என்றான்.

ஆனால் தேவர்கள் மீண்டும் வேண்டி, ''சந்திரன் ஔஷாடி களுக்கு இறைவன்; அவன் அழிந்தால் பயிர்களுக்கு நாசம். உம்மால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் அழியும். மேலும் சந்திரனின் அமுதக் கலைகள்தான் எங்களுக்கு உணவு. எனவே அவனைக் காத்தல் வேண்டும்'' என்று கூறினர்.

## நான்முகனின் நன்னுரை

அதன் பின்னர் நான்முகன் மனமிரங்கி சந்திரன் உய்யுமாறு பின்வரும் அறிவுரைகளை வழங்கினான்:

''தேவர்களே! மாதவம் செய்திடும் பாரத நாட்டில் புண்ணிய இடமாக விளங்குகிற பிரவேசப் பட்டணத்திற்குச் சென்று, அந் தியும், நண்பகலும் ஐந்து பதம் சொல்லி அங்கு எழுந்தருளி யிருக்கும் சிவபெபருமானைச் சந்திரன் ஆராதனை செய்யட்டும். அவன் கருணைக் கடல். தேவர்கள் உய்வதற்காகப் பாற்கடலில் வந்த நஞ்சினைத் தான் உண்டவன். பாலுக்கு வேண்டிப் பாலகன் அமுதிட பாற்கடலையே ஈந்தவன். மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவர் மலர் தூவி முகமெல்லாம் கண்ணீர் வர உருகி, பணிந்த சிறபப்புடையவர். தேவர்களுக்கெல்லாம் தேவனாக இருப்பவன். வாழ்த்துச் சொல்வதன்றி வணக்கம் சொல்லி அறியாத வன். வணக்கம் செய்யத் தேவை இல்லாதவன். அவனைத் தொழச் செய்க. அவன் அருளினால் அன்றி, வேறு எவராலும் சந்திரனுக்கு இட்ட சாபத்தைத் தீர்க்க முடியாது'' என்று கூறி அருளினார்.

**சாபம் மாறியது**

சாப நீக்கம் பெற வழிமுறை அறிந்த சந்திரன் ஒருவாறு மனம் ஆறுதல் பெற்று, நேராகப் பிரவேசப்பட்டிணம் வந்து, அங்கு புண்ணிய தீர்த்தத்தை உண்டாக்கி, நீராடினான். மேலும் பார்த்திப லிங்கத்தை உண்டாக்கினான். மலர் கொய்து, நாடோறும் இருக்கினும் நிற்கும் போதும், இரவு கண் துயிலும் போதும் அஞ்சு பதம் சொல்லி ஈசனை வாழ்த்தினான், திரு ஐந்தெழுத்தை உரு வேற்றினான். பத்துக் கோடி உருவேற்றியபின், தன்னை வந் தடைந்த தேவரைக் காக்க ஆலமே அமுதமாக உண்ட சிவ பெருமான சந்திரன் முன் தோன்றினான். சந்திரனுக்கு அபயம் அளித்தான். ''கற்பு நெறியிற் சிறந்து, தன் சுற்றமெல்லாம் விட்டு கணவனையே தஞ்சம் என்று வந்தடையும் பெண்டிரை நல் முறையில் நடத்தாதது கொடிய பாவம். அதனை உணர்ந்து வருந்தும் உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்றான் ''தக்கன் சாபத்திற்கு முடிவு வேண்டும்?'' என்றான் சந்திரன். உடல் அண்ணலும், ''தக்கனுடைய சாபத்தில் பாதியை மாற்றுகிறேன்'' என்று சொல்லிக் கலைகள் பாதி நாள் வரைவும், பாதி நாள் தேயவும் வரம் அருளினான்.

சந்திரனும் மகிழ்ந்து வாழ்த்தினான். தேவர்களின் வேண்டு கோளுக்கு இரங்கி சந்திரன் பூசித்த இடத்தில் அவன் பெயரால் ''சோமநாதன்'' என்ற பெயருடன் அன்பருக்கு அருள் வழங்கி வருகிறார். (சோமன் - திங்கள்)

திங்கள் கிழமையன்று வரும் அமாவாசை நாள்களில் இங்கு வழிபாடு செய்வது சிறப்பாகக் கருதப்படுகிறது. இங்கு சந்திரன் தோற்றுவித்த சந்திர தீர்த்தத்தில் மூழ்குவது பல பிணிகளை நீக்கும்.

சோமநாதத்தின் புராண வரலாறு சொன்னேன். இப்போது சோமநாத் பற்றி சரித்திர ஏடுகள் தரும் சான்றுகள் இதோ:

## வில்லனும் சூப்பர் வில்லனும்

முகமது கோரியைக் கூட, நாம் ஏற்றுக் கொள்ளலாம். வில்லனாக வந்தாலும் இந்தியாவைத் தன் சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என் அரசர்களுக்கே உரிய நியாயமான ஆசை அவனுக்கு இருந்தது. ஆனரல், அவனுக்கு முன் இந்தியா வந்த முகமது கஜினியின் கதை வேறு. கோரியோடு ஒப்பிட்டால் கஜினி வெறும் வெறி பிடித்த ஒரு சூப்பர்வில்லனாகவே வரலாற்றில் காட்சி தருகிறான்.

இங்கே நாம் பரிட்சையில் பலமுறை தோல்வியடையும் மாணவரை கஜனி முகமதுவுடன் நகைச்சுவையாக ஒப்பிடுகிறோம் உண்மையில் கஜினி தொடர்ந்து தோல்வியடைந்தால் மறுபடி மறுபடி இந்தியாவுக்கு வரவில்லை. அநேகமாக அவனுடைய பதினேழு படையெடுப்புகளுமே வெற்றிதான்.

## அரியணையில் கஜினி

ஆப்கானிஸ்தானில் காபூலுக்குத் தெற்கே உள்ள நகரம் கஜினி கி.பி.977 இல் மத்திய ஆசியாவைச் சேர்ந்த ஒரு துருக்கியப் பிரபு (ஆரம்பத்தில் அவர் ஒரு துருக்கிய அடிமையாக இருந்ததாகவும் சிலர் கூறுகிறார்கள்.) கஜினியைத் தலைநகராக்கி செல்வாக்குடன் ஆட்சி புரிந்தார். அவருடைய மகன்தான் கஜினி முகமது கி.பி.998 இல் தந்தை இறந்த பிறகு கஜினி முகமது அரியணையில் அமர்த்த போது அவனுக்கு வயது இருபத்தேழு.

இரண்டு ஆண்டுகள் கழித்துப் பிறந்த புதிய நூற்றாண்டு தங்களைப் பெறுத்தவரை பெரும் தலைவலியோடு ஆரம்பிக்க போகிறது என்பதை வட இந்தியாவை ஆண்ட மன்னர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கி.பி. 1000 இல் ஆரம்பித்தது. இந்தியாவை நோக்கி கஜினியின் முதல் படையெடுப்பு. ஏன் அப்போது எல்லோருக்குமே முதல் இலக்கு இந்தியாதான். அதற்கு காரணம் உண்டு.

மத்திய ஆசியாவிலும் சரி ஆப்கானிஸ்தானிலும் சரி, ஆரோபியாவிலும் சரி மன்னர்கள் மகு· -ம் சூட்டிக் கொண்டதும் அவர்கள் கேட்டு மலைத்த கதைகள் இந்தியாவைப் பற்றித்தான் இந்திய மண்ணில் விண்ணை மட்டும் கோயில்கள், கட்டி முடிக்கப்பட்ட மாட மாளிகைகள், கொட்டிக் கிடக்கும் ஆபரணங்கள் - இவை பற்றிப் பலர் விளக்கமாக விவரிக்க, வெறிச் சோடிய பாலை வனத்தையும் கரடுமுரடான மலைத் தொடர்களையும் சூழ்நிலையாகக் கொண்டு ஆட்சி புரிந்த அம்மன்னர்களின் கண்களில் ஆர்வம் பொங்கியெழுந்ததில் ஆச்சரியமில்லை!

மாபெரும் குதிரைப் படையோடு கால தாமதம் செய்யாமல் கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தான் கஜினி முகமது. சிந்து நதியைக் கடந்து பஞ்சாப் பீடபூமியில் அவன் படை புகுந்தபோது அதை மடக்கி நின்று எதிர்கொண்டது பஞ்சாப் மன்னன் ஜெயபாலனின் படை.

## ஜெயபாலனின் மோதல்

ஜெயபாலன் பிராமணக் குலத்தைச் சேர்ந்த மன்னன். ஒன்பதாம் நூற்றாண்டில் காபூல் சமவெளியையும் காந்தாரத்தையும் ஆண்ட ஷாகியா மன்னர் ஒருவரிடம் இந்த ஜெயபாலனின் கொள்ளுத் தாத்தா அமைச்சராக இருந்தார். அமைச்சராக இருந்ததோடு அமைதியடையாத அவர் அரசையும் கைப்பற்றினார். அவரது வழி வந்தவர்கள் பிற்பாடு ஆப்கானிய அரபுப் படைகளின் அதிரடித் தாக்குதல்களை தாங்காமல் பஞ்சாப் மாநிலத்துக்கு ஆட்சியை நகர்த்திக் கொண்டார்கள். பஞ்சாபில் உறுதியாக ஆட்சி செய்ய அமர்த்தவுடன் எடுத்த எடுப்பிலேயே முகமது கஜனியின் அதிரடிப் படையோடு மோத நேர்ந்தது மன்னன் ஜெயபாலனின் போதாத காலமே!

அகரத்தனமும், அதிபுத்திசாலித்தனமும் கலந்து போரிட்ட ஆப்கான் படையிடம் ஜெயபாலன் வீரர்களின் வீரம் படுபட

வில்லை. முதற்போரிலேயே பெரும் வெற்றி அடைந்தது. ஆப்கான் படை வெற்றியைத் தொடர்ந்து வெறியாட்டத்தில் இறங்கினார்கள். ஆப்கான் எடையினர். பஞ்சாப் பூமியில் அவர்கள் கொள்ளையடித்த செல்வத்தை அள்ளிக்கொண்டு ஒட்டகங்கள் மீது ஏற்றி வைப்பதில் ஆயிரமாயிரம் ஆப்கான் வீரர்கள் பல மணி நேரம் செலவிட்டார்கள். வந்த வேகத்தில் ஊர் திரும்பினார்கள். ஒவ்வொரு முறையும் இந்த கதை... இதே கொள்ளை, கொலை.. பிறகு ஊர் திரும்பல்.

## ஓநாயின் வாயில் சிக்கிய மான்

கஜினி முகமதுவுக்கு இந்தியா மிகவும் பிடித்துப் போய் விட்டது. கி.பி.1000 இல் ஆரம்பித்து அநேகமாக ஆண்டுக்கொரு முறை இந்தியாவின் மீது படையெடுப்பதை ஒரு பிரத்யேகத் திருவிழாவாகக் கொண்டான். கஜினி ஓர் ஓநாயின் வாயில் சிக்கிக் குதறப்பட்ட மான் குட்டிகளைப் போல சௌராஷ்டிரம் கன்னோசி மதுரா, தானேஸ்வர் என்று ஒவ்வொன்றாக கஜினி படையினர் வாள் வீச்சில் ரத்தம் பூசிக் கொண்டனர்.

இந்தியாவில் முல்தான் பிரதேசத்தை ஆண்ட சுல்தான் தாவூத் என்னும் இஸ்லாம் மதப்பிரிவைச் சேர்ந்த சுல்தானையும் கஜினி விட்டு வைக்கவில்லை. கொள்ளை என்று இறங்கிய பிறகு எதிரி எவனாக இருந்தால் என்ன? தாவூதை வெட்டிச் சாய்த்து முல்தான் தலைநகரைத் தரைமட்டமாக்கினான் முகமது கஜினி. கஜினிக்கு இன்னொரு விசித்திரமான கொடூரமான பழக்கம் இருந்தத? அவன் வெற்றி கொண்ட மன்னர்களின் கை விரல்கள் அத்தனையும் வெட்டியெடுத்துக் கொண்டு திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இப்படி ஏதோ தபால் தலைகளைப் போல அவன் சேகரித்த விரல்கள் ஆயிரக்கணக்கில் என்றால் எவ்வளவு கொடூரமான மனம் படைத்தவன் என்பது தெளிவாகத் தெரிகிறது.

**கோயில்களே பெரிது**

இந்தியாவில் ஒவ்வொரு முறை புகுந்து வெற்றிக்கொடி நாட்டிய மறுகணம் ஆப்கான் படைகள் குதூகலத்துடன் கிளம்பியது. இந்துக்களின் கோயில்களை நோக்கித்தான் 'மாதக்கணக்கில் நம் வீரர்கள் அலைந்து திரிந்து சேகரிக்க வேண்டிய செல்வம் அனைத்தையும் ஒரே பாய்ச்சலில் அள்ளிக்கொண்டு வரவேண்டுமா? அரண்மனைகள் கூட அவசரமில்லை. நேரத்தை வீணாக்காமல் முதலில் கோயில்களின் பக்கம் நம் படையைத் திருப்புங்கள். அங்கு நம்மை வழிமறிக்க அகழிகள், அரண், ஆட்படை எதையும் இந்தியர்கள் வைத்திருப்பதில்லை' என்று முன் கூட்டியே கஜினிக்கு இந்தியாவைப் பற்றி ஒற்றர்கள் விவரித்திருந்தார்கள்.

குறிப்பாக சோமநாதர் கோயிலுக்கு நேர்ந்த அனுபவம் ஓர் உச்ச கட்டப் பயங்கரம்.

**செல்வமோ செல்வம்**

டிசம்பர் 1025-பதினேழாவது முறையாக, புழுதி பறக்க ராஜஸ்தான் பாலைவனத்தைப் புயலாகக் கடந்து குஜராத்தின் தென்கோடியில் உள்ள சோமநாத் ஊருக்குள் கஜினியின் படை அலையெனப் புகுந்தது. அங்கு கடற்கரையோரம் சோமநாதர் என்று வழிபடப்பட்ட சிவன் கோயில் நாடெங்கும் புகழ்பெற்றது. கர்ப்பக்கிருகத்தில் காட்சி தந்த சிவலிங்கத்தை, கோயில் கட்டிய வல்லுநர்கள் அந்தரத்தில் மிதக்கும்படி அமைத்திருந்தது ஓர் அதிசயம்.

சோமநாதர் ஆலயச் சொத்தில் பத்தாயிரம் கிராமங்கள் அடக்கம் என்றால் கோயிலில் கொழித்த செல்வச் செழிப்பைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம். இது தவிர, மன்னர்களும், செல்வர்களும், பக்தர்களும் காணிக்கையாக அளித்த செல்வம் ஒரு சிறு மலையாகக் குவிந்திருந்தது. கூடவே அரசர்கள் காணிக்கையாகச் செலுத்திய நூற்றுக்கணக்கான தங்க விக்கிரகங்கள், அவற்றை

அலங்கரிக்க வைரங்கள், வைடூரியங்கள், முத்துக்கள் பதித்த அற்புதமான ஆபரணங்கள்... இன்னொரு புறம் கோயில் கஜனா வில் பெருமலையாக நிரம்பி வழிந்த பொற்காசுகள்...

### கோயில் கோலாகலம்

ஒவ்வொரு சூரிய கிரகணத்தன்றும் ஒரு லட்சத்துக்கு மேல் இந்துக்கள் கடலில் நீராடி சோமநாதர் கோயில் முன் பக்திப் பரவசத்துடன் கூடுவது வழக்கம். சோமநாதர் கோயிலில் பூஜை கள் நடத்த நியமிக்கப்பட்டிருந்த அர்ச்சகர்கள் மட்டுமே ஆயிரம் பேர். பூஜைக் காலங்களில் ஆலயத்தில் நடனமாட ஐந்நூறு அழகிய நாட்டியமணிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். பாடகர்கள் ஐந்நூறு பேர் ஆலயத்துக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர் கள் தங்கள் முடியைக் காணிக்கையாகச் செலுத்துவதும் வழக்கத் திலிருந்தது. அதற்காக நியமிக்கப்பட்ட நாவிதர்கள் முந்நூறு பேர்.

அவ்வளவு ஏன்? ''ஒவ்வொரு நாளும் இருமுறை கடலிருந்து ஒரு பெரும் அலை கிளம்பி முன்னேறி சற்றே தொலைவிலிருந்து சோமநாதர் ஆலயப் படிக்கட்டுகளைத் தொட்டு வணங்கித் திரும்பும்'' என்று ஊர் மக்களால் வியந்து பேசப்பட்ட திருத்தலம் அது.

### கஜினி கொக்கரிப்பும் மக்கள் எதிர்ப்பும்

தொலைவிலிருந்தே ஜொலித்துக் கொண்டிருந்த புகழ் வாய்ந்த இந்த ஆலயத்தைத் தன் படையின் முன்னணியில் குதிரை மீது அமர்ந்த பார்வையிட்ட முகமது கஜினியின் கண் களில் ஆர்வமும் அவசரமும் கொப்பளித்தத. ''இதுதான் அந்தப் பணக்காரக் கோயிலோ?'' என்று முணுமுணுத்த அவனது இதயத் துடிப்பு உற்சசாகத்துடன் அதிகரித்தது. 'முன்னேறுங்கள்' என்று ஆணையிட்டான் கஜினி. ஏந்திய ஈட்டிகளுடனும் அகலமான வாள்களுடனும் பாய்ந்தது ஆப்கான் படை. சோமநாதர் கோயில் தனக்கு ஒரு 'திறந்த வீடாக' இருக்கும் என்றே நினைத்தான்

கஜினி இப்படி மக்கள் எதிர்ப்பார்கள் என்று அவன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான்.

ஒட்டமெடுப்பதற்குப் பதில் பல்லாயிரக்கணக்கில் ஊர் மக்கள், கோயிலில் பணி புரியவர்கள், அர்ச்சகர்கள் திரண்டெழுந்து கூவிக் கொண்டும், அழுது கொண்டும், கதறிக் கொண்டு ஓடி வந்தார்கள். கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு கஜினியின் படையை எதிர்த்து நின்றார்கள். சுல்தானின் கண்கள் சிவந்தன. 'தடுப்பவர்களின் தலைகளைத் தரையில் உருளச் செய்யுங்கள்' என்று கர்ஜித்தான் கஜினி. ஆப்கான் படைவீரர் களின ஆயிரக்கணக்கான வாள்கள் சூழலத் தொடங்கின. வெட்டித் தள்ளத்தள்ள மேலும் மேலும் மக்கள் முன்னேறி வந்த வழிமறித் தார்கள்.

### வெறிபிடித்த கஜினி

அன்று சோமநாதர் ஆலயத்தின் வெளியே துண்டாடப் பட்டு, உயிரற்று வீழ்ந்து கிடந்த ஐம்பதாயிரத்துக்கும் மேற் பட்டவர்களின் உடல்களை, பரவி எழுந்து வந்த கடல் அலைகள் குளிப்பாட்டிச் சிவந்தன. இத்தனை வெறியாட்டத்திற்குப் பிறகு வெற்றிகரமாக ஆலயத்துக்குள் நுழைந்த கஜினி முகமது, ரத்த மயமான அந்தச் சூழ்நிலையிலும் கோயிலின் செல்வச் செழிப்பைக் கண்டு பிரமித்து போனான். உன்மத்தம் அடைந்தவர்களைப் போல விக்கிரகம், ஆபரணம் என்று ஒன்றுவிடாமல் அள்ளி மூட்டை கட்டினார்கள் சுல்தான் வீரர்கள்.

கர்ப்பக்கிருகத்தில் ஒளி வீசிக்கொண்டு அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்த சிவலிங்கத்தின் மீது கஜினியின் பார்வை திரும்ப... மேலும் பிரமித்தான் உடனே ஆச்சரியத்துடன் பக்கத்திலிருந்த படைவீரனின் ஈட்டியை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ஈட்டியை, சிவலிங்கத்தைச் சுற்றி நாலாபுறமும் சுழற்றிப் பார்த் தான். கஜினியின் கண்களில் இருந்த வியப்பு மெல்ல அகன்றது. வெறி புகுந்தது. வெளியே வந்து "பலே! சாமர்த்தியமாகத்தான்

அமைத்திருக்கிறார்கள்! மேலே கூரையிலும் பக்கவாட்டிலும் உள்ள அந்தக் கற்களை அகற்றித் தள்ளுங்கள். இது ஏதோ காந்த சக்ததியின் வேலை'' என்று கஜினி ஆணையிட வீரர்கள் உட் புகுந்தார்கள். சுற்றிலும் கற்கள் உடைக்கப்பட்டு, அகற்றப்பட்டன. சிவலிங்கம் மெல்லஅசைந்தது. பிறகு கீழே இறங்கி 'தொப்' பென்று வீழ்ந்தது. தன் இரு கைகளாலும் வாகவமாக அந்த சிவலிங்கத்தைத் தூக்கி வந்து கோயிலின் முன் போட்டு உடைத் தான் முகமது கஜினி. படைவீரர்கள் 'ஹோ'வென்று ஆரவாரிக்க வானமும் சிவந்து அழுதது.

## கொலை வெறி பிடித்த கொள்ளைக்காரன்

சோமநாதர் கோயிலில் நடந்தேறிய இத்தனை கொடூரத்தை யும் விரிவாக சற்று வருத்தத்துடன் எழுதியிருப்பவர் அல்க்காஸ்லினி என்னும் அரபு நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர்.

காரியம் முடிந்த பின் கடைசி முறையாக இந்தியாவை ஒரு நிறைவான பெருமூச்சுடன் திரும்பிப் பார்த்துவிட்டு நாடு திரும்பி னான் முகமது கஜனி. சோமநாதர் கோயிலிலிருந்து அவன் கொண்டு போன தங்கம் மட்டுமே ஆறுடன் எடைக்கு மேல் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்க்காஸ்லினி என்றில்லை... பல முஸ்லிம் சரித்திரப் பேராசிரியர்கள் கஜினி முகமது பற்றிக் குறிப்பிடும்போது 'அவன் தேவையில்லாமல் வெறியாட்டம் ஆடியதாகவே வருந்திக் குறிப் பிடுகிறார்கள். இத்தனைக்கும் சாம்ராஜ்யம் நிறுவும் எண்ணம் எதுவும் கஜினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவன் நிகழ்த்திய கொடுமையை நியாயப்படுத்தக்கூடிய வாதங்களை யாரும் எடுத்து வைக்க முன்வரவில்லை.

சுருக்கமாகச் சொல்லப் போனால், முகமது கஜினியைக் கொலை வெறிபிடித்த ஒரு கொள்ளைக்காரனாகத்தான் நாம் கொள்ள முடியும். இதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. ஆனால் ஒன்று கொள்ளையடித்த பெரும் செல்வத்தைக் கொண்டு

தன் சொந்த ஊரான கஜினியைச் சிறந்த நகரமாக உருவாக்கச் செலவிட்டான். அருமையானதொரு நூலகமும் மியூசியமும் மக்களுக்காகக் கட்டித் தந்தான். அவன் அரண்மனையில் கவிஞர் களும், பாடகர்களுமம், ஓவியர்களும் கூடி, தங்கள் கலைத் திறனை சுல்தான் முன் காட்டி அவனை மகிழ்வித்தார்கள். பிர் தெளசி, அலபெரூனி போன்ற புகழ்வாய்ந்த சரித்திர ஆராய்ச்சி யாளர்கள் மற்றும் எழுத்தாளர்களை அவன் அன்புடன் தன்னோடு வைத்துக் கொண்டிருந்தான். அவர்களும் பெரும் செல்வாக்குடனும் சகல வசதிகளுடனும் வாழ்ந்தார்கள். ஆம்... இவ்வாறாக கஜி னிக்கும் ஒரு மறுபக்கம் இருக்கத்தான் செய்தது.

**ராஜேந்திரனின் வீரம்**

வடமேற்கில் தொடரர்ந்து கஜினி முகமது படைபெயடுதத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் ஒரு மாவீரன் இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து ஒரு பெரும் படையுடன் கிளம்பி வடக்கு நோக்கி வந்து சேர்ந்தான். அவனுடைய வீரர்களை யாராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. இன்றைய ஹைதராபாத், ஒரிஸ்ஸா, வங்காளம் மற்றும் பல பகுதிகளும் அந்த மன்னன் வீரத்தின் முன் மண்டியிட்டன. கங்கை நதி நீரைக் குடங்களில் நிரப்பி, தான் வெற்றி கொண்ட மன்னர்களின் தலகளின் மீது வைத்துத் தன் ஊருக்குத் திரும்பினான் அந்த மன்னன் அந்த மாவீரன்தான் தமிழகத்தை ஆண்ட ராஜேந்திர சோழன். இந்தியா வின் வடமேற்கில் கஜினி படையெடுத்து வந்திருக்கும் விஷயத்தை நிச்சயம் ஒற்றர்கள் ராஜேந்திர சோழனிடம் சொல்லாமல் இருந் திருக்க மாட்டார்கள். ஆனால் ராஜேந்திர சோழனின் விருப்பம் கப்பற்படையுடன் சென்று மலேயா, இலங்கை, ஜாவா சுமந்தி ராவைக் கைப்பற்ற வேண்டும் என்பதாக இருந்தது.

தென்னாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு மாமன்னன் கங்கை வரை வந்து வெற்றிக்கொடி நாட்டிய விஷயம் முகமது கஜி னிக்கும் சொல்லப்பட்டிருக்க வேவண்டும். 'சிந்து நதியைக்

கடந்து படைபலம் தெரியாமல் யாரோ ஒரு தென்னாட்டு மன்னனுடன் யார் மோதிக் கொண்டிருப்பது? எதற்கு வீண் வம்பு?' என்று தன் கவனத்தை வடமேற்குப் பகுதிகளிலேயே கஜினி செலுத்தியிருக்க வேண்டும். கஜினி முகமது, ராஜேந்திர சோழன் - இருவரும் போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்திக்காமலேயே திரும்பினார்கள் என்கிறது வரலாறு.

**முடிந்தான் காலன்**

ஆப்கானிஸ்தான் திரும்பிய கஜினி முகமது. ஒரு விஷக் காய்ச்சலில் படுத்து 1030 இல் இறந்துபோன செய்தி கேட்ட வட இந்தியா நிம்மதிப் பெருமூச்சு விட்டது என்றே கூறலாம். கஜினி, பிறகு கோரி முகமது, பிறகு ஹைதர்... இப்படி தொடர்ந்து இந்தியாவுக்குள் வேற்று நாட்டவர்கள் படையுடன் புகுந்தும், இந்தியக் குறுநில மன்னர்கள் ஒன்று சேர்ந்து எந்த ஒரு தற்காப்பு நடவடிக்கையையும் எடுக்காதது ஒரு பரிதாபகரமான உண்மை.

'ஒன்றுபட்டால்ததான் உண்டு வாழ்வு' என்று உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். இந்த ராஜபுத்திர மன்னர்கள் தவிர மறதி என்கிற வியாதியும் அவர்களைப் பிடித்திருந்தது. ஒவ்வொரு முறை அந்நியப் படை வரும் போதும் விழித்துக் கொண்டு அவசர கதியில் அரைகுறையாக ஒருங்கிணைந்தும் படையெடுப்பு முடிந்தவுடன் எல்லாமே மறந்துவிடுவதும்... பிறகு பழையபடி கச்சிதமாகப் பிரிந்து, உள்ளூர்ச் சண்டையில் இறங்குவதும் அவர்களுக்கு வழக்கமாகிப் போனது. (பிருதிவிராஜ் - ஜெயச் சந்ததிரன் ஓர் உதாரணம்)

இந்தியர்களின் தொடர்ந்து தோல்விக்கு மேலும் சில காரணங்கள்.

அந்நியப்படை இந்தியாவுக்குள் நுழைய வழி - கைபர் கணவாய் அல்லது கோமால் கணவாயாக இருந்தது சீனர்களைப் போல் 1500 மைல் நீள நெடுஞ்சவர் கூடத் தேவையில்லை - இந்த இரண்டு கணவாய்களைக் காக்கச் சிறுகோட்டைகளைக்

கூட எழுப்பவில்லை இந்திய மன்னர்கள். 'உங்களைக் காக்க நான் ஏன் கோட்டை எழுப்ப வேண்டும்?' என்கிற ரீதியில் காழ்ப் புணர்ச்சியும், விதண்டாவாதமும் அன்று மலிந்திருந்ததுதான் காரணம். இத்தனைக்கும் பல அரசர்கள் உறவினர்கள்.

## குதிரைப் படையின் அவசியம்

இந்திய மன்னர்களுக்கு நல்ல ஜாதிக் குதிரைகள் வளர்ப்பு என்பது எப்போதும் புரிபடாமல் இருந்தது. (சோழர்கள் கூட வருடா வருடம் ஐயாயிரம், பத்தாயிரம் என்று குதிரைகளை அரபு நாடுகளிலிருந்து இறக்குமதிதான் செய்தார்கள். மணிவாசகப் பெருமான்கூட குதிரை வாங்கத் தான் திருப்பெருந்துறை சென் றார் என்பதையும் அறிவோம்) ஆனால் ஆப்கான் குதிரைப் படை யோ, பிரத்தியேகப் போர்ப்பயிற்சி பெற்று, 'சிக்'கென்று இருந்தது ராஜபுத்திரர்கள் நேரடிப் போரில் மாவீரர்கள் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் 'போர் தர்மத்தைப் பின்பற்றுகிறேன் பேர்வழி' என்று களத்தில் அவர்கள தேவையில்லாத பெருந்தன்மை காட்டு வதை ஒரு பெருமையாகக் கருதினார்கள் அது பலமுறை வினை யாக முடிந்தது. (முதல் யுத்தத்தில் முகமது கோரியை வெற்றி கொண்டும் பிருத்விராஜ் அவனைக் கொல்லாமல் விட்டது ஓர் உதாரணம்)

பொதுவாகவே பல இந்திய மன்னர்களுக்குப் போர் என்பது வீரம் கலந்த ஒரு பொழுது போக்காகவே இருந்தது. ஆகவே தற்காப்புக்காக யுத்தம் செய்வதோடு நிறுத்திக் கொண்டார்கள். 'வலியச் சென்று தாக்குவதே சிறந்த தற்காப்பு' என்கிற உண்மையை அவர்கள் புரிந்து கொள்ளவேயில்லை. அண்டை நாட்டுப் படை யினரின் கதை வேறு.

மலைகளையும் நதிகளையும் கடந்து அவர்கள் இந்தியா வரக் காரணம் - அவர்களுக்கு இங்கு காத்திருக்கும் பெரும் செல்வம். அது அவர்களுக்கு ஓர் இலக்காக இருந்தது இந்திய வீரர்களோ கடமைக்காகவும் வீர மரணத்துக்காகவும் மட்டுமே

களத்தில் குதித்தார்கள். வநதவர்களை மதம் இணைத்திருந்தது; நம்மவர்களையோ ஜாதி பிரித்து வைத்திருந்தது இங்கே படையில் பெரும் பதவிகள் தரும் போது ஜாதியையும் கருத்தில் கொண்டு செயல்பட்டார்கள் ஆப்கான் படையில் திறமைக்கு மட்டும் மதிப்பு தரப்பட்டது என்பது உண்மை. இது நமக்கு வரலாறு காட்டும் படிப்பினை

முகமது கஜினிக்குப் பிறகு வந்த கோரி முகமதுவின் வெற்றி கரமான இந்தியப் படையெடுப்பு பற்றி குறிப்பிட்டோம். கோரி முகமது ஊர் திரம்பும் முன் இந்தியாவின் வடபகுதியைத் தன் சார்பில் ஆட்சி புரியத் தேர்ந்தெடுத்த, தன் பிரதம தளபதிகளில் ஒருவனைத் தளபதியாகவும் நியமித்தான். அத் தளபதியின் பெயர் குத்புதீன் அய்பெக். கோரிக்கு அடிமையாகச் சேவகம் புரிந்து சேசனாதிபதியாகப் படிப்படியாக உயர்ந்து, பிறகு டெல்லி மன்னனாக அரியணை அமர்ந்தான் குத்புதீன் ஆய்பெக்.

எத்தனையோ அரசர்கள் கட்டிய அமர்க்களமான மாளிகைகளெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட, அடிமையாக வாழ்க்கையைத் தொடங்கிய குத்புதீன் தொடங்கி வைத்த ஓர் அதிசயம் - டெல்லியில் உயர்ந்து நின்று அவன் பெருமையை இன்றைக்கும் முரசு கொட்டிக் கொண்டிருக்கிறது - அதுதான் குதுப்மினார்.

# 7

சோமநாதர் அலயத்தை வழிபட்டு, அங்கிருந்து 260 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ராஜ்காட்டிற்குச் சென்றோம். அங்கிருந்து உஜ்ஜயினி வந்து சேர்ந்தோம. உஜ்ஜயினி என்ற உடனேயே ராஜாதி ராஜாவான விக்கிரமாதித்தனும் அவனது மதி மந்திரியான பட்டியும் இவர்களை ஆட்டிப் படைத்த வேதாளமும் உங்கள் நினைவுக்கு வருகிறதல்லவா? ஆம். அதே உஜ்ஜயினி தான் இது.

இங்குதான் அவன் பொன்னாலும், மணியாலும், முத்தாலும், அலங்கரிக்கப்பட்ட 32 மோகப் பதுமைகளால் சிறப்பிக்கப்பட்டது

மான அரியாசனம் இருந்தது. அந்த அரியாசனப் பெருமைதான் குறைவற்ற புகழ்கொண்ட விக்கிரமாதித்தன் காடாறு மாதம், நாடாறு மாதம் என இருந்து நாடு காத்த அவன் 4 வேதம் 6 சாஸ்திரம் 14 புராணம் 64 கலைகள் தத்துவங்கள் எல்லாவற்றை யும் கற்றார். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை, இந்திர ஜாலம், மகேந்ததிர ஜாலம் முதலிய ஜாலவித்தைகள், காய சித்தி, அட்டமா சித்தி ஆகிய சசித்திகளையெல்லாம் கற்று 56 தேச மன்னர் களையும் அடிமையாகக் கொண்டு வாழ்ந்த விக்கிரமாதித்தன் ஆண்டதும், இந்த உஜ்ஜயினிதான்.

உஜ்ஜயினி செல்வதற்கு ஆக்ரா செல்லும் ரயிலில் ஏறி, நாக்தா ஜங்ஷனில் இறங்கி ரயில் மாறி உஜ்ஜயினி சேரலாம். போபால் ஜங்ஷனில் வண்டி மாறியும் அங்குச் செல்லலாம். உஜ்ஜயினி பெரிய நகரம். ஜனத்தொகை ஆறு லட்சம். இன்று அழகற்றிருந்தாலும் அன்று மிகவும் பிரசித்த பெற்றதாக இருந்தது என வரலாறு கூறுகிறது.

**சரித்திரம் காட்டும் கண்ணாடி**

இந்த நகரின் சரித்திர ஏடுகளைப் புரட்டினால், அவை எத்தனையோ கதைகளைச் சொல்லும் விக்கிரமாதித்தன் காலத் தில் இது மாளவநாடு என்று அழைக்கப்பட்ட நாட்டின் தலை வராக இருந்தது. கி.மு.6 முதல் கி.பி.4 வரை கிட்டத்தட்ட 2500 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பகுதி அவந்தி நாடு என்று அழைக்கப் பட்டு, அதன் தலைநகராக உஜ்ஜயின் இருந்தது வடமொழி யிலும், வடமொழி இலக்கியங்களிலும் தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம், யசோதர காவியம், உதயணன் பெருங்கதை எனும் நூல்களில் இந்த நகரைப் பற்றிய செய்திகள் காணப்படு கின்றன.

பெருங்கதையில் பிரச்சோதனனுடைய ராஜதானியாக இந்த அவந்தி கூறப்படுகிறது. இங்கு நடந்த நீர்விழாவை, பெருங்கதை சிறப்பாகக் கூறுகிறது. பெருங்கதை நம் கொங்கு நாட்டு விஜய மங்கலத்தில் உருவாக்கப்பட்டது.

அதன் கதாநாயகனான உதயணன் வஞ்சனையால் சிறையிலிருந்தது முதலாக, வாசவதத்தையை யானை மீது ஏற்றிக் கொண்டு சென்றது வரையில் உள்ள நிகழ்ச்சிகள் எல்லாம் இங்குதான் நடந்தன. பலவகை அறங்களாலும் சிறப்பச் செல்வங்களாலும், செல்வ நிறைவினாலும் மேம்பட்டிருந்தது. அன்றே இந்த நகர் அகநகர், புறநகர் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதன் நகர மக்கள் முருகக் கடவுளைப் பெரிதும் விரும்பி வழிபட்டார்கள் என்று பெருங்கதை கூறுகிறது. இந்த உஜ்ஜயினியிலுள்ள முருகப் பெருமானுக்கு அருணகிரி நாதர் திருப்புகழ் இருக்கிறது.

வரலாற்றுப் புகழ் மிக்க இந்த நகரம் இன்று தன் சரித்திரச் சிறப்புகளையெல்லாம் இழந்து, வீடுகளெல்லாம் பொலிவிழந்து, தெருக்கள்கெல்லாம் அசுத்தமாயும் இருப்பது வேதனைக்குரியது. முக்தி தரும் நகரங்கள் எழினும் அவந்தி என்று அழைக்கப்பட்ட இந்த ஊரும் ஒன்றாகும். இங்குதான் விக்கிரமாதித்தனுக்கு அருள் புரிந்த மகா காளி கோயில் இருக்கிறது. இங்குதான் நாம் வணங்க இருக்கின்ற 12 சோதிலிங்களில் ஒன்றான மகாகாளர் குடிகொண்டு அடியவர்களுக்கு அருள் புரிகின்றார் இந்த மகாகாளர் திருக்கோயிலை நாவுக்கரசுப் பெருமாள் தன்னுடைய திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நம்முடைய நால்வர் பெருமக்களில், வட இந்தியா முழுக்கச் சுற்றி கயிலாயம் வரை சென்ற பெருமகன் அப்பர் அடிகளே ஆவார். அப்பர் அடிகள் இங்கெல்லாம் வந்து வழிபாடு செய்திருக்க வேண்டும் என்று உணர முடிகிறது. இந்தக் கோயிலின் தெற்குப் பகுதியில் நுழைந்தால் கோடித் தீர்த்தம் என்ற திருக்குளம் மிக அழகாக இருக்கிறது. நன்கு பளிங்குத் தரை அமைக்கப்பட்டு, நல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டு குளத்தில் நடுநாயகமாக நீரூற்று அமைக்கப்பட்டு வெகு அழகாக இருக்கிறது. இந்தத் திருக்குளத்தை விக்கிரமாதித்தன் வெட்டியதாகக் கூறப்படுகிறது. நாவுக்கரசு பெருமான் ''கோடித் தீர்த்தம் குடைந்து ஆடிலென்'' என்று, இறைவன் எங்கும் இருக்கிறான் என்ற உணர்வில்லாத

வர்கள் எங்கு சென்று முழுகினாலும், பலன் இல்லை என்று குறித்தது இக்கோடித் தீர்த்தத்தையே.

**மகாகாளர் வழிபாடு**

இக்கோயிலின் வாயிலில் நீலகண்டேசுவரர் இருக்கிறார். அவரைத் தாண்டி உள்ளே சென்றால், இக்கோயில் 5 அடுக்கு களைக் கொண்டுள்ளது. 4 3 அடுக்குகளில் 3 லிங்க வடிவங்கள் இருக்கின்றன. பூமி மட்டத்திற்கு அடியில் இருப்பவர் தான் மகாகாளர். பூமி மட்டத்திலேயே இருப்பவர் ஓம் காளேசுவரர் அவருக்கு மேலே மாடியிலே இருப்பவர் தாரகேசுவரர். ஆனால் மகாகாளரைக் காண பூமிக்கடியில் பத்து, பதினைத்து அடி கீழே இறங்கிச் செல்ல வேண்டும். இங்கு எப்பொழுதும் விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கின்றன.

இந்த மகாகாளர் வழிபாட்டில் ஓர் அதிசயம்! அவருக்குச் சமர்ப்பித்த எந்தப் பொருளும் நிர்மால்யம் ஆவதில்லை. அவற்றை எடுத்து திரும்பவும் அவருக்கே சமர்ப்பிக்கலாம் நம்முடைய திருக் கூட்டமானது அங்கே சென்று பெருமானுக்குத் திருமுழுக்கு நடத்தி, புத்தாடை அணிவித்து அன்பர்கள் கூடி நின்று, போற்றித் திருத்தாண்டகம் சொல்லி மனமருகி வழிபட்டோம். அதன்பின் ஓம்காளேசுவர் தாரகேசுவரர் ஆகிய இருவரையும் வழிபாடு செய்தோம். இந்த மகாகாளர், இங்கு கோயில் கொண்டிருப்பதற்கு ஒரு வரலாறு உண்டு.

இந்த அவந்தி நகரில், அந்தணர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மிகச் சிறந்த சிவ பக்தர், சிவனடியார்களுக்கு நாளும் அன்போடு அன்னம்பாலிப்பு செய்து வாழ்ந்து வந்தனர். அப்போது, பக்கத் திலுள்ள ரத்தினமலை என்ற மலையில் தூஷணன் என்ற வேதாளம் இருந்தது. அது மக்களை மிகவும் துன்பப்படுத்தியது. அப்போழுது மக்களெல்லாரும் அந்த அந்தணரிடத்திலே வந்து "பெருமானிடம் சொல்லி இந்த வேதாளத்திற்க இந்த வேதாளத்திற்கு தாங்கள் எதேனும் முடிவு கட்ட வேண்டும்?" என்று வேண்டினர்.

## அடியவரின் வேண்டுகோள்

அவர் சிவபெருமானை எழுந்தருளச் செய்து வழிபாடு செய்து மக்கள் துன்பம் நீங்க வேண்டினார். அப்பொழுது அங்கு வந்த அந்த வேதாளம் சிவலிங்கப் பொருமானையும், அவர் செய்து கொண்டிருந்த வேள்வியையும் தகர்க்க முற்பட்டபோது பூமி யிலே இருந்து வெடித்து மகாகாளா தோன்றி அந்த வேதாளத்தை வதம் செய்தார். அதை பின்னர் அந்த அந்தணர் "ஆண்டவனே! நீங்கள் இங்கேயே கோயில் கொண்டு எழுந்தளரு அடியவர் களுக்கு அருள் பாலிக்க வேண்டும்" என்ற வேண்டுதலை விடுத் தனர். அதனை அன்புடன் ஏற்ற பெருமான் இன்றும் அங்கு கோயில் கொண்டு நமக்கெல்லாம் அருள்பாலிக்கின்றார்.

## ரொட்டித் துண்டு பைரவரும்

பூமி வெடித்து வெளிப்பட்ட பெருமான் ஆதலால் இன்றும் பூமிக்கடியிலேயே இருக்கிறார். முன்னொரு காலத்தில் உஜ்ஜ யினியை ஆண்ட அரசன் ஒருவன், மிகச் சிறந்த சிவனடியாராகத் திகழ்ந்தான். அவரை நோக்கி, முகமதிய சேனை, திடீரென்று வந்து, அவரையும் அரண்மனையையும் முற்றுகையிட்டது. அவ்வூரில் இருந்த அடியவர் ஒருவரிடம் அம்மன்னன் முறையிட அவ்வடியார். ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்து. "இங்கோயிலில் உள்ள பைரவரிடம் இதைக் கொடுத்து உன் வேண்டுகோளைத் தெரிவித்துப் பிரார்த்தனை செய். மற்றவற்றை பைரவரே கவனித்துக் கொள்வார்" என்றார். அரசன் அவ்விதமே செய்ய. அன்றிரவே அந்தச் சேனைகள் ஓட்டம் பிடித்தன.

## கோடித்தீர்த்தமும் அனுமனும்

இந்தக் கோயிலுக்கு தென்புறம் உள்ள கோடித் தீர்த்தத்தைப் பற்றி முன்னமேயே சொன்னேன். அதற்கும் ஒரு கதை உண்டு. இராவணனை வதம் செய்த இராமபிரானின் பட்டாபிசேகத்திற்கு ஏற்பாடுகள் அனைத்தும் சிறப்பாக அயோத்தியில் நடைபெற்றன. ஏழு தீர்த்தங்களிலிருந்தும் தீர்த்தம் கொண்டு வரும் பணியை அனுமனிடம் ஒப்படைத்தனர். அனுமன் இங்குள்ள இப்ரா நதி

யின் தீர்த்தத்தை எடுக்க வந்தாள். அந்த ஆற்றங்கரையில் காகண்டரிசி என்ற பெரியவர் தவம் செய்து கொண்டிருந்தார் அனுமன் வருகையால் அவர் தவம் கலைந்தது. அவரது தவ வலிமையால் இங்குள்ள தீர்த்தத்தை அனுமனால் எடுத்துச் செல்ல இயலவில்லை.

பின்னர் அனுமன் அந்த ரிஷியைப் பிரார்த்திக்க அந்த முனிவர் அனுமன் கொண்டு வந்திருக்கும் தீர்த்தக்கங்களில் கொஞ்சம் கொஞ்சம் அங்கே விடும்படி சொன்னார். அப்படியே அனுமனும் செய்ய தீர்த்தம் எடுத்துச் செல்ல அந்த முனிவர் அனுமதித்தார்.

இராம பட்டாபிசேகத்திற்குச் சென்ற சப்த தீர்த்தங்களும் இங்கு ஒருங்கு சேருவதால் இந்தத் தீர்த்தக் கட்டம் மிகப் பெருமையுடையதாகிறது. தோல் வியாதி உள்ளவர்கள், இந்தக் குளத்தில் நீராடினால் நோய் குணமாகும். மகாகாளர் கோயிலை விட்டு வெளியே வந்து மேல வீதிக்குச் சென்றால் அங்கு ஒரு பெரிய விநாயகர் கோயிலைக் காணலாம். அந்த விநாயகரர் ஆலயத்தில் தான் அருணகிரிநாதன் பாடிய முருகப் பெருமான எழுந்தருளியுள்ளார்.

**காளியின் கோயில்**

தேவகிக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்த கண்ணனை யசோதை வீட்டில் விட்டு, அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை வசுதேவர் தூக்கி வந்த நிகழ்ச்சியை நாம் படித்திருக்கிறோம். அப்பெண் குழந்தையைக் கம்சன் தன் வழக்கப்படி, வானிலே தூக்கி எறிந்து வாளால் வெட்ட முயன்றபோது அந்தக் குழந்தை காளி தேவியாக மாறி ''என்னைக் கொல்ல நினைக்கும் மூடனே! உன்னைக் கொல்ல ஒருவன் யாதவர்கள் மத்தியில் வளர்கிறான்'' என்று சொல்லி மறைந்ததாக பாகவதம் சொல்வதையும் நாம் அறிவோம். அந்தக் காளிதான் இங்கே தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. மகாகவி காளிதாசனுக்கும் விக்கிரமாதித்தனுக்கும் அருள் புரிந்த தெய்வம் இந்தக் காளிதான்.

விக்கிரமாதித்தனுக்கு அருள் செய்த இந்தக் காளியை அரசித்தி தேவி என்று அழைக்கின்றனர்.

ஒரு நாள் சிவபெருமானும் காளிதேவியும் பேசிக் கொண்டிருந்தபோது, சண்டன், பிரசண்டன் என்ற இரு அசுரர்கள் அங்கு வந்து, காவல் காத்த நந்தியெம் பெருமானைத் தாக்க, சிவ பெருமான், காளிதேவியைப் பார்த்து, இந்த அசுரர்கள் வதம் செய்ய ஆணையிட்டார். அதன்படியே காளிதேவியும் இரு அசுரர் களையும் வதம் செய்தார். எனவே, அரனுடைய ஏவலான அரக் கனை வதம் செய்த சித்தியை அரசித்தி என்று அழைத்தனர். விக்கிரமாதித்தனுக்கு எல்லா ஆற்றல்களையும் அளித்தவள் இந்தக் காளியே.

இக்கோயில் வாயிலில் வரலாற்றுச் சிறப்புமிக்க இரு தீபஸ் தம்பங்கள் உள்ளன. இந்தக் கோயில் பிராகாரத்தில் சித்தவடம் என்னும் ஆலமரம் பல்லாயிரம் ஆண்டுகளாக இருப்பதாகச் சொல்லுகின்றனர். அந்த ஆலமரம் மிகப் புனிதமானதாகப் போற்றப் படுகின்றது. இந்த ஆலமரத்தின் எதிர்ப்புற வாயிலில் சென்றால் விக்கிரமாதித்தன் ஆண்ட இடத்தில் விக்கிரமாதித்தன் திரு வுருவச் சிலை உள்ளது. மகாகாளருக்கு கலை வேளைப்பாடு அமைந்த, வெள்ளி நாகம் மிக அருமையானது. மகாகாளருக்கு இரவு 12 மணிக்கு மயானத்திலிருந்து சாம்பல் எடுத்து வந்து, வழிபாடு செய்கின்றனர். அந்த சுடுகாட்டுச் சாம்பலே, பிரசாத மாகத் தரப்படுகின்றது. இந்த உஜ்ஜயினியில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சிம்ம அஸ்த திருவிழாவும் கும்பமேளாவும் நடைபெறு கிறது.

## கும்பமேளா

கும்பமேளா என்பது, நம் தமிழகத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறுகிற மகா மகம் போன்றது. சிம்ம வஸ்த, கும்பமேளா விழாவின் ஏற்பாடு நான்கு பிரசித்தி பெற்ற தீர்த்த ஸ்தலங்களில் நடக்கிறது. அவை பிரயாகை,

அரித்துவார், நாசிக் உஜ்ஜயினி என்பனவாகும் ஸ்கந்த புராணத்தில் இது பற்றிய செய்தி வருகிறது.

அமிர்தம் வேண்டும் என்று தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்த போழ்து, அமிர்தம் ஒரு குடத்தில் வந்தது. அந்த அமிர்தக் குடதனைத் தேவர்களிடமிருந்து அரக்கர்கள் பறிக்க, அவர்களிடமிருந்து அதனைக் காப்பாற்றும் முயற்சியில் தேவர்கள் ஈடுபட்ட போது, அந்தக் கும்பத்திலிருந்து அமிர்தத்தின் சில துளிகள் துளிர்த்தன. அந்த அமிர்தத்தின் துளிகள் இந்த 4 இடங்களில் விழுந்ததால், அந்த 4 இடங்களிலும் கும்பமேளா கொண்டாடப்படுகிறது.

மேளா என்ற சொல்லுக்கு விழா என்று பெயர். கும்பத்திலிருந்து அமிர்தம் துளிர்த்த விழா என்பதை யொட்டி கும்ப மேளா என்று அழைக்கப்படுகின்றது. மற்ற ஊர்களில் நடை பெறுகின்ற கும்பமேளாவை விட, உஜ்ஜயினியில் நடப்பது மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் கும்பமேளாவுடன், சிம்ம அஸ்த விழாவும் சேர்ந்திருக்கிறது. இந்த இரண்டும் விழாக் களும் கலந்ததினால் இந்த விழாவின் பலன், மற்றவற்றை விட பல மடங்கு சிறப்புப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

வைகாசி மாதம் சுக்ல பட்சம் பௌர்ணமி திதி, மேஷ ராசியில் சூரியன், சிம்மராசியில் குரு, துலா ராசியில், சந்திரன், சுவாதி நட்சத்திரம், வைதிபான் யோகம், புனித திதியான திங்கட்கிழமை மோட்சத்தை அளிக்கும் அவந்தி நட்சத்திரம் ஆகியவை இணை கின்ற காலம். அதனாலே இது சிறப்பாகக் கருதப்படுகின்றது. இந்த விழாவின்போது தேவாதி தேவர்கள் எல்லாம் பூமியில் இறங்கி, இந்தப் புனித நதியில் நீராடிப் புனிதம் பெறுகின்றனர். இந்தியாவிலிருந்தும், வெவளிநாடுகளிலிருந்தும் லட்சக்கணக் கான மக்கள் கூடி, குளித்து மகா காளரை வழிபடுகிறார்கள்.

### பெயர் பல

பழைய காலத்தில் உஜ்ஜயினி நகரில் ஏழு கடல், நான்கு நதி 28 தீர்த்ததம் இருந்ததாகக் கருதப்படகிறது. இது அவந்தி, அவந்தி

புரி என்றும் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. மகாகாளர், திரிபுராதி களை வென்று ஆனந்தமடைந்த வெற்றியின் நினைவாக இந்த நகர் உஜ்ஜயினி என்று அழைக்கப்படுகிறதுது. உஜ்ஜயினி என்றால் வெற்றி நகரம் புதிய உருவம் பெறுவதால், பிரதி கலிபா என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு மாறுபட்ட கல்பங்களில் இதன் பெயர் குஷாலி, அமராவதி, சூடாமணி, பத்மாவதி என அழைக்கப்பட்டது.

பூக்கள் மிகுந்த காணும் நகரமானதால், இதனைக் குமுதவதி என்றும், இந்த ஊரானது மிக விசாலமாக இருப்பதால் விசாலா என்றும் அழைக்கப்படுகிறது. எப்பொழுதும் மகாகாளர் இருந்து அருள்புரரிவதால் சிவபுரி என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு வானிலை ஆராய்ச்சி நிலையம் பழைய காலத்தில் மிகச் சிறப்புற இருந்தது. இததகைய ஆரராய்ச்சி நிலையங்களை டெல்லி, ஜெய்பூர், மதுரை, பனாரஸ் ஆகிய இடங்களில் அமைத்தனர். இங்குள்ள கட்டடங்களின் நிழல்களைக் கொண்டு நாள், மணி, திதி, முதலியவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள். இதனைக் கண்டு பிடிக்க நான்கு இயந்திரங்கள் உள்ளன.

### சக்ரவர்த்தி இயந்திரம்

இதன் மூலம் சூரியனின் வேலைகளைக் கணிக்க முடிகிறது. நாவிவளைய இயந்திரம் - இது சக்கரவர்த்தி இயந்திரத்தின் கொள்கையின் அடிப்படையில் உள்ளது. திகஸ் இயந்திரம் கிரகம், நட்சத்திரங்களின் ஆகாய நிலையை அறிதல், பித்தி இயந்திரம் - சூரியன் நட்சத்திரங்கள் கிரகங்களின் நிலைமையில் பஞ்சாங்கம் தயாரிக்கப் பயன்படுவது.

### புலவோர் கூட்டம்

விக்கிரமாதித்தனும் சாலிவாகனனும் தோன்றியது இங்குதான். இந்த இருவர் பெயராலும் இரு சகாப்தங்கள் உள்ளன.

பார்த்தரகசி, வரருசி, காளிதாசன், தண்டி, பலபூதி, ஆகிய வட மொழிக் கவிஞர்கள் தோன்றி, வாழ்ந்ததும் இத்திருநகரில்தான், மகாகவி காளிதாசன், தன் மேகதூதம் என்ற அழியாத காவியத்தை உருவாக்கியதும் இங்குதான். ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகைத் திங்கள் முழு நிலவு நாளன்று. காளிதாசன் நினைவுநாள் கொண் டாடப் படுகின்றது. இந்த உஜ்ஜயினியில் கண்ணன் வரலாற் றோடு தொடர்புடையது ஒரு கதையும் இங்கு வழங்கப்படுகிறது.

**பாஞ்சசன்யம்**

கண்ணன், பலராமன், சுதாமர் ஆகிய மூவரும் சாந்தீப முனிவரிடம் இங்கு குருகுல வாசம் செய்தனர். இவர்கள் மூவரும் குருகுலத்திற்கு வருவதற்கு முன்னர் சாந்தீப முனிவரின் குமரனை, பாஞ்சனன் என்ற அசுரன் எடுத்துக் கொண்டு சென்று கடலுக்குள் ஒளித்து வைத்து விட்டான்.

பன்னிரண்டு ஆண்டுகள் கண்ணன் தன் குருகுல வாசம் முடிந்து ஊர் திரும்பும்போது என்ன குருதட்சணை வழங்குவது என்று தன் குருவினைக் கேட்டார். அதற்கு முனிவர் தன் பையனைக் கொடுக்க வேண்டினார். அவர் விரும்பிய வண்ணமே கண்ணன் கடலுக்குள் புகுந்து கடலில் ஒளிந்திருந்த பாஞ்சனன் என்ற அரக்கனைக் கொன்று, அவனையே சங்காக்கி, அச் சங்கால் தன் வெற்றியை ஊதிக் கொண்டே திரும்பி முனிவர் மகனையும் கொண்டு வந்து ஒப்படைத்தான். அப்படி பாஞ்சனையே சங்காகக் கொண்டு ஊதியதன் காரணமாக கண்ணன் கையில் நிரந்தரமாக உள்ள இச்சங்கே பாஞ்ச சன்யம் என்னும் சங்காகும். திருமங்கை யாழ்வார் இந்த வரலாற்றை மிக அழகாகச் சொல்லித் துதிக்கிறார்.

ஓது வாய்மையும் உவணிய சிறப்பும்
உனக்கு முன் தந்த அந்தணன் ஒருவன்
காதல் என் மகன் புகலிடம் காயேன்
கண்டு நீ தருவாய் எனக்கு என்று
கோதில் வாய்மையினால் உனை வேண்டிய
குறைமுடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய்

ஆதலால் வந்து உன் அடியினை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்து அம்மானே.

**மேகதூதம்**

மகாகவி காளிதாசன், தன்னுடைய மேகதூதம் என்ற காவியத்தில், ''ஏ, மேகமே! விந்திய மலையிலிருந்து வடக்கே செல்லும் உனக்கு உஜ்ஜயினி நேர் வழியில் இல்லை என்றாலும் நீ அங்கு செல்ல வேண்டும். அங்குள்ள மகா காளரை. வணங்க வேண்டும். அப்படி வணங்க வில்லையானால் நீ கண் பெற்றதின் பயனை அடைய மாட்டாய். ஏ, மேகமே! நீ மாலை வேளையில் உஜ்ஜயினி சென்றால் மாலைச் சூரியன் மறையும்வரை அங்கிருந்து இரவில் உன் இடி முழக்கத்தால் மகா காளருடைய பறையாகக் கொட்டி அவரை வணங்கிய பின்பே செல்வாயாக!'' என்று சொல்லுகிறார் என்றால், இந்த நகரத்தின் பெருமையையும் மகா காளரின் புகழையும் என்னென்று சொல்வது? இத்தகைய பெருமைக் குரிய மகாகாளரின் பேரருள் வாசக நேயர்கள் அனைவருக்கும் கிட்டுவதாக எனப் பிரார்த்திக் கொண்டு அடுத்த கட்டப் பயணத் தைத் தொடர்வோம்.

# 8

**ஓங்காரம்**

உஜ்ஜயினியிலிருந்து 130 கிலோ மீட்டர் சென்றால் இந்தூர் என்ற நகரம் வருகிறது. அங்கிருந்து 151 கிலோ மீட்டர் சென்றால் 12 சோதிலிங்கங்களில் ஒன்றான ஓம்காரம் என்ற திருத்தலத்தை அடையலாம். இந்த ஓம்காரம் விந்திய மலைத் தொடரில் உள்ள அரிய திருத்தலம். ஓம்காரேசுவரா ரோடு என்று ரயில் நிலையமே உள்ளது. அங்கிருந்து 7 மைல் செல்ல வேண்டும். வழிநெடுக மலைப்பாதைதான். இயற்கை அழகு மிகுந்த இடம், வானுற ஓங்கி வளர்ந்த மரங்களும் அடர்ந்த காடுகளும் சூழ்ந்து பச்சைப் பசுமையான இடமாகக் காட்சியளிக்கிறது. இயற்கை அழகு கொஞ்சுகிறது.

பெரிய பெரிய காடுகளும், மலை முகடுகளும், சிற்றாறு களும், வானளாவிய தேக்க மரங்களும் கண்ணுக்கு விருந்து அளிக்கின்றன. நர்மதையாறு பெருக்கெடுத்து ஓடுகிறது அந்த ஆற்றின் மறுகரையில் 'ஓம்காரம்' என்று சொல்லக்வடிய உயர்ந்த திருக்கோயில் மலை முகட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. கோயில் மிகவும் அழகானது. ஏழு நதிகளில் ஆறு நதிகள் பெண்களாகவும், நர்மதை ஆறு மட்டும் ஆண் நதி என்றும், அதனைத் தரித்த மாத்திரத்தில் சகல வினைகளையும் போக்க வல்லது சொல்லரிய பெருமை உள்ளது என்றும் சாத்திரங்கள் சொல்லுகின்றன. நர்மதை யாறு கங்கையிலும் சிறந்தது. ஓம்காரம் கயிலையிலும் சிறந்தது என்கிறது வேதம்.

**கோயில் கதவு மூடியது**

நர்மதையாறு அரச யானை நடப்பதுபோல கம்பீரமாக ஓடுகிறது. இக்கோயிலில் மன்னர் பரம்பரையில் தோன்றிய முசுகுந்தன், அவரது தந்தையான மாந்தாதா போன்ற பேரரசர்கள் இப்பெருமானை வழிபட்டு இந்தப் பகுதியை ஆண்டதால் மாந்தாதா என்ற பெயரும் இந்நருக்கு உண்டு. இந்த ஓம்காரேசுவரர் திருக் கோயிலில் மாந்தாதாவின் திருவுருவம் வைத்து வழிபாடு செய்யப் படுகிறது. திருவரங்கம் போல இந்த ஆறும் இரண்டாகப் பிரிந்து மீண்டும் கூடுகிறது. இந்த ஆற்றைக் கடக்க அழகிய பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. பாலத்தின் மீது இருந்து பார்க்கால் நதி ஓங்கார வடிவமாகத் தெரிகிறது.

இத்திருக்கோயில் விமானம் வாழைப்பூ போன்ற தோற்றத் துடனும், இந்தக் கருவறை ஓம் என்ற வடிவிலும் காட்சி அளிப்ப தால் ஓம்காரம் என்ற பெயர் உண்டாயிற்று. நாங்கள் இரவு 10 மணியளவில் ஓம்காரம் போய்ச் சேர்ந்தோம். அங்கே கோயிலில் இரவு வழிபாடு முடிந்து, திருக்காப்பிட்டு விட்டார்கள். எப்படி யாவது வழிபட வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் அனை வரும் நர்மதையாற்றில் குளித்து, அங்கு பூஜை செய்பவரை அணுகி கோயிலைத் திறக்கும்படி கேட்டுக் கொண்டோம். ஆனால்

அப்படி செய்ய முடியாது என்று அவர் கூறிவிட்டார். எனினும் எங்கள் நிலையையறிந்த அந்தப் பூசாரி, ''உங்களுக்காக நாங்கள் செய்யக்கூடியது, அதிகாலை 5 மணிக்கு வழிபாட்டைச் செய்ய அனுமதிக்கிறோம்'' என்று கூறினார்கள். அதற்காக அவருக்கு நன்றி கூறினோம்.

**வானமே கூரை**

ஓம்கார நாதர் தன் திருக்கோயிலில் நம்மையெல்லாம் தங்க வைக்கிறான் போலும் என்று எண்ணி அனைவரும் கோயில் மண்டபத்திலேயே இரவு உணவு ஏதும் உண்ணாமல் படுக்கை இல்லாமல் வானமே கூரையாக, கட்டாந்தரையே படுக்கையாக, கையே தலையணையாக வைத்துப் படுத்தோம். ஆண்டவனின் கருணை சிறிது நேரத்தில் மழையாகப் பொழிந்தது. வெட்ட வெளிக்கு அருகே ஒரு சிறிய மண்டபமும், அதன் மேலே ஒரு மண்டபமும் இருந்தது. அதிலேயே எல்லாரும் படுத்துக் கொண் டோம். புறப்பட்ட பொழுது மதியம் 12 மணிக்கு உணவு உண்டது. இரவு 11 மணி ஆகி உணவு ஏதும் இல்லாமையால் உறக்கம் வர மறுத்தது. பசியோடு இருப்பவர்களுக்கு உறக்கம் உதவுவது இல்லை என்பது தெளிவாகியது.

அந்தக் கோயில் குருக்கள், ''கோயிலின் மேல் மண்டபத்து ஜன்னலைத் திறந்து விடுகிறேன். அங்கேயே பார்த்து வழிபட்டுச் செல்லுங்கள்'' என்று மாற்று வழி சொன்னார். ஆனால் நானோ, கதவிடுக்கில் கண்டு வழிபடவா இவ்வளவு தூரம் வந்தோம்? நம்மோடு அப்பர் அடிகள் வந்திருந்தால், திருமறைக்காட்டில் கதவம் திறக்கப்பாடியது போல், பாடிக் கதவைத்திறந்து பெரு மான் காட்சியை நல்கியிருப்பபார். வேறு என்ன செய்வது? எனவே காலையிலே இருந்து வழிபாடு செய்து திரும்புவது என முடிவெடுத்தோம்.

**நல்ல முடிவு**

ஆனால் நம்மோடு வந்தவர்கள், என்ன நினைக்கிறார்களோ என விசாரித்ததில் ஓம்காரேசுவரப் பெருமானை வழிபடாமல்

செல்ல ஒருவருக்குமே மனம் இல்லை என்பதறிந்து மகிழ்ந்தேன். இதுபோன்ற திருத்தலப் பயணங்களில் வழிபாட்டிற்கே முன்னுரிமை கொடுக்கின்ற இணக்கமான மனம் கொண்ட அன்பர்கள் செல்வது இன்றியமையாதது. பயணம் ஏற்பாடு செய்த டிராவல்ஸ் கம்பெனியின் பத்மநாபன் தங்கிச் செல்லுவதில் உள்ள இடர்பாட்டைச் சொன்னார். ''பஸ் நிறுவனத்துக்கு நாம் விடிவதற்குள் பஸ்ஸை ஒப்படைக்க வேண்டும். இல்லையானால் கூடுதலலாகப் பணம் கேட்பார்கள்'' என்றெல்லாம் புலம்பினார்.

என்றாலும் நம் முடிவைத் தெரிவித்து இந்தத் திருப்பயணத்தின் அடிப்படை நோக்கம் 12 சோதிலிங்கங்களை வழிபடுவது தான் என்று தெரிவித்தவுடன் அவரும் மகிழ்ச்சியோடு, ''நானும் இதுவரை இங்கு வந்ததில்லை. என்ன ஆனாலும் சரி, காலையில் வழிபாடு செய்தே செல்லலாம்'' என்று கூறி, நாங்கள் இருந்த இடத்திற்கும் பஸ் இருந்த இடத்திற்கும் 2 மைல் தொலைவிருப்பினும், பஸ் ஓட்டுநரிடம் பேச அவர் சென்றுவிட்டார்.

**பேழைப் பாம்பு போல்...**

இருப்பதோ மண்டபம்; கொட்டுவதோ மழை! யாரிடமும் கையிலே படுக்கையோ, போர்வையோ எதுவும் இல்லை. குளிரோ வாட்டுகிறது. மதுரைப் புலவன் சொன்னதைப் போல 'கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி, பேழையுள் கிடக்கும் பாம்பென' ஒவ்வொருவரும் சுருண்டு படுத்திருந்தோம். அதிகாலை மூன்றரை மணிக்கு எழுந்து மீண்டும் நர்மதையில் நீராடி, காலை வழிபாட்டை முடித்து ஆலயம் சென்றோம். சொன்னபடி பூசாரியார் நாலேகால் மணிக்கே கோயிலைத் தூய்மை செய்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தார்.

**கதவு திறந்தது; காட்சி கிடைத்தது**

'தலையே! நீ வணங்காய்'' என்ற திரு அங்கமாலைப் பாடலைப் பாடி, திருக்கோயிலை வலம் வந்து கோயில் திருக்கதவுக்கு

முன்னால் அனைவரும் அமர்ந்து, சகோதரி சரஸ்வதி அவர்கள் 'பண்ணினேர்மொழி யாழ் உமைப்பங்கரோ' என்ற பாடலை உருக்கமாகப் பாடினார். அதன்பின் அனைவரும் சிவபுராணம் பாடி ஆலயத்தின் முன்னே நின்று பெருமானை எப்போது காண் போம என்ற உள்ளத்துடிப்போடு, பாடி உருகி நின்றோம். சரியாக ஐந்து மணிக்கு ஆலயமணி அடிக்க, மேளங்ள் முழங்க, திருக் கோயிலில் நாங்கள் நின்ற மண்டபத்தின் கதவைத் திறந்து, பூசாரியார் வழிபாட்டிற்கு அழைத்தபோது மெய்சிலிர்த்துப் போ னோம்.

எல்லா ஜோதி லிங்கங்களைப் போலவே இதுவும் மலை முகட்டில் ஏறி இறங்குவது போலவே அமைக்கப்பட்டிருகிறது. ஓம்கார நாதனைப் பார்த்தபோது உள்ளமெல்லாம் நைந்துருகி, உணர்ச்சிப் பெருக்கோடு திருமுழுக்காட்டித் தொடங்கினோம். திருமுழுக்கிற்கு உரிய பொருள்களை எல்லாம் பொறியாளர் திரு. முத்துசாமி அவர்கள் எடுத்து வழங்க, பெருமானுக்கு திருமுழுக் காட்டி, புத்தாடை அணிவித்து போற்றித் திருத்தாண்டகம் சொல்லி, மல ரும் வில்வமும் தூவி வழிபட்டு ஐம்பெரும் பதிகங்கள் சொல்லி, தீபஒளி வழிபாடு செய்து, வழிபாட்டை நிறைவு செய்து ஓம்கார நாதனிடம் பிரியா விடைபெற்றோம்.

**அன்புமிக்க அர்ச்சகர்**

இத்திருக்கோயில் பூசாரிகள் மிகவும் அனபோடும், பயபக்தி யோடும் வழிபாட்டினை நடத்தி வந்தது பாராட்டுக்குரியது. ஓம்காரத்தில் ஏற்பட்ட உணர்வு பூரர்வமான உள்ளமொன்றிய வழிபாட்டு நிலையை வார்த்தையினால் சொல்லித் தெரிவிக்க முடியாது. உள்ளத்து உணர்வால் உணர வேண்டிய ஒன்று. நாங் கள் வந்த பேருந்தில் இந்தூர் வந்து அங்கிருந்து வேறு பஸ் மூலம் போபால் நோக்கிச் சென்றோம். எங்கள் ரயில் பெட்டி ராஜ்கோட்டி லிருந்து போபால் வந்து சேர்ந்திருந்தது. இந்த ஓம்காரத்திற்கு புராண வரலாறு ஏதும் இல்லையா என்று நீங்கள் கேட்பது என் காதுகளில் ஒலிக்கிறது. உண்ணாமையாலும், உறங்காமையாலும்,

உணர்வு பூரர்வமான வழிபாட்டாலும் மறந்தேன்; ஆயினும் துறந்தேனில்லை. இதோ தொடர்கிறது அத்திருக்கோயிலின் புராண வரலாறு.

## ஆயிரக்கணக்கில் லிங்கத்திருமேனி

பாணாசுரன் என்ற அசுர சிவபக்தன் நாடோறும் 2000 சிவலிங்கங்களைப் பூசை செய்து இவ்வாற்றில் இட்டான். எனவே இந்நதியில் பலவித வண்ணம் உள்ளதும், பலவித தோற்றமுள்ளதும் கொட்டைப்பாக்கு அளவிலிருந்து குழவிக்கல்லுக்கும் பெரிய அளவிலான லிங்கங்கள், ஏராளமாகக் கிடைக்கின்றன. நம்மோடு வந்த இளங்கோத் தம்பியும், நம் எ.எ.சுப்பிரமணிய முதலியாரும் நரர்மதையில் மூழ்கி இரண்டு லிங்கங்களை எடுத்தனர். அப்பாண லிங்கங்களை எடுத்து வழிநெடுக விலைக்கு விற்கின்றனர். பல அன்பர்கள் இங்கு லிங்கங்களைப் பெற்றுச் சென்று வெளியிடத்தில் அமைத்துச் சிவபூசை செய்கின்றனர்.

நாரதர், கோலக் கோபுரக் கோகர்ணம் சூழாக் கால்களாற் பயன் என்? என்று நாவுக்கரசரால் பாராட்டப்பெற்ற கோகர்ணத்தில் எழுந்தருளியிருக்கும் நற்றவத்தவர் உள்விருந்தோங்கும் நமசிவாயப் பெருமானை வழிபட்டுத் திரும்பும் போது, விந்தி மலை வழியாக வந்தார். நாரதரைக் கண்டதும், விந்திய மலை அவரை வணங்கி வரவேற்றது. என்றாலும் அதன் செயலில் 'நானே உயர்ந்த மலை' என்று இறுமாப்புக் காணப்பட்டது. அதை உணர்ந்த நாரதர் அதன் செருக்கை அடக்க நினைத்தார்.

''ஏ விந்திய மலையே! மலைகள் யாவற்றிலும் நீயே சிறந்து நிற்கிறாய் என்ற வீண் எண்ணம் வேண்டா. உன்னிலும் மேரு மலை உயரமும், புனிதமும், தங்கமயமும் ஆனதாய் உள்ளது. அதன் பெருமை, சிவபெருமான் திருவருளால் மேலும் வளர்ந்து வருகிறது. தேவரும் மூவருரும் அதனைப் போற்றுகின்றனர்'' என்று சொல்லிப் போனார். விந்ததிய மலைக்குப் பெரும் வருத்தம் உண்டாயிற்று.

## மலை செய்த தவம்

ஓங்கார உருவமாய் ஓர் யந்திரத்தை நிறுவி திரு ஐந்தெழுத்தை நெஞ்சமுத்திச் சிவபூசை செய்யத் தொடங்கியது அம்மலை. மனம் மகிழ்ந்த சிவபெருமான். அம்மலை விரும்பியபடியே, மேலும் உயர்ந்து வளர வரம் அளித்தான். ஆனால் தன் உயர்வு காரணமாகச் செருக்குக் கொண்டால், ஒரு சிவனடியாரால் அடக்கப் படும் என்றும் எச்சரித்தார். யத்திரத்தில் சுயம்புலிங்க மூர்த்தம் ஒன்றும், விந்தியமலை பூசித்த மணலால் ஆன லிங்க முகூர்த்தம் ஒன்றும் ஆக இரண்டு லிங்கங்கள் ஓங்கார நாதர், அமலேசுவர் என்று திருநாமங்கள் கொண்டு உள்ளன.

## முற்பிறப்பறியும் வாய்ப்பு

இவ்விரு கோயில்களைத் தவிர வைடூர்யமணி பர்வதம் என்னும் குன்றின்மேல் கெளரி சோமநாதர் ஆலயம் ஒன்றும் உள்ளன. இங்கிருக்கும் சோமநாத மூர்த்தி சுமார் 5 அடி உயரம். இந்த லிங்கம் முற்காலத்தில் தூய வெண்ணிறமாக இருந்ததாகவும், முன்னின்று வணங்குவோரின் முற்பிறப்பும், பின்னின்று வணங்குவோரின் பிற்பிறப்பும் நிலைக் கண்ணாடியில் தெரிவதுபோல் தெரியும் எனவும், இஃதறிந்து ஔரங்கசீப் இப்பெருமான் முன்னின்று பார்த்தபோது அதில் பன்றி உருவம் தெரிந்ததாகவும், அதனால் சினமுற்ற அவன் அம்மூர்த்தியை நெருப்புக்கு இரையாக்க, அதனால் கறுப்பு நிறமானது என்றும் கூறுவர். இங்கு பிரணவப் பொருளாய் இருக்கிற கணபதி ஐம்முகமுடையவராகக் காட்சி அளிக்கிறார். வாழைப்பூ வடிவமுள்ள கோபுரத்தைக் கொண்ட ஓம்காரம் ஆலயத்தின் தோற்றத்தைக் காண உங்களுக்கும் ஆர்வம் எழுகிறதல்லவா? இதோ அந்தத் தோற்றம்.

## கங்கையினும் சிறந்தது

நர்மதை நதியின் பல்லாயிரக்கணக்கான சிவலிங்கத் திருமேனிகள் இருப்பதாலேயே இந்த நதியிலும் சிறந்த தொன்று இருக்க முடியுமோ? என்ற ஐயம் ஏற்படுகிறதும் இயலல்புதான்.

யமுனையில் 7 நாள்களும் சரசுவதியில் 3 நாள்களும், கங்கையில் ஒரு நாளும் நீராடிய புண்ணியம் நர்மதையின் காட்சியைக் கண் டாலே கிடைக்கும் என்று புராணம் கூறுகிறது. கங்கையில் இடது கரை மட்டுமே புனிதமானது. ஆனால் நர்மதையின் இருகரையுமே புனிதமானவை. இப்புண்ணிய நதி இவ்வூரில் பறவை வடிவமாக ஓடுவது இன்னும் சிறப்பு.

### குரங்கின் கூற்று

ஓம்காரத்தின் புராண வரலாற்றினை ஒருவாயாக உங்களுக்குத் தெரிவித்தேன். ஓங்காரத்திலிருந்து போபால் வந்து, போபாலி லிருந்து ஆக்ரா போய்ச் சேர்ந்தோம். அதிகாலை 5 மணிக்கு ஆக்ராவிலிருந்து 55 கிலோ மீட்டர் பஸ் மூலம் சென்று மதுரா என்று சொல்லக்கூடிய ஊரை அடைந்தோம். இது முக்தித் தலங் கள் ஏழினில் ஒன்று. கண்ணபெருமான் திரு அவதாரம் செய்த புனிதத் தலமாகம்.

அங்கே ஓடுகின்ற யமுனை நதிக் கரையில் நாங்கள் குளித்து மகிழ்ந்தோம். யமுனை ஆற்றங்கரையில் உள்ள மண்டபத்தில் சிவவழிபாடு செய்தோம். அங்கு குரங்குகள் அதிகம். ஒரு குரங்கு நம்முடன் வந்த காலனி தங்கம்மாள் என்ற அம்மையாருடைய பைகளைத் தூக்கிக் கொண்டு கட்டடத்தின் மேல் மாடிக்குச் சென்று விட்டது. எல்லாரும் ஏதேதோ செய்து அந்தக் குரங்கைத் தாஜா செய்தனர். அதுவும் மனமிரங்கி ஒரு பையை வீசியது அதன்பிறகு காலனித் தங்கம்மா அவர்களின் பையைப் பரிசோதனை செய்து ரூபாய் நோட்டுகளை எல்லாம் கசக்கி முகர்ந்து சுரட்டிக் கிழித்து வீசியது.

### அனுமனின் பக்தி

இதனைப் பார்த்தபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வந்தது. இராமன் 12 ஆண்டு வனவாசம் முடித்து வந்து முடிசூட்டி விழா அயோத்தியில் சிறப்பாக நடைபெற்றது. அன்னை சீதாப் பிராட்டி அனைவருக்கும் பரிசுகள் வழங்கினார். அனுமனின்

தொண்டினையும், தன்னையும், இராம பிரானையும் இணைத்த மைக்கு நன்றி பாராட்டவும் அன்னை தன் கழுத்திலிருந்து விலை உயர்ந்த முத்து மாலையைக் கழற்றி அனுமனுக்கு அளித்தார். அனுமன் அந்த முத்துமாலையை முகர்ந்து பார்த்து, கடித்துப் பார்த்து, ஒவ்வொரு முத்தாகப் பிய்த்துக் குதறியது.

தன் குரங்கு புத்தியைக் காண்பித்து விட்டதே என்று வேதனை யோடு நினைத்த சீதாப்பிராட்டி அருகிலிருந்த இராமபிரானைப் பார்த்தார். இராமபிரானோ புன்முறுவல் பூத்தார். இது சீதைக்கு இன்னும் கொஞ்சம் எரிச்சலூட்டியது. இராமபிரானிடம் அநு மனின் செயைலக் கிசுகிசுத்து அரசவையில் எப்படி நடப்பபது என்பது கூட உங்கள் சீடனுக்குத் தெரியவில்லையே எனக் கூறி னார். இராமன் நீயே அவனைக் கேள் என்றார். சீதாப்பிராட்டி அனுமனைப் பார்த்து "நான் கொடுத்த மாலையை ஏன் பிய்த்து வீசினாய்?" எனக் கேட்டார். அதற்கு அனுமன் சொன்னார். "அன்னையே!! தாங்கள் அளித்த முத்து மாலையை முகர்ந்து பார்த்தேன். அதில் இராமபிரான் மணம் இல்லை. சுவைத்துப் பார்த்தேன். இராமநாமச் சுவை இல்லை. எனவே பிய்த்து வீசி னேன்" என்றார்.

அதுபோல இக்குரங்கும் சிவமணம் வீசவில்லை எனப் பிய்த்து வீசியது போலும்! இந்த அம்மையாரின் ஒரு சேலையும் பறிபோயிற்று. அத்தோடு விட்டாலும் பபரவாயில்லை. இது வயதான குரங்குபோல் இருக்கிறது கண்பார்வை போதவில்லை போலும்; அந்த அம்மையாரின் மூக்குக் கண்ணாடியையும் பணப்பை யையும் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டது.

நாங்கள் யமுனை ஆற்றங்கரையிலே காலை உணவை முடித்து கண்ணன் பிறந்த இடமான பிருந்தாவனம் சென்று, க்ணணபிரான் இளமையில் வேயங்குழல் ஊதியும், ஆநிரை மேய்த்தும் அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்த இடங்களைக் கண்டு களித்தோம்.

**காளிங்க நர்த்தனம்**

ஒருமுறை இரண்டு அசுரர்கள் கண்ண பெருமானை, எப்படியும் கொன்றுவிட வேண்டும் என்று முடிவு செய்து ஓர் அசுரன் விளா மரமாகவும் இன்னொருவன் மாடாகவும் தோன்றி நின்றனர். அந்த அசுரர்களின் திட்டப்படி மாடானது கண்ணனை விரட்டிக் கொண்டே வந்து விளா மரத்தடியில் சேர்க்க வேண்டியது; மாடு கொம்பால் குத்த விளா மரமாய் இருந்த அசுரன் கண்ணன் மீது விழுந்து கண்ணனைக் கொல்வது என்று திட்டமிட்டனர். காளையானது கண்ணனை நோக்கி ஒடி வந்தது. கண்ணன் அந்தக் காளைக் கன்றின் கால்களைப் பிடித்துச் சுழற்றி அந்த விளா மரத்தின் மீது எறிந்தான். கன்றும் இறந்தது; மரமும் வேரோடு சாய்ந்து மாய்ந்தது.

இன்னொரு சமயம் காளிங்கன் என்ற அசுரன் ஐந்து தலை நாகமாகப் படம் எடுத்து கண்ணனைக் கொத்தி சொல்லச் சீறி வந்தான். கண்ணபெருமான் அந்த ஐந்து தலை நாகத்தின் தலை மீது ஏறி நின்று வாலைக் கையால் பிடித்து அதன் மீதே நடனமாடினான். அதற்கு காளிங்க நர்த்தனம் என்று பெயர். இப்படி கண்ணன் பிள்ளைப் பிராயத்தில் வீர விளையாட்டுகள் பல செய்த இடம்தான் இந்த மதுரா. இங்கு அரியாணையிலிருந்து அரசோச்சிய கண்ணன் சராசந்தனோடு போர் செய்து அவன் தொல்லை தாங்காமல் துவாரகைக்குச் சென்றான்.

**தமிழகத்தின் திருக்கோயில்**

யமுனை நதிக்கரையில் எப்பொழுதும் ஆமைகள் அதிகமாக இருக்கும் என்பார்கள். நாங்கள் சென்றபோது வறட்சியால் தண்ணீர் வரத்து மிகக் குறைவாயிருந்தது. நாங்களே அமர்ந்துதான் குளித்தோம். ஆமைக்கு எங்கே போவது? இந்த யமுனைக் கரையில் கண்ணபிரானுடைய கோயில் இருக்கிறது. இங்கு பக்தர்கள் சதா தாளம் இட்டு பஜனை செய்த வண்ணம் இருக்கின்றனர். இங்கு

அழகான ரங்கநாதர் கோயில் ஒன்று உள்ளது. சீரங்கம் கோயில் போல் மிகப் பெரிய கோயில் தமிழகத்து அந்தணர்களே இங்கு வழிபாடு செமய்கின்றனர். அழகான கோயில், புனிதமாக வைத் திருக்கின்றனர்.

## கண்ணன் பிறந்த சிறை

கோயில் கருவறையில் உள்ள மூர்த்திகள் அழகோடும் அருளோடும் விளங்குகின்றன. இங்கு பிர்லா தன் பெயரால் 'பிர்லா மந்திர்' என்ற கண்ணன் கோயில் கட்டியுள்ளார். அது மிகவும் அழகான கோயில். அங்கிருந்து 10 கிலோ மீட்டர் தொலை வில் உள்ள கிருஷ்ணன் பிறநத இடத்தைப் பார்த்தோம். கண் ணனின் தாய்மாமனான கம்சன், தன் சகோதரி தேவகியையும் அவள் கணவன் வசுதேவரையும் சிறையில் அடைத்து, அவர் களுக்குப் பிறக்கும் குழந்தைகளை எல்லாம் வெட்டி வீத்தினான். தன் சகோதரிக்குப் பிறக்கும் குழந்தையால் தனக்கு அழிவு என்று கருதியே அவ்வாறு செய்தான். எனவே அவ்வாறு சிறைவாசத் திலிருந்த போதுதான் கண்ணன் சிறையேல நள்ளிரவிலே பிறந்தான்.

வசுதேவர் கண்ணபெருமானாகிய குழந்தையைச் சிறைச் சாலையிலிருந்து கோகுலத்தில் வாழ்ந்த யசோதையிடம் விட்டு விட்டு, அங்கு பிறந்திருந்த பெண் குழந்தையை எடுத்து வந்தார். அந்தப் பெண் குழந்தையே காளியாக மாறி கம்சனின் கத்தி வீச்சுக்குத் தப்பிப் பறந்தது என முன்னரே பார்த்தோம். அப்படி கண்ணன் பிறந்த இடமான சிறைக்கூடத்தை இடித்துத் தகர்த்து மசூதியை எழுப்பிவிட்டனர். எஞ்சிய இடத்தில் நம் தமிழகத்தைச் சார்ந்த சுவாமி சித்பவானந்தர் அவர்கள் அந்த மசூதியை மறைக் கின்ற அளவுக்கு மாபெரும் கட்டடமாகக் கட்டி கண்ணன் பிறந்த புனித இடத்தை உன்னதமான நினைவுச் சின்னமாகக்கியிருக்கிறார். அங்கிருந்து ரயிலடிக்கு வந்து மதிய உணவு உண், தாஜ்மஹாலைப் பார்க்கப் புறப்பட்டோம்.

**உலக அதிசயம் கண்டோம்**

தாஜ்மஹால் உலக அதிசயங்களில் ஒன்று. இந்தத் தாஜ் மஹாலை தன் மனைவியின் நினைவாக ஷாஜகான் என்ற மன்னன் கட்டியுள்ளான். ஷாஜகானின் மனைவியான மும்தாஜ் வேறு ஒருவரின் மனைவி. ஷாஜகான் அவனைக் கொன்று, அவளைக் கொணர்ந்து மணந்து கொண்டான். அவள் தனது 38 ஆம் வயதில் மரணம் அடைந்தாள் மும்தாஜ் மீது உள்ள அன்பை வெளிப்படுத்த இந்தத் தாஜ்மஹாலைக் கட்டினான். இந்த மும்தாஜை சிற்பி ஒருவனும் காதலித்தான். அவன் தானே முன்வந்து இவ்வரிய கட்டடத்தைக் கட்டித் தன் அன்பைப் புலப்படுத்தினான்.

20,000 பேர் கூடி 20 ஆண்டுகளில் அந்நாளிலேயே சுமார் 40 கோடி ரூபாய் செலவு செய்து இதனைக் கட்டியுள்ளனர். இது 260 அடி உயரம் உள்ளது. முழுவதும் பளிங்குக் கல்லினால் அமைக்கப்பட்டிருக்கிறது. அற்புதமான கலை அழகு மிளிரக் கூடியது. அங்குள்ள தூண்களில் செதுக்கப்பட்டிருக்கிற செடி, கொடி போன்றவற்றிற்கெல்லாம் அந்தந்த நிறக் கற்கள் வைத்து இழைக்கப்பட்டிருக்கின்றன. அதன் உள்ளே சென்றால் கீழே மும்தாஜின் சமாதியும் மேற்பரப்பில் ஷாஜகானின் சமாதியும் உள்ளது. இந்த சமாதிகள் கலை அழகோடு மிளிர்கின்றன. மிக அற்புதமான கலை நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்தது.

**அம்மையாரின் மனக்குறை**

அந்த தாஜ்மஹாலின் முன்புறம் ஒரு பரந்த புல்வெளியும் அழகிய பூங்காவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் நடுநாயக மாக அழகிய நீரோடும் செயற்கை ஓடையும் உருவாக்கப்பட்டிருக் கிறது. அன்றாடம் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் கூடிக் கண்டு களிக்கின்றனர். பயணத்தில் எங்களோடு வந்த ஓர் அம்மையார் ஷாஜகான் எப்படிப்பட்ட மாமனிதன், தம் மனைவிக்காக இவ்வளவு பெரிய நினைவுச் சின்னத்தை எழுப்பி யிருக்கிறார். நம்முடைய கணவன்மார்களெல்லாரும் நம்மைத் துரும்பாக நினைக்கிறார்களே என்று தன் மனக்குறையை வெளிப்

படுத்தினார்கள். நான் அன்றுபிரார்த்தனைக் கூட்டத்தில் இதைப் பற்றிச் சொன்னேன். ''ஷாஜகான் தன் அன்பை வெளிப்படுத்த மக்கள் வரிப்பணமான அரசுப் பணத்தை எடுத்து, கொட்டிக் கட்டி முடித்துவிட்டான், எங்களிடம் பணம் இல்லாக் குறைதான்'' என அவர்களுக்கு அப்போது ஒரு சம்பவத்தையும் நினைவு படுத்தினேன்.

## தமிழ்க்கடல் கூற்று

மறைந்த தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் தன் மனைவியின் பெயரால் இந்துமத அபிமான சங்கம் என்ற அமைப் பிற்கு ஓர் அரங்கதத்தைக் கட்டிக் கொடுத்தார். அதன் திறப்பு விழாவில் அவர் பேசும்போது, ''ஷாஜகான் தன் மனைவியின் பெயரால் உலகம் போற்றுகின்ற கலை அழகு மிக்க தாஜ்மஹால் என்ற கட்டடத்தைக் கட்டினான். அவனோ அரசன், அரசுப் பணம் அவனிடம் மிகுந்திருந்தது. ஆச்சியின் பெயரால் இந்த அரங்கைக் கட்டி உள்ளேன். தாஜ்மஹாலைப் போல இது விலை மதிப்புள்ள தாக இல்லாமல் இருக்கலாம். அழகுடையதாக இல்லாமல் இருக் கலாமல். ஆனால், நான் ஆச்சியின் மீது கொண்ட அன்பு ஷாஜ கான் மும்தாஜ் மீத கொண்ட அன்பிற்குச் சற்றும் குறைந்தல்ல என நினைவூட்ட விரும்புகிறேன் என்றார். எனவே, அருமைச் சகோ தரிகளே! நாங்கள் தாஜமஹால் கட்டாமல் இருப்பதினாலே அன்பில்லை என்று கருதிவிடாதீர்கள்'' என்று தெரிவித்தேன்.

## அன்பின் விலை

''நாங்கள் உங்களுக்கு ஒரு புடைவை எடுத்துக் கொடுத் தாலும், அதைத் தாஜ்மஹாலுக்கு இணையானது என்று கருதுங் கள். ஷாஜகான் மும்தாஜ் மீத செலுத்திய அன்பிற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல, நாங்கள் உங்கள்பால் செலுத்தும் அன்பு'' என்று சொன்னேன். அவர்கள் சமாதானம் ஆனார்களே இன்னமும் மனக்குறையோடுதான் உள்ளார்களோ நான் அறியேன். என் றாலும் அன்புதான் அடிப்பயை தவிர அன்பைப் புலப்பபடுத்த அளிக்கப்படும் பொருள்கள் அல்ல. அன்பிற்கு இணை அன்பே.

## அழகு குறைகிறது

இந்த தாஜ்மஹால் 15 ஆண்டுகளுக்கு முன்னால் நான் பார்த்த அழகினை, பொலிவினைத் தற்போது இழந்திருப்பதைக் கண்டேன். எண்ணெய் சுத்திகரிப்பாலை ஆக்ராவிற்கு அண்மையில் இருப்பதால், அந்தப் புகை இந்தக் கட்டிடத்தில் படுவதால், தன் வெண்மை நிறத்தை இழந்து மஞ்சள் நிறமாக மாறி வருகிறது. இந்தியப் பேரரசு இதில் உடனடியாக கவனம் செலுத்தி உலக அதிசயமான இக்கட்டடத்தைச் செப்பஞ்செய்து காப்பாற்ற வேண்டியது இன்றியமையாத கடமையாகும். கவனக் குறைவாய் இருப்பார்களானால் இதன் அழகும் பொலிவும் இழந்து எத்தனையோ தொல்பொருள்களைப் போல இதுவும் ஆகிவிடும்.

இந்தியாவிலேயே வெப்பத்தின் அளவு மிக அதிகமாக உள்ள இடம் ஆக்ரா, வெயில் வறுத்தெடுக்கிறது மறுநாள் காலை 2 மணிக்கு பஸ் மூலம் 250 மைல் தொலைவில் உள்ள ஜெய்பூரைப் பார்க்க நம்முடைய திருக்கூட்ட அன்பர்கள் சென்றார்கள். நானும் பொறியாளர் திரு. முத்துசாமி அவர்களும் ஏற்கனவே சென்றிருப்பதால், வெயிலின் கொடுமைக்கு அஞ்சி நாங்கள் இருவரும் ரயிலிலேதயே தங்கிவிட்டோம். இருபப்பினும் சென்ற முறை நான் சென்றதை இப்பொழுது நினைவு கொண்டும், சென்ற அன்பர்கள் கூறக் கேட்டதையும் கொண்டு ஜெய்பூர் பற்றிய செய்திகளை உங்களுக்கு விவரிக்க விரும்புகிறேன்.

## இரும்பு மனிதரின் சாதனை

ராஜஸ்தானின் தலைநகரம் ஜெய்பூர் அங்குள்ள மாட மாளிகைகள், அரண்மனைகளைப் பார்த்தால் அதன் தொன்மையும், செல்வ வளமும் தெளிவாகப் புரியம், மன்னர்கள் வாழ்ந்த இடம் ராஜஸ்தான். 22 மன்னர்கள் இந்த ராஜஸ்தான் மாநிலத்தைக் கூறுபோட்டு ஆண்டார்கள். இந்த 22 சமஸ்தானங்களையும் இணைத்து ராஜஸ்தான் என்ற ஒரு பெரும் மாநிலமாக்கிய பெருமை இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ்ந்து அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய் படேல் அவர்களையே சாரும்.

**எழில்நகர்**

ஜெய்பூர் ஒரு மாநிலத்தின் தலைநகராய் இருப்பதற்கான சகல தகுதிகளையும் உடையது. அகலமான பாதைகளையும் வானுயர ஓங்கி வளர்ந்துள்ள செம்மை நிறக் கட்டடங்களையும் பார்த்தால் அது ஓர் எழில் நகரமாகவே தோன்றும் இந்தியா முழுக்க நான் சுற்றிப் பார்த்ததில், மிக பெரிதும் போற்றப்படுகின்ற காசி மாநகரின். அத்தனை தெருக்களும் 5 அடிச் சந்துகளே. எனவே ஜெய்பூரைப் பார்த்ததும் நம்மை முதலில் கவர்வது விசாலமான 100 அடி அகலம் உள்ள பெரிய தெருக்களே.

இந்த நகரத்தைச் சுற்றிலும் மூன்று புறமும் மலைகளே மதிற்சுவர்களாய் சூழ்ந்திருக்கின்றன. இந்த நகரத்தைச் சுற்றி ஒரு பெரிய மதிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மதில் சுவர் 20 அடி உயரமும் 9 அடி கனமும் உடையது என்றால், அதைப்பற்றி நீங்களே யூசித்துக் கொள்ளுங்கள். இந்த மதில் சுவர்களில் 8 வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் முக்கியமாகப் பயன்படுத்தப்படுபவை 3 வாயில்களே. கிழக்கு வாயிலை சூரஜ் போல், மேற்கு வாயிலை சாந்போல், வடக்கு வாயிலை துருவ போல் என்று கூறுகிறார்கள். 'போல்' என்றால் வாயில் என அர்த்தமாம். இந்த மூன்று வாயில்களையும் தமிழழிலே சொல் வதானால் சூரியன் வாயில், சந்திரன் வாயில், துருவ வாயில் என்று சொல்லலாம்.

இந்த அழகிய நகரை உருவாக்கியவர் ராஜபுத்திர வம் சத்தைச் சார்ந்த ராஜா ஜெய்சிங் என்பவர். இங்கு கோட்டை, கொத்தளங்கள் நிறைய உண்டு. அதை விடப் பாதுகாப்பு வேண்டும் என்று கருதியே இந்த நகரை நிர்மாணித்தார். இவர் வான சாஸ்திர வல்லுநர். இவர் மிக அழகான அரண்மனையைக் கட்டியுள்ளார்.

இங்குள்ள வீதிகளெல்லாம் கீழ் மேலாகவும், தென் வட லாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள மாடங்களெல் லாம் பக்கத்திலிருந்து கிடைக்கும் ஒருவ்கை ரோஜா வர்ணச்

செம்மண்ணால் பூசப்பட்டிருப்பதால் முழுவதும் ரோஜா நிறத் திலேயே காட்சியளிக்கிறது. இந்த அரண்மனை ஓர் ஏழு மாடிக் கட்டடம். இங்கு நாம் ஏற்கனவே உஜ்ஜயினியில் குறிப் பிட்டுள்ளதைப் போல இங்கு ஜதர் மந்திர் என்னும் வான ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அதனை இயந்திரம் என்று அழைக் கின்றனர்.

### மன்னரின் சிவபக்தி

அரண்மனையில் சீஷ மகால் மற்றும் ஹவாய் மகால் என இரண்டு உள்ளன. அதில் சிறுசிறு கண்ணாடிகள் பதிக்கப் பட்டிருக்கின்றன. அங்குள்ள பிரதான அறையில் கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருப்பதால் ஒரு தீக்குச்சியை ஏற்றினால் அது லட்சக் கணக்கில் நட்சத்திரக் கூட்டம் போல் தெரிகிறது. மன்னர்கள் வாழ்ந்த இந்த அரண்மனை பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு ஆங்காங்கு தங்கத் தகடுகள் பதிக்கப்பட்டு அழகாக இருக்கிறது. ஜெய்சிங் என்ற மன்னர் வாழ்ந்த மாளிகை அங்கே இருக்கிறது. அந்த அறையில் சலவைக் கல் சுவர்களில் உலகில் உள்ள முக்கியத் தலங்கள் எல்லாவற்றையும் வண்ணச் சித்திரங்களாகத் தீட்டியுள்ளது அத்தலங்களில் உள்ள சிவ மூர்த்திகளையும் தீட்டப் பட்டுள்ளது.

தினமும் உணவு உட்கொள்ளுமுன் இத்தனை சிவமூர்த்தி களையும் வணங்கிய பின்பே உண்பது என்ற நியதியை அந்த மன்னர் பின்பற்றினார் என்பதை நினைக்கும்போது அவருடைய பக்தி நமக்குப் புலப்படுகிறது. அரண்மனையில் ஒருபுறம் விலை மதிக்க முடியாத அம்பிகை கோயில் உள்ளது. கதவு, வாயிற்படி எல்லாம் வெள்ளி, வெண்ணெய் போன்ற சலவைக்கல், பார்க்க மிக அழகாக இருக்கும். அம்பிகையின் திருவாசியில் பஞ்சமூர்த்தி கள் பதிக்கப்பட்டுள்ளன.

### யானைமீதுசவாரி

இங்கே இன்னும் ஓர் அழகான இடம் அம்பர்மாளிகை. இது டெல்லி பாதையில் ஏழாவது மைல் தூரத்தில் உள்ளது. இவ்

விரண்டும் ஒரு மலை மீது இருக்கிறது. 4 பர்லாங் தூரம் நடந்து செல்ல வேண்டும். அங்கு பணம் செலவு செய்த வரையில் உல்லாசமாக இருக்கலாம். சிறிய தொகை கட்டினால் காரிலேயே மலைக்குச் செல்லலாம். கூடுதல் செலவு செய்தால் மலை அடிவாரத்தில் உள்ள அம்பாரியில் உள்ள யானை மீது ஏறி மலைக்குச் செல்லலாம். இன்னும் கொஞ்சம் கூடுதல் பணம் செலவு செய்தால், யானை மீத ஏற்றி மேளதாளத்தோடு அழைத்துச் செல்வர். அம்பர் என்பது சிவனுடைய மூர்த்தங்களில் ஒன்றான அம்பிகேசுவரர் பெயராலே ஏற்பட்டது.

ஜெசிங்கின் முன்னோர்கள் 600 ஆண்டுகள் காலம் இந்த ராஜஸ்தானை ஆண்டிருக்கின்றனர். இந்தக் கோட்டையும் அரண்மனையும் கட்ட ஒரு நூற்றாண்டாக நினைந்து நினைந்து கட்டப்பட்டது. இதன் பிரதான வாயில் சிங்கம் போல் உள்ளது. இங்கு ஒரு பெரிய காளிகோயில் இருக்கிறது. இது முழுக்க முழுக்க சலவைக் கல்லால் கட்டப்பட்டது. வாயிலின் இருபுறமும் இரு பெரிய வாகை மரங்கள் தெரியும். தூரத்திலிருந்து பார்த்தால் இரண்டு பெரிய வாகை மரங்களையும் வெட்டி எடுத்து வைத்து நாட்டியிருப்பதாகவே நினைப்போம். பக்கத்தில் சென்றால் அப்படி பசுமையாக என்னும்படி சலவைக் கல்லிலே செதுக்கி வண்ணம் தீட்டி இருக்கிறார்கள். அங்கே உள்ள காளி தேவியை வணங்கித் திரும்பலாம்.

**அரசர்களின் சுகபோகம்**

அரண்மனையில் மன்னர்கள் அமரும் தர்பார் ஹால், மந்திரி, தளபதிகள் உட்காரும் இடங்கள் ராணியார் காண மாடி மீது துவாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடைசி மன்னருக்கு மகன் இல்லை; மகள்தான். எனவே பாதி அரண்மனையை ஒப்படைத்து விட்டு எஞ்சியதை அரசு எடுத்துக் கொண்டது. மன்னர்கள் பயன்படுத்திய உடை பாத்திரம், மன்னர்களின் ஆடை, ஆயுதங்கள் இவற்றை யெல்லாம் அழகுபட காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நாள் கணக்கில் பார்த்துக் கொண்டே

இருக்கலாம். இந்த அரண்மனையில் மன்னர்கள் பயன்படுத்திய மிகப் பெரிய வெள்ளியால் செய்யப்பட்ட பாத்திரம் உள்ளது. அதிலே இரண்டு மனிதர்கள் உள்ளே இறங்கி நின்றால் தலை தெரியாது. அதைத் தூக்க 25 ஆட்கள் வேண்டியிருக்கும். ஜெய்பூர் மன்னர் வெளிநாடு சென்றால் அந்த வெள்ளிக் குடங்களிலே கங்கை நீரை நிரப்பி தன்னுடன் கொண்டு செல்லுவாராம். மன்னர்கள் எவ்வளவு சுகபோகிகளாக மக்களை மறந்து வாழ்ந் திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு பெரிய எடுத்துக்காட்டு.

## தலைநகரை நோக்கி

ஜெய்பூரிலிருந்து மீண்டு வந்த நாங்கள் டெல்லியை நோக்கிப் புறப்பட்டோம். காலை 7-30 மணிக்கு எங்களது புகை வண்டி இந்தியத் துணைக்கண்டத்தின் தலைநகரான டெல்லி மாநகரை வந்து சேர்ந்தது. ரயிலிலேயே குளித்து வழிபாடு செய்து, காலை உணவு உண்டு பாலிகா மார்க்கெட் என்ற இடத்தைப் பார்க்கச் சென்றோம்.

## அதிசய உலகம்

பாலிக் மார்க்கெட் என்பது பூமிக்கடியில் பரந்த வெளியில் முழுவதும் குளுகுளு அறைகளாக மாற்றப்பட்டிருக்கிறது. இதன் மேற்பகுதியில் புல்வெளிப் பூங்காக்களும், ஊர்திகள் நிறுத்தும் இடங்களாகவும் உள்ளன. ஆறு வாயில்கள் உள்ளன. இங்கு சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கடைகள் உள்ளன. விலை சற்றுக் கூடுதலாக இருந்தாலும் இங்கு கிடைக்காத பொருள்களே இல்லை என்று சொல்லலாம். இங்கு பேரம் பேசாமல் வியாபாரம் செய்வது ஏமாளித்தனமாகும். சொல்லுகிற விலையில் பாதி விலைக்குத் தருகிறார்கள். நம்முடைய அன்பர்கள் எல்லாரும் நிறையப் பொருள்களை வாங்கிக் குவித்தனர். மாலையில் சந் தினிசவுக் என்று சொல்லக்கூடிய அங்காடிக்கு சென்றோம். அங்கும் எல்லாப் பொருள்களும் நல்லதாகவும் விலை குறை வாகவும் இருக்கிறது. அன்று ஒருநாள் முழுக்க கடை வீதிகளைச் சுற்றிப் பார்ப்பதும் பொருள்கள் வாங்குவதுமாகக் கழிந்தது.

**புதிதும் பழையதும்**

டெல்லி இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பழைய டெல்லி, மற்றொன்று புதுடெல்லி. புதுடெல்லி என்பது 1931 ஆம் ஆண்டில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட விரிந்து பரந்து நீண்ட பாதைகளையும் பூங்காக்களுக்கு மத்தியிலும் உருவான உயர்ந்த கட்டடங்களையும் கொண்ட அழகிய பகுதி. இதற்கு நேர்மாறானது பழைய டெல்லி, ஜனநெருக்கமும், அடுத்தடுத்து நெருங்கிய கட்டடங்களும் ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொள்கின்ற மக்கள் கூட்டமும், காரை பெயர்ந்த பழைய கட்டடங்களும் அது பழைய டெல்லி என்பதைப் பறைசாற்றும்.

**சாணக்கியபுரி**

டெல்லியில் 31.6.92 அன்று ஞாயிறுகாலை 8 மணிக்குப் புறப்பட்டு, கொனார்க் மார்க்கெட் என்ற வணிக இடம் பார்த்து, பிர்லா கட்டியுள்ள பிர்லா மந்திர் சென்றோம். அங்கு ராதா கிருஷ்ணன், சிவபெருமான், முருகன் ஆகிய திருமேனிகள் அற்புதமாக அமைத்து, மிக அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருக் கின்றன. அங்கே சென்று வழிபட்டு, பண்டிதர் நெரு வாழ்ந்த தீன்மூர்த்தி பவனைப் பார்த்தோம். அந்தப் பகுதி சாணக்கியபுரி என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில்தான் உலக நர்டுகளில் உள்ள வெளி நாட்டுத் தூதுவர்கள் இருக்கும் 75 தூதுவர் அலுவலகங்கள் உள்ளன. ஒவ்வொரு வெளிநாட்டுக் கட்டடங்களும் மிக அழகாக வும் பல்வேறு வகையாகவும் வடிவமைக்கப்பட்டு, ஆடம்பரத்தின் நிலைக்களனாகத் திகழ்கின்றன.

நம்முடைய தென்னாட்டு மக்கள், மிகுதியாக வாழ்கின்ற ராமகிருஷ்ணபுரம் என்கிற பகுதிக்குச் சென்றோம். அது 25 மைல் பரப்பளவுள்ளது, குன்தோறாடும் குமரனை அங்கே குடி அமர்த்த நினைத்த நம் மக்கள், குன்றில்லாத டெல்லியில் ஒரு செயற்கைக் குன்றினை உருவாக்கி அந்தக் குமரனைக் குடியமர்த்தியுள்ளனர்.

அந்தக் குன்றின் கீழ்ப் பகுதியில் அன்னை அங்கையற்கண்ணிக்கும் சொக்கநாதருக்கும் அழகான திருக்கோயில் அமைத்து இருக்கிறார் கள். குன்றில் அமர்ந்திருக்கும் முருகப்பெருமான் மிக அழகான திருமேனி கொண்டவர். சுவாமிநாதர் என்று பெயர் சூட்டியுள்ளனர். நம் கும்பகோணத்து சுவாமி மலை போலவே முருகன் காட்சி தருகிறான்.

## முருகப்பெருமான் வழிபாடு

நாங்கள் சென்றபோது முருகப்பெருமானுக்கு திருமுழுக்கு வழிபாடு நடைபெற்றது. நாங்கள் டெல்லியில் பிற பகுதிகளைப் பார்த்து இன்றே செல்ல வேண்டும் என்று தெரிவித்தவுடன் அவர்கள் முருகப் பெருமானுக்கு திருநீற்று திருமுழுக்கும் வேள்வி செய்த குடமுழுக்கு நீரும் வார்த்து அலங்காரம் செய்வதற்கு முன்னால் நாங்கள் வழிபாடு செய்ய அனுமதித்தனர். நாங்கள் முருகப் பெருமானுக்குப் போற்றி வணக்கம் சொல்லி, அர்ச்சகர் தீப ஒளி காட்டிய பிறகு சகோதரிகள் சரசுவதி, தனம் ஆகிய இருவரும் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதிபுராணப் பாடல் ஆகிய பாடல்கள் பாடிய பிறக அனைவரும் 'ஆறிரு தடந்தோள் வாழ்க' பாடலைச் சேர்ந்து பாடி முருகப் பெருமானுக்கு தீப ஒளி வழிபாடு செய்து திருமுழுக்காட்டிய திருநீறு பெற்று கீழே அங்கயற்கண்ணி, சொக்கநாதரை வழழிபாடு செய்து கொண்டு, அவன் அருளாலே அவன் தாள் வணங்கிப் புறப்பட்டோம். அங்கு சற்று தொலைவில் பலகோடி ரூபாய் செலவிட்டு தாமரைப் பூப்போல் மிகப் பெரிய தியான மண்டபத்தை உருவாக்கியிருக் கிறார்கள்.

எந்த மதத்தைப் பற்றியும் கவலை கொள்ளாமல் உலக அமைதிக்காகவும் அன்பைப் பெருக்கவும் இந்த தியான மண்டபம் மிகப் பெரும் பொருட்செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அத னுடைய வேலைத் திட்டங்களெல்லாம் அந்த நிறுவனத்தைச் சார்ந்த அம்மையார் ஆங்கிலத்தில் பேச, பொறியாளர் திரு. முத்துசாமி அவர்கள் தமிழிலே மொழி பெயர்த்தார். டெல்லியில்

பார்க்க வேண்டிய இடங்களில் இந்தத் தாமரைக் கட்டடமும் ஒன்றாகும். அந்தத் தியான மண்டபத்தில் நாங்களும் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்துவிட்டுப் புறப்பட்டோம்.

## அன்னையின் குரல்

அடுத்து நாங்கள் அன்னை இந்திரா காந்தி வாழ்ந்த இல்லத்திற்குச் சென்றோம். அங்கு அவருடைய பொருள்கள் புகைப்படங்கள் முதலியவை வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு அவருடைய பேச்சுகளை ஒலிப்பதிவு செய்து, செல்லுகின்ற மக்கள் காதுகளில் அம்மையாரின் குரல் ஒலிக்க ஏற்பாடு செய்துள்ளனர். அவர்கள் குடியிருந்த வீடும் அலுவலகமும் அடுத்தடுத்த கட்டடங்கள், இரண்டும் இணைகின்ற இணைப்புப் பாதையில்சென்றபோது தான் பாதுகாப்புக்கு இருந்த பாவியே அன்னை இந்திராவைச் சுட்டுக் கொன்றான். அம்மையார் சுடப்பட்டு விழுந்த இடத்தில் மலர் அலங்காரம் செய்து மக்கள் அஞ்சலி செலுத்த வகை செய்துள்ளனர். ஆயுதம் தாங்கிய போலீசார் அந்த இடத்திலே நின்று காவல் புரிகின்றனர்.

காக்க வேண்டிய அம்மையாரைக் காவு கொடுத்து விட்டு உயிர்விட்ட இடத்தில் காவல் புரிகின்றனர். அங்கு போய் நிற்கும் போது நாம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் போகிறோம். அங்கிருந்து தம் வாழ்நாளின் கடைசி நாள்களில் அண்ணல் காந்தியடிகள் தங்கியிருந்த பிர்லா மாளிகைக்குச் சென்றோம். அந்த மாளிகையின் பின்புறத்தில் உள்ள பிரார்த்தனை மைதானத்தில் தான், கும்பிட்ட கரத்துள்ளே கொலைக் கருவியை மறைத்து வைத்திரந்த கோட்சே என்ற கொடியவன் அண்ணல் காந்தியாரைச் சுட்டு வீழ்த்தினான்.

## நாடு கொடுத்த பரிசு

இந்த நாட்டிற்காக காலம் எல்லாம் உழைத்து பல்லாண்டு காலம் சிறைச்சாலையிலேயே வாடி வதங்கி, நாமெல்லாரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காக 21 நாள்கள் மூன்று

முறை உண்ணாவிரதம் இருந்த அந்த 82 வயதுக் கிழவரின் மணிவயிற்றுக்கு இந்த நாடு கொடுத்த பரிசு மூன்று குண்டுகள்!

அதுவும் பாரதம் சுதந்தரம் பெற்ற ஆறுமாத காலத்தில் அந்தப் பரிதாப இழப்பு நாட்டுக்கு ஏற்பட்டது. இதனால் தான் சர்வாதிகாரத்தின் உச்சியில் நின்ற ஆங்கிலேயே அதிகாரி சர்ச்சில், ''என்பது ஆண்டுகள் நாங்கள் காந்தியைக் காப்பாற்றினோம். ஆனால் சுதந்திர இந்தியா ஆறு மாதம் கூட அவரைக் காப்பாற்ற வில்லை'' என்று குறிப்பிட்ட சொற்கள் இந்திய மக்களின் நெஞ்சில் ஈட்டியாய்ப் பாய்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கிறோம்.

அந்த பிர்லா மாளிகையில் 1948 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அண்ணல் காந்தியடிகள், தான் அமர்ந்திருந்த படுக்கையிலிருந்து எழுந்து பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் செல்லும் போது சுட்டு வீழ்த்தப்பட்டார். காந்தியடிகள் கடைசியாகப் பயன்படுத்திய படுக்கையிலிருந்து பிரார்த்தனைக்கு அவர் சென்ற வழி வரை அவருடைய பாதகங்கள் அமைக்கப்பட்டு, சுடப்பட்டு அவர் திருமேனி விழுந்த இடத்தில் ஒரு நினைவுத் தூண் அமைத்திருக் கிறார்கள்.

கொலைகாரன் தன்னை நேருக்கு நேராக துப்பாக்கியால் சுட்டுவிட்ட போதும் அவனையும் கும்பிட்டு 'ஹேராம்' என்று அவனையும் இராமனாகப் பாவிதத்து உலகிற்கு அஹிம்சையை நிலைநாட்டிய அண்ணல் காந்தியடிகள் விழுந்த இடமல்லவா? அந்த இடத்தில் நாங்கள் பிரார்த்தனை செய்தோம். அதன்பின்னர் அந்த பிர்லா மாளிகையில் அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய பொருள்கள்; அவற்றையெல்லாம் காட்சிச் சாலையாக வைத்துள்ளனர்.

## எளிமையின் அழகு

உலகமெல்லாம் போற்றி வணங்கிய அந்தப் பெருமகன் ஐந்து கண்டமும் அவன் குரலுக்குச் செவி சாய்த்து, காத்துக் கிடந்த

தீரன் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் கிரணங்களை இந்தியாவில் அஸ்தமிக்கச் செய்த அந்த வரலாற்று நாயகன் பயன்படுத்திய பொருள்களைப் பார்த்தால் இந்த நாட்டிலே வாழுகிற கோடானுகோடி ஏழை எளிய மக்களில் ஒருவராகவே அவர் தன்னை ஆக்கிக் கொண்டார் என்பது புரியும். எவ்வளவு எளிய வாழ்க்கை! அவர் பயன்படுத்திய பொருள்களின் மொத்த மதிப்பைப் பார்த்தால் இன்றைய விலை மதிப்பீட்டில் ஒரு சில நூறு ரூபாய்க்குள் தான் இருக்கும்.

அந்த எளிமைதானே இந்திய நாட்டு மக்களின் இதய சிம்மா சனத்தில் அந்த மகானை ஏற்றி வைத்தது! ஆடம்பரமாக இருப்பது தான் நமக்குப் பெருமை என்று நினைக்கின்ற நாம் அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் எளிமையைக் கையாள வேண்டி யது எவ்வளவு அவசியம் என்பதனை நமக்கு அவை உணர்த்து கின்றன. இந்த மாளிகையை முழுக்கச் சுற்றிப் பார்த்தபின் கனத்த இதயத்தோடு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றோம்.

டெல்லி மாநகரம் முகலாய மன்னர்கள் காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்தது. அதற்கு முன்னால் நம்முடைய மணிவாசகப் பெருமான் இறைவனைப் பற்றிக் குறிப்பிடுவாரே, அதைப் போல முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருளாய் பழைய டெல்லியும், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப் பெற்றியனே என்பாரே அதுபோல புதுடெல்லியாகவும் காட்சியளிப்பதைக் காணலாம். நம்முடைய இதிகாச காலத்திலேயே பெருமை பெற்ற இத்திருநகரம் எப்படி எப்படியோ உருமாறி பழமையும் புதுமையும் கலந்து ஏற்றத் தாழ்வுகள் அத்தனைக்கும் ஈடு கொடுத்து அன்று முதல் இன்றுவரை தலைதூக்கி நிற்கிறது.

## அன்றைய அஸ்தினாபுரம் - இந்திரப் பிரஸ்தம்

மகாபாரதத்தின் கதாநாயகர்களான பாண்டவர்கள் அஸ்தினா புரத்தை ஒட்டி ஒரு புது நகரை உருவாக்கி அதற்கு இந்திரபிரஸ்தம் எனப் பெயர் சூட்டினர். அங்கு வந்த கௌரவர்கள் கௌரவப்

படுத்தப் படாமல் கேலிக்குரியவர்களாக ஆக்கப்பட்டார்கள். அந்த இந்திரபிரஸ்த நகரில் தண்ணீர் இல்லாத இடத்தில் தண்ணீர் இருப்பது போலவும், தண்ணீர் உள்ள இடத்தில் தண்ணீர் இல்லாமல் இருந்தது போலவும் கைவண்ணம் காட்டி கட்டடம் அமைக்கப்பட்டிருந்தது. நகரைப் பார்க்க வந்த துரியோதனன் அரண்மனையில் நீரில்லாத இடம் நீர் இருப்பது போல் தோன்றியதால் தன் வேட்டியைச் சுருட்டிக் கொண்டு நடந்தான். தண்ணீர் உள்ள இடம் தண்ணீர் இல்லாதது போல் தோன்றியதால் அங்கே சென்று தடுக்கி விழுந்தான். நீரிலே வீழ்ந்து ஆடையெல்லாம் நனைந்தது. மேல் மாடத்தில் இருந்து பார்த்த பாஞ்சாலி தன் மைத்துனன் தண்ணீரில் தவறி விழுந்ததைப் பார்த்து கலகல வெனச் சிரித்தாள். துரியோதனன் தான் அவமானப்படுத்தப் பட்டதாக நெஞ்சம் கொதித்தான். பாரதப் போருக்கு அடிப்படை யாய் அமைந்தது இந்த நிகழ்ச்சிதான்.

**பெண்ணின் சிறப்பு**

சூதுப்போர் நடத்தி சொத்தையெல்லாம் பறித்துக் காடாளச் செல்ல வைத்ததற்கு அடிப்படை பாஞ்சாலியின் ஏளனச் சிரிப்பே. அதனால்தான் நம் நாட்டில் 'பெண்கள் சிரித்தால் போச்சு, புகை யிலை விரித்தால் போச்சு' என்ற பழமொழியே உருவானது. எனவே இதனால் சிரிப்பதே கூடாது என்பது பொருளல்ல. பிறர் துன்பப்படும்போது கருணை காட்ட வேண்டிய பெண் நையாண்டி யாக சிரிக்கிற போது பெருந்தொல்லையாகிறது என்பதைக் குறிக்கவே அந்தப் பழமொழி எழுந்தது.

அந்த இதிகாச வரலாற்றுப்படி பாண்டவர்கள் நிர்மாணித்த இந்திர பிரஸ்தமே இன்றைய பழைய டெல்லி இதற்கு ஆதாரமாக புராணகிலா என்ற பழைய கோட்டை இருப்பதனைக் காணலாம். டெல்லி என்கிற சொல்லுக்கு மனத்திற்கு இன்பம் அளிக்கும் இடம் என்பது பொருள். பாண்டவர்கள் இருந்த இடம் என்கிற போது நம் மனம் மகிழ்கிறது. இந்திய பிரஸ்தம் அமைத்தபோது பாணடவர்களும் மகிழ்ந்ததுதானே இருப்பார்கள்.

அண்ணல் காந்தி அடிகள் சுடப்பட்டு உயிர் நீத்த இடத்தில் அஞ்சலி செலுத்தி கனத்த இதயத்தோடு புறப்பட்ட தாங்கள் யமுனா நதிக் கரையில் அண்ணல் காந்தி அடிகள் உடல் தகனம் செய்யப்பபட்ட புண்ணிய பூமியையும் தரிசிக்கச் சென்றோம். இதற்கு இராஜகாட் என்று பெயர். இந்த இடம் புது டெல்லிக்கும் பழைய டெல்லிக்கும் இடையே யமுனை நதிக்கரையில் இருப் பது. அங்கு சென்று நம்முடைய காலணிகளையெல்லாம் கிழற்றி வைத்துவிட்டு, அந்த மாமனிதரின் உடல்தகனமான மேடையை நோக்கிச் சென்றோம். அங்கு இந்த நாட்டினுடைய விடிவெள்ளி யாக ஆத்மஜோதியாக சுதந்தர தீபமாக இருந்த அண்ணல் காந்தியடிகளின் திருமேனி எரிந்த இடத்தில் அணையா விளக் காய் ஒரு ஜோதி எரிந்து கொண்டிருக்கிறது. நாங்கள் அனைவரும் அந்த புனித இடத்தை வலமாக வந்து வீழ்ந்து வணங்கி மௌன அஞ்சலி செய்து புறப்பட்டோம். அப்படிப் புறப்படும்போது எங்களை அறியாமலே நம் வாய் இந்தப் பாடலை முணுமுணுத்தது. அது என்னவென்று காதில் விழவில்லையா?

வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக்கெட்டு
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீடு வாழ்க!

அதுதான் நாம் முணுமுணுப்பதாகும். ஆம், இந்த வரிகள் மகாகவி பாரதி, அண்ணலைப் பற்றிப் பாடிய அற்புதப் பாடலாகும்.

**சமாதிகளின் சங்கமம்**

அந்த நதி தீரத்தில் அன்னை இந்திரா காந்தியின் மேனி எரியூட்டப்பட்ட சக்தி தலம் என்பதும் பண்டித நேருவின் உடல் எரியூட்டப்பட்ட சாந்தி வனமும், இந்த நாட்டில் அமைச்சர்

பதவியைத் துறந்தவுடன் காரை விட்டு விட்டு 'நகரப் பேருந்தில் சென்ற நாணயமிக்க மாமனிதரான லால்பகதூர் சாஸ்திரியின் சமமாதியையும் பார்த்துது வணங்கிப் புறப்பட்டோம். முகலாயர் காலத்திற்குப் பிறகு பொலிவிழந்தது டெல்லித் திருநகரம். ஆங்கிலேயரின் ஆட்சியில் கல்கத்தா தலைநகராக மாற்றப்படடது தான் இதற்கு காரணம் என்பதை அறிவோம். திரும்பவும் 1911 இல் தலைநகரம் டெல்லிக்கு மாற்றப்பட்ட பிறக டெல்லி தலைதூக்க ஆரம்பித்தது. தன் பண்டைப் புகழைத் தன்னகத்தே கொண்டது. இன்றோ நம்மையெல்லாம் ஆளுகின்ற ஆட்சி பீடமாக விளங்குகின்றது.

**பாராளுமன்றக் கூட்டம்**

பெரிய பெரிய ராஜ வீதிகளைக் கடந்து சென்றால் நம் முடைய தலைவிதிகளையும் நாட்டின் தலைவிதியையும் நிர்ணயிக் கின்ற பாராளுமன்றக் கட்டத்தைப் பார்க்கலாம். 1921 இல் இந்தக் கட்டடம் கட்ட அஸ்திவாரம் போடப்பட்டது. 1927 இல் கட்டி முடிக்கப்பட்டது. வட்ட வடிவமான பிரம்மாண்டமான கட்டடம். அதன் சுற்றளவு அரை மைல் கட்டத்தில் மத்திய பூமியில் குறுக்களவு 100 அடி. இதைப் போன்ற பெரிய கட்டடத்தைக்ட காண வேண்டுமானால் லண்டன் மாநகரத்தில் உள்ள செயின் பால் சர்ச்சைத்தான் சென்று காண வேண்டும். இந்த மாடியைத் தாங்கி நிற்பகை 144 தூண்கள். ஒவ்வொன்றும் 28 அடி உயரம் ஓங்கி நின்று கட்டடத்திற்குப் பொலிவூட்டுகிறது.

இந்த மாபெரும் கட்டடத்தில்தான் அரச அலுவலகங்கள் போக, நம்முடைய ராஜ்ய சபையும் மக்கள் சபையும் கூடுவதற்காக மூன்று பெரிய அறைகள் உள்ளன. உள்ளே முற்றத்தில் விக்கிர மாதித்தன் சிலை ஒன்றும் உள்ளது. மக்கள் சபையும் ராஜ்ய சபையும் நடக்கும்போது சபா நாயகர் அனுமதி பெற்று உள்ளே நுழைய வேண்டும். கட்டடத்தைச் சுற்றிப் பார்க்கவும் அனுமதி பெறவேண்டும். நாங்கள் சென்ற சமயம் பாராளுமன்றக் கூட்டம் நடைபெறவில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமையும் கூட.

மறுநாள் திங்கட்கிழமை இருந்தால் பாராளுமன்றக் கட்டடத்தைச் சுற்றிக்காட்ட எங்களுடன் டாக்டர் திருமதி. சௌந்திரம், எம்.பி அவர்கள் வருவதாக இருந்தார்கள். ஆனால் நாங்கள் அன்றே டெல்லியை விட்டுச் செல்ல வேண்டியிருந்தால் நம் பாராளுமன்றக் கட்டடத்தை வெளியில் இருந்தே பார்த்து விட்டோம். பாராளுமன்றத்திற்கு தென்திசையில் அரசுக் காரியாலங்கள் இரண்டு பெரிய கட்டடங்களில் நடைபெறுகின்றன. அதனை வடக்குப் பகுதி என்றும் தெற்குப் பகுதி என்றும் கூறுவர். இந்தக் காரியாலயங்களுக்கு இடையே செல்லும் இராஜ வீதியில் மேற்கு நோக்கிச் சென்றால் ராஷ்டிரபதி பவனைக் காணலாம். இது பிரம்மாண்டமான கட்டடம்.

## குடியரசுத் தலைவர் மாளிகை

பிரிட்டிஷ் ஆட்சியின் அரசு பிரதிநிதியான வைசிராய்கள் அங்குதான் குடியிருந்தனர். விடுதலை பெற்ற பாரதத்தில் குடியரசுத் தலைவரே அங்கு குடியேறி உள்ளனர். அங்கு நுழையவும் அனுமதி பெற வேண்டும். எற்கெனவே குடியரசுத் தலைவரையும் அங்கு பார்க்க கடிதம் எழுதியிருந்தாலும் பாதுகாப்புக் கருதி அனைவரையும் அங்கு அனுப்ப இயலாது என்றும் நான் நீங்கலாக ஐந்து பேர் மட்டு வரலாம் என்றும் குடியரசுத் தலைவரின் செயலர் தொலைபேசியில் சொன்னார். நாங்கள் 62 பேர் சென்றதில் யார் ஐந்து பேர் செல்வது? எனவே யாரும் செல்ல வேண்டாம் என முடிவெடுத்தேன். மரியாதைக்குரிய சஞ்சீவ ரெட்டி அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த போதும் வேறு சில சந்தர்ப்பத்திலும் நான் இரண்டொரு முறை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சென்றிருக்கிறேன். எனவே நான் கண்ட சிலவற்றை தங்களுக்கும் என்னோடு பயணத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் காட்சிப் படுத்துவது தவறாகாதல்லவா?

## ஆடம்பர மாளிகை

பற்பல பெரிய அறைகளைத் தாண்டி ராஷ்டிரபதி பிரமுகர்களுக்கு பேட்டி கொடுக்கும் மண்டபம் ஒன்று மிகப் பெரியதாக

உள்ளது. அங்கு தரையெல்லாம் மெத்தென்று கம்பளங்கள் பெரிய பெரிய படங்களெல்லாம் தங்கமுலாம் பூசப்பட்டிருக்கும் நாம் அமருகின்ற நாற்காலிகள் எல்லாம் தங்கமுலாம் பூசப் பட்டிருக்கும். குடிப்பதற்குச் சுவைநீர் கொடுப்பதானாலும் தங்க முலாம் பூசிய வெள்ளிக் குவளைகளும் தட்டுகளுமே வரும் தங்கத்தால் செய்யப்பட்ட தட்டுகளும் உண்ணும் கரண்டிகளும் அங்கு காணுகிறபோது, நமக்கு வழங்கப்படும்போது நாம் பயன் படுத்தவே மிகத் தயக்கமாக இருக்கும். இந்தப் பட்டுப் போன்ற மொசுமொசு பூனைக்குட்டி போன்ற தரையில் கால் வைக்க நம் கால்கள் கூசும். இதில் நூற்றுக்கணக்கான அறைகள் உண்டு. திரைப்பட அரங்கும் உண்டு. ஆயிரக்கணக்கான பேர் குடியரசுத் தலைவர் மாளிகையில் குற்றேவல் புரிக்கிறார்கள்.

## பூலோக சொர்க்கம்

இக் குடியரசுத் தலைவர் மாளிகையில் பின்புறம் தான் உலகப் புகழ் பெற்ற மொகல் கார்டன்ஸ் என்னும் பெரிய பூங்கா உள்ளது. அங்கு சென்றால் அது பூலோக சொர்க்காமா என எண்ணத் தோன்றும். அதை விட்டு வெளியே வரவே மனம் வராது. அங்கு நூற்றுக்கணக்கான வண்ண வண்ண ரோஜா மலர்களைப் பார்த்து நம் சிந்தனையைப் பறி கொடுத்தால் எப்படி வெளியே வரமுடியும் அங்கே கலை அழகுள்ள ஒரு பொருட்காட்சியும் உண்டு ராஷ்டிரபதி பலனியிலிருந்து ஒரு வழியாக வெளியே வரும்போது ராஷ்டிரபதி பவனின் நுழைவாயில் என்பது 30 அடி உயரம் இருக்கும்.

வேலைப் பாடமைந்த மிக உயர்ந்த தேக்கு மரத்தாலான கதவும் ஒளிவீசும் அலங்காரத் தூண்களும் கண்ணுக்கு விருந் தாகும். வாயிலைச் சுற்றி அந்த மாளிகையைச் சுற்றித் துப்பபாக்கி ஏந்திய இராணுவ வீரர்கள் நிற்பார்கள். வாயிலைச் சுற்றியும் குதிரைப் படை வீரர்கள் துப்பாக்கியோடு அணிவகுத்து நிற்பர். பழைய காலத்தில் அரசு தர்பார் என்பார்கள். அதனை நாம் குடியரசுத் தலைவர் மாளிகையில் காணலாம். ஆங்கிலேயர்

ஆண்டபோது இந்த மாளிகைக்கு வைசிராய் மாளகை என்று பெயர்.

### காந்தியாரின் கருத்து

அண்ணல் காந்தியடிகள் ஒருமுறை, ''நாடு, விடுதலை பெற்றால், நான் இந்த நாட்டின் சர்வாதிகாரியானால் இந்த வைசிராய் மாளிகையை ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் மருத்துவ மனையாக ஆக்கித் திறந்து விடுவேன்'' என்றார். அண்ணல்காந்தியாரின் வாக்கை இன்றைய காந்திய வாதிகள் எந்த அளவுக்குக் கடைப் பிடிக்கிறார்கள் என்பதை நாம் தான் கண்டு வருகிறோமே!

ராஷ்டிரபதி மாளிகையிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்றால் 'இந்தியா கேட்' என்னும் இடத்திற்கு வரலாம். இந்தப் பகுதியில் தான் சுதந்திர தின விழாவின்போது நம்முடைய இராணுவ வீரர்களின் அணிவகுப்பும் இராணுவ வீரர்களின் சாகசங்களும், அணிவகுப்புகளும் நடைபெறுகின்றன. ரஷ்டிரபதி பவன் வர் ணனையை இத்தோடு நிறுத்தி அடுத்து மிகத் தொன்மை வாய்ந்த குதப்பினார் பற்றிய செய்திகளைப் பார்ப்போமே!

## 9

### குதுப்பினார் கோபுரம்

குதுப்பினார் கோபுரம் 238 அடி உயரம் உங்களுக்கு ஓர் உதாரணம் சொன்னால் நன்கு விளங்கும் என்பதற்காகச் சொல்லு கிறேன். தஞ்சை பெருவுடையார் ஆலய விமானம் 216 அடிதான். அதைவிட 22 அடி உயரம் இது அதிகம் இதனை தூர நின்று பார்த்தாலே மனம் இலயிக்கும். இது 5 தட்டுகளை உடையது. 310 படிகள் உள்ளன. இதை ஏறிக் கடந்து உச்சிக்குச் சென்றால் டெல்லி நகர் முழுவதையும் காணலாம் பாதுகாப்புக் கருதி இப்பொழுது மேலே ஏறுவதற்கு யாரும் அனுமதிப்பதில்லை. எனவே வெளியில் இருந்து பார்த்தோம்.

## துருப்பிடிக்காத இரும்பு!

அங்கிருந்து அதன் அருகில் உள்ள அசோகர் கட்டியதாகக் காணப்படும் ஓர் இரும்புத்தூண் இருக்கிறது. இந்தத் தூண் நிறுவப்பட்டு 1400 ஆண்டுகள் ஆனாலும் இன்னும் வழவழப் பாக இருந்து துரு என்பதே இல்லாமல் இருக்கிறது. இவ்வளவு விஞ்ஞானம் வளர்ந்த பிறகும் துரு ஏறாத இந்த இரும்பு எந்தக் கலவையால் செய்யப்பட்டது என்பது கேள்விக்குறியாக உள்ளது. இந்தத் தூண் அளவைச் செல்லுவதற்கும் பரிமானத்தை உணரு வதற்கும் அங்கு செல்லுகின்ற பயணிகளை வழிகாட்டிகள் தூணைப் பின்புறமாக முதுகுப் பக்கமாக கையை இணைக்கச் சொல்கிறார்கள். அப்படி செய்யும்போது கைகள் இணை வதில்லை. அதன் அருகில் ஒரு கோட்டை ஒன்று அழித்திருப் பதையும் காணலாம். இங்கிருந்து நாங்கள் ஹரித்வாரை நோக்கிப் புறப்பட்டோம்.

## கந்தபுராணம் கூறுகிறது

ஹரித்வார் என்பது கங்கை நதி வருகின்ற தொடக்க இடமாய் இருக்க வேண்டும் என்று நாம் கருத வேண்டும். அதனை கங்காது வாரம் என்றும் சொல்லுவார்கள். கங்காதுவாரம் என்பது கங்கை நதி பாயும் இடத்தில் தானே இருக்க வேண்டும். இரண்டு மலை களுக்கு இடைப்பட்ட இடம்தான் துவாரம் என்பது அதில் கங்காது வாரம் என்பது இரண்டு மலைகளுக்கிடையே பாய்ந்து வருவதால் கங்காதுவாரம் என்று சொல்லப்படுகிறது. 'கங்கா துவாரத்திற்கு மிஞ்சின தீர்த்தமில்லை. கயிலாயத்திற்கு மிஞ்சின மலையில்லை, கங்கைக்கு மிஞ்சின நதியில்லை'' என்பது கந்தபுராணம் கூறு கின்ற செய்தியாகும். கங்கை நதியை நினைத்த உடனே நம் முடைய நாயன் மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாடல்கள் நம் நினைவிற்கு வரும்.

"அண்டம் மூடு அறுத்து அந்தரத்து
இழிந்து அங்கு அவனியாய்

அலமறப்பெருகும் மண்டுமாமணி
நீர் கங்கை"

என திருமங்கையாழ்வார் மிக அழகாகக் குறித்துள்ளதை இங்கு நினைவூட்டுகிறேன். அந்தரத்து இழிந்து அவனியான் அலமறப் பெருகும் கங்கையை காசியிலோ கல்கத்தாவிலோ காண முடியாது. அதனைக் காண கங்காதுவாரத்திற்கே செல்ல வேண்டும். இமயமலைத் தொடரின் ஒரு தொடருக்கு சிவலிக் என்று பெயர். அந்த மலையில் உள்ள ஒரு பிளவுக்கு இடையேதான் கங்கையாறு ஓடிவருகிறது. அந்த இடத்தையே கங்காதுவாரம் என்றால் யாருக்கும் தெரியாது. புராண கால கங்காது வாரம்தான் இன்றைய ஹரித்துவாரம்.

## ஆறுகரச் சிவன்

இது ஹரியாகிய கயிலாய நாதனைக் காணச் செல்லுவதற்கான வாயில். அதனால் ஹரித்துவார் என்று பெயர் வந்தது. தமிழ்நாட்டைப் போலவே இந்தப் பகுதியில் அரிசி நன்கு விளையக்கூடிய இடம். பாசுமதி என்னும் உயர்ரக அரிசி இந்தப் பகுதியில் நன்கு விளைகிறது. இங்கு நான்கு வீதிகள் சந்திக்கும் நாற்சந்தியில் சிவபெருமானுடைய பளிங்குச்சிலை இருக்கிறது. அவர் பத்மாசனம் இட்டு அமர்ந்து சடாமகுடம் தரித்துள்ளார். இவருக்கு ஆறு கரங்கள் உண்டு. இரண்டு கைகளில் உத்திராட்ச மாலை வைத்திருக்கிறார். இரண்டு கரங்களைத் தன் துடையின் மீத வைத்துள்ளார். மற்ற இரண்டு கைகளும் தலைக்கு மேலே தூக்கி அக்கரங்களில் கலசம் ஏந்தி தனக்குத் தானே கங்கா அபிசேகம் செய்து கொள்ளுகிற அழகான மூர்த்தியைக் காணலாம்.

இந்த சிவபெருமான் பெயரே மிருந்யுஞ்சயன், மரணமில்லாப் பெருவாழ்வு வாழ சிவபெருமானே கங்கா அபிசேகம் செய்து கொள்ள வேண்டும் போலிருக்கிறது முக்தி தலங்கள் ஏழினுள் மாயா என்று குறிப்பிடுகிற இடம் இந்த ஹரித்துவார்தான். கங்கை இமயமலையை விட்டு சமதரையைத் தொடுவது இந்த இடம் தான். இங்கு கங்கையில் மூழ்குவது தனிச்சிறப்பு வாய்ந்தது.

## கங்கை நீர் வழிபாடு

நாங்கள் அனைவரும் வைகறையில் ரயிலை வீட்டிறங்கி சிவபுராணம் பாடிக்கொண்டு கங்கைக் கரையை அடைந்தோம்; நல்ல படித்துறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல திருக்கோயில் கள் இக்கரைகளில் உள்ளன. இங்கு கங்காதேவி வெகு கம்பீரமாய் ஓடுகிறாள். இதனைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. ஏனென்றால் இங்கு குளித்துக் கொண்டே இருக்க முடியாது. தண்ணீர் ஐஸ் கட்டி போல் உள்ளது. இந்தப் புண்ணிய நதி இரண்டு பகுதிகளாகப் பிரிந்து செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. நடுமத்தியில் உயர்ந்த மணிக்கூண்டும் மதன்மோகன் மாளவியா திரு உருவமும் உயர்ந்த மேடையில் அமைக்கப் பட்டுள்ளது. கீழ்ப்புறம் உள்ள படித்துறையில் குளிக்கலாம் துவைக்கலாம்.

ஆனால் மேற்புறமுள்ள பிரம்ம குண்டம் என்ற படித்துறை யில் நீராடுதல் மட்டுமே செய்தல் வேண்டும். இரண்டு படித் துறைக்கும் இடையிலுள்ள திடலுக்கு நன்கு சிமெண்ட் போட்டு அழகுற அமைத்துள்ளனர். நாங்கள் பிரம்மகுண்டத்தில் நீராடி மணிக்கூண்டுக்குக் கீழே உள்ள படிக்கட்டில் சிவபூஜை செய்து முடித்தோம். ஆடி ஓடிவரும் கங்கையாற்றின் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நம் ஊர்களுக்கு கங்கை நீர் கொண்டு வரத் தீர்த்தமெடுப்பது இங்குதான். எனவே நாங்கள் அனைவரும் கங்கை நீரை நிரப்பி அந்தப் படிகளிலே எல்லாரும் வைத்து அத்திருக்குடங்களுக்கு திருநீரு இட்டு சந்தனம் குங்குமம் வைத்து மலர்கள் வைத்து அனைவரும் கூடிநின்று.

ஆர்த்தபிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்தன் நற்தில்லைச் சிற்றம்பலத்தே யாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப

பூத்திகழும் பொய்கைக் குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இரும்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய்!

என்ற மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவைப் பாடலையும்,

ஒன்றாய் உலகனைத்தும் ஆனார்தாமே
ஊழித்தோர் ஊழி உயர்த்தார் தாமே
கொன்றாடும் கூற்றை உதைத்தார் தாமே
கோழப் பழனம் உடையார்தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே
திருவாலங்காடுறையும் செல்வர் தாமே

என்ற அப்பர் அடிகள் பாடலையும் கூறி மலர் தூவித் தீப ஒளி வழிபாடு நடத்தி அவரவர்கள் தீர்த்தக் குடங்களைப் பெற்றுச் சிறிய செம்புகளில் ஊற்றி முத்திரை வைக்கும் பணியைத் தொடங்கினோம்.

**பகீரதன் தவம்**

பகீரதன் என்கிற மன்னன் ஒருமுறை நரகலோகம் சென்றான். அங்கு தன்னுடைய முன்னோர்கள் 60,000 பேர் இருப்பதைக் கண்டு மனம் துடித்தான். இவர்களைச் சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று பெரு முயற்சி செய்தான். அப்போது பகீரதன் முன் ஒரு முனிவர் தோன்றி ''ஆகாய கங்கையை நீ வரவழைத்து உன் முன்னோர்களின் அஸ்தியின் மீது அந்த ஆகாய கங்கை நீர் படிந்தால் அவர்கள் சொர்க்கம் செல்வார்கள்'' என்று கூறினார்.

பகீரதன் கங்காதேவியை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். கங்கை பகீரதன் முன் தோன்றி ''நான் வருவதிலே ஒன்றும் சிரமமில்லை. ஆனால் என்னைத் தாங்குகிற சக்தி இந்த உலகத் திற்கு இல்லை. நான் வரும் வேகத்தில் இந்த உலகமே அழிந்து விடும்'' என்று கூறி மறைந்தார். அப்பொழுது பகீரதன் மீண்டும் கங்கையை வேண்டி பிரார்த்தனை செய்த உடன் மீண்டும் கங்கை தோன்றினார். ''உன்னைத் தாங்குவதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று அவரையே கேட்டான். அதற்குக் கங்காதேவி ''என்னைத்

தாங்குகிற ஆற்றல் சிவபெருமானுக்கே உண்டு. நீ சிவபெருமானை நோக்கித் தவமிருந்து சிவனிடம் வரம் பெற்று என்னைத் தாங்கச் சொல்'' என்று கூறி மறைந்தார்.

பகீரதன் மீண்டும் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவன் தவத்திற்கு இரங்கி சிவபெபருமான் தோன்றி ''என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்க, ''கங்கை வேண்டும்'' என்று செய்தியைப் பகீரதன் சொல்ல சிவபெருமான் கங்கையை வரவழைத்து, தன் தலைமுடியிலே கங்கையாற்றை நிறுத்தி தன் தலைமுடி வழியாக கங்கையைத் தவழ விட்டான். கடினமான முயற்சி எதுவும் செய்தால் அதை பகீரதப் பிரயத்தனம்' என்று குறிக்கிறோமே, அது இதைத் தான்! பகீரதன் வரவழைத்த ஆறு என்பதால் கங்கைக்கு பாகீரதி என்று ஒரு பெயர் உண்டு. அந்த கங்கை நீர்த் துளிகள் பட்டு பகீரதனின் முன்னோர்களான சாகர்கள் சொர்க்க லோகம் சென்றார்கள் ஏதோ பகீரதன் புண்ணியத்தால் நாங்களும் கங்கை நீரில் நீராடினோம். அங்கிருந்து கனகலம் சென்றோம்.

## அருணகிரியாரின் திருப்புகழ்

கனகலம் ஹரித்துவாரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ளது. தட்சப் பிரசாபதி யாகம் செய்த இடம், தட்சன் பூஜித்த சிவலிங்கமும், பஞ்சமுக லிங்கமும் அன்னை பராசக்தியும் அங்கே எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கிறது. அங்கு வழிபாடு செய்தோம். அருணகிரி நாதர் இந்த ஹரித்துவாரில் உள்ள இந்த கனகலம் திருக்கோயலில் உள்ள முருகப்பெருமானுக்குத் திருப்புகழ் பாடியுள்ளார். அந்த திருப்புகழை கேட்க வேண்டும் என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகிறது. இதோ அந்த ஹரிதுவாரத் திருப்புகழ்:

சிகரமருந்த வாழ்வது சிவஞானம்
சிதறியலைந்து போலசெயலாசை
மகர நெருங்க வீவது மகமாயை
மருவி நிணைந்திடவருள் புரிவாயே

அகரநெருங்கி மைய முறவாகி
அவசமொடுங்கை யாறொடு முனமேகி
ககனமிசைந்த சூரியர் புகமாயை
கருணைபொழிந்து மேவிய பெருமாளே.

**பாலகனின் பண்பு**

முருகன் திருக்கோயிலில் திருப்புகழை ஓதி வழிபாடு செய்து அங்கே அமர்ந்து இந்தத் திருப்புகழைப் பற்றிய விளக்கததினைக் கூறிக் கொண்டிருந்தேன். இந்தக் கோயிலில் வழிபடுவதற்கு வேறு பல நாட்டவர்களும் வந்ததிருந்தனர். நாம் தமிழிலே பேசினாலும் நாம் பேசுவது என்ன என்று புரியாவிட்டாலும் அமைதியாக வந்து அமர்ந்தனர். அப்பொழுது ஏழு வயது மதிக்கத் தக்க சிறுவன் ஒருவன் மளமளவென்று கூட்டத்தின் இடையே புகுந்து அங்கு இருந்த நம் திருக்கூட்ட அன்பர்களின் காலில் வீழ்ந்து வணங்கினான். அந்தசச் சிறுவனின் பணிவும் அவனை வளர்த்த பெற்றோரின் பண்பும் என்னை ஆச்சரியத்தில் மூழ் கடித்தது. வடநாட்டில் பெரியவர்கள் காலில் வீழ்ந்து வணங்கும் நல்ல பழக்கம் பரவலாக உள்ளது.

ஹரித்துவாரில் சிவலீக் மலை என்ற சிறிய மலையில் மானசா தேவி என்ற அம்பிகையின் திருக்கோயில் உள்ளது. இந்த மானசா தேவி சிவபெருமானின் புதல்வி என்று அங்கு சொல்லுகிறார்கள். நாம் அறிந்தவரையில் சிவபெருமானுக்கு அப்படி புதல்வி இருப்ப தாகத் தெரியவில்லை. நமக்கு புதிதாக இருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் சொல்லுகிறார்கள். இந்த மானசா தேவி கோயிலுக்குப் செல்ல படிக்கட்டுக்ள அமைக்கப்பட்டிருக்கின்றன. வளர்ந்து விட்ட விஞ்ஞான வெளிப்பாட்டால் ஆகாயத்தில் செல்லும் 'ரோப்' என்ற கருவி அமைத்திருக்கிறார்கள்.

**விஞ்ஞான விந்தை**

ரோப்பைப் பற்றி விளக்குவதானால் ஒரு செய்தி சொன்னால் உடனே தெரியும். மலைக்கள்ளன் படத்தில் நம் எம்.ஜி.ஆர். இந்த

மலையில் இருந்து அந்த மலைக்குப் போகப் பயன்படுத்துவாரே அதுதான் ரோப் என்பது. ரோப் என்றால் கம்பிக் கயிறு என்று பொருள். இந்த ரோப்பில் 10, 15 பெட்டிகள் இணைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு பெட்டியில் நான்கு பேர் அமரலாம். அடித்தளத்தில் ஏறினால் அந்த ரோப்பானது மலை யை நோக்கி இந்தப் பெட்டியை இழுத்துச் செல்கிறது. மலைச் சிகரம் சென்ற உடன் நம்மை இறக்கிவிட்டு, கீழே இறங்குபவர்களை ஏற்றிக் கொண்டு அடிவாரம் வந்து இறக்கிவிடுகிறது. அப்படியே அது சுற்றிச் சுற்றி வருகிறது. தல யாத்திரை மேற்கொள்கிற மக்கள் இந்த ரோப்பில் பயணம் செய்வதை வேடிக்கையாகவும் பொழுது போக்காகவும் கருதுகின்றனர்.

நாங்களும் ரோப்பிலே செல்லத் தீர்மானித்துச் சென்றால் அங்கே மிக நீண்ட வரிசை நின்றது. என்றாலும், கால்கடுக்க விரிசையிலே நின்று அந்த ரோப்பை நோக்கிச் சென்றோம்.

## அச்சமூட்டிய ஆந்திரர்

செல்லும் வழியில் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த பல பெரு மக்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் நாம் எங்கே செல்கிறோம் என்று விசாரித்து, கோதாரம் செல்கிறோம் என்று சொன்னவுடன் அவர்கள் "அது மிகவும் கடினமானது. குதிரையிலிருந்து நாங் களெல்லாரும் கீழே விழுந்து விட்டோம்; காலிலே கடுமையான அடி. நீங்கள் அவசியம் போகத்தான் வேண்டுமா?" என்று சொல்லி பாதியிலேயே சென்று வந்த பெண்மணிகள் நம் தாய் மார்களிடம் கூறி இவர்களை மிகவும் பயப்படுத்திவிட்டார்கள். கேதாரம் பற்றி நமக்குக் கிடைத்த முதல் செய்தி இதுதான்.

## கொள்ளை கொள்ளும் அழகு

மானசாதேவி கோயிலுக்குச் சென்று வழிபட்டு மாலை 6 மணிக்கு கங்காதேவிக்கு நடைபெறும் சிறப்பு வழிபாட்டினைக் காண கங்கைக் கரையை நோக்கிச் சென்றோம்..மாலை ஆறரை மணி அளவில் அங்கே இருக்கின்ற கங்காதேவி கோயிலுக்கு

முதலிலே அந்தக் கோயில் பூசாரி அடுக்கு விளக்கு தீப ஒளிகாட்டி தீப வழிபாடு செய்து கோவிலுக்கு வெளியே வந்து கங்கை ஆற்றிற்கும் அந்த தீப வழிபாட்டை நிகழ்த்துகிறார்.

அப்போது அங்கு கரையிலுள்ள பல கோயில்களில் உள்ள பூசாரிகளும் இதேபோல் அந்த அந்தக் கோயில்களில் உள்ள மூர்த்திகளுக்கும் வழிபாடு செய்து கங்கை ஆற்றிற்கும் வழிபாடு செய்கிறார்கள். அப்பொழுது அங்கு கூடியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே வழங்குகின்ற மலர்கள் உள்ள தட்டுகளில் தீபங் களை ஏற்றி 'கங்கா மாதாகி ஜே' என்று கோஷமிட்டு கங்கை ஆற்றில் விடுகின்றனர். கங்கை ஆறு அதைச் சுமந்துகொண்டு ஆயிரக்கணக்கான விளக்குகளுடன், மலர்த் தட்டுகளுடன் செல்லுவதைக் காண்பது கண்ணுக்கு இனிய காட்சி மட்டுமல்ல, நமக்குப் புதிய அனுபவமும் ஆகும். "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணி பூவாடையது போர்த்தி, கருங்கயற் கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி" எனக் காவிரியை இளங்கோ பாடுவாரே அதுபோல மலர்ப்பூவாடை போர்த்து எழிலுற நடக்கும் கங்கையை வாழ்த்தினோம்.

இராமன், இலக்குவன், சீதை மூவரும் அயோத்தியை விட்டு காடு நோக்கிப் புறப்பட்டு நாட்டைக் கடந்து கங்கையில் குகனது படகில் ஏறி சித்திரகூடத்தை நோக்கிச் சென்றனர் என்று நம் இராமகாதையில் படிக்கின்றோம். கங்கைக் கரை கடந்து வந்த இராம இலக்குமணர்கள் வழியிலே யமுனை நதியைச் சந்தித்தனர். யமுனை நதியை எப்படிக் கடப்பது என்று இராமன் சிந்தித்தான். கங்கைக் கரையில் குகன் கரையேறிவிட்டான். இங்குக் கரை யேறுவது எப்படி என்று கவலையோடு காகுத்தன் இருந்தான். ஆனால் சில நொடிகளில் இலக்குவன் செயலில் இறங்கினான். அங்கே மண்டிக் கிடந்த மூங்கில்களை வெட்டி அவற்றை அங் கிருந்த பசுந்தழைக் கொடிகளால் இறுக்கிக் கட்டி ஓர் அழகிய தெப்பமாக்கி அதிலே அண்ணன் இராமனையும் சீதையையும் ஏற்றிக் கரை சேர்த்தான் எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் இரா மாயண வரிகளில் அழகுற வருணிப்பதைக் காணலாம்.

இலக்குவன் கோசல நாட்டின் இளவரசன். இப்படி படகு செய்து ஆற்றைக் கடந்தான் என்று எண்ணுகிற போது நமக்கு வியப்பாக இருக்கிறது. இந்த வியப்பை விட பெருவியப்பை ஆற்றுகிற செயலை இலக்குவன் செய்திருக்கிறான்.

## தொங்கு பாலம்

கடுந்தவம் புரிந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவந்தான் பகீரதன் என்று முன்னமேயே கண்டோம். அப்படி இமயமலை முகட்டிலிருந்து பூமிக்கு இறங்கிய உடனே வெகுவேகமாகப் பாய்ந்து பெருகி வருகிறது. அப்பேராற்றை நேரிலே பார்த்தால் தான் நமக்குப் புரியும். இங்கு கங்கையாற்றின் குறுக்களவு ஒரு மைல் நீளத்திற்கு மேலாக இருக்கிறது. இந்தக் காட்டாற்றுக் கங்கை வெள்ளத்தைக் கடக்கத் தோணி பயன்பட முடியாது. ஒரு பாலம்தான் வேண்டும். அன்றைக்குத் தோணி கட்டிய இலக்கு வன் சலிக்காமல் ஒரு பாலம் கட்டினான். இன்றைக்கு இருக்கிற நவீன இயந்திர சாதனங்களோ சிமெண்ட் போன்ற உறுதி வாய்ந்த கட்டுமானப் பொருள்களோ இல்லாத காலத்தில் நட்டாற்றில் கால்களால் நடக்கவோ கான்கிரீட் போடவோ வாய்ப்பு இல்லை யல்லவா?

எனவே ஆற்றின் இரு கரையிலும் சுவர் எழுப்பி சுவரின் ஆதரவிலே ஒரு தொங்கு பாலத்தை ஏற்பபடுத்தினான். அப்படியே ஊஞ்சல்போல் ஆடும் தொங்கு பாலத்தைக் கட்டி இலக்குவன் அசுரசாதனை புரிந்திருக்கிறான்; எனவே இந்தப் பாலம் லட்சுமண ஜூலா என்று வழங்கப்படுகிறது. லட்சுமண ஜூலா என்றால் லட்சுமணனால் கட்டப்பட்ட தொங்கு பாலம் என்று பொருள். அந்த லட்சுமண ஜூலா ஹரிதுவாருக்கு வடக்கே 24 கி.மீக்கு அந்தப்புறம் இருக்கிறது.

## அங்கேயும் ராமநாதர்

ஹரித்துவாருக்கு வடக்கே 18 கி.மீ. தொலைவில் இருந்து கங்கையாறானது மலையிலிருந்து பூமிக்கு இறங்கி வரும் இடத்

தில் தொடங்குகிறது. இந்த இடத்திற்கு ரிஷிகேஷம் என்று பெயர். இதுவரையில்தான் நம் ரயில்கள் செல்லுகின்றன. இந்த ரிஷி கேஷத்தில் இந்த லட்சுமண ஜுலா என்ற பாலத்தின் வழியாக நாங்கள் சென்று கங்கையிலே நீராடினோம். இந்த கங்கையாற்றின் கரையில் பல்வேறு பகுதி திருக்கோயில்கள். அங்கே கட்டப் பட்டிருக்கிறது. அதில் முக்கியமானது கீதாமந்திர் கட்டம், கேதார் கட்டம், ராமநாத கட்டம் என்று பல கோயில்கள் அங்கே கட்டப் பட்டிருக்கின்றன.

நாங்கள் கங்கையில் நீராடி கீதாமந்திர் என்று சொல்லக் கூடிய கோயிலுக்குச் சென்றோம். அது நீண்டு அகன்று பெரிய அரங்கோடு கூடியது. அங்கே பதினைந்து அடி உயரத்தில் உயர்ந்த நான்கு குதிரைகள் பூட்டிய தேர் உள்ளது. அந்தத் தேரில் கும்பிட்ட கரத்தோடு அர்ஜுனன் வீற்றிருக்க கண்ணன் கீதோப தேசம் செய்கிற அற்புதமான கலை நுணுக்கம் மிக்க சிற்பம் கண்டாரை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

## காசு விழுந்தது

அதன் எதிரில் அமர்ந்து சிவபூசை செய்தோம். பூசை முடிவில் கண்ணை மூடி ஜபம் செய்து கொணடிருந்தேன். அப்போது டங் என்ற சப்தம் கேட்டது. ஜபத்தின் இடையே கண் விழித்துப் பார்த்தால் வட நாட்டு பக்தர்கள் நம் மூர்த்திகள் மீது காசுகளை வீசுகிறார்கள். ஆண்டவனுக்கும் அணாப்பைசா தேவை என்பதை வடநாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். தமிழகத்தில் நாம் பெருமானுக்கு எப்படி மலர் தூவி வழிபடு கிறோமோ அதைப்போல வடநாட்டு பக்தர்கள் காசையே வீசி வழிபடுகிறார்கள்.

## சிவானந்தரின் சமாதி

அங்கிருந்து நாங்கள் புறப்பட்டு நம் தமிழகத்தின் மிகச் சிறந்த மாமுனிவராக அங்கே விளங்கிய சிவானந்தரின் ஆசிரமத் திற்குச் சென்றோம். அவரது சமாதிக் கோயில் அங்கே அமைக்கப்

பட்டிருக்கிறது. மிகச் சிறப்பாக நூலகமும் இருக்கிறது. சிவானந்தரின் சீடர்கள் நிறையப் பேர் அங்கே பணிபுரிகிறார்கள். அந்த ஆசிரமத்தில் கண்ணன் கோயிலும் முருகன் கோயிலும் உள்ளன; சுவாமி சிவானந்தர் உலக நாடுகளில் இந்து மதத்தின் புகழையும் சிறப்பையும் நிலைநாட்டிய பெருமகனாவார்.

சுவாமி சிவானந்தர் உருவாக்கிய வன சர்வகலாசாலையும் தெய்வநெறிக் கழகமும் அங்கிருந்து அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கிறது. காலையும் மாலையும் பக்தர்கள் கூடி பஜனை செய்கிறார்கள். பஜனையின் முடிவில் உரையாற்றப்படுகிறது. அங்கு சுவாமி சிவானந்தர் ஏற்றிவைத்த அமர தீபம் இன்றும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறத. இந்த ரிஷிகேசத்திலிருந்து தான் கயிலாயம், கேதாரம், பத்ரிநாத் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டும். செல்லும் பாதைகள் இங்கேதான் தொடங்குகின்றன.

**அச்சமும் அழகும்**

ரிஷிகேசிலிருந்து கேதாரம் செல்வதற்கு சுமார் 230 கி.மீ. பயணம் செல்லவேண்டும் 230. கிலோ மீட்டரும் இமய மலையின் சாரலைப் பல அடுக்குமலை கொண்ட மலைத் தொடர்களில் ஏறி ஏறி இறங்கிச் செல்ல வேண்டியுள்ளது பாதை ஒரு பஸ் செல்கிறது அளவே உள்ளது. ஒரு பகுதியில் மலைச் சரிவும் இன்னொரு பகுதியில் படுபாதாளத்தில் படுவேகமாக கங்கை ஆறும் மந்தாகினி ஆறும் ஓடுகிறது.

பஸ்ஸிலிருந்து பார்த்தால் பல நூறு அடி பள்ளத்தில் பேரிரைச்சலோடு செல்கிற ஆற்றைப் பார்க்கிறபோது அச்சமுண்டானாலும் அழகாக இருக்கிறது. அடுக்கடுக்கான பல மலைத் தொடர்களைக் கடந்து செல்ல வேண்டியது. மலை முகட்டில் இயற்கை அழகு எழில் நடம்புரிகிறது. வானுற ஓங்கிய மரங்கள் பல இடங்களில் இருந்தாலும் மிகப் பல இடங்களில் நம் தமிழகத்தைப் போலவே காட்டரண் அழிக்கப்பட்டிருக்கிறது என்பது மிக வேதனைக்குரிய ஒன்றாகும். என்றாலும் மலை

யிலிருந்து நாம் செல்லுகிற பாதைக்கும் இடைவெளி சில நூறு அடிகள் என்றாலும் வளைந்து வளைந்து செல்லும் ஆறுகளும நெளிந்து செல்லும் பாதைகளும் நிமிர்ந்து நிற்கும் மலைகளும் மனத்தை ஈர்க்கின்றன.

பஸ் பாதையில் எதிர்ப்புறமுள்ள மலைச் சிகரங்களிலிருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போன்று அருவிகள் பல கொட்டு கின்றன. அருவிகள் நம் குற்றாலம் போல் இல்லை என்றாலும் மிக அழகாக இருக்கின்றன. ஆனால் அந்தக் காட்டாற்று அருவிகளில் மக்கள் யாரும் குளிப்பதாகத் தெரியவில்லை. நாம் செல்லுகின்ற பாதை முழுக்க நம்மை எதிர்கொண்டு அழைப்பதுபோல் கங்கை ஆறானது ஓடி வருகிறது. இந்த அழகையெல்லாம் ரசித்துக் கொண்டு இந்திரப் பிரயாகை என்ற இடத்தில் மதிய உணவு உண்டோம்.

**தங்கவேலுவின் நத்திரம்**

அந்த இடம் மிக அழகான மரங்கள் அடர்ந்த சோலையாகும் அந்த பெரிய மர நிழலில் 20 பேர் கூட அமர்ந்திருக்கலாம். அந்த மரத்தின் அடியில் பாறையின் இடுக்கிலிருந்து நீர் ஊற்று பெருகி வருகிறது. அந்த நீர் குடிக்க மிகச் சுவையானது. நன்கு ஐஸ் தண்ணீர்போல் இருக்கிறது. எனவே அந்த நீரைக் குடிக்கின்ற போது குளிர்பானம் அருந்துவதுபோல் இருக்கிறது. அந்த நீருற்றுக்கு அருகில் ஒரு தேநீர்க்கடை இருந்தது. அங்கே பயணி களுக்காக மேசை, நாற்காலிகள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே உட்காரலாம் என்று நண்பர் தங்கவேலு முடிவெடுத்து எல்லாரை யும் அமரச் சொல்லி விட்டார்.

எல்லாரும் அமர்ந்த பிறகு கடைக்காரன் ஏதாவது சொன் னால் என்ன செய்வது? ஏனென்றால் நாம் கடைக்காரரிடம் உணவு உண்ணப் போவது இல்லை. நம்முடைய உணவினை நாம் கையிலே கொண்டு வந்திருக்கிறோம். தங்கவேலு நல்ல நண்பர். இந்தத் திருப்பயணத்தில் கடுமையாக உழைத்த நல்ல தொண்டர். ஹிந்தி மொழியை நன்கு பயின்று அப்பகுதி மக்களோடு சரளமாக

உரையாடுவதில் வல்லவர். அவர் துணி வணிகம் செய்பவர். அவருக்கே உண்டான குயுக்தியால் ஒரு நான்கு பன்களை அந்தக் கடையில் வாங்கி ஆளுக்குக் கொஞ்சம் பிய்த்துக் கொடுத்து அவரும் அமர்ந்துவிட்டார். நாங்கள் கொண்டு வந்த உணவை எல்லாரும் உண்டு விட்டுப் புறப்பட்டோம். கடைக்காரன் அங்கே உண்டதற்கு காசு கேட்க இவரோ உன்னிடத்தில் பன் ரொட்டி வாங்கி அங்கு உட்கார்ந்து சாப்பிட்டோம். இதற்கும் அதற்கும் சரியாகிவிட்டது என்று சொல்லி ஒரு வழியாகச் சமாளித்து விட்டார்.

அதன் பிறகு நாங்கள் புறப்பட்டு உத்திரப் பிரயாகை என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். உத்திரப்பிரயாகையிலிருந்து நேராகச் சென்றால் பத்ரிநாத், கயிலாயம் போன்ற பகுதிகளுக்குச் செல்லலாம். இடப்புறமாகச் செல்லும் பாதையில் சென்றால் கேதாரம் செல்லலாம். நாம் கேதாரம் செல்லுவதால் இடப்பக்கம் செல்லுகின்ற பாதையில் திரும்பிச் சென்றோம். உத்திரப் பிரயாகை அழகான சிறிய நகரம் என்றாலும் எல்லா வசதிகளையும் தன்னகத்தே கொண்ட அழகிய ஊர்.

## கௌரி குண்டம் நோக்கி

இமயமலை என்பது பல்லாயிரம் மைல் கொண்ட மலைத் தொடர். இந்த மலைத் தொடரில் பல்வேறு மலைச் சிகரங்கள் உண்டு. அந்த மலைச் சாரல்களில் நைனிடால், சிம்லா, கைலாஷ், டார்ஜிலிங், சிக்கிம், நேபாளம், கேதாரம் முதலிய பல ஊர்கள் உள்ளன. இதிலே நாங்கள், உத்திரப் பிரயாகையிலிருந்து கேதாரத்தை நோக்கிப் புறப்பட்டு மாலை 7.00 மணியளவில் கௌரி குண்டம் என்ற இடத்தைச் சேர்ந்தோம். இந்த கௌரி குண்டம் என்பது கேதாரம் செல்லுவதற்கான மலை அடிவார ஊராகும். ஊட்டிக்குச் செல்கிற நாம் சந்திக்கின்ற மலை அடிவார ஊரான மேட்டுப்பாளையத்தைப் போன்றதுதான் கௌரி குண்டம் என்பது. இங்கே இமயச் சாரலின் அடிவாரத்தில் இந்த ஊர் இருப்பதால் கடுமையான குளிர் இருக்கிறது.

## போர்க்களச் சிப்பாயின் தோற்றம்

நாங்கள் அங்கே ஒரு வீட்டின் மூன்று அறைகள் கொண்ட பகுதியில் தங்கினோம். மிகக் கடுமையான குளிர், அவரவர்கள் எவ்வளவு கம்பளி உடைகளை அணிய முடியுமோ அவ்வளவு கம்பளி உடைகளை அணிந்திருந்தாலும் குளிரால் உறக்கமே வரவில்லை. இங்கு குளிர் அதிகமாக இருக்குமென்று தலைக்கு கம்பளிக் குல்லா, கையுறை, காலுறை, கம்பளிகள் இவையெல்லாம் வாங்கி அணிந்து கொண்டோம். இந்த ஆடைகளையெல்லாம் அணிந்து கொண்ட ஒவ்வொருவரையும் பார்த்தால் பழைய காலத்தில் தலைக் கவசமும் மார்புக் கவசமும் அணிந்த போர்க்களச் சிப்பாயைப் போல் காட்சி அளித்தனர். ஆம் இதுவும் ஒரு போர்தான்.

கடுங்குளிரை எதிர்த்து நடக்கின்ற போர் என்று சொல்லுவேன் என்று நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. நான் செல்லுவது அகப்போரை. நம்முடைய தீவினைகளை எதிர்த்து அவற்றை மாய்ப்பதற்காக கேதாரநாதன் அருளை நாடிச் செல்லுகிறோம். அங்கே செல்ல ஒட்டாமல் நம் தீவினைகள் குளிராக வந்து எதிர் நிற்கிறது. அதை எதிர்த்துப் போராடும் சிப்பாயாக நாங்கள் மாறினோம்.

## திட்டத்தில் திருப்பம்

நாங்கள் அனைவரும் அதிகாலை 5 மணிக்கு எழுந்து குளித்துவிட்டு வழிபாடு முடித்து 6 மணிக்கெல்லாம் கோதாரத்தை நோக்கிச் செல்லவேண்டும். எனத் திட்டமிட்டோம் இந்த கௌரி குண்டத்திலிரந்து 14 கி.மீ. உயரத்தில் உள்ளது கேதாரம் என்கிற புனிதத் திருத்தலம் ஆகும். இந்த 14 கி.மீ. உயரத்தை நாம் ஏறிச் செல்வதென்பது நம்முடைய திருப்பயணத்தில் மிகக் கடுமையானதாகும். அந்தப் பகுதி மக்கள் ஆயிரக்கணக்கில் நடந்தே சென்றாலும் மலை ஏறுவது நமக்குப் புதிதென்பதாலும் அங்கு மலைச் சிகரம் பல்லாயிரம் அடி உயரத்தில் இருப்பதாலும் நமக்கு

வேண்டிய பிராண வாயு அங்கே குறைவாக இருக்கும் என்பதாலும் தொடர்ந்து இருபத்தைந்து நாள்களாகப் பயணம் செய்தமை யாலும் மேற்கொண்டு 15 நாள்கள் பயணம் செய்ய வேண்டி யிருப்பதாலும் குதிரையிலேயே போவதென்று முடிவு செய்து இரவே குதிரைக்காரர்களைப் பேசி அவர்களுக்கு முன்பணம் கொடுத்தோம்.

## கொதிநீரும் குளிர்நீரும்

குதிரையில் செல்ல முடியாதவர்களுக்கு டோலி என்கிற நான்கு பேர் தூக்கிச் செல்கின்ற நாற்காலிக்கு முன்பணம் கொடுத் தோம். அதிகாலை 5 மணிக்கு குளிப்பதற்குச் சென்றோம். அண்டவனின் அற்புதமான பேரராற்றலுக்கு அதிசயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு அங்கே எங்களுக்கு காத்திருந்தது. பனி கொட்டுகிறது. உடலெல்லாம் கருகுகிற அளவிற்கு வாடைக் காற்று வீசுகிறது. இமயத்திலிருந்து பாய்ந்தோடி வருகிற மந்தாகினி ஆறானது மிகுந்த விறுவிறுப்போடு வருகிறது. பனிக்கட்டி உருகி ஆறாக வருகிறது. அதிலே கையை விட்டால் கை விறைத்துப் போகிறத. காலை நனைத்தால் கால்கள் உணர்ச்சி யற்று மரத்துப் போகின்றன. இந்தப் பனி ஆற்றிற்கு ஐம்பது அடி தொலைவில் அழகான கொதிக்கின்ற வெந்நீர் ஊற்று ஒன்று இருக்கிறது!

அதனை இப்போது அரசு நல்ல அழகிய தொட்டியாகக் கட்டி பளிங்குக் கல் வைத்து அண்கள் ஒரு பகுதியும், பெண்கள் குளிப்பதற்கு ஒரு பகுதியும், மகளிர் உடை மாற்ற தனி அறை களும் என உருவாக்கி இருக்கிறது. இந்த கொதிக்கின்ற நீர் அளவுக்கு அதிகமாகக் கொதிப்பதால் அதன் நிர்வாகிகள் அந்த வெந்நீரில் தண்ணீரைக் கலந்து சூட்டைத் தணித்து தொட்டியில் விடுகிறார்கள். அப்படி ஊற்றுகின்ற தண்ணீர் ஊற்று 4 ஹெச்.பி. பவர் மோட்டார் வைத்து ஊற்றப்படுகிறது. அந்த நீர் குளித்து பிறகு போக்குவாய் வழியாக ஆற்றோடு சென்று கலந்து விடுகிறது.

தண்ணீர் மிதமான சூட்டில் இல்லாமல் சற்று கடுஞ் சூடாகவே இருக்கிறது. காலை உள்ளே விட்டால் அந்தக் குளிரிம் சுடுகிறது. எனவே சில விநாடிகள் காலை அந்த வெந்நீரில் வைத்திருந்து அதன் பின்பே அந்த தொட்டியில் முழுகி குளிக்கின்றபோது பெறுகிற சுகமே தனி. மேலே கொட்டும் பனி. சுற்றிலும் கடுமையான வாடைக்காற்று. வாடைக் காற்று என்றால் நம் ஊரில் மார்கழி மாதக் குளிரைப் போன்று 20 மடங்கு கூடுதலான குளிரோடு வீசுகிறது. அந்தக் குளிரில் இந்த இதமான வெந்நீற்றுக் குளியலின் சுகம் சொல்லும் தரமன்று. அனுபவிக்க வேண்டிய ஒன்று. இருளிலே குளிக்கச் சென்றதால் எப்பொழுதும் பொறுமையாகவே இருக்கும் நண்பர் கோவிந்தாராஜுவின் துணைவியார் சற்று வேகமாக நடந்து கால் மடங்கிவிட்டது.

**பயணத் தடை**

நாங்கள் குளித்து முடித்துப் பூஜை முடித்தக் கொண்டிருந்தோம் பூசையை முடித்துவிட்டு விரைவில் ஆறரை மணிக் கெல்லாம் செல்லலாம் எனப் புறப்பட ஆயுத்தமானபோது 'இன்றைக்கு குதிரைகள் போகாது, குதிரைக்காரர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்' என்ற செய்தியைச் சொன்னார்கள். என்ன செய்வது என்றே தெரியவில்லை. காலை 8,9 மணி ஆனவுடன் ஒரு முடிவு தெரியும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் பிரச்சனை அதிகமாவதுபோல் தெரிந்தது, எனவே கோதாரம் செல்லுகின்ற பயணத்தைப் பற்றி உடனடியாக முடிவு செய்ய இயலவில்லை. இந்தப் பிரச்சனை முடிவுற்றால்தான் தெரியும் என்ற நிலை.

**கத்திக் குத்தும் கலவரமும்**

சுடுவாய் மண்டல் என்கின்றவர்கள் அந்த இமயச் சாரலில் வாழுகின்ற பழங்குடி மக்கள். அங்கே வாழுகிற இன்னொரு சாரார் நேபாளத்தில் இருந்து வந்து குடியேறிய நேபாளிகள். இந்த சுடுவாய் மண்டல் பழங்கடி இனத்தவரை நேபாளி ஒருவன் கத்தியால் குத்திவிட்டான். போலீசில் புகார் செய்ய உடனடியாக

போலீசார் வந்து இரண்டு நேபாளிகளைக் கைது செய்தனர். அவர்கள் விடுதலை செய்யச் சொல்லி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குள் நம்மிலே பலர் நடந்தேனும் செல்லுகிறோம் என்று கூறி நடந்து செல்ல என்னிடம் பேசினர். என்னால் எல்லாருக்குமான கூட்டு முடிவு எடுக்கப்படவேண்டு மேயன்றி தனியாக நான் மட்டும் நடந்து செல்வது மற்றவர்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்டகும எனக் கருதினேன்.

ஆனால் என்னால் உறுதியான எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை. என்றாலும் இந்தக் குதிரைக்காரர்களின் வேலை நிறுத்தம் நின்ற பிறகு செல்லலாம் என்றால் சிலர் இந்த வேலை நிறுத்தம் ஒரு வாரம் கூட நீடிக்கும் எனவே நாங்கள் எப்படியும் கேததாரம் செல்லுகிறோம் என்றார்கள். நானும் சரி நீங்கள் சென்று வாருங்கள் எனறு அனுப்புவதைத் தவிர வேறு வழி தெரிய வில்லை.

## கலகம், கலவரம், வேலை நிறுத்தம்

என்றாலும் கேதாரநாதனை எப்படியும் வணங்கித்தான் செல்லவேண்டும் என்கிற உறுதி என் மனத்தில் இருந்தது. ஆனால் உடன் வந்தவர்கள் ஒரு வாரத்திற்கு மேல் வேலை நிறுத்தம் நீடிக்கும் என்று பேசுகிற போது அவர்களுக்கு விளக்கம் சொல்ல நான் விரும்பவில்லை. வேலை நிறுத்தம் என்பது குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி குறிப்பிட்ட நேரத்தில் முடியக் கூடியது. கலகம் என்பது காலவரையறை குறிப்பிடாமல் திடீர் என்று தொடங்கி பெரும்பாலான மக்களைத் தொல்லைக்கு உள்ளாக்கி உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைவிப்பது கலவரம் என்பது காலவரையற்று மேற்சொன்ன நிலைமை நீடித்து அரசு இராணுவத்திடம் ஒப்படைத்து ஊரடங்குச் சட்டம் பிறப் பித்தால்தான் கலவரமாகும். இந்த மூன்றுக்கும் உள்ள வேறு பாட்டைப் புரியாமல் மற்றவர்கள் கூறியபோது நான் இவற்றை விளக்குவது பயனளிக்காது என்று வாளா இருந்தேன்.

## புதுமைப் பெண்

ஏறத்தாழ 30 பேர் நடந்து செல்வதாகச் சென்றார்கள். எஞ்சியவர்கள் என்னோடு தங்கிவிட்டார்கள். இவர்கள் புறப் பட்டுச் சென்ற ஒரு மணி நேரத்திற்குள் ஒரு நேபாளப் பெண்மணி ஒரு வீட்டின் மாடி முகட்டின் மீது கைலியைக் கட்டிக் கொண்டு ஒரு கையால் குண்டாந்தடியைச் சுழற்றிக் கொண்டு இன்னொரு கையல் சிகரெட்டைப் பபிடித்தபடி வீராவேசமாக முழங்கிக் கொண்டிருந்தாள். உடனே நூற்றுக்கணக்கான நேபாள இளைஞர் கள் கூடி கூக்குரல் எழுப்பி அந்தப் பகதியில் இருக்கிற கடைகள் எல்லாம் மூட வைத்துவிட்டனர். போலீசின் கையிலிருந்து இராணுவத்தின் கைக்கு பாதுகாப்பு மாறியது. அந்தப் பெண் மணியை ஒரு டொலியில் உட்கார வைத்து அந்த நேபாள இளைஞர்கள் கோஷம் போட்டுக் கொண்டு வந்த காட்சி இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. இதற்கு இடையில் எதிர்த்தரப்பார் எதிர் முழக்கம் செய்ய கற்கள் எடுத்து கடைகள் மீதும் வீடுகள் மீதும் வீசப்பட்டது. இவ்வளவுக்கும் மத்தியில் சென்ற அன்பர்கள் என்ன ஆனார்களோ என்று பெரிதும் கலக்கம் உற்றேன்.

## கலக்கமும் ஆறுதலும்

நண்பகல் 12 மணியளவில் காவல் துறை அதிகாரி களோடும், ராணுவ அதிகாரிகளோடும் சென்று பேசினேன். அவர்கள் இரு தரப்பாரோடு பேச்சு வார்த்தை நடத்திக் கொண் டிருக்கிறேன். மூன்று மணிக்கு சொல்லுவதாகதத் தெரிவித்தார். நான் ''எங்களோடு வந்த சிலர் நடந்து செல்வதாகச் சென்றிருக் கிறார்கள். அவர்கள் நிலை என்னவென்று புரியவில்லை. அவர் களைப் பற்றிய செய்தியை நீங்கள் எப்படியாவது தெரிவிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். அவரும் தொடர்பு கொண்டு ''அவர்கள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்திருப்பார்கள்'' எனக் கூறிவிட்டு ''நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்குப் பிறகு அங்கிருந்து குதிரைகள் கேதாரம் செல்கின்றன. இதுவரையில்

எந்த விதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை'' என்று தெரிவித்ததோடு கூட'' ஏதேனும் நடக்காமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். ஏதேனும் செய்தி இருந்தால் உடன் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்'' என்று எங்கள் முகவரியைப் பெற்றுக் கொண்டார். அதன்பின் பேச்சு வார்த்தை முடிவாகி மாலை ஐந்து மணிக்கு வேலை நிறுத்தம் நிறுத்திக் கொள்ளப்படுவதென்று அதிகாரிகள் எனக்குத் தெரிவித்தார்கள். மனதிற்கு சற்று இதமாக இருந்தது இந்த முடிவு. வேலை நிறுத்தம் செய்யும் நேபாளிகள் பயணிகளுக்கு எந்த இடையூறும் செய்யவில்லை. குதிரையை ஓட்டுவதில்லை அவ்வளவே. இது நாம் கற்க வேண்டியது.

இன்று பகலிலே சென்ற அன்பர்கள் மாலை 7 மணியளவில் கேதாரம் சென்று கேதாரநாதனை வழிபட்டு அங்கேயே ஓர் அறை எடுத்துத் தங்கி அதிகாலை 5 மணிக்கு அடிவாரத்தை நோக்கி வந்தார்கள். நாங்கள் அதிகாலையில் எழுந்து வெந்நீர் ஊற்றில் குளித்து வழிபாடு முடித்து ஐந்தரை மணிக்கு பயணம் புறப்படும் முன் எப்போதும் சொல்லும் 'வேயுறு தோளி பங்கன்' பாடலையும் 'வான நாடனே வழித்துணை மருந்தே' என்னும் பாடலையும் பாடி கேதாரர நாதன் திருவடிகள் வாழ்க என்று முழங்கிப் பயணத்தைத் தொடங்கினோம்.

நம்முடைய பெண்கள் பலர் இந்தப் பயணத்தில் பயன்படுத்த குதிரை மேல் செல்ல வேண்டியிருப்பதால் வடநாட்டு உடையான குர்தா என்ற உடையை வாங்கி அணிந்து கொண்டு போர்க்களம் செல்லும் வீராங்கணைகளாகக் காட்சி கொடுத்தார்கள். என் மனைவி உட்பட பல பேரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. சற்று நிதானித்துப் பார்த்த பிறகுதான் யார் யார் என்று புரிந்து கொள்ள முடிந்தது. குதிரை மீது ஏறி அமர்ந்த உடன் அவர்களுக்கு நான் சொன்னேன், ''இறைவனுடைய திரு ஐந்தெழுத்தை ஜெபித்துக் கொண்டே வாருங்கள். மற்றவர்கள் இறைவன் நாமத்தை மனத்திற்கள் சொல்லிக் கொண்டே வாருங்கள். எந்தத் தொல்லையும் வராது'' என்று சொல்லலி உற்சாகப்

படுத்தினேன். ஏனென்றால் மானசாதேவி கோயிலில் பார்த்த பல ஆந்திரக்காரர்கள் அச்சமூட்டியதாக ஏற்கெனவே சொன்னேனல்லவா?

## திட்டினாலும் சிரிக்கும் பையன்கள்

அந்தக் குதிரைக்காரப் பையன்களுக்கு குதிரையோடு வருவதில் நாட்டமில்லை. ஐந்து குதிரைகளுக்கு இரண்டு பையன்களைப் போடுகிறார்கள். பாவம் அவன்தானே இந்த ஐந்தையும் மேய்க்க வேண்டும்! இவர்களுக்கோ ஹிந்தி தெரியாது. அந்தப் பையன்களுக்கோ தமிழ் தெரியாது என்றாலும் சளைக்காமல் அவனிடம் தமிழால் திட்டிக் கொண்டே வந்தனா. அந்தப் பையன்கள் தம்மைப் பாராட்டுவதாக நினைத்துச் சிரித்துக்கொண்டே வந்தார்கள். அந்தக் குதிரைகள் பழக்க முதிர்ச்சியினால் நன்றாகச் செல்கின்றன. நாம் குதிரையிலே செல்லுகிறோம். நம்மை ஒட்டி நடந்து செல்லுகிற மக்கள் நிறையச் செல்கிறார்கள். அதே போல மேலே சென்றவர்கள் கீழே இறங்கி வருகிற மக்கள் கூட்டம், குதிரைகள் கூட்டம் இன்னொரு பக்கம் இடையிலே சிறிய குதிரைகள் மீது மலை ஊர்களுக்குச் செல்லுவதற்கான உணவுப் பொருள்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்லும் பெரிய மூட்டைகள் அடங்கிய குதிரைகள் பயணம் வேறு.

## குறுகலான சசிரமமான பாதை

ஒருபுறம் வானுற ஓங்கி வானத்தை முட்டும் மலைச் சிகரங்கள். அந்தச் சிகரத்தை ஒட்டி ஆறு அடித் தடமே உள்ளது. காட்டாறாக பெருத்த ஓசையுடன் ஆறு ஓடுகிறது. இந்த ஆறு அடித் தடத்தில்தான் செல்லுகிற குதிரைகள் மனிதர்கள்; வருகிற குதிரைகள், பொதி சுமக்கிற குதிரைகள் எனச் செல்ல வேண்டும். இந்தக் குதிரைகளும் மனிதர்களும கொஞ்சம் வேகமாகச் சென்று விட்டால் மலைப் பாதையில் கொஞ்சம் விசாலமாக இடம் கிடைக்கிறது. நடந்துசெல்லுகிற மக்கள் பாதையின் குறுக்கே மலை முகட்டைத் தாண்டி தாங்கள் நடக்கும் அளவைக்

குறைத்துக் கொள்கிறார்கள். அப்பொழுதெல்லாம் பாதையில் சற்று இடம் இருக்கிறது.

### குதிரையின் உயிரும் நம் உயிரும்

குதிரை மலைப்பாதையில் ஏறிக் கொண்டிருக்கும் போது பசுந்தழையைக் கண்டால் அதைத் தின்பதற்கு அது அங்கே செல்லுகிறது. அந்தப் பசுந்தழைகள் அந்தக் கிடுகிடு பள்ளத்திற்கு செல்கிற விளிம்பில் இருக்கிறது. குதிரையில் இருப்பவர்கள் அச்சத்தினால் சத்தம் போடுகின்றனர். அதற்கு அந்த கதிரை ஓட்டி சொல்கிறான். ''குதிரைக்கு தன் உயிரையும் காப்பாற்றிக் கொள் வதில் மிகுந்த அக்கறை உண்டு. எனவேவ கவலைப்படாது தைரியமாக வாருங்கள்'' என்று சொல்கிறான். குதிரைக்கு உயிரின் மீது அக்கறை உண்டு என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அது நமக்கு எப்படித் தெரியும்? குதிரைக்கு நம் உயிரைக் காக்க வேண்டும் என்று என்ன தெரியும். குதிரை 50 அடி பள்ளத்தில் விழுந்தால்கூட தற்காத்துக் கொள்ளலாம். ஆனால் நம் கதி என்ன? ஆனால் அவன் சொல்வதையே திருப்பி திருப்பிச் சொன்னான். அவர்களுக்கு அன்றாடப் பழக்கம், நமக்கோ புதிது. அப்படியே நாம் விழுந்தாலும் அவன் கவலைப்பட வேண்டிய தில்லை. நமக்கு அது உயிர்ப் பிரச்சனை; அவனுக்கு அது ஒரு விபத்து. அவ்வளவுதான்.

### குதிரையின் சாகசம்

இந்தப் பயணத்தின் நாங்கள் சென்று கொண்டிருந்த போது இந்தக் குதிரையானது முன்நோக்கி ஏறுகிற போதும் உச்சிப் பகுதியில் செல்லும்போதும் நம் தாய்மார்கள் பழக்கம் இல்லாமை யினால் பின்னோக்கிச் செல்கிறார்கள். அவன் முன்னோக்கி குனித்து படுங்கள் என்று அதட்டியும் திட்டியும் வருகிறான். அவன் சொல்வது புரியாமல் இவர்களுக்கு சிரித்துக் கொள்கிறார்கள். அப்போது நான் நினைத்தேன், இதுவே நம் ஊராக இருந்தால் மொழியும் புரிந்தால் நம் தாய்மார்கள் குதிரையையும் குதிரைக் காரரையும் ஒரு வழியாக்கியிருப்பார்கள் என்று. மேலும்

நாங்கள் சென்று கொண்டிருந்தபோது என் மனைவியின் குதிரை இரண்டு கால்களையும் தூக்கி முன்னே உள்ள பாறை மீது வைத்தது. பின்னே வருகிற நான் என்ன பார்த்துக் கொண்டே போகிறீர்கள் எனக் கூச்சல் போட்டாள். வேறு என்ன செய்வது? நான் ஏதேனும் செய்தால் என் குதிரையும் இரண்டு கால்களில் நிற்க ஆரம்பித்துவிடும். பின் எல்லாரும் சத்தம் போட்டு குதிரைக் காரர் வந்து சரிப்படுத்தி அழைத்து வந்தார்கள்.

**பிரிந்தவர் கூடினோம்**

முதல் நாள் சென்றவர்களும் நாங்களும் இந்த மலையின் மையப் பகுதியிலே சந்தித்துக் கொண்டோம். மனத்திற்கு நிறை வாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. சென்றவர்கள் யாரும் எந்தக் குறையும் இன்றி வந்துவிட்டார்கள் என்பது எனக்கு மிகுந்த மனமகிழ்சச்சியைத் தந்தது. கேதார நாதனுக்கு என் இதய பூர்வமான வணக்கத்தைச் செலுத்தினேன்.

**அரிய செடி**

நாங்கள் செல்லுகிற வழியில் நாகவிருட்சா என்ற ஒரு செடியினை அந்தக் குதிரைக்காரர்கள் பறித்துக் கொண்டு வந்து காண்பித்தார்கள். அந்த செடியானது அசல் நாகப் பாம்பு படம் எடுத்து இருப்பதுபோல் இருக்கிறது. அந்தப் படத்தின் மேற் பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் உள்ள நாமம் போல் கோடுகளும உள்ளன. காம்பின் வாயில் நாக்கைத் துருத்திக் கொண்டு வெளியே வருருவது போன்ற தோற்றம் இருக்கிறது. இந்த வகைச் செடி இந்த மலைச் சிகரத்தைத் தவிர வேறு எங்கும் கிடைக்காத அபூர்வமானது என்று சொன்னார்கள். இதைப் பார்க்கையிலே மற்றவர்களுக்கு ஒன்றும் அதிசயமாகவோ அற்புதமாகவோ தெரியிவில்லை. இதைப் பார்த்ததில் மகிழ்ச்சி கொண்டவன் நான் பெருமகிழ்ச்சி கொண்டவள் அருமை நண்பரர் பொறியாளர் முத்துசாமி அவர்களின் மகளும் என் அன்பு மகளுமான பவானியுமே அதிகம் மகிழ்ந்தனர். ஏனென்றால் அவள் தாவரர

வியலில் முதுநிலை படிக்கும் மாணவி. அவர்களுக்கு இருக்கும் மகிழ்ச்சி மற்றவர்களுக்கிலல்லாததில் வியப்பில்லை.

அதை இங்கே கொண்டு வரவேண்டும் என்று இருந்தேன். ஆனால் அதை முகர்ந்தால் மயங்கிவிடுவார்கள் என்பதால் கொண்டு வரவில்லை. நாங்கள் செல்லுகிற பாதையில் பல இடங்களில் கண்ட இயற்கை அழகை வர்ணிக்க வார்த்தை யில்லை. ஆண்டவன் படைப்பின் அற்புதத்தை உணர்ந்து கொள்ள இயற்கை அழகை இரசிக்க இயற்கையில் இறைவனைக் காண அவசியம் செல்ல வேண்டி இடம் இந்தக் கேதாரத் திருப்பதியாகும்.

**உழைப்பின் உயர்வு**

நம் கோவை மாவட்டத்தில் ஆழியாறு அணை என்று ஒன்று இருக்கிறது. இந்த அணைக்கு பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும பெருவாரிப்பள்ளம ஆகிய அணைகளிலிருந்து 24 கிலோ மீட்டர் மலையைக் குடைந்து தண்ணீரைக் கொணர்ந்து மின்சாரம் எடுத்து பாறையைக் குடைந்த குகையின் வாயிலாக தண்ணீரைக் கேரளாவிற்கு அனுப்புகிறார்கள். இதற்கு நாள் ஒன்றுக்கு 30,000 பேர் வீததம் எட்டு ஆண்டுகள் வேலை செய்து கட்டி முடித்தனர்; இதற்கு பெரிய பெரிய இயந்திரங்கள் வேறு பயன்படுத்தப் பட்டன. பல கோடி ரூபாய் செலவு.

உலகத்திலேயே மிகச் சிறந்த அமைப்பினைக் கொண்டது இது என்ன எனது அருமை நண்பர் பொறியாளரர் முத்துசாமி அவர்கள் அழைத்தச் சென்று சொன்னபோது நான் அதிசயப் பட்டுப் போனேன். எத்தனை பொறியாளர்கள் திட்டமிட்டு எத்தனை ஆயிரம் தொழிலாளிகள் உழைப்பைக் கொட்டி இரத்தத்தை வியர்வையாகக் கொட்டி இன்னுயிரைக் கொடுத்து இதனை உருவாக்கி இருக்கிறார்கள் என்று எண்ணி எண்ணி மாய்ந்து போனேன். இந்த அரிய சாதனையை நம் தமிழர்கள் செய்திருக்கிறார்கள். அதிலும் என் இனிய நண்பர்தான் அதற்கான

முதல் கல்லை எடுத்து வைத்தவர். என்று உணர்ந்தபோது உணர்ச்சி வசப்பட்டு என் உள்ளம் பெருமிதத்தால் பெரிதும் விம்மியது. ஏனென்றால் இதுபோன்ற அணை இந்தியாவில் வேறெங்கும் இல்லை.

## அலகிலா விளையாட்டு

கேதாரம் செல்லுகிற வரையில் உலக அதிசயமாக உன்னத மாக இருந்த ஒன்று கேதாரம் செல்லும் பாதையில் நான் கண்ட காட்சி எனக்கு மிகச் சாதாரணமாக்கியது. ஆம் கேதாரம் செல்லுகிற வழியில் பனிப் பாறைகள் மைல் கணக்கில் இருக்கின்றன. மைல் கணக்கில் நீண்ட தூரமாக உள்ளன. மைல் கணக்கான நீளமாக உள்ள பனிப்பாறை அதன் அடியில் நம்முடைய மைல் கணக்கான பாறையைக் குடைத்து செல்லும் குகை போல பெரிய ஆறே ஐஸ் பாறையைக் குடைந்து கொண்டு வெளியே பேரிரைச்சலோடு ஓடுகிற காட்சியைக் காணுகிறபோது இறைவனின் பேராற்றலுக்கு முன்னல் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பது தெரிகிறது. மெய் சிலிர்த்துப் போனேன். நெஞ்சம் உருகியது.

## அழகின் ஆட்சி

இந்தப் பனிப்பாறையை குடைந்த தொழிலாளர்கள் யார்? இதற்கு வரைபடம் இட்டு திட்டமிட்டு செயலாற்றிய பொறியாளர் யார்? ஆளே இன்றி அதியற்புதமான சாகசத்தை ஆண்டவன் நடத்தி இருக்கிறான் ஒருக்கால் இதனைப் பார்த்த பொறியாளர் வேண்டுமானால் இந்தக் குகை வழித் திட்டத்தைச் செயல்படுத்த லாம் போல இருக்கிறது. நாம் செல்லுகிற பாதையில் சலசலத்த ஒலியோடு சலதரங்கம் வாசிப்பதைப் போல் அருவியானது கொட்டுகிறதே. அதன் அருகே உள்ள மரங்கள் அசைந்தாடு வதைப் பார்க்கிறபோது தாளம் இட்டு வாசிக்கின்ற நட்டுவனாராக அருவி தெரிய நாட்டுவனாரின் ஓசைக்கேற்ப சுழன்றாடும் ஆடல் அரசியாக மரங்கள் எல்லாம் காட்சியளிக்கின்றன.

கவுரி குண்டிலிருந்து, கேதாரம் செல்லும்வரை காணுகின்ற இயற்கை அழகை முன்னமேயே சொன்னேன் அல்லவா? கவுரி குண்டிலிருந்து 7 கிலோ மீட்டர் சென்றால் 'ராமபிரா' என்ற இடம் வருகிறது. கோதாரத்திற்குச் சரியாக பாதி தூரத்தில் அமைந் துள்ளது. இங்குதான், குதிரை ஓட்டிகள், குதிரைகள், நாம் எல்லாரும் சற்று ஓய்வு எடுக்க வேண்டும். இங்கு குதிரைகளுக்கு கடலைமாவை வாங்கித் தண்ணீரில் கரைத்துப் புகட்டுகிறார்கள். நம்மவர்களுக்கும் காப்பி, டீ, ரொட்டி போன்றவை இங்கே கிடைக்கிறது. அத்தோடு கூட இரவிலே வந்து தங்குவதானாலும் அங்குக் கூரைக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு, கோரைப்புல் பாய்களும், கம்பளிகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் இங்கு தங்குவதென்பது அவ்வளவு எளிதல்ல. இந்தப் பகுதியில் நாங் கள் சென்றபோது பாதை முழுக்கப் பனிப் பாறையாக உயர்ந்து நிற்கிறது.

### பனிப்பாறை மீது...

அந்தப் பனிப்பாறைகள் எந்த நேரமும், உருகி, அடித்துச் செல்லலாம். அந்தப் பாறைகள் வழுக்கிச் செல்லாமல், இருப் பதினை உறுதிய செய்ய அரசு அதிகாரிகள் அதனைச் சம்மட்டி போன்ற கருவியால் அடித்துப் பார்த்து படிபோலச் செதுக்கி வைத்து, நம்மைக் குதிரையிலிருந்து இறக்கி நடந்து வரச் செய்து, குதிரைகளைத் தனியாகவே அழைத்துச் சென்று குறிப்பிட்ட பகுதியில் நிறுத்தி விடுகின்றனர். நாம் நடந்த சென்றுதான் குதிரையில் மீண்டும் ஏற வேண்டும். பனி உறைகின்ற இடத்தில் படுத்துறங்குவதென்பது மிகவும் கடினமானது. நாங்கள் செல் வதற்கு முதல் மாதம் இரண்டு கிலோ மீட்டர் தூரம் பனிப்பாறை மீதே நடந்து சென்றனர் என்றால் பாருங்களேன்.

பரந்து விரிந்த திறந்தவெளியில் ஒரு சில குடிசைகளே உள்ளன. எனவே அங்கு தங்குவதென்பது மிகக் கடினமான ஒன்றாகும். நாங்கள் இங்கு இறங்கி குதிரைகளுக்கு நீர் கொடுத்து, எல்லாரும் காலைச் சிற்றுண்டியை முடித்து, மேற்கொண்டு பயணத்தைத் தொடங்கினோம்.

## இயற்கையின் எழில்

ஐஸ் கட்டியை விலைகொடுத்து வாங்கும் தமிழ்நாட்டு மக்களாகிய நமக்கு ஐஸ் பாறைகளைப் பார்ப்பது அதிசயமாக இருந்தது. இன்னும் இரண்டு கிலோ மீட்டர் சென்று விட்டால், இயற்கை அன்னை அரசேச்சும் எழில்கூட்டமாக விளங்குவதைக் காணலாம் ஒன்பதாவது கிலோ மீட்டரில் தொடங்கி கோதாரத்தை அடைகிற வரையில் காணுகிற இயற்கை எழில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து அளிப்பன. இதயம் மகிழ்ச்சியால் - ஆனந்தத்தால் பொங்கி வடிவதை உணரலாம். வர்ணிக்க வர்த்தைகளைத் தேடி அலைய வேண்டுமேயல்லாது, அனுபவித்ததை முழுமையாகச் சொல்ல யாராலும் முடியாது. வெள்ளியை உருக்கி வார்த்தது போன்ற அருவிகளின் ஓசை, அதற்கேற்ப குரல் எழுப்பும் பறவைகளின் வர்ண ஜால ஒலிகள். பச்சைப்பபசேல் என்ற மரம், செடி, கொடிகளின் மந்தகாசப் புன்னகை இவற்றின் பின்னணியில் நீலகண்ட பர்வதம் என்ற கயிலை மலையின் ஒரு பகுதி முழுக்க முழுக்க வெண்ணிறமாக ஐஸ் பாறையாக இருப்பதைக் கண்டு களிக்கலாம்.

## கயிலைக் காட்சி

அந்தத் திருநீலகண்டப் பர்வதத்தைப் பார்க்கிறபோது திருக்கயிலாயத்தைச் சென்று தரிசித்த நம் அன்பர்கள் புகைப் படம் எடுத்துவந்த காட்சியைப் போலவே உள்ளது. ஆண்டவன் கருணையினால் அந்த ஐந்து கிலோ மீட்டர் தூரமும் கயிலைக் காட்சியையே காணுகின்ற பேற்றைப் பெற்றோம்.

'அண்ணல் வீற்றிருக்கப் 'பெற்றதாதலின்' என்னில் நன்றும்
மூன்றுலகும் நான்மறைகளும் எண்ணில் மாதவம் செய்ய
வந்தெய்திய புண்ணியம் திரண்டுள்ளது போன்றது அம்மலை'

என்ற சேக்கிழார் அடிகளின் பாடலே நமக்கு நினைவு வரும்.

அற்புதமான அந்தக் காட்சியைக காணும தோறும் கண் பனிப்ப நெஞ்ச இரும்பூத எய்த அப்பர் அடிகள் குறிப்பிட்டதைப்

போல 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற வார்த்தை எவ்வளவு பொருள் பொதிந்தது என்பதனை உணர முடிந்தது. அந்த நீலகண்ட மலை மிக உயர்ந்து, பரந்து, நீண்டு உள்ளது; அதன் அருகே மற்றொரு மலையும் இருக்கிறது. இதன் முன்னே பச்சைப் பசேல் என செடிகளும், மரங்களும் இருப்பதைப் பார்க்கிறபோது சேக்கிழார் குறிப்பிட்டபடி,

'வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளுபேரொளி'

என்பது எவ்வளவு பேருண்மை என்பது விளங்கும்

## நஞ்சும் அமுதும்

அந்த உயர்ந்த பனிச் சிகரத்தின் மத்தியில் நீலமேகத்தின் வண்ணம் படிகிற இயற்கைக் காட்சியைக் கண்டுதான் அம் மலைக்கு நீலகண்டப் பர்வதம் எனப் பெயரிட்டனர். போலும். தேவர்களும், அசுரர்களும் இன்பம் வேண்டி. என்றும் இறவாத நிலைபெற விரும்பி பாற்கடலில் மேரு மலையை மத்தாக அமைத்து வாசுகி என்ற பாம்பினை நாணாகப் பயன்படுத்தி, தேவர் ஒரு புறமும், அசுரர் ஒரு புறமும் கடைந்தார்கள். தேவர்கள் விரும்பியது சாவா, மூவா, அமிழ்தம். ஆனால் வந்ததோ நஞ்சு. அத்தோடு கூட இந்தத் துன்பம் தாங்காது அந்த வாசுகி என்ற பாம்பும் விஷத்தைக் கக்கியது. இரண்டு இணைந்ததே ஆலகால விஷம் என்பது. அமிழ்தம் வேண்டியவர்களுக்கு கிடைத்தத ஆலகால விஷமே. ஏன்? நம் வாழ்க்கையிலும் இன்பம் தேடி அலையும் போது சந்திப்பது முதலில் துன்பத்தைத்தானே!

## இன்பமும் துன்பமும்

நல்ல சுவையான உணவு உண்ண வேண்டுமானால், ஒரு பெண்மணி நான்கு மணிநேரம் துன்பப்பட்டு, ஓடி, ஆடி, அடுப் படியில் வெந்து, துன்பப்பட்டு உருவாக்குகிறபோது தான் சுவை யான உணவு கிடைக்கிறது. எனவே இன்பம் வேண்டினால் முதலில் பெறுவது துன்பம். நம்மைப் போன்றே தேவர்களும்

இன்பம் வேண்டி துன்பத்தை அடைந்தனர். எல்லாரும் வேகமாக ஓடினார்கள். விஷ வேகம் துரத்தியது. சற்று நிதானித்த திரு மாலின் திருமேனி அந்த விஷவேகத்தால் கறுத்தது. அது முதல் அவர் கார்மேனி வண்ணனானார்.

தேவர்கள் யாவரும் சிவபெருமானை நோக்கி வேண்ட சிவன் அவ்விஷத்தை வாங்கி, உண்டான். அருகிலிருந்த உம்மையம்மை அஞ்சி, இறைவனின் கழுத்திலே கை வைத்தாள். அந்த ஆலகால விஷம் அந்தக் கண்டத்திலேயே நின்றது. அதுமுதல் பெரு மானுக்கு நீலக்ணடன் என்ற திருநாமம் உரியதாயிற்று. அந்த நீலகண்டம் மீது கொண்ட பக்தியால் இளமையைத் துறந்தார் ஓர் அடியார். அவர் பெயரே திருநீலகண்டர்.

## சிவநெறி காட்டும் ஒருமை

இந்தத் திருநீலகண்ட வரலாறு இமயம் முதல் குமரி வரை பரந்திருப்பதை எண்ணும்போது, அந்தச் சிவநெறி பரந்துபட்ட பாரதம முழுவதும் விரவி இருந்தது என்பதும் இதுபோன்ற வர லாறுகள் பரவலாக நாடு முழுக்க இருப்பதென்பதும் நமக் கெல்லாம் நாட்டு ஒற்றுமையும் மகிழ்ச்சியையும், பூரிப்பையும் கொடுப்பதாகும். இந்த நீலகண்ட வரலாற்றை நினைவூட்டுகிற வகையில் இயற்கையில் தோன்றுகிற வெள்ளிப்பனி வரையும், அதன் கழுத்துப் பகுதியில் தோன்றுகிற நீலநிறத் தோற்றத்தை யும் கண்டு இந்த மலைக்கு நீலகண்ட பர்வதம் என்று நம் முன்னோர் பெயர் சூட்டி உள்ளது மிகப் பொருத்தமானது.

## கண்டோம் களித்தோம்

கேதாரம் திருக்கோயிலுக்கு 1 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும்போதே கேதாரக்கோயில் விமானம் நம் கண் முன்னே காட்சி அளிக்கிறது. அந்தக் கோயிலின் சிகரம் பார்த்தபோதே, வறுமையாளன் வள்ளலைப் பார்த்து, பரிசில் பெறும்போது எப்படி மகிழ்வானோ, அதைப்போல நாங்கள் பெற்ற துன்பம எல்லாம் விநாடியில் மறந்து, அளப்பரிய மகிழ்வையும், உற்சாகத்தையும்

பெற்றோம். அங்கேயே இறைவனுடைய நாமத்தைச் சொல்லி வணங்கினோம். கேதாரநாதன் திருவடிகள் வாழ்க என உணர் வோடு வணங்கினோம்.

கோதாரம் திருக்கோயிலுக்கு 14 கிலோமீட்டருக்கு முன் னாலே குதிரையை விட்டு இறங்கி, நடந்து செல்ல வேண்டும் மலைப்பாதையில் குதிரையின்மீதுதான் செல்கிறோம் என்றாலும், குதிரையிலிருந்து இறங்கிய உடனே நடந்து செல்வது என்பது நம்முடைய இருதயத்திற்கும் நுரையீரதலுக்கும் துன்பத்தைக் கொடுத்து, சமயத்தில் இறப்பையும் கூட ஏற்படுத்தும்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த மலைச் சிகரம், சுமார் 11,800 அடி உயரமுள்ளது. எனவே, இங்கு பிராணவாயு குறைவு நாம் மேற்கொண்டு நடக்கிறபோது கூடுதலாக பிராண வாயு தேவைப்படுகிறது. அங்குள்ள பிராணவாயுக்கு ஏற்ற வகை யில் சில மணித்துளிகள் அமர்ந்திருந்த பின்பே செல்ல வேண்டும். நாங்களும் சிறிது நேரம் அமர்ந்திருந்தோம்.

கேதாரம் திருக்கோயிலில் வழிபாடு இயற்றுகின்ற திரு.கணேஷ் பண்டா என்பவர் ஏற்கெனவே நம் ஈரோடு அன்பர்களுக்குப் பழக்கமானவர். எனவே அவருக்கு ஏற்கெனவே கயிலைமணி திரு முனுசாமி அண்ணன் அவர்கள் மூலம் கடிதம் எழுதச் சொல்லி இருந்தேன். எனவே வழிபாட்டிற்கு உரிய ஏற்பாட்டினைச் செய்ய திரு.பத்மநாபன் மூலம் திரு கணேஷ் பண்டாவைப் பார்க்கச் சொல்லிவிட்டு நாங்கள் மெதுவாக அனைவரும் நடந்து சென்றோம்.

## மந்தாகினி வேகமும் விறுவிறுப்பும்

கோயிலின் முன்னால் மந்தாகினி ஆறு ஓடுகிறது. மந்தா கினி ஆறு இமயத்திலே உற்பத்தியாகின்ற கங்கை ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றாகும். அது பாய்ந்தோடி வருகிற காட்சி மிக அருமையானது. பேரிரைச்சலோடு படு வேகமாக வருவதைக் காண அச்சமாக இருக்கிறது. படித்துறை இருந்தாலும், பக்கத்

துணையின்றி அதிலே குளிப்பது அபாயமானது. அதைவிட, அந்தத் தண்ணீரைத் தொட்டால், தேள் கடித்ததுபோல் இருக்கிறது. அவ்வளவு குளிர்ச்சி. இந்தப் பனிப் பகுதியில் வாழுகிற மக்களே படித்துறையில் அமர்ந்து, தண்ணீரைக் குவளையில் எடுத்துத்தான் குளிக்கின்றனர். அதிலும் பலர் தண்ணீரைத் தொட்டுத் துடைத்துக் கொள்வதோடு சரி. அவரர்களே அப்படி என்றால், நாம் அங்கு குளிக்க முடியுமோ? எனவே, திரு சுப்பிர மணியம் அவர்களைக் குவளையிலே நீர் கொணரச் செய்து நாங்கள் அனைவரும் கண்களில் ஒற்றி தலையிலே தெளித்து உள்ளும் குடித்துப் பூரித்தோம். இந்த மந்தாகினியாறு கங்கையாற்றின் பல்வேறு நதிகளில் ஒன்று என்று சொன்னேன். சிவபெருமான், நெற்றிக் கண்ணிலிருந்து தேவர்கள் வேண்ட அவர்களுக்குத் துணை புரிய ஆறு தீப்பெறிகள் தோன்றின. அது கங்கை யாற்றிலே வாயுவினால் கொண்டு வரப்பட்டு, கங்கையிலே விடப்பட்டதால் முருகனுக்கு காங்கேயன் என்ற நாமம் உண்டு என்பதை நாம் அறிவோம்.

**கந்தனைக் கொணர்ந்த ஆறு**

ஆனால் கயிலை மலையில் உற்பத்தியாகிற இந்த மந்தா கினி ஆற்றில்தான் அந்த ஆறு தீப்பொறிகளும் முதலிலே விடப்பட்டு, பின்னர் கங்கைக்கு வந்தன. அந்த நுணுக்கத்தை அருணகிரிப் பெருமான், 'மந்தாகினி தந்தவரோ தயனே' என்று குறிப்பிட்டுள்ளார். மந்தாகினி ஆற்றின் அழகிலே மயங்கி நின்ற எங்களை நோக்கி, மெலிந்த உருவமும் குள்மான தோற்றமும் உடைய ஒருவர வாங்கோ, வாங்கோ என்று அழைத்தபடி எங்களை நோக்கி வந்தார். அந்தத் தமிழ்ச் சொல்லைக் கேட்டு நாங்கள் இடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இப்படி ஓர் அனுபவத்தைப் பாரதி பெற்றதனால்தான் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்ற பாடினான் போலும். அநதத் தமிழ்க் குரல் எங்களுக்குத் தேனாய் இனித்தது. நாங்கள் அவர் யார் என்று குழம்பிப் போனோம். அதற்குள்

அவரேதான் கணேச பாண்டா என்று அறிமுகப்படுத்திக் கொண் டார். பின்னர் அவரோடு சென்று அவருடைய இல லத்தில் பொருள்களை எல்லாம் வைத்துவிட்டு, கை, கால், முகம் கழுவி திருநீறு அணிந்து கேதாரநாதர் திருக்கோயில் முன்பு சென்று வணங்கி, 'தலையே நீ வணங்காய்' என்ற திரு அங்கமாலைப் பதிகத்தைச் சொல்லி வலம் வந்தோம்.

## மூவரில் இருவர் பாடியபதி

இந்தத் திருக்கேதாரத்தை நம்முடைய சமயக் குரவர்களான ஞான சம்பந்தப் பெருமானும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அரிய இரண்டு பதிகங்களைப் பாடிப் பரவியுள்ளனர். ஆனால் அந்த இரு பெருமக்களும், திருக்காளத்தியில் இருந்தே பதிகம் பாடினார்; சேக்கிழார் பெருமானும் தன்னுடைய திருத்தொண்டர் வரலாற்றில்

'மன்னுதிருக் கேதாரம் வழிபட்டு மா முனிவர்
பன்னுபுகழ் பசுபதி நேபாளத்தைப் பணிந்து ஏத்தி
துன்னுறு கதை சங்கரனார், ஏற்றதூண் நீர் கங்கை
அன்னமளிர் அகழ்துறை நீர் அருங்கரையின் மருங்கணிந்தார்'

என்று, திருமூல நாயனார் புராணத்தில் கேதாரத்தை மிக அருமை யாகக் குறித்தார்கள்.

## காஞ்சி முனிவரின் திருமுறைப்பணி

திருக்கேதாரத்தில், இரண்டு திருப்பதிகங்களையும் மிகவும் பெருமுயற்சி எடுத்து, நம்முடைய கயிலை மாமுனிவர் தவத்திரு காஞ்சிபுரம், தொண்டை மண்டல அதீன ஞானப்பிரகாச அடிகள் தமிழிலும் இந்தியிலும் அதனை அழகுற அங்கு நிறுவியுள்ளார் கள். திருக்கோயிலை வலம் வந்த நாங்கள் அதனைக் கண்டு, உள்ளம் மகிழ்ந்து, அந்த இரு பதிகங்களையும் அந்த இடத் திலேயே நின்று மனமுருகிப் பாடினோம். அருமுயற்சியால் உருவாக்கப்பட்ட அந்த கல்வெட்டுகள் இயற்கைச் சூழலால் வெயில், மழை, பனி போன்றவற்றால் தற்போது அந்த எழுத்துகள்

மங்கிப் போய் உள்ளன. இது உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த கல்வெட்டுகளுக்கு, மேலே விதானம் அமைத்து, அந்தக் கல்வெட்டுகளின் இருபுறமும் ஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருமேனிகளை எழுந்தருளச் செய்தல் இன்றியமையாததாகும்.

இந்தப் பணியினை மேற்கொள்ளாவிட்டால் அரும்பாடு பட்டுச் செய்த இந்த அரியப் பணி, சிதிலமடைந்து விடும் என அச்சமாய் உள்ளது. எனவே, சைவ உலகம் இதிலே தன் கவனத்தைச் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். அன்று நம் வேந்தர் இமயத்தில் தமிழ்கொடி நட்டனர். இதுபோன இடம் தெரியவில்லை. ஆனால் இன்று நம் சிவத்திரு ஞானப் பிரகாச அடிகள் தேவாரத் தமிழை அழியாப் பெட்டகமாக இமய முகட்டிலே பொறித்துள்ளார். அதைக் காப்பதும் கடமை. ஞான சம்பந்தப்பெருமான், இக்கேதாரத் திருப்பதிகத்தில் ''இங்கு இருக்கிற அடியவர்கள், தொண்டர்கள் தங்களுடைய ஐம்புலன் களாகிய கட்டுப்பாடற்ற களிறுகளை அடக்குகிறார்கள். அதற்கு அவர்கள் கையாண்ட வழி, மிக எளிமையானது. யானையை அடக்க யானைப் பாகர்கள். அங்குசத்தைப் பயன்படுத்துவார்கள். அதைப் போலே ஐம்புலன்களாகிய களிறுகளை அடக்க'கேதார நாதனுக்கு, இண்டைமாலை தொடுத்து, வழிபாடு செய்தல் என்கிற அங்சுத்தால் அடக்கி ஆள்கிறார்கள்'' என அழகாகக் குறித்தார். அது மட்டுமல்ல இந்தக் கேதாரத்தில், அற்புதமான ஒரு நாடகம் நடைபெறுவதாகக் கூறுகிறார் சம்பந்தர்.

நாடகம் என்றால், பின்னணி இசை, ஆடுகிற மங்கை அதனைக் கண்டு மகிழ்ச்சியோடு கரவொலி எழுப்பி எழுந்து களித்து ஆரவாரம் செய்ய ரசிகர்களும் தேவையல்லவா? இந்தக் கேதாரத்தில் மயில் ஆட, வண்டு பாட அதனைக் கண்டு மானகன்று துள்ள, வரிக் கொண்டை மீனானது எழுந்து களித்துக் கூத்தாடுகிறது. எல்லா ரசிகர்களுமா எழுந்து கூத்தாடுவார்கள்? உயர்தர ரசிகர்கள் வைத்த கண் வாங்காது, விழித்துப் பார்ப்பார்கள். அதைப் போல இதனை அங்கிருந்த சுனையில் உள்ள நீல

மலர்கள் தன் விழிகளால் பார்த்து ரசிப்பதாக ஞான சம்பந்தப் பெருமான் குறித்தார். இதோ அந்தப் பாடல்

தொண்டரஞ்சு களிறு மடக்கி சுரம்பார் மலர்
இரண்டைக்கட்டி, வழிபாடு செய்யுமிடமென்பரால்
வண்டு பாட, மயில் ஆட, மான்கன்று துள்ள வரி
கெண்டை பாய சுனை நீல மொட்ட வரும் கேதாரமே.

இந்தக் கேதாரத்தில் முனிவர்கள் பலர்; ஒருவரோடொருவரர் போட்டிப் போட்டுக்கொண்டு கதிரவன் உதிக்கும் முன்னமே மந்தாகினி ஆற்றில் மூழ்கி எழுந்து எந்தாய் எம்பெருமானே என்று நெஞ்சமினிக்க வழிபாடு செய்யுமிடம் என்று அன்பர்கள் குறிப் பிடுகிற இடம் என்பதனை,

"முந்தி வந்து புரோதாயம் மூழ்கி முனிகள் பலர்
எந்தையெம்மான் என நின்று இறைஞ்சுமிடம் என்பதால்"

எனக் குறித்தார் சம்பந்தர்.

**சுந்தரர் செந்தமிழ்**

இந்தத் திருக்கேதாரத்தை நம்பியாரூரர், நம்மை எல்லாம் பார்த்து, மிக அழகாக அறிவுறுத்துகிறார். "மனிதனே! நீங்கள் ஏதோ பெரிய ஆடம்பரமாக, மாட மாளிகை, கூட கோபுரங்கள், மனைவி மக்கள், செல்வச் செழிப்பு பதவி என்று வாழ்வது பெரிதன்று எண்ணுகின்றீர்கள். இந்த வாழ்வு ஒருநாள் மண்ணாகப் போவது உறுதி. நம்முடைய பிறவிக் கடலைப் பாழாக்குவதற்கு ஒரு வழி சொல்லுகிறேன். கேளுங்கள். பிறவி இருக்கிற வரையில் வாழ்வதும், சாவதும் தடுக்க முடியாத ஒன்று. பிறந்தவனுக்குப் பெருந்துன்பம் தருவது பசி நோய். அந்தப் பசி நோயைப் போக்க அறம் செய்யுங்கள். அதற்குக் கால நேரம் பார்க்காதீர்கள். உடனே செய்யுங்கள். அப்படிச் செய்வீர்களானால் பிரமனும், திருமாலும் காண முடியாமல் பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவாகவும் இருக்கிற கேதாரநாதன் உங்களுக்கு அருள் செய்வான். கேதாரநாதன்,

கேதாரநாதன் என்று சொல்லுவீர்களானால் பிறவிக் கடலை நீந்தலாம்' என்று அருமையான திருப்பாட்டினைப் பாடினார்.

அந்தப் பாடலையும்தான் படியுங்களேன்

'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்,
பாழ்போவது பிறவிக் கடல் பசிநோய் செய்த படிதான்
தாழாதறம் செய்மின் தடம் தண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றாண்டி திருக்கேதாரம் என்பீரே!'

## அடியான் அடித் தொண்டன்

இந்தப் பதிகத்தில் நம்பியாரூரர் தன் வாழ்வின் குறிக் கோளை வெளியிட்டு தான் யார் என்பதனை மிக தெளிவாகக் குறித்தார். நாம் எல்லாரும் தலைவனாக இருப்பதையே விரும்பு வோம். இறைவனால் வன்மை பேசி வலிய ஆட்கொள்ளும் பேற்றினைப் பெற்றவரும தம்பிரான் தோழர் என அழைக்கப் படடவருமான ஆரூரர் சொல்லுகிறார்.

'நாவின்மிசை அரையனொடு தமிழ் ஞானசம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக்கு அடியான் அடித் தொண்டன்'

என்றார், என்றால் அந்தப் பெருமகனின் பணிவுதான் என்னே! அடியவர்களுக்கு அடியவர்களாக இருக்கின்ற நல்லறிவினை கேதாரநாதன் நமக்கு நல்க வேண்டும் என்று பிரார்த்திப் போமாக.

நாங்கள் திருக்கோயிலை வலம் வந்து, வலம் வந்த இடத் திலேயே திருப்பதிக் கல்வெட்டுகள் இருந்ததால் அங்கேயே அதுபற்றிய விளக்கத்தைக் குறித்து பேசினேன்.

நாங்கள் திருக்கோயிலை வலம் வந்து கேதாரநாதன் சன்னதியை அடைந்தோம். நுழைவாயிலை அடுத்து பெரிய மண்டபம் உள்ளது. அதனையடுத்து ஒரு மண்டபம். அதனை அடுத்துதான் கேதாரநாதனுடைய கருவறை உள்ளது. எல்லா ஜோதிலிங்கங்களையும் போன்றே இங்கே கீழே இறங்கித்தான் பெருமகனை வழிபட முடியும். கேதாரநாதன் திருமேனி அந்த

மலையின் சிகரமே திருமேனியாக உள்ளது. சுமார் இரண்டரை அடி உயரமும் ஏழடி நீளமும் கொண்ட பெரிய திருமேனி. அந்தத் திருமேனிக்கு மேலே விமானம் அமைத்துள்ளனர். அந்தத் திரு மேனியைச் சுற்றி தடுப்புகள் அமைத்து நாற்றிசையிலும், நான்கு வாயில்கள் போல அமைத்துள்ளனர். இந்தப் பெருமான் மீது நெய்யைத் தடவி, வழிபபாடு செய்கின்றனர். நம் தமிழகத்தைப் போல் அல்லாது, இங்கு மக்கள் பெருமான் மீது பூவும், நீரும் சுமந்து ஆட்டி ஆரத் தழுவி, தங்களுடைய தலையை, பெருமானின் அடியில் மோதி வணங்கி மகிழ்கிறார்கள். அந்தப் பெருமான் மிக அழகானவர். இந்தப் பெருமானுடைய சன்னதி தெற்கு நோக்கியது. இந்தத் திருக்கேதாரம் ஆறு மாதம் பனியினால் மூடப்பட்டு தேவர்கள் பூசை செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஆறு மாதம் மனிதர்களாலும், ஆறு மாதம் தேவர்களாலும் வழிபபாடு செய்யப் படுவதாகச் சொல்லுகிறார்கள்.

**அதிசயச் சோதி**

ஐப்பசி முழு நிலவு அன்று தொடங்கி சித்திரை மாதம் வரையிலும் தேவபூசை நடைபெறுவதாகச் சொல்லுகிறார்கள். கடைசி நாள் கதவைப் பூட்டவதற்கு முன்பாக ஏற்றிய தீபமும், மலர்களும், ஆறு மாதம் கழித்து திறக்கிற போதும் கெடாமலும், அணையாமலும் விளக்கு எரிந்து கொண்டே இருக்கிறதாம். இதனை இந்தப் பகுதி மக்கள் ஜோதி தரிசனம்' எனக் குறிப் பிடுவர். அன்றைய தினம் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி வழி பாடு செய்வர். கயிலை மலையில் பிருங்கி முனிவர் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் சிவபெருமானை அன்றி யாரையும் வணங்காத சீலர். அவர் சிவபெருமானை மட்டுமே தவிர, உமையம்மையையும் கூட வணங்காதவர். இறைவி, பெருமானை நோக்கி, ''பெருமானே! உன்னுடைய பக்தன் என்னையே வணங்காமல் இருக்கிறான்'' என்று கூறி கேதார விரதம் என்ற விரதத்தை இருந்து, பெருமானுடைய மேனியிலே இடப் பாகத்தைப் பெற்றாள். உமை இடப்பாகத்தைப் பெற்று மங்கை

பங்கனாக சிவன் நின்றபோது பிருங்கி முனிவர், என்ன செய்வது என்று திகைக்கவில்லை. இடக்கால் தானே அம்மையுடையது. எனவே, ஈசனின் வலக்காலுக்கு மலரிட்டு வணங்க எண்ணிய வராய் வண்டுருக்கொண்டு வலக்காலை மட்டும் வலம் வந்து வணங்கி எழுந்து நின்றார் பிருங்கி முனிவர்.

## அடியவரின் உறைப்பு

அப்பொழுது அம்மை உடலிலே இருக்கிற சதையெல்லாம் என்னுடையது என்று சதையைக் கீழே சிதற வைத்தார். தடுமாறி விழப்போன பிருங்கி முனிவருக்கு இறைவன் மூன்றாவது காலைக் கொடுக்க நிற்க வைத்தான். அதன் பின்பு, பிருங்கி முனிவருக்கு அம்மையும், அப்பனும் அர்த்தநாரி வடிவமாக நின்று அருள்பாலித்தார். இப்படி அம்மை, இறைவன் மேனியில் இடப்பாகம் பெற்ற அருள் தலம் இங்கேதாரம். இதே வரலாறு நம் திருச்செங்கோட்டிலும் வழங்கப்படுகிறது.

## திருமாலின் வேட்கை

திருமால் உலகமெலாம் நலம் பெறவும், தான் உய்தி பெற வும் தினமும் 1008 தாமரை மலரினால் பெருமானை வணங் கினான் ஒருநாள் ஒரு பூ குறையக் கமலக்கண்ணனான திருமால் தன் கண்ணைப்பெயர்த்துப் பெருமானை அர்ச்சித்து வழிபட்டாக சிவபெருமான் காட்சி கொடுத்து, அவன் விரும்பிய சக்கரா ஆயுதத்தை வழங்கி, உன்னுடைய வழிபாட்டை ஏற்றோம் என அனைத்துச் செல்வங்களையும் வழங்கி, இன்னும் என்ன வேண்டும் என்று கேட்டார். அப்பொழுது திருமால் ''வேதத்தின் விழுப்பொருளே நான் செய்த தவத்தால் மலைமகளோடு உன் காட்சி கிடைக்கும் பேறு பெற்றேன். நான் என்ன தவம் செய்தேன்? யான் பெற்ற இந்த இன்பம் மண்ணுலக உயிர்களெல்லாம் பெற வேண்டும். மக்கள் தங்களை தரிசித்து எல்லா நலனும் பெற்று முக்திப் பேறும் அடையவேண்டும். கேதாரம் என்ற பெயரைச் சொன்ன மாத்திரத்தில் அவர்களின் வினைகள் நீங்கித் தூய்மை

பெற வேண்டும். மேலும், நான் வழிபட்ட இம்மலை முகட்டில் தங்கிப் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்களான அடியவர்களைக் காத்து அருள்புரிய வேண்டும்'' என வேண்டினார். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பெரருமான், அதற்கு இசைந்து இந்தத் திருமுகட்டிலிருந்து அருள் பாலிக்கின்றார்.

இதே வரலாறு நம் தமிழகத் திருவீழி மிழலை என்ற திருத்தலத்திலும் வழங்கப்படுகிறது. அங்கு பெருமான் திரு வடியில் கண் உள்ளது. மணிவாசகப் பெருமான் தன்னை ஆட் கொண்ட குருநாதன் திருவடியில் கமலக்கண்ணனின் கண்ணைக் கண்டதாகப் பாடி நினைவூட்டுகிறார். அந்த அடி ''கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட'' என்பதாகும்.

## வடமொழியும் தென் தமிழும்

இந்தச் செய்தியெல்லாம் நினைந்துருகி நாங்கள் அனை வரும் சிவபுராணம் சொல்லி பெருமானுக்கு எல்லாத் திருமுழுக்கும் செய்து அன்பர்கள் அய்யாச்சாமி செட்டியார், தங்கவேலு, பண்மொழி, நம் திருக்கூட்டத்தின் சார்பில் என்று கொணர்ந்த பரிவட்டங்களையெல்லாம் பெருமானுக்குச் சாத்தி, திருநீற்றுத் திருமுழுக்கோடு மலர்காளல் அலங்கரித்தோம். அனைவரும், போற்றித் திருத்தாண்டகம் சொல்லி வழிபாடு செய்தோம். நாங்கள் போற்றி சொல்லுகிறபோது நாலு திசைகளிலும் அத் திருக்கோயிலின் அர்ச்சகர்கள் வேத மந்திரத்தை முழங்கினார்கள். பெருமானுக்கு நாங்கள் தீப ஒளி ஏற்றி, வழிபட்டபோது மற்ற மூன்று திசைகளிலும் ஒரே நேரத்தில் அவர்களும் தீப ஒளி வழிபாடு செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கேதார நாதனின் கருணையினை எண்ணி வியந்து போனோம்.

## வித்தியாசமான குருக்கள்

திரு.கணேஷ் பண்டா, இதுவரையில் நாங்கள் சந்தித்த அர்ச்சகர்களைவிட மாறுபட்டுக் காணப்பட்டார். எல்லாக் கோயில் களிலும் சொர்ணாபிஷேகம் செய்தோம். அந்த ரூபாய்களை

அர்ச்சகர்களே எடுத்துக் கொள்வர். ஒரு ரூபாய திரும்பக் கிடைப்பதே அரிது. அதனையே கேட்டுப் பெற வேண்டும். ஆனால், இந்த கணேஷ் பண்டா என்ற அர்ச்சகரோ இரண்டு கையாலும், திருநீற்றோடு ரூபாய்களை என் கரத்தில் கொடுத்து, ''பக்தி வைராக்கியம் உங்களுக்கு சித்திக்க வேண்டும் என்று நானும் பிரார்த்திக்கிறேன். நீங்களும் பிரார்த்தியுங்கள். இந்த ரூபாய்களை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள். இறைவன் எல்லா வளங்களையும் அளிப்பான்'' என்று கூறியது மிகவும் போற்றத் தக்கது.

**பெரிய உள்ளம்**

பயணம் மேற்கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் திரு நீற்று செல்வத்தோடு ரூபாயும் வழங்கப்பட்டது. நான், அநத திருநீற்றையும், ரூபாய்களையும் பெற்றபோது மெய்சிலிர்த்துப் போனேன். கேதார நாதனை வலம் வந்து ஒவ்வொருவரும் பூவும் நீருமிட்டு பெருமானை தலையாரக் கும்பிட்டு, பிரியா விடை பெற்று வந்தோம்.

**'அன்னையின் கோயிலும் அர்ச்சகரின் வழிகாட்டலும்**

கருவறைக்கு முன்புற மண்டபத்தில், அன்னை உமா தேவி இருந்து அருள்பாலிக்கிறாள். அங்கே அன்னை தவம் இருந்த இடமாதலால் அது மிகவும் சக்தி வாய்ந்த திருமேனி, கண்டாரை ஈர்க்கும் தன்மை உடையதாக உள்ளது. பெருமாட்டிக்கும் புதுச் சேலை அணிவித்து வணங்கினோம். வணங்கி ஆலயத்தை விட்டு வெளியே வந்தோம். என்றுமில்லாத முறை ஒன்றினை கணேஷ் பண்டா எங்களுக்கு எடுத்துச் சொன்னார். அது என்ன என்றால் பஞ்சாட்சரத்தைச் சொல்லிக்கொண்டே இந்தக் கோயிலை ஐந்து முறையோ, ஏழு முறையோ வலம் வந்து வணங்குதல் வேண்டும். அதுவே இங்குள்ள வழிபாட்டு முறை என்றார்.

அதன்படி நாங்கள் ஐந்து எழுத்தை நெஞ்சமுத்தி, நா, மெல்ல ஒலிக்க ஏழுமுறை வலம் வந்து விழுந்து வணங்கி ஜபம்

செய்து தியானம் செய்து, வழிபாட்டை நிறைவு செய்தோம். திருத்தொண்டத் தொகையில் முழு நீறு பூசிய முனிவர்க்கும் அடியேன் என்கிறார் ஆரூரார். அதனால் நாம் இதுவரை அத்தகைய முனிவர்களைக் கண்டதேயில்லை. ஆனால் இக்கேதாரத்தில் நிறைய மேனி முழுவதும் திருநீறு சடைமுடி தரித்து கண்மணி அணிந்த முழுநீறு பூசிய முனிவர்களை முதல் முறையாகக் கண்டோம்.

## கேதாரப் பொருள்

தலங்களுக்குள்ளே சிறந்தது கேதாரம் என்று கேதார காண் டம் என்று நூல் சொல்லுகிறது. கேதாரம் என்ற சொல் மூன்று பொருள்களை தன்னகத்தே கொணடது. முதலாவது, சிவன் கங்கையை முடியில் தாங்கிய நிலையை உணர்த்துவது. இரண் டாவது, அர்ச்சுனன் பாசுபதம் பெறுவதற்கு தவம் இயற்றியபோது வேடுவ உருவில் தோன்றிய பெருமானுக்கும், அர்ச்சுனனுக்கும் நடந்த போரில் வில்லால் அடிபட்டு வடுவுடைய நிலையைக் குறிபப்பது. மூன்று, கங்கையை முடியில் தாங்கி பூமியில் விட்ட வரலாற்றைக் குறிப்பது.

'கே' என்றால் கலை. 'தாரா' எனில் தரித்தல், மனைவி, பிளவு என்ற மூன்று பொருள்களைக் கொண்டது. எனவே இந்த மூன்று வரலாறுகளையும் இணைக்கின்ற வகையில் கேதாரம் என்ற சொல் அமைந்திருப்பது அரியதாகும். இந்தக் கேதாரப் பெருமான் திருக்கோயிலுக்குப் பின்புறம்தான் ஆதி சங்கரரின் சமாதி உள்ளது. அங்கே பரந்த புல்வெளியில் மிக உயர்ந்த நினைவுத் தூணும் அவர் கரத்தில் இருந்த தண்டமும் நிறுவியிருக்கின்றனர்.

அங்கே சென்று, பார்த்து, சிறிது நேரம் மவுனமாக இருந்து அஞ்சலி செலுத்தினோம். இந்தத் திருக்கோயிலின் வடகிழக்கு மூலையில் மூன்று கிலோ மீட்டர் சென்றால் பஞ்ச பாண்டவர் சொர்க்க வாசல் என்னும் மலை வழி உள்ளது. இந்தக் கேதாரக திருக்கோயிலில் முதலிலே தங்கியிருந்து வழிபாடு செய்தவர்கள் பஞ்ச பாண்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு

பல்வேறு காலங்களில் பல்வேறு மக்கள் இந்தத் திருக்கோயிலைத் திருப்பணி செய்திருக்கிறார்கள். மிக உயர்ந்த விமானம் தங்கக் கலசத்தோடு மிளிர்கிறது.

## வழிபாட்டு முறை

இங்குக் காலையிலே நிர்வாண தர்சன் என்ற பூசை சிறப்பாக நடைபெறுகிறது. மாலையிலே சிங்கார தரிசனம் என்ற வழிபபாடு நடைபெறுகிறது. நாங்கள் கேதாரநாதனை ஆராதகாதலோடு மீண்டும் ஒருமுறை வணங்கி கணேஷ் பண்டா இல்லத்தில் கையில் கொண்டு சென்ற கட்டமுதை உண்டு, அவரிடம் பிரியா விடைபெற்று மாலை நான்கு மணி அளவில் கவுரிகுண்டை வந்தடைந்தோம்.

லக்னோ என்பது உத்திரப்பிரதேசத்தின் தலைநகரம், சென்னையைப் போன்று மிகப் பெரியதாகவும், அழகாகவும் இல்லை என்றாலும் வசதி கொண்ட உயர்ந்த கட்டடங்களைக் கொண்ட நகரமேயாகும். இந்த நகரம் இலக்குவன் பெயராலல், லக்ஷ்மணபுரி என்று பண்டைய நாளில் அழைக்கப்பட்டு வந்தது. இந்த நகரத்தை உருவாக்கியவன் இலக்குவன் என்பர். இங்கு இலக்குவனுடைய கோயில் ஒன்று இருந்தது. அதனை இடித்து மாசூதி கட்டியுள்ளனர். அங்கிருந்து புறப்பட்டு அலகாபாத் நோக்கி நாங்கள் புறப்பட்டோம்.

கௌரி குண்டிலிருந்து புறப்பட்டு ரிஷிகேசம் வழியாக லக்னோ சென்றிருந்தோம்.

# 10

அலகாபாத் என்பது பிரயாகை என்றும் திரிவேணி சங்கமம் என்றும கூறப்படுகிறது. அங்கு கங்கையும் யமுனையும சரஸ் வதியும் பெண்கள் சடைபின்னுவது போன்று ஒன்றோடொன்று பிணைந்து ஓடுவதால் இதற்கு திரிவேணி சங்கமம் என்று பெயர். இந்தத் திரிவேணி சங்கமத்தில் நீராடுவது மிகப் பெரிய சிறப்பு

என்று நம்முடைய நூல்கள் பேசுகின்றன. நாங்கள் அலகாபாத் ரயில் நிலையத்திலிருந்து பேருந்துது மூலமாக திரிவேணி சங்கமத்திற்குச் சென்றோம். அங்கே போய் நின்றுகொண்டு, கங்கையும், யமுனையும் தானே இருக்கிறது. சரஸ்வதி எங்கே? என்று கேட்டார். சகோதரி திருமதி சரஸ்வதி அவர்கள். அதற்கு நீங்கள்தான் அது என்றேன் நகைச்சுவையாக. அந்த நதி, மறைமுகமாகக் கலக்கிறது.

இந்த நதியில் நீராடும்போது, நதியில் நின்று, இறைவனைப் பிரார்த்தித்து, ஒன்றாய் உலகனைத்தும் ஆனார்தாமே! என்ற அப்பர் அடிகளின் பாடலைச் சொல்லி, அவரவர் மூதாதையர்களும குடும்பத்தாரும் நலம்பெறப் பிரார்த்தித்து மூழ்கினோம். இப்படி மூழ்குவதற்கு அகத்தே ஒரு கருத்து உண்டு. 'இடகலை, பிங்கலை, சுழிமுனை' என்ற மூன்று நாடிகளும் கூடுகின்ற புருவநடுவில் மூழ்க வேணடும் என்பதைப் புறத்தே வெளிப்பபடுத்தவே நம்முடைய முன்னோர்கள் இதனை உருவாக்கினர்.

## தண்டம், முண்டம், பிண்டம்

திரிவேணி சங்கமத்தில் மூழ்குவது உடலை மறந்து உலகை மறந்து தியானத்தில் இறைவன் திருவருளில் மூழ்குதல் வேண்டும் என்பதே அடிப்படை 'காசியில் தண்டம், கயையில் பிண்டம், பிரயாகையில் முண்டம்; என்பது ஒரு பழமொழி. அதாவது காசியில் விசுவநாதனை வீழ்ந்து வணங்குவது. கயை என்ற தலத்தில் மூதாதையர்களுக்கு பிண்டம் இடுவது, பிரயாகையாகிய திரிவேணி சங்கமத்தில் மொட்டை அடித்துக் கொள்வது என்கிற நிலையை உருவாக்கினார்கள். மொட்டை அடிப்பது என்பது மனிதன் உலகப் பற்றுகளை விடுதல் வேண்டும் என்பதைக் குறிக்கவே மொட்டை அடிக்கிற பழக்கம் உருவானது. ஆனால் பின்னாளில் எது எதற்கோ மொட்டையடிப்பது என்பது பழக்கத் திற்கு வந்துவிட்டது.

இந்த நதியின் கரையில் அசோகரால் கட்டப்பட்ட கோட்டை யைப் பர்க்கச் சென்றோம். கோட்டையின் பெரும்பகுதி ராணுவ

அலுவலகமாக உள்ளது. பூமிக்கடையில் குகை போன்ற அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். இங்கு பல தேவர்கள், முனிவர்கள், இன்னும் சொல்லப்போனால், நமக்குத் தெரியாத கேள்விப்பட்ட பல உருவங்கள் உள்ளன. உதாரணமாக ஆதி சேடன், யமன், குபேரன் போன்றவர்களுக்கெல்லாம் திருமேனி உள்ளது. அங்கு வட ஆல விருச்சம் என்னும் புனித மரம் கரையில் உள்ளது. அதன் வேர் இக்குகையில் உள்ளது.

### பசியின்றி இருக்க

இதன் நிழல் காசியில் விழுவதாகச் சொல்கிறார்கள், இது எந்த அளவு உண்மையோ நாம் அறியோம். அதனையடுத்து, படுத்துக் கொண்டிருக்கிற அநுமனைப் பார்த்தோம். மிகப் பெரிய மூர்த்தி. அங்கு வழிபட்டு அங்கிருந்து நம்முடைய சங்கராச் சாரியார் சுவாமிகள் அங்கு பெரிய சிவாலயத்தைக் கட்டி இருக் கிறார். அங்கு சென்று வணங்கி, பரத்துவாச முனிவர் இருந்த பர்ணசாலைக்குச் சென்றோம்.

இராமனும், சீதையும், லட்சுமணனும் கங்கைக் கரையைக் கடந்த சித்திரக்கூடத்தில் தங்கி, பின் பரத்துவாசர் ஆசிரமத்தில் சிலகாலம் தங்கி அவரிடம் விடைபெற்றுபோது, அவர் ''இங் கேயே தங்கி இருக்க வேண்டும். 12 ஆண்டு காலமும் என் னுடனேயே தங்கி இருங்கள்'' என்றார். அதற்கு இராமபிரான், ''நாங்கள் என்னரும் தந்தை மற்றும் அன்னையின் ஆணைக் கேற்ப, பூழி வெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி, ஏழிரண்டாண்டு காலம் பதி பல கண்டு அங்குள்ள பெருமானை வணங்கி புண்ணியம் சேர்க்க வேவ்ணடும். எனவே அருள் கூர்ந்து எங்களுக்கு ஆசி அளித்து அனுப்பி வையுங்கள்'' என்று வேண்டி னார். பரத்துவாச முனிவர் அவர்களுக்குப் பிரியாவிடை கொடுக்கும்போது, அவர்களிடம் ''நான் உங்களுக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறேன். பசி வரும்போது மந்திரத்தைச் சொன்னால், உங்களுக்குப் பசி அடங்குவதோடு, பசியும் எடுக் காது'' என்று கூறி மந்திரத்தைச் சொல்லி அனுப்பினார் என்பது புராண வரலாறு.

இப்பொழுது பரத்துவாச முனவர் இல்லை. அந்த மந்திரமும் என்னவென்பதும் தெரியவில்லை. அப்படி ஒரு மந்திரம் நமக்குத் தெரிந்தால் இந்தப் பயணத்தின்போது பசி பற்றிய கவலையே இல்லாமல் இருந்திருக்கலாம்., என்ன செய்வது? பரத்துவாச முனிவர் வழிபாடு செய்த சிவலிங்கத் திருமேனி மட்டும் இன்றைக் கும் வழிபாட்டிற்கு உரியதாக இருக்கிறது. அதை மனங்குளிரத் தரிசித்து மகிழ்ந்தோம்.

## நேருவின் தீரம்

நாங்கள் அங்கு வழிபட்டு விட்டு. மோதிலால் நேரு மற்றும் ஆசியஜோதி பண்டித நேரு ஆகியோர் வாழ்ந்த ஆனந்த பவனத்தைப் பார்க்கச் சென்றோம். அன்று திங்கட்கிழமை. வாராந்திர விடுமுறை என்பதால் பூட்டி இருந்தது. எனவே நாங்கள் வெளியில் இருந்தே பார்த்துவிட்டுத் திரும்பினோம். அப்போது என் மனக்கண் முன் பண்டித நேருவைப் பற்றிய சிநதனையாய் இருந்தது. ஒருமுறை அடிமை நாட்டில் திரிவேணி சங்கமத்தில் கும்பமேளாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆற்றின் கரையில் தடுப்பாகப் பெரிய தடுப்பு அமைத்துக் காவல் இருந்தனர். ஆயரக்கணக்கான மக்கள் கூடி நின்று திகைத்து அச்சத்தோடு இருந்தனர். நேரு பெருமகன் ஆவேசமாக வந்து தடுப்பின்மீது ஏறி ஆற்றில் குதித்தார். மக்களும் ஏறிக் குதித்து ஆறே மக்கள் வெள்ள மாயிற்று. அப்போது காவல் துறையினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். இப்படி எத்தனையோ நினைவுகள்.

இந்த திரிவேணி சங்கமத்திற்கு முகமதியர் காலத்தில் திலகா பாத் என்று பெயர் வந்து இப்போது அலகாபாத் என்று வழங்கு கிறது. இதற்கு புராண காலத்தில் பிரதிஸ்டானபுரம் என்று பெயர். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு ரயிலடிக்கு வந்து, இரவு ரயிலில் புறப்பட்டு காலையில் அயோத்தியை அடைந்தோம். அயோத்தி கோசல நாட்டின் தலைநகரம். அயோத்தி என்ற சொல்லுக்கு யுத்த பயம் இல்லாத ஊர் என்று பொருள். சூரிய குலத்தில் தோன்றிய மன்னர்கள் வழிவழியாக இருந்து அரசாண்ட இடம்.

கம்பனும் வால்மீகியும் இந்த அயோத்தி நகரை மிகச் சிறப் பாகப் பாடியுள்ளனர். பைசாபாத் என்பது இந்த அயோத்தியின் இன்றைய ரயில் நிலையப் பெயராகும். ரயில் நிலையத்திலிருந்து 3 மைல் தொலைவில் அயோத்தி என்னும் இந்த அணிநகர் உள்ளது. அயோத்தின் அருகில் சரயு நதி என்னும் புனித ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த ஆற்றின் அகலம் இரண்டு மைல் இருக்கும் எனறால் அதனைப் பற்றி நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

## இராமன் வைகுண்டம் செல்ல...

இராமன், இராவண வதத்திற்குப் பிறகு, முடிசூட்டி, அயோத் ததியைப் பன்னெடுங்காலம் ஆண்டார் அறக்கடவுள் இராமன் இனி வைகுண்டம் வரவேண்டும். இந்த மண்ணுலகில் வாழ்ந்தது போதும் எனறு நினைவுபடுத்தி வந்தார். ஒரு தனி இடத்திற்கு வந்த அறக்கடவுளும் இராமபிரானும் பேசிச் சென்றனர். இலக்கு வனை அழைத்து ஒருவரையும் உள்ளே விடாதே என்று சொல்லிச் சென்றார் இராமன். அப்போது துருவாச முனிவர் இராமனைச் சந்திக்க வந்தார். காவல்புரிந்த இலக்குமணன் துருவாசரைத் தடுக்க அஞ்சி உள்ளே போக விட்டு விட்டார் அண்ணனுடைய வார்த்தையை நிறைவேற்ற முடியவில்லையே என்று வருந்தி, ஆதிசேடனாக உருவெடுத்து வைகுண்டம் சென்றார்.

இராமன், பரதர், சத்ருக்கனர் மூவரும் சரயு நதியில் நீராடிய போது. அந்த சரயு நதியிலிருந்த இராமபிரானும் மற்றவர்களும் வைகுண்டம் சென்றார்கள் என்று, உத்தர ராமாயணம் பேசுகிறது. இராமபிரான் வைகுண்டம் சென்ற இந்த சரயு நதியில் நாங்களும் நீராடி அதன் கரையிலே இருக்கும் மண்டபததில் வழிபாடு செய்து முடித்தோம்.

## இராமனும் இராணுவமும்

இராமர் அவதரித்த இடம் இன்றைக்கு பாபர் மசூதியாக விளங்குகிறது. இன்றைக்கு பத்திரிகைகளில் பெரிதும் பேசப்

படுகின்ற இராமஜென்ம பூமி இங்குதான் இருக்கிறத. அங்கு இராணுவம் குவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இராமனின் கோயில் கட்டுவதற்கு மிகப்பெரரிய பள்ளம் கலவரத்தில் இதன் சரயு நதியின் பாலத்தின் மீது தான் இராணுவத்தால் தாக்கப்பட்டு பலர் ரத்தம் சிந்தி உயிர் துறந்த இடம் இருக்கிறது. நாங்கள் அங்கே சென்று, இராமனுடைய திருவுருவம் வைக்கப்பட்ட இடத்தைப் பார்த்து வழிபடச் சென்றோம். இராணுவ அதிகாரிகள் அனை வரையும் பரிசோதனை செய்து வரிசையாக விட்டனர். அங்கே இராமனுடைய திருவுருவம் பாபர் மசூதியின் பின்புறப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கிறது. அதனை வழிபாடு செய்துவிட்டு வெளியில் வந்தோம். இராமர் கோயில் கட்டுவதற்கு இந்தியா முழுவதிலும் வழிபாடு செய்யப்பட்டு, இராம மந்திரம் எழுதப் பட்ட ஏராளமான செங்கற்கள் மாநில வாரியாக அடுக்கப்பட்டிருக் கின்றன.

நாங்கள் அதனைப் பார்வையிட்டு, தமிழ்நாட்டுக்கல் எங்கே என்று தேடினோம். தமிழகத்தில் இருந்து வந்த கற்களும் அழகாக அடுக்குப்பட்டிருப்பதனைப் பார்த்தோம் அங்கிருந்த இராமர் பட்டாபிஷேகம் புரிந்த இடத்தில் அழகான கோயில் அமைத் திருக்கிறார்கள். விலையுயார்ந்த அணிகலன்களால் இராமன், சீதை, லட்சுமணன் திருமேனிகளும் அலங்கரிக்கப்பட்டு உள்ளம் கவர்கிற வகையில் உள்ளது. அங்கு சென்று வழிபாடு செய்து விட்டு, அங்கே அமர்ந்து பிரார்த்தனை செய்தோம். இராமனுடைய பாடல்களை சகோதரி சரஸ்வதி அவர்கள் பாடினார்கள். சென்ற கலவரத்தில் உயிர்நீதத தொண்டர்களுக்காக இடைவிடாது பஜனை நடைபெறுகிறது.

**தொண்டுக்கிழவரின் உறுதி**

அங்கே நடந்த போராட்டத்தை முன்னிருந்து நடத்திய கல்யாண்சிங் என்ற பெரியவர் அங்கே இருக்கிறார். அவர் நிறைய அடிபட்டு, உடலின் பாகங்களில் தையல் போடப்பட்டிருக்கிறது. எழுந்து நின்றால் மயக்கம் வருகிறது, தலை சுற்றுகிறது எனறு

தெரிவித்தார். ஆனால் அவரை எங்களிடையே பேசச் சொன்ன போது அவர் குறிப்பிட்டார். ''என் வாழ்நாளில் இராமர் கோயிலை உறுதியாகக் கட்டி முடிப்பேன்'' என்று தெரிவித்தார். அவருடைய உறுதி நம்மைத் திகைக்க வைத்தது.

அங்கு இராமனைப் பற்றி நான் சிறிது நேரம் பேசினேன். அதனை நம்முடைய வழிகாட்டி சுந்தரம் அந்தப் பெரியவருக்கும் மற்றவர்களுக்கும் மொழி பெயர்த்தார். அவரர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்து, ''இந்தத் திருப்பணி நிறைவேற உங்கள் திருக்கூட்டத் ததின் நல்லாசி வேண்டும் விரைவில் அங்கே கட்டடப் பணி தொடங்க இருக்கிறோம் அதற்காக இந்தியா முழுவதிலுமிருந்து சாதுக்கள் இங்கே வரவிருக்கிறார்கள். அவரர்களுக்கு உணவளிக்க உங்களால் இயன்ற பொருளுதவி செய்யுங்கள்'' என்று கேட்டார்.

அந்த இடத்தில் நாங்கள் சென்றபோதுக்கூட பெரிய பெரிய பாத்திரங்களில் சமைத்து வைக்கப்பட்டிருந்தது. நாள்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கே உணவு உண்ணுகிறார்கள். நம்முடைய அன்பர்களெல்லாரும் ஒரு நிதியினைத் திராட்டி அந்தப் பெரியவரிடம் கொடுத்தோம். அவர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்து, அந்தத் திருக்கோயிலின் சார்பாக பிரசாதம் அளித்து மரியாதை செய்தார்கள். தற்போது 2001-ல் மசூதி இடிக்கப்பட்டுள்ளது.

**சீதையின் மாளிகை**

அங்கிருந்து கனக பவனம் என்று சொல்லக்கூடிய இடத் திற்குச் சென்றோம். அதுதான் சீதா பிராட்டி தங்கியிருந்த அரண் மனை என்று சொல்லப்படுகிறது. அங்கே இராமன், சீதை, லக்குமணன், அனுமன் முதலியோருடைய திருமேனிகள் பொன்னாலே செய்யப்பட்டு, மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு, கண்ட உடனே கைகூப்பும் வண்ணம் அமைந்துள்ளன. அதன் முன்னே மிகப் பெரிய கூடம் இருக்கிறது. அதனை அடுத்து, மிகப் பெரிய திறந்தவெளிக்கூடம் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டு,

சுமார் 2000 பேரர் அமர்கிற அளவில் மிக அழகாக முற்றத்தைக் கொண்டது.

அங்கிருந்து இராம காதையை எழுதிய வால்மீகி வாழ்ந்த வாழ்மீகி பவனத்திற்குச் சென்றோம்.அது இரண்டு மாடிக் கட்டிடம். மிகப் பரந்த, உயர்ந்த கட்டடம், அங்கு வால்மீகி இராமாயணம் முழுவதும் சலவைக் கல்லால் பொறித்து வைக்கப் பட்டு இருக்கிறது. இநத அணிநகராம் அயோத்தியைப் பற்றி கவிச் சக்கரவர்த்தி கம்பனும் நம்முடைய ஆழ்வார்களும் என்ன சொன்னார்கள் எனறு அறிய ஆவலுள்ளவர்களாக இருப்பீர்கள் என்பதை நான் உணர்கிறேன். கன்னித் தமிழ் வளர்த்த கம்பன் கவிதையைக் காட்டத் தவறுவேனா? இந்த அயோத்தி மாநகரம் கம்பனின் உள்ளம் கவர்ந்த இடம். இதைப் பற்றி அவன் கூறும் பாடலை இதோ படித்துப் பாருங்கள்.

'செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளில்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும் வடநூல்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுலகத்தோம் யாவரும் தவம் செய்
தவறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுலகத்தோர் இழிவதற்கு கறுத்தி
புரிகின்றது அயோத்தி மாநகரம்'

என்றும்,

'நிலமகள் முகமோ? திலகமோ? கண்ணோ?
நிறைநெடு மங்கல நாணோ?
இலகு பூண் முலைமேல் ஆரமோ? உயிரின்
இருக்கையோ? திருமகட்கு இனிய
மலர்களோ? மாயோன் மார்பினன் மணிகள்
வைத்த பொற்பெட்டியோ? வானின்
உலகின்மேல் உலகோ? ஊழியின்இறுதி
உறையிலோ? யாதென் உரைப்போம்?

என்னும் கம்பனே கை விரித்த பிறக நானென்ன எழுத முடியும்? இந்த அயோத்தி முத்தி நகரங்களில் ஒன்றாகும்.

## ஆழ்வார்களின் அருந்தமிழ்

'அங்கண் நெடு மதில் புடைசூழ்
அயோத்தி என்னும் அணி நகர்'
என்பார் குலசேகராழ்வார்.
சூர்ப்பநகையை செவியொடு மூக்கு அவள்
ஆக்க அரிந்தானைப் பாடிப்பற
அயோத்திக்கரசனைப் பாடிப்பற'
என்று பாடுகிறார் பெரியாழ்வார்.
'ஆட்டிய ஆடி திறன் அயோத்தியெம்மரசே
அரங்கத்தம்மான் பள்ளியெழுந்தருளாயே'

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் எம்பெருமான் பள்ளி யெழுச்சியில் குறிப்பிடுகின்றார். ஆழ்வார்கள் ஐவரால் பாடப் பட்டது என்றால் அயோத்ததியின் பெருமையை என்னவென்று சொல்வது? நாங்கள் ரயிலடிக்குச் சென்று உணவு உண்டு, சற்று ஓய்வுக்குப்பின் ரயிலில் புறப்பட்டோம்.

## இந்துக்களின் இதயம்

காலை 6 மணிவரையில் ரயிலிலேயே தங்கி இருந்துவிட்டு அங்கிருந்து கார்கள் மூலம், காசியினுடைய மையப்பகுதிக்குச் சென்று, ராம் குமார்ஜி சததிரத்தில் சென்று தங்கினோம். அந்தச் சத்திரம் விசாலாட்சி காட் என்று சொல்லக்கூடிய பிரதானமான கங்கையின் படித்துறையில் உள்ளது. அங்கே குளித்து காலை வழிபாட்டை முடித்து காசி விசுவநாதப் பெருமானுக்கு எல்லா இடங்களைப் போலவே திருமுழுக்கு அர்ச்சனை வழிபாடு செய் தோம். அங்கிருந்து காசி விசுவநாதருடைய பழைய இடத்தைப் பார்க்கப் போனோம்.

அங்கும் பழைய காசி விசுவநாதர் ஆலயத்தை இடித்து, தரைமட்டமாக்கி, சிவலிங்க திருமேனியை அஙகிருந்து கிணற்றில்

போட்டுவிட்டு அங்கே மசூதியைக் கட்டி உள்ளனர். இப்போது பார்த்தாலும் அந்த மசூதியில் நம்முடைய கோயிலின் இடிந்த ஒரு பகுதி இருக்கிறது.

தற்போதுள்ள திருக்கோயில் 400 ஆண்டுகளுக்கு முன் னால் வாழ்ந்த தமிழகத்தைச் சேர்ந்த குமரரகுருபரரால் நிர் மாணிக்கப்பட்டது. காசி பன்னெடுங்காலமாக இந்துக்களின் இதயத்தில் நீங்காத இடம்பெற்ற திருக்கோயிலாகும்.

'காசியை நினைக்க முத்தி, காசி என்றுரைக்க முத்தி,
காசியைக் காண முததி, காசியில் வசிக்க முத்தி,
காசியைச் சூழ முத்தி, காசியைக் கேட்க முத்ததி,
காசியில் வசித்தோர் தமமைக் கண்டு தாழ்ந்திடுதல் முத்தி'

என்பது ஓர் அரிய பாடல். புண்ணியத் தலங்கள் யாவற்றிலும் மிகச் சிறந்த மணிமுடி போன்றது காசி. காசி என்ற சொல்லுக்கு ஒளிமய மானது என்பது பொருருள். இங்கே கங்கையாறு தெற்கிலிருந்து வடக்காக 20 மைல்வரை ஓடுகிறது. இந்த நதி இங்கு சற்று வளைந்து வளைந்து போவதினால் கரையில் உள்ள 64 தீர்த்தக் கரைகளையும் ஓரிடத்திலிருந்தே பார்க்கலாம்.

காசிக்கு வடக்கே வரணா என்ற ஆறும். தெற்கே அசி என்ற ஆறும் இங்கு வந்து சங்கமம் ஆகின்றன. இந்த இரண்டு ஆறு களும் இணைந்திருப்பதால் இதற்கு வாரணாசி என்று பெயர். தற்போது வாரணாசி என்றுதான் உள்ளது. பனாரஸ் என்ற அரசன் இந்த நகரத்தை ஆண்டதால் பனாரஸ் என்ற பெயர் வந்தது. பனாரஸ் என்றால் நம் தாய்மார்களுக்கு நினைவு வருவது அங்கு தயாராகும் பட்டுப் புடவையே இங்கு சிவபெருமான மகிழ்ச்சி யுடன் தங்கி இருப்பதால் ஆனந்த வனம் என்றும் சர்வ சங்கார காலத்தில் எல்லாத் தேவர்களும் முடிந்த இடம் அது. ஆதலின் மகாமயானம் என்றும் கூறுவர்.

### காசியின் நுண்பொருள்

காசி என்பது புருவ நடு என்று அறிக. புருவ நடுவில் அரு வின் விளக்கம் அமைந்துள்ளது. அதைக் குறிக்கும் வகையில்தான்

அங்கு பொட்டு வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. புருவ நடுவில் பெருமானை எழுந்தருளச் செய்து, ஏனைய உலக நாட்டங்களை மறந்துவிட வேண்டும். மற்ற உணர்வுகளை இயக்கச் (மறையச்) செய்து, இறை நாட்டத்தையே நாடுதல் வேண்டும். அப்படி இறப்பவர் முத்தி பெறுவர். இதனைக் குறிக்கவே காசியில் இறக்க முத்தி என்ற பழமொழி தோன்றியது.

ஆனால் காலப்போக்கில் காசியில் சாவது சிறப்பு என்று தவறாகக் கருதி, கொஞ்சம் உடலல்நிலை மோசமானால் உடனே காசிக்கு சென்று இருந்து இறப்பது. என்ற முடிவு ஏற்பட்டது. இந்தக் காசிக்கு அப்பர் அடிகள் திருத்தாண்டகம் பாடியுள்ளார். அந்தத் திருத்தாண்டவம் சேத்திரக்கோவை எனப்படும். அந்தப் பாடலைப் படித்து மகிழுங்களேன்.

'மண்ணி படிக்கரை வாழ் கொளிப்புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி, வேள்விக்குடி
விளமர், விராடபுரம் வேட்களத்தூர்
பெண்ணை அருட்டுறை, தன் பெண்ணாகடம்
பிறம்பில் புலியூர் பெருவேலூரும்
எண்ணை கழற்காரை களிப்பாலையும்
கயிலாய நாதனையே காணலாமே.'

# 11

## காசியில் எதை விடுவது?

இங்கு சப்தகிரி பூசையும் அர்த்த ஜாம வழிபாடும் சிறப்பானது. நாங்கள் காசிநாதனை வழிபட்டு, அன்னபூரணி, விசாலாட்சியையும் வழிபட்டு வந்தோம். காசி விசுவநாதர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள விநாயகரர் கோயிலை வழிபட்டு, காசி விசாலாட்சி ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தி, வழிபாட்டின் இறுதியில் பேசும்போது கூறினேன்.

"பண்டைய நாளில் காசிக்குச் சென்றால் எதையேனும் விட்டு விடுவதற்கு உறுதி எடுப்பபது என்பது வழக்கில் இருந்து வருகிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நாட்டிலே மக்களுக்கு குறுக்கு வழியைக் காட்டுகிற புரோகிதக் கும்பல் நோக்கத்திற்கு மாறாகவே செய்தது. காசிநாதனை வணங்குகின்ற நாம் நம்மிடத்திலே இருக்கின்ற பாவங்களைத் தொலைக்கின்ற வகையில் தீய செயல்களை விட்டொழீக்கிற வகையில் உறுதி எடுப்பதையே நம் பெருமக்கள் வற்புறுத்தினார். அப்படி நம்மிடம் உள்ள மாசுகளை - வாழ்வியல் குறைகளைக் களைவதற்கு காசிப் பயணத்தைப் பயன்படுத்தி, மனிதர்களுக்குள்ள ஆணவ மலம், கன்ம மலம் மாயா மலம், ஆகிய மும்மலங்களில் ஏதேனும் ஒன்றையாவது விட்டொழித்ததற்கு அடையாளமாக ஒரு கறுப்புக் கயிறைக் கட்டி உறுதி எடுப்பது வழக்கமாயிருந்தது. மற்றபடி விரும்பியுண்ணும் எதையாவது விட வேண்டும் என்பது பொருளன்று.

இன்றைய நாளில் யாரும் தாங்கள் பழக்கங்களை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. இதற்கு குறுக்கு வழியாக புரோகிதர்கள் காட்டிய வழி எதையாவது விடுவது என்று சொல்லி ஓர் இலை, ஓர் காய், ஒரு கனிவிட்டால் போதும் என்று தவறாக வழிகாட்ட அதிலிருந்து தப்பிக்கின்றவர்கள் அரசு இலை, ஆல இலை, அத்திப்பழம் சுண்டைக்காய் போன்றவற்றை விடுவதாக உறுதி எடுத்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு விடுகின்றனர். இது வேதனைக்குரிய போக்கு.

உண்மையில் தங்களிடம் உள்ள குற்றம் குறைகளை மாசுகளைப் போக்கிக்கொள்ள உறுதி எடுப்பதுதான் மிகச் சிறந்த ஒன்றாகும். நீங்கள் எதை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள், நன்றாக சாப்பிட்டு ஆரோக்கியமாக இருங்கள், ஆனால் சாப்பிடக் கூடாததை சாப்பிடுவதில்லை என்று உறதி எடுங்கள். என் னிடத்தில் உள்ள குறை என்னவென்றால் நீண்டநாள் என் தந்தை யாரும் மற்றவர்களும் வலியுறுத்தியது நான் அரசியலிலிருந்து

முழுமையாக விலகி ஆன்மிகப் பணியில் ஈடுபட வேண்டும் என்று விரும்பியும் நிறைவேறவில்லை. எனவே இந்தப் பயணத் தின் நினைவாக இனி நான், முழுமையாக ஆன்மிகப் பணிக்கே என்னை ஈடுபடுத்துவேன் என்றும் ஒரு கட்சிக் கொடியின் கீழ் நின்று பேசுவதில்லை என்றும் உறுதி எடுத்துக் கொள்கிறேன்'' என்று அறிவித்தேன்.

**பயனுள்ள உறுதி**

அங்கிருக்கிற மற்ற அன்பர்களும் தங்கள் தங்கள் இடர்களை விடுதல் வேண்டும் என்று உருக்கமாகப் பேசினேன். அதற்குப் பயனும் இருந்தது. நண்பர் சோமசுந்தரம், நண்பர் தங்கவேலு ஆகியோர் புலால் உண்பதில்லை என உறுதி ஏற்றனர். திரு பொன்னுசாமி அவர்கள் புலால் உணவை விடுவதாகவும் கடந்த 30 ஆண்டு காலமாக தான் உபயோகித்து வந்த வெற்றிலை பாக்கு புகையிலையை விடுவதாகவும் உறுதி அளித்தார்கள். இந்த மூவரும் திருமதி நாகரத்தினம அம்மையார் அவர்களம் சிவராத்திரி அன்று சமதீக்கை எடுப்பது எனவும் உறுதி எடுத்தனர். திரு. ஏ.ஏ. சுப்பிரமணி முதலியார் சிவ பூஜை எடுக்கவும் உறுதி மொழி எடுத்தார். இதுபோன்ற பணிகளே பயனடையதாகும். அதன் பிறகு அவரா்கள் அங்கே கடைவீதிக்குச் சென்று, சுற்றிப் பபார்த்து வரச் சென்றார்கள்.

நான், நண்பர் ராமமூர்த்தி, திருமதி செல்வம் என் துணைவி யார் மற்றும் சிலரும் கடைவீதியில் சிறிது நேரம் இருந்துவிட்டு நண்பகல் 12 மணி அளவில் மீண்டும் காசிநாதரை வழிபடச் சென்றோம். அப்பொழுது சற்று எங்களைக் கண்டு மலர்ந்த முகத்தோடு வரவேற்று வழிபாடு செய்ய அனுமதித்தார். நாங்கள் அமைதியாக பேற்றித் திருத்தாண்டகம், ஐம்பெரும் பதிகங்கள் பாடி, வீழ்ந்து வணங்கி அங்கேயே பெருமான் முன்னிலை யிலேயே அமர்ந்து ஜபம் செய்தோம்.

## குறைநீங்கியது

காலையில், வழிபாடு செய்தபோது சற்றுக்கூட்டம் மிகுதி யாக இருந்தது வழிபாடு செய்தாலும், மனம் முழுமையாக வழிபாட்டில் தோயவில்லை. நண்பகல் வழிபாட்டில் அந்தக் குறையை காசி விசுவநாதன் நிறைவு செய்தார். காசி விசுவநாதர் ஆலயத்திற்கு எதிரில் ஆறுமுப் பெருமான் பன்னிரு திருக்கரங் களோடு ஆழகுற வீற்றிருந்த அருளாசி வழங்குகின்றார். இந்தப் பெருமானுக்கு அருணகிரிப் பெருமானின் அமுதத் திருப்புகழ் உண்டு. மீண்டும் மாலையில் ஒருமுறை காசி விசுவநாதரையும் கந்தப் பெருமானையும் வழிபட்டோம். இரவு இங்கு மிகச் சிறப் பான வழிபாடு நடைபெறுகிறது. அந்த வழிபாட்டிலும் அன்பர்கள் எல்லாரும் மிகச் சிறப்பாகக் கலந்து கொண்டார்கள்.

நள்ளிரவு 11 மணிக்கு காசி விசுவநாதருக்கு இரவு பள்ளி யறை வழிபாட்டு மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

## தீர்த்தமாடினோம்.

மறுநாள் காலையில் எல்லாரும் 2 படகுகளை ஏற்பாட செய்து கொண்டு, கங்கைக் கரை ஓரமாகவே சென்றோம். காசியில் 64 குளியல் துறைகள் உண்டு. அதற்கு அங்கு கட்டம் என்ற பெயரிட்டுஅழைக்கிறார்கள். 64 துறைகளிலும் நீராடுவது என் றால் குறைந்தது 20 நாள்களாவது வேண்டும். நாங்கள் இருப் பதோ 2 நாள். எனவே முக்கியமான 3 துறைகளைத் தேர்ந்தெடுத்து அதிலே மூழ்கினோம். விசாலாட்சி துறையிலும் பஞ்ச நதித் துறையிலும் குளித்தோம். பஞ்ச நதித் துறை என்பது யமுனை, கங்கை, சரஸ்வதி, வரணா, ஆசி என்ற 5 ஆறுகளும் கலக்கின்ற இடத்திற்கு பஞ்சமுக தீர்த்தக்கட்டம் என்கின்றனர். அதிலே எல்லாரும் ஐயாற்றப்பன் அடித்தலமாகக் கருதி சென்றாடு தீர்த்தங்களாக இருக்கின்ற பெருமானை நினைந்து முழ்கினோம்.

அங்கிருந்து அந்தத் தோணியிலேயே தீர்த்துக் கரைகளை யெல்லாம் பார்த்து வரப் புறப்பட்டோம். மணிகர்ணிகா கட்டம்

என்பது மிகச் சிறந்த புனிதமிக்க கட்டமாகக் கருதப்படுகிறது. அந்த மணிகர்ணிகா கட்டத்தில் மூழ்கினால் முத்தி வீடு கிடைக்கும் என்று சொல்லப்பட்டதால் நூற்றுக் கணக்கான பிணங்களை எரிதத்து தண்ணீரிலே தள்ளி விடுகின்றனர். சற்று ஏமாந்த புதியவர்கள் கிடைத்தால் உள்ளே தள்ளிப் பிணமாக்கி எரித்து விடுவார்கள் என்று கூட மிகைப்படுத்தி நகைச் சுவையாகச் சொல்வதுண்டு. படகிலே செல்லும்போது, பிணங்களும், கைகளும், கால்களும் ஊறி பெருத்து மிதக்கின்றன. அங்கே குளிப்பதற்குரிய நெஞ்சுத் துணிவு எங்களுக்கில்லை.

இந்தக் காசியில் சிசுக்களையம், துறவிகளையும், கர்ப்பிணிப் பெண்களையும் இறந்த பிறகு நம் பகுதி போல் சுடுவதோ புதைப்பதோ இல்லை. படகிலே ஏற்றி வந்து கங்கையிலே போட்டுவிட்டுச் சென்றுவிடுகின்றனர். இதற்கு ஜல சமாதி என்று பெயர். இது மிகத் தவறான கொடுமையான பழக்கம். புனிதமான ஆறுகளை அதன் தூய்மையை மாசுபடுத்தி ஆன்மீகத்தின் பெயரால் ஆரோக்கியக் கேட்டை உருவாக்குவது கண்டனத்திற்குரியது.

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கங்கை ஆற்றைத் தூய்மைப் படுத்தும் இயக்கத்தைத் தொடங்கினார். அதன் பயனாக தற்பொழுத இந்தப் பழக்கம் சற்றுக் குறைந்திருக்கிறது என்று அந்தப் பகுதியில் உள்ளோர் தெரிவித்தனர். 15 ஆண்டுகளுக்கு முன்னால் கங்கை ஆற்றில் முழுகி எழுந்தால் நம்மீது பிணங்கள் வந்து மோதும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு இது பரவாயில்லை அவ்வளவுதான். எனவே, மத்திய அரசு இதில் தலையிட்டு கங்கையாற்றில் பிணங்களை வீசுகிற அநாகரிகமான கொடுமையான பழக்கத்தினை உடனடியாகத் தடை செய்யவேண்டும். இது அவசிய, அவசரமான பணியாகும்.

### பொய் சொல்லாது வாழ்ந்த புனிதன்

அங்கிருந்து நாங்கள் செல்லுகிற வழியில் அரிச்சந்திரகாட் என்று சொல்லக்கூடிய இடத்தைப் பார்த்தோம். அங்க அரிச்

சந்திரனின் வழி வந்தவர்கள் அங்கு கட்டடம் கடடி அந்தத் துறையைப் பராமரிக்கிறார்கள். எந்த அரிச்சந்திரன் என்று எண்ணு கிறீர்களா? அண்ணல் காந்தியடிகளை சத்தியவான் ஆக்கிய நாடகக் கதாநாயகனான அரரிச்சந்திரனேதான். பெபாய் சொல்ல மாட்டேன் என்பதற்காக அவன் ஏற்றுக்கொண்ட துன்பங்கள் எத்தனை? ஒரு பொய் சொல்ல மாட்டேன் என்று வாழ்ந்த அந்த மன்னன். நாட்டை இழந்து, மனைவியை இழந்து, மகனை இழந்து, ஏன் தன்னையே கொத்தடிமையாக காசியில் வாழ்ந்த அந்தணனுக்கு விற்று, அரச போகத்தில் வாழ்ந்த அந்த மன்னன் சுடலை காக்கும் பணிக்கு வந்தான். அப்போது அவனது மனைவி, தான் பெற் றெடுத்த ஒரே செல்வப் புதல்வனைப் - பாம்பு கடித்து இறந்த பாலகனைக் கொணர்ந்தாள். அரிச்சந்திரனிடம் பாலகனை எரிக்கப் பணிந்து வேண்டினாள். அப்போதுகூட வாய்மை தவறாத அந்த மன்னன் தன் உடைமையாளனுக்குச் செலுத்த வேண்டிய வற்றைக் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தினான்.

அப்பொழுது விசுவாமித்திரர் தோன்றி, ''இப்பொழுத ஒரு பொய் பேசினால் இப்போது கூட, உன்னுடைய இழந்த செல் வத்தையெல்லாம் கொடுதத்து உன் மகனையும் எழுப்புகிறேன்'' என்று கூறினார். அப்போது அவன் மனைவியான அரசமாதேவி சந்திரமதி தன் கணவனைப் பார்த்து, வேண்டினாள். ''மன்ன வனே! எல்லாவற்றையும் இழந்தோம். இதனால் நமக்குக் கிடைக்கக்கூடிய சொர்க்கம் என்பது கிடைக்காவிட்டாலும் பரவா யில்லை. மறந்தும் நீர் பொய்யுரையாதீர்'' என்று மன்றாடினாள். இதனை நம் தமிழகத்துக் கவிஞன் அற்புதான சொல்லோவியமாக ஆக்கியிருக்கிறான். அந்தக் காவிய ஓவியத்தைப் பாருங்களேன்.

**காவிய ஓவியம்**

'பதி இழந்தனம் பாலனை இழந்தனம்
படைத்த நிதி இழந்தனம் இனி நமக்கு உளதென
நினைக்கும் கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்'

என்றாள் என்பதாகக் கூறுவார் கவிஞர். இவர்களின் நெஞ்சுறுதியைக் கண்டு வானவர்கள் பூமாரி பொழிய இறந்த பாலகன் ஏழ, மீண்டும் ஆட்சியைப் பெற்றார்கள் என்பது வரலாறு. அரிச்சந்திரன் சுடலை காத்த இடம்தான் 'அரிச்சந்திர காட்' என்பது.

## இங்கும் ஒரு கேதாரம்

நம்முடைய காசி மடத்தின் சார்பில் இக்கங்கைக் கரையோரத்தில் கேததார நாதன் திருக்கோயில் தமிழகத்துத திருக்கோயில் போல அமைக்கப்பட்டு அழகுற விளங்குகிறது. அதற்கு கேதாரகாட் என்று பெயர். அத்துறையில் சென்று கேதாரநாதனை வழிபட்டு அங்கேயே அத்மார்த்த வழிபாடு செய்து திரும்பினோம்.

## அற்புதமான வேலைப்பாடு

அன்று மதியம் பேருந்தை எடுத்துக்கொண்டு அசோக மன்னன் முதலில் எழுப்பிய புத்தனுடைய கோயில் இருக்கும் இடமான சாரநாத் சென்று பார்த்தோம். சாரநாத்தில் புதிய அமைப்பில் மிக அழகான புத்தருடைய திருக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு நேருஜி தங்கக் கலசத்தில் கங்கை நீரைக் கொண்டு வந்து அந்த புத்தர் திருவுருவத்திற்கு அபிஷேகம் செய்தார். அந்தக் கோயிலுக்கு வெளியே புத்தருடைய திருவுருவமும், அவருடைய முதல் நான்கு சீடர்களின் உருவங்களும் மிக அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. கை, கால்களின் திரட்சிகளும், நரம்புத் தாரைகளும் மிக அழகாகக் காட்டியுள்ளார்.

## காசி அரண்மனையில் காட்சி சாலை

நாங்கள் அங்கிருந்து அதன் அருகே உள்ள காசி மன்னர் வாழ்ந்த அரண்மனையைச் சென்று பார்த்தோம். மிக நல்ல அரண்மனையும் பழைய காலக் கோட்டையும் உள்ளது அங்கு ஓர் அருங்காட்சியகம் அமைத்துள்ளனர். மன்னர்கள் பயன்படுத்திய

பழைய வாகனங்களிலிருந்து சாரட், பல்லக்கு உள்பட தற்காலக் கார்கள் வரை அமைத்துள்ளனர். அத்தோடு கூட மன்னர்கள் பயன்படுத்திய கருவிகளும், ஆடை அணிகலன்கள், யுத்தக் கருவிகள், பல்வேறு வகையான துப்பாக்கிகள் இன்னும் பலப்பல விந்தைப் பொருள்களை வைத்துள்ளனர். அவசியம் காணவேண்டிய கருவூலமிது. இன்னமும் காசி மன்னர் பட்டத்து யானை மீது அவ்வப்போது தோன்றி பவனி வருகிறார்.

**வியாசகாசி**

இந்த அரண்மனையில் ஒரு பகுதியில் வியாசகாசி என்ற ஒரு திருக்கோயில் உள்ளது. காசி சென்ற பலனை முழுமையாகப் பெற வேண்டுமானால் இந்த வியாசகாசியைச் சென்று வணங்க வேண்டும். ஒருசமயம், வியாச முனிடிவர், கங்கைக்குக் கீழ்க் கரையில், காசிக்கு இணையான புதிய நகரை உருவாக்கினார். காசி நகரைப்போலவே இருந்ததால், இது காசி நகருக்கு போலி போன்றுள்ளது. எனவே எது காசி என்று அறியாமல் மக்களும் தேவர்களும் வருந்ததி, விநாயகப்பெருமானை் வேண்டி, இதற்கு ஒரு வழிகாட்டுமாறு கோரினர்.

விநாயகப் பெருமான் அங்கு சென்று, ஒரு சிறுவனைப் போல் வடிவெடுத்து, ''உங்களால் உருவாக்கப்பட்ட இந்தப் புதிய காசியின் பெருமை என்ன?'' என்று வியாசரிடம் கேட்டார். வியாச முனிவரும் பதில் கூறி வந்தார். ஒரே செய்தியைத் திருப்பித் திருப்பிக் கேட்க வியாசர் எரிச்சலுற்றார். அந்த சமயத்தில் அந்தச் சிறுவன், ''காசியில் இறந்தால் முத்தி என்று சொல்லப்படுகிறதே, உங்களது புதிய காசியில் இறந்தால் என்ன வரும்?'' என்றார். எரிச்சலுற்ற துர்வாசர் இங்கு இறந்தால் கழுதைப் பிறப்பு வரும் என்றார். உடனே விநாயகர் மறைந்தார். வியாசர பெரிதும் வேதனைப்பட்டு, விசுவநாதரை பன்னெடுமுறை வணங்கி, ''பெருமானே! நான் ஏற்படுததிய காசிக்கு இப்படி ஒரு களங்கமா? இதனால் எனக்கு எவ்விதத்திலும் பெருமையும் இல்லையே என்று

வேதனைப்பட்டார் விசுவநாதர் வியாசரைத் தேற்றி, ''காசியில் என்னை வணங்கியவர்கள் யாவரும் நீ பூசிதத்த மூர்த்தியை வணங்க வேண்டும் அப்படி இந்த வியாச காசியிலும் வந்த வணங்கினவர்களுக்குத்தான் முழுப்பயன்'' என்று கூறினார். அதிலிருந்து காசி செல்வோர் இங்கும் வந்து வழிபடுவவது என்கிற பழக்கம் உண்டாயிற்று.

## இந்தியாவின் முதல் பல்கலைக்கழகம்

அங்கிருந்து காசியிலே வியாசகாசி பெருமானை வணங்கி, காசிப் பல்கலைக் கழகத்தைச் செனறு பார்வையிட்டோம். பல மைல் சுற்றளவில் மிக அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்தியர்களால் இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக்கழழகத்தின் பட்டமளிப்பு விழாவில் காந்தியடிகள் தம் குஜராத்தி மொழியில் உரையாற்றினார். காந்தியடிகள் நிகழ்த்திய பட்டமளிப்பு விழா உரை இந்த ஒன்றேதான். நம்முடைய மகாகவி பாரதியும் இங்கு பணியாற்றி னார். இதனை உருவாக்கியவரர் மாளவியா என்ற தேச பக்தர். இந்தப் பலல்கலைக்கழகத்தின் எதிரில் பிர்லா மந்திர் என்ற மிகப் பெரிய அழகிய பளிங்காலான கோயிலையம் பிர்லா உருவாக்கி யிருக்கிறார். அங்கு வழிபட்டு, துளசி, மாநஸமந்திர என்ற துளசி தாசசர் வாழ்ந்த இடத்தைப் பார்த்து வந்தோம்.

## நீத்தார் கடன்

மறுநாள் காலை, கயா எனறு சொல்லக்கூடிய புனிதமான இடத்தை சென்றடைந்தோம். இதுதான் முன்னோர்களுக்கு நீத்தார் கடன் செய்யக்கூடிய இடமாகும். இங்கு அழகிய கோயில் பல்குனி ஆற்றின் கரையில் உள்ளது. நம்முடைய திருக்கூட்ட அன்பர்கள் இங்கே அமர்ந்து, திருமுறை நெறியல், நீத்தார் கடன் வழிபாட்டினைச் செய்து, முன்னோர்களுக்கான பிண்டத்தை பல்குனி ஆற்றில் விட்டு, அவர்கள் நற்கதியடையப் பிரார்த்தித் தோம். இங்கு விஷ்ணு பாதம் என்ற இடம் உள்ளத. கருவறை

யிலல் ஒரர் அடி உயரரமும் 10 அடி சுற்றளவும் உள்ள கருங்கல் தொட்டியில் விஷ்ணு பாதம் உள்ளது. இதனுள் மலர் தூவி வணங்குகின்றனர். நாங்களும் மலர் தவி வணங்கினோம். இந்தக் கோயிலின் கருவறையின் நுழைவாயிலில் சொட்டு சொட்டாக நீர் வருகிறது. அது எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை. இதனை அதிசயமாக மக்கள் பார்க்கின்றனர்.

**புத்தன்**

கயாவிலிருந்து 7 மைல் தொலைவில் புத்த கயா என்கிற புத்தர்களின் புனித இடம் உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த புத்தன் இங்குதான் ஞானம் பெற்றான். உலகத்து நாடுகளில் ஏறத்தாழ 14 நாடுகளில் புத்த மதம் ஆட்சி மதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த நாட்டினர் அவர வர்களின் கலாச்சார வழி புத்தனுக்க கோயில் அமைத்துள்ளனர்.

**புத்தரும் சிவனும்**

ஜப்பான் நாட்டு அரசு புத்தனுக்கு 60 அடி உயரத்தில் மிகப் பெரிய உருவச்சிலையை அமைத்துள்ளது. புத்தபிரான் ஞானோ தயம் பெற்ற போதி மரம் இங்கதான் உள்ளது. இங்கு மாமன்னன் அசோகன் புத்தபிரானுக்கு மிக அழகிய கோயிலை அமைத் துள்ளார். அந்தக் கோயிலுக்கு உள்ளேயே புத்தத் திருவுருவத் திற்கு முன்னால் ஒரு சிவலிங்கத்திற்கு நம்மவர்களும், புத்தருக்கு புத்தமத சந்நியாசிகளும் வழிபாடு செய்கின்றனர். இந்தக் கோயில் மிக அழகானது.

கயாவிலிருந்து, 250 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வைத்தியநாதம் என்று சொல்லக்கூடிய கோயிலை அடைந்தோம் வைத்தியநாதம் என்பது பல இடங்களில் உள்ளது. நம் தமிழகத் திலும் வைத்தியநாதனை வைத்தீஸ்வரன் கோயில் என அழைக் கிறோம். உயிர்களுக்கு வருகிற உடல் நோயையும், உயிரைப் பற்றிய பிறவி நோயையும் பெருமான் போக்குவதால், வைவத்திய நாதன் எனப் பெயரிட்டு அன்பர்கள் வணங்கினார்கள். பஞ்சாப்,

குஜராத் போன்ற மாநிலங்களிலும் வைத்தியநாதம் என்ற கோயில் கள் இருந்தாலும், சிவபுராணத்தில் கூறப்படுவதும் பெரும் பாலான மக்கள் ஏற்றுக் கொள்வதும் பீகார் மாநிலத்திலே உள்ள கயை என்ற ஊருக்குக் கிழக்கே உள்ள இவரையே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்தத் திருக்கோயில் நல்ல உயரமான மலைச் சிகரத்தில் அமைந்துள்ளது. நெடிய வீதியின் முடிவில் உள்ள அழகான திருக்கோயில். கோயிலின் எதிரில், சிவகங்கை என்ற பெரிய குளம் உள்ளது. அந்தக் குளத்திலே குளிப்பதற்கு நல்ல துறை. இங்கு வருகிற பக்தர்கள் நம் தமிழகத்தைப் போலவே முடி இறக்கியும் மாவிளக்கு இட்டும் வழிபாடு செய்கின்றனர். இந்த ஊரை தேவ்கர் என்று அழைக்கிறார்கள். அதாவது தேவ னுடைய இல்லம் என்று பொருள் வரும்படி அமைத்துள்ளனர். இந்த வைத்தியநாதத்தில் பூத பிரேதங்கள் வாசம் செய்வதில்லை.

### இராவணனும் வைததியநாதனும்

இலங்கையின் மன்னான இராவணன், இலங்கையை ஆள் வதற்கு முன்னால் அதனை குபேரன் ஆட்சி செய்தான். இரா வணன் தன்னுடைய பூஜை செய்த ஆற்றலால் குபேரனைத் தோற்கடித்து இலங்கையைத் தன்வசம் ஆக்கிக் கொண்டான். இராவணன் மக்களுக்கும் தேவர்களுக்கும ஏற்கெனவே தொல்லை கொடுப்பான். அத்தோடு இந்த வெற்றியும் சேர்ந்தது. ஒருநாள் இராவண்ன் 'எனக்கு இறைவன் எல்லாச் செல்வங் களையும் கொடுத்திருக்கிறான். ஆனால் இந்த உடமபு அழியும் தன்மையுடையது. ஒரு மனிதன் பிறவி எடுத்ததிலிருந்து எந்த நற்பணியும செய்யவில்லையானால் அவனுடைய எல்லாச் சொத்துக்களும் சிறப்புகளும் ஆட்சி பீடங்களும் தகர்ந்துவிடும். நிலையான இன்பம் துய்க்க நிலையான உடலும் இறைவனின் ஆசியும் வேண்டும் எனக் கருதிய இராவணன் இதனை வழங்கக் கூடியவன் சிவபெருருமானே என உணர்ந்து மனமொழி மெய் களால் பெருமானை வாழ்த்தி வணங்கினான். உடலை மறந்தான்.

பொருள்களை மறந்தான். ஏன் தன்னையே மறந்து சிவ வழி பாட்டில் மூழ்கினன்.

அவனடைய பக்திபூரர்வமான வழிபாட்டில் பெரிதும் மகிழ்ந்து பெருமான், உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன், பெருமானே உன்னுடைய கயிலையில் வந்து உனக்கு சேவை பக்தி செய்ய அருள வேண்டும் என்றார். உடனே இறைவன், அவ்வாறே அளிப்பதாக கூறினான். உடனே இரா வணன் கயிலாயம் வந்து மிகக் கடுமையான தவத்தை மேற் கொண்டான். "பெருமானே! நீ என்னுடைய இலங்கையிலே வந்து தோன்றி இருந்து அருள் செய்யாவிட்டால், நான் உண்ணாமையும் உறங்காமையம் உரையாடாமையும் ஆகிய முப்பெரு விரதமிட்டு உயிர் துறப்பேன்" என்று அறிவித்து, பெருமானை வணங் கினான். இந்த தவத்தினைக் கண்டு இந்திரன் அஞ்சி, பிரம்மா விடம் சென்று இவனுடைய தவத்தின் வலிமையை எடுத்துச் சொன்னான்.

பிரம்மா, "உன்னுடைய இந்திர பதவிக்கு இதில் என்ன ஆபத்து? இந்த தேவர்கள்தான், உன்னுடைய இந்திர பதவி மீதே குறியாக இருந்து தவம் செய்வதார்கள். ஆனால் அவன் சிவனை வேண்டித்தானே தவம் இருக்கிறான். இதனால் உனக்கென்ன இடர்பாடு?" என்று கூறி, அவனை அனுப்பி வைத்தார் தவம் செய்து கொண்டிருந்த ராவணன் கைலாச பதியான பெருமானைக் காண திருக்கோயிலுக்கு உள்ளே நுழைந்தான். அப்போது திருநந்தி தேவரைத் தூக்கி, சுழற்றி நந்தவனத்தில் எறிந்தார். அப்போது, கைலாச மலையே அசைந்தது. பெருமான் விரலால் சிறிது அழுத்தி சீர் செய்தார். காரணம் அறிய திருநந்தி தேவரை அழைத்தார். அப்பொழுது இராவணன், "இப்பேபாது திருநந்தி தேவர் நந்தவனம் போயிருக்கிறார், ஏதாவது பணி இருந்தால் என்னிடம் சொல்லுங்கள் நான் செய்கிறேன்" என்றான் பெருமான், "நீ யார், எப்படி உள்ளே வந்தாய?" என்று கேட்டார்.

அப்போது இலங்காதிபதி இராவணன், ''ஆண்டவனே! உன்னுடைய அடிமையான என் பெயர் இராவணன் என்பதாகும். வெகு நாள்களாக தங்களைக் காண நினைந்து உருகி, இங்கு வந்தேன். என் குற்றத்தை மன்னித்து அருளுங்கள். தங்களைச் சந்திக்க நான் வந்தபோது நந்தி குறுக்கிட, கோபமுற்று நந்தியைத் தூக்கி நந்தவனத்தில் எறிந்துவிட்டேன், என் தவற்றை மன்னியுங்கள்'' என்று பல முறை திருவடியில் விழுந்து வணங்கினான். அவனுடைய பணிவையும், உண்மையையும் உணர்ந்து மகிழந்து உனக்கு எனன வரம் வேண்டும் என்று கேட்க அதற்கு இராவணன் ''எம்பெருமானே! என்னுடைய இலங்கை யிலேயே நீங்கள் தங்கியிருக்க வேண்டும். நான் அனுதினமும் முப்போதும் தங்களை வணங்கக்கூடிய பேற்றினை நல்க வேண்டும்'' என்று வேண்டினான்.

## திருமாலின் சதி

அதற்கு ''இந்த ஜோதி லிங்கத்தை எடுத்துச் சென்று, இலங்கியல் வைத்து வழிபாடு செய். இந்தத் திருமேனியில் என் முழு ஆற்றலும் இருக்கிறது. நீ, எந்தக் காரியத்தில் ஈடுபடு வதனாலும் இந்த லிங்கத்தை பூஜித்தால் உனக்கு வெற்றி கிடைக்கும்'' என்று கூறி சிவலிங்கத் திருமேனியை இரா வணனிடம் ஈசன் வழங்கினான். இவற்றைப் பார்த்திருந்த பரந் தாமன், இராவணன் இலங்கைக்கு இச்சிவலிங்கத்தைக் கொண்டு சென்று நிறுவினால் அவனை வெல்ல எந்த சக்தியாலும் முடி யாது. எப்படியாவது இவன் இந்த சிவலிங்கத்தை இலங்கை கொண்டு செல்லாமல் தடுக்க வேண்டும் என முடிவு செய்து ஒரு சிறுவன் போல் தோன்றி இராவணன் செல்லும் பாதையில் சந்தித்து, சிறிது உரையாடிக் கொண்டே சென்றார். அப்பொழுது இராவணனுக்கு இயற்கையின் தொல்லை ஏற்பட்டது. சிவ லிங்கத்தை பூமியில் வைப்பது பொருத்தமல்ல எமன்று கருதி, அந்தச் சிறுவனிடம் கொடுத்து, இதை சிறிது நேரம் வைத்திரு. நான் வந்து பெற்றுக்கொள்கிறேன் என்று சென்றான்.

லிங்கத்தைப் பெற்ற சிறுவனாகிய திருமால், இதுவே சமயம் என்று இந்த இடத்திலேயே வைத்து நிறுவினார் அது பாதாளம் வரை சென்றுவிட்டது. பூமியில் இரண்டு மூன்று அங்குலமே தெரிந்தது. அப்பொழுது இராவணனுக்கு ஒரு விண்ணொலி எழுந்தது. "இராவணா! நீ லிங்கத்தைக் கொடுத்த பிராமணன் திருமால். அவர் செய்த சதியில் நீ சிக்கிவிட்டாய். அவர் சிவ லிங்கத்தை இந்த இடத்திலேயே நிறுவிவிட்டார். எனவே நீ இந்த சிவலிங்கத் திருமேனியை அசைத்து எடுக்க முயலாதே. அப்படிச் செய்தால், நீயும் உன் குலமும் நாசமாகிவிடும். அத்தோடு அந்த லிங்கத்தின் அடிப்பகுதியில் கங்கை யமுனை போன்ற நதிகள் நிரம்பியிருக்கின்றன" எனக் கூறியது.

## இராவணன் பெற்ற வரம

சிவலிங்கத்தை பூமியில் வைத்ததைக் கண்ட ஒரு மலை சாதிக்காரன், அந்தப் பெருமானை வழிபாடு செய்யக் கண்டான். ஏற்கெனவே சூடுபட்ட அவன், அவ்னைக் கேட்டான், "சகோதரா! நீ யாருக்கு பூஜை செய்கிறாய்?" என்று பலமுறை கேட்டான். அவனோ பெருமானோடு ஒன்றி, தவ நிலையில் ஒன்றி இருந் தான். மீண்டும் தட்டி எழுப்பிக் கேட்டபோது அந்த மலை சாதிக் காரன் கூறினான். "திருமாலால் நிறுவப்பட்ட வைத்தியநாதப் பெருமானை வழிபாடு செய்து கொண்டிருக்கிறேன். இந்தத் திருமேனி கயிலையிலிருந்து உன்னாலே கொண்டுவரப்பட்டது" என்றும் கூறினான். இதையெல்லாம் கேள்விபட்ட இராவணன் மகிழ்ந்து அங்கு ஒரு கிணற்றைத் தோண்டி அதற்கு சந்திரகூப் என்று பெயரிட்டான். அந்தக் கிணறு இப்போதும் இருக்கிறது. அந்தக் கிணற்றில் எல்லாத் தீரத்தங்களையம் கொண்டு வந்து ஊற்றினான். இந்தக் கிணற்று நீரில் வைத்தியநாதனைத் திருமுழுக்காட்டி, மலர்களைச் சூடி, யார் மெய்யுருகி வழிபாடு செய்கிறார்களோ அவர்களுக்கு அனைத்து நலன்களும் கிடைக்க வேண்டும் என்று சிவனை நோக்கி பிரார்த்தனை செய்தான். பெருமானும் மகிழ்ந்து அவ்வாறே செய்யய உறுதி அளித்தார்.

இராவணன் தனக்கு மாத்திரமல்லாமல் இங்கு எப்போது வழிபாடு செய்கின்ற அன்பர்களுக்கும் நீ அருள்பாவிக்க வேண்டும். இல்லையென்றால் என் தலையை வெட்டிக் கொள்வேன்'' என்றான். இராவணா உன் பக்தியைக் கண்டு மகிழ்கிறேன். உன் தலையை வெட்டாதே. பின்னாலே ராமன் வந்து உன் தலையை வெட்டுவான், அதன்பின் நீ முக்திஅடைவாய் என்றான்.

இதனைக் கேட்டு மகிழ்ந்த இராவணன் வைத்தியநாதப் பெருமானைப் பெரிதும் வணங்கி நாலு திசைகளிலும் விநாயகன், சூரியன் போன்ற தெய்வங்களை அமைத்து வழிபாடு செய்தான். அதன் பிறகு இராவணன் கங்கை நீரைக்கொண்டு வந்து வில்வ இசையுடன் பெருமானை பூஜை செய்து வழிபபட்டான். இதனால் மகிழ்ந்த சிவபெருமான், எந்த பக்தன் கங்கை நீரைக் கொண்டு வில்வ இலையுடன் என்னை வழிபாடு செய்கிறானோ, அவனுக்கு எல்லா நலன்களையம் வழங்குவேன் என்று அருள் செய்தார். இறைவன் ''இராவணா! அந்த மலை ஜாதிக்காரனை நீ அறிய மாட்டாயா? அவன் அர்ச்சுனனால் புகழ்பெற்றவன். இவனுடைய உதவி கிருஷ்ணபகவானுக்கு பலமுறை பயன்பட்டிருக்கிறது. இவன் கிருஷ்ணனுடைய நெருங்கிய நண்பன், இவனுடைய பெயர் வைஜு. அதனால் இந்த இடம் வைத்தியநாத் என்ற பெயரால் அமையப் பெறட்டும்'' என்று சொல்லி இறைவன் மறைந்தார்.

### பக்தியம் பணிவும்

எனவே, அது முதற்கொண்டு கங்கை நீருடன் வில்வ இலையைக் கொண்டு வருகின்ற அன்பர்களுக்கு வைத்தியநாதப் பெருமான் தம் தன்னருளை வாரி வழங்குகிறான். நாங்கள் சிவகங்கை குளத்தில் நீராடினோம். அங்கு ஒரு ரூபாய்க்க ஒரு தட்டுவீதம் நிறைய விற்பனை செய்யப்படும் மலருடன் வில் வமும் வாங்கிக் கொண்டிருந்தோம். தமிழகத்தைச் சார்ந்த அந்தணர் ஒருவர் அங்கே பூசாரியாக இருக்கிறார். அவர்

குளக்கரைக்கு வந்து வரவேற்று, எல்லாரிடமும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார். அனைவரும் வரிசையாக நின்று சிவபுராணம் ஓதிக்கொண்டு சென்றோம். நாங்கள் சொல்லுவது தமிழ் என்றாலும் இறைவன் நாமத்தைச் சொல்லுகிறோம் என்பதை உணர்ந்த அந்தப் பகுதி மக்கள் பெருந்திரளாகக் குடிக் கொண்டு மகிழ்ச்சியைப் புலப்படுத்தினரர். வடநாட்டில் இன்றும் கூட இறைவன் நாமத்தை சொல்லுகிற அடியவர்களைப் போற்றி மகிழ்ந்து வணங்குகிற பாங்கு பரவலாகக் காணப்படுகிறத.

நாங்கள் அங்கே திருக்கோயிலில் சென்று வழிபாடு செய்யத் தொடங்கியபோது இந்த வரலாற்றைச் சொல்லி கங்கை நீரைக் கொண்டு வாருங்கள் என்றார். எடுத்த கங்கை நீரெல்லாம் ரயில டியில் இருக்கிறது என்று சொன்னவுடன் பணம் கொடுங்கள். இங்கேயே கங்கை நீரைத் தருகிறோம் என்றார். இப்படி நம்மைப் போன்று தெரியாத அன்பர்களுக்காக அந்தக் கோயிலின் ஓர் அறையில் கங்கை நீரைக் குடம் குடமாக கொண்டுவந்து வைத்திருக்கின்றனர். அதனை விலைக்கு விற்கிறார்கள். அங்கே நாங்கள் கங்கை நீரை வாங்கிப் பெருமானுக்கு வழக்கம்போல எல்லாத் திருமுழுக்கம் செய்து கங்கை நீரால் நீராட்டி புத்தாடை அணிவித்து, வில்வத்தாலும் மலராலும் போற்றித் திருத்தாண்ட கம் சொல்லி மனமுருகி வழிபபட்டோம். இங்கே சிவலிங்கத் திருமேனி ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் இரண்டொரு அங் குல உயரமே சிவலிங்கத் திருமேனி உள்ளது. அங்கு நிறைய கூட்டம் இருந்தாலும், நம்முடைய திருக்கூட்டத்தை அனுமதித்து, அமைதியாக வழிபாடு செய்ய மிகவும் உறுதுணையாக இருந்தார். இந்தத் திருப்பயணத்திற்கு நாம் புறப்பட்டபோது எனது தந்தை யாரின் நெருங்கிய நண்பரான திரு. கே.சசிநடராஜன் அவர் களடைய மகன் திரு.மணிவாசகன் திராட்சைப் பழங்களுதம் கற்கண்டும் நிறைய வாங்கிக் கொடுத்திருந்தார். அவற்றை யெல்லாம் வைத்தியநாதப் பெருமானுக்கு வைத்து வழிபாடு செய்து பயணத்தில் பங்கு கொண்ட அன்பர்கள் அனைவருகட் கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

**ஆண்டவன் அருள்**

நாம் வைத்தியநாதத்திலிருந்து பூரி செல்லவேண்டும். ஏற்கெனவே 2 நாள் கூடுதலாகிவிட்டது. அத்தோடு கூட அங்கு பண்டரிபுரநாதன் திருவிழா அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவர் என்றும் அங்கு செல்வது சிரமம் என்றும் காசியி லேயே சொன்னார்கள். எனவே பூரி செல்லாமல் நேராக கல்கத்தா செல்வது என்று முடிவு செய்தோம். கல்கத்தா சென்றவுடன் தான் எங்களுக்குத் தெரிந்தது. பூரிக்குத் செல்லுகிற ரயில்களை எல் லாம் பாதி வழியிலேயே நிறுத்தி, திருப்பிவிட்டார்கள் என்று செய்தி கிடைத்தது. நாம் பூரி செல்லாததும் நன்மைக்கே என்று உணர்ந்தோம்

# 12

**அரசு கவனிக்குமா?**

அசன்சால் என்ற ரயிலடியில் வண்டி நின்றது, எங்களது பெட்டியை இணைக்கும் ரயில் சென்றதால் அசன்லால் புகை வண்டி நிலையத்திலேயே நின்றது. பல இடங்களிலும் இணைக் கும் ரயில் பிரச்சனை பெரும் பிரச்சனைகளாக உள்ளது. இதனால் எங்கள் பயணத்தில் 2 நாள்கள் விரையமாயின. சுற்றலாவை ஊக்குவிக்க பல முறைகளைச் செய்யும் அரசு உடன் கவனிக்க வேண்டியது ரயில் இணைப்பு ஆகும். ரயில் காலதாமதத்திற்கு நாம் பொறுப்பல்ல. நாமே பொறுப்பு என்றாலும் உடன் அடுத்த ரயிலில் இணைப்பதனைக் கடமையாகக் கருதவேண்டம். உடனுக்குடன் ரயில் பெட்டிக்கு நீர், மின்வசதி பார்க்க வேண்டும். அதைத் தவிர்க்க இயலாத இன்றியமையாப் பணியாக அரசு ஆணையிடவேண்டும். அத்தோடு கூட இத்தகைய பயணம் மேற்கொள்வோருக்கு பெட்டியுடன் இணைக்கப்பட்ட உணவு தயாரிப்புப் பெட்டி அவசியம் இணைக்கப்பட வேண்டும். சுற்றுலா வளர்ச்சிக்கான இவற்றை அமலாக்க வேண்டும். அசன்

லால் என்பது இந்தியாவின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ள பகுதியாகும். நாடு முழுக்க அங்கிருந்து தான் நிலக்கரி செல்கிறது. அங்கு அதிகாரிகளைச் சந்தித்து ஒருவழியாக மாலை 7 மணியளவில் கல்கத்தா வந்து சேர்ந்தோம். கல்கத்தா மிகப் பெரிய நகரம். லட்சக்கணக்கான மக்கள் வாழும் பெருநகர். நம் சென்னையை விடப் பலமடங்கு பெரரியது.

**தேசபக்தியம் சேவையும்**

மறுநாள் காலை புறப்பட்டு பகவான் ராமகிருஷ்ணர் வாழ்ந்த திருமடம் சென்றோம். மிக அழகான அமைதி கொஞ்சம் இடம் ஜுப்ளி நதி அமைதியாகப் பரந்து ஓடுகிறது. அதன் கரையில் மடம் அமைக்கப்பட்டுள்ளது. அன்னை சாரதாதேவி, சுவாமி விவேகானந்தா, பகவான் ராமகிருஷ்ணர் சமாதிகளை அழகுற அமைத்துள்ளனர். சுவாமி விவேகானந்தர் மண்ணுல வாழ்வினை நீத்த இடம் அப்படியே அன்று போலவே பராமரித்து வருகின் றனர். ஆன்மீக சிங்கம் வாழ்ந்த குகை அது. அங்கு நின்றாலே நமக்கு ஆன்மீக உணர்வு, தேசபக்தி, சகோதர நேயம், தொண் டுள்ளம் ஆகியன உற்றெடுத்துப் பாய்கின்றன. பகவான் ராம கிருஷ்ணர் சமாதி உள்ள இடம் மிக அமைதியாக உள்ள பிரம்மாண்ட மான கட்டடம். அங்கு வரும் அனைவரும் தியானம் செய் கின்றனர். நம் சேலம் பகுதியைச் சேர்ந்தவர்கள் துறவியாக அங்கு பயிற்சியில் உள்ளனர். துறவியாகப் பயிற்சிக் காலம் 4 ஆண்டுகள். அதன் பின்னரே காவி உடை தருகின்றனர். தொண்டாலும் சேவையாலும்இந்நூற்றாண்டில் காவி உடைக்குப் பெருமை சேர்த்தவர்கள் ராமகிருஷ்ணமடத் துறவிகள் என்றால் மிகை யாகாது.

அங்கிருந்து ராமகிருஷ்ணரர் பூசை புரிந்த காளி கோயில்

சென்று வழிபட்டோம் அங்கு பனனிரண்டு சோதி லிங்கங் களையும் ஒரு சேர ஓர் அழகுற அமைத்துள்ளனர். இத்திருக் கோயிலின் முன்புறம் பகவான் இராமகிருஷ்ணர் வாழ்ந்த அறை

யில் அவர் பயன்படுத்திய பொருள்களைக் காட்சிப்படுததி யுள்ளனர். அவற்றைப் பார்க்கும்போது பகவான் காலத்தில் வாழ்ந்து அவரை வணங்கும் பேறு பெறவில்லையே என ஏங்கா மலிருக்க முடியாது. சாந்தமும் அன்பும் அருளும் தவழுகிறது அவ்வறை.

## கொலைக்களம்

அங்கிருந்து கல்கத்தா என்ற பெயர் வரக் காரணமான காளி கோயிலை நோக்கிச் சென்றோம். அங்கு பெரிய கொலைப் பலி நிகழ்வதால் நான், ஆர்.எம்.ராமசாமி, கே.எம்.சென்னியப்பன் மற்றும் பலர் செல்லவில்லை. பலியிடும் இடங்கள் வழிபாட்டுத் தலமல்ல, கொலைக்களம் என்று கூறி அண்ணல் காந்தியடிகள் அக்கோயில் செல்ல மறுத்துவிட்டார். விடுதலை பெற்ற பாரதம், ஆலயங்களில் பலியிடக்கூடாது என்று சட்டம் இயற்றினாலும் ஆலயத்தின் முன்பு வெட்டுகின்றனர். இதுபோன்றவை சட்டத் தால் அமல் செய்வதினும் மேலாக மக்களின் மனமாற்றமே பெரி தும் பயன் தரும்.

நலிதரு சிறுதெய்வம் என்று அய்யோ
நாட்டிலே பல பெயர் நாட்டிப்
பலதர ஆடுகோழி பலிக்கடா
முதலிய உயிரைகொண்டு போகவும்
கண்டே புந்திநொந்து உளம் நடுக்குற்றேன்.

என்றுணர்ந்துருகிப் பாடிய வள்ளல் பெருமானின் நினைவு நெஞ்சில் முகிழ்த்தது.

## விஞ்ஞான விந்தையும் மெய்ஞானமும்

அங்கிருந்து விக்டோரியா நினைவுப் பூங்காவில் உணவு உண்டு, அங்கு பிர்லா அவர்களால் நிறுவப்பட்டுள்ள 'பிளானட் டோரியம்' என்னும் விஞ்ஞான விந்தை உலகு கண்டோம். அங்கு நம் உலகம் போன்று அறை அமைக்கப்பட்டுள்ளது. அரை வட்ட

வடிவமானது. அதில் குறைப்ப குதி மேகம் சூழ்ந்த வெற்றிடப் பகுதி. நட்சத்திரக்கூட்டம் நம்மைக் கண்சிமிட்டி அகைக்கிறது. சந்திரன் ஒளிக்கிரணத்தைப் பாய்ச்சுகிறான். வான்வெளியில் உள்ள நட்சத்திரங்கள் - கிரகங்கள் இவற்றின் நிலைகளையெல் லாம் விளக்கிக் காட்டுகின்றனர். இந்த விஞ்ஞான விந்தையைக் காணும் போது நம் முனனோர்கள் வான்வெளி ஆய்வில் எவ்வளவு தூரம் அறிவைச் செலுத்தியுள்ளனர் என்று உணர முடிகிறது. கல்கத்தாவில் தற்போது மின்காந்த விசையால் பாதாளத்தில் பறக்கும் ரயில் விட்டுள்ளனர். கதவுகள் எல்லாம் தானியங்கி முறை ரயில் முழுக்க குளுகுளு செய்யப்பட்டுள்ளது. அதில் பயணம் செய்து ரயில் நிலையத்தை அடைந்தோம்.

திருப்பருப்பதம் என்னும் ஸ்ரீசைலம் நோக்கிச் சென்றோம். முழுவதும் மலைப்பாதை, இத்திரப்பதியைப் பபற்றிக் குறிப்பிட்ட ஆரூரர்.

"செல்லல் உற அரிய சிவன் சீர்பருப்பதமலை"

என்று குறித்தார். இன்றும் அவ்வாறேதான் உள்ளது.

நாங்கள் அனைவரும் காலை 7 மணியளவில் திருபபருப் பதம் சென்று ஆத்மார்த்த வழிபாடு செய்து சிவபுராணப் பாரா யணம் செய்து திருக்கோயிலை அடைந்து வழிபட்டோம்.

## மூவர்பாடல்

திருஞானசம்பந்தர், அப்பர், நம்பி ஆரூரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற தலம், வடமொழியில் மல்லிகார்ச்சுனம் என்று வழங்கப்பெறும இததலம் சமயக்குரவர்களால் பருப்பதம் என்று அழைக்கப்பட்டது. மருத மரம் அத்தலத்திற்கு உரிய மரம். ஆத லால் மல்லிகார்ச்சுனம் என்று சொல்லப்படுகிறது. (மல்லிகார்ச் சுனம் - மருதமரம்) தமிழகத்தில் மருதமரம் தலத்திற்கு உரிய மரமாக இருக்கும். திருப்புடை மருதூர் புடார்ச்சுனம் என்றும் திருவிடை மருதூர் மத்தியார்ச்சுனம் என்று வழங்கப்படுவது காணலாம்.

இத்தலம் ஆந்திர மாநிலத்தில் நந்தியால என்று புகைவண்டி நிலையத்தில் இருந்து சுமார 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. செல்லும் வழி காடு சூழ்ந்தது, கொடிய மிருகங்கள் உள்ளன. ஊர்கள் அதிகம் இல்லை, செல்வதற்கு அரிதாக இருந்ததால்தான் சுந்தரர் பெருமான் தம் தேவாரத்தில் 'செல்லல் உறவரிய சீர்பருப்பதமலை' என்று குறிப்பிடுகிறார். கோயிலுக்கு அருகில் சென்று இறங்கலாம். இங்கு அன்பர்கள் வந்தவுடன் நேராகச் சென்று, சிவபெரமானைத் தொட்டு அருச்சித்த வணங்கலாம்; கால், முகம் கழுவிக் கொண்டு செல்ல வேண்டியதில்லை. வழித்துன்பம மிகவுற்று வந்த அடியார்கள் பெருமானை வணங்க மேலும் காலம் செலவிடுதல் வேண்டா என்ற கருத்தில் இந்த முறையை அந்தக் காலத்தில் அமைத்திருக்க வேண்டும்.

இப்பருப்பத மலைக்கு 3 கி.மீ. தொலைவில், மலைச்சாரலில் கிருஷ்ணா நதி ஓடி வருகிறது. கோயிலிருந்து அன்பர்கள் பேருந்தில் சென்று வரும் அளவிற்கு நல்ல பாதை உள்ளது. இயற்கைக் காட்சிகள் சிறந்து இருக்கின்றன. ஆரூரர் பாடிய வண்ணம் ஈரோட்டுத் திருமுறைக் கழக அன்பர்கள் 1972இல் சென்றபோது, 'மானும் மரையினமும் மயில் இனமும் கலந்தெல்லாம் நின்ற' காட்சி நெஞ்சை அள்ளியது. இப்போது யாதும் இல்லை.

**புராண வரலாறு**

சைலாதி என்ற நந்திதேவர் சிவனை வழிபட்டு உய்ந்த திருத்தலம். ஆதலால் நந்தி தேவரே மலைவடிவு கொண்டு சிவபெருமானைத் தாங்கிக்கொண்டு இருப்பதாகக் கூறப்படுகிறது.

சந்திரகுப்த மன்னருக்குச் சத்தியவதி என்ற பெயருடைய மகள் இருந்தாள். பால் கறவாமையால் பசுக்களை புல் மேய விட்டுக் கண்காணித்தார்; அப்பசுக்கள் அங்கே ஒரு லிங்கத்தின் மீது தாமாகப் பால் சொரிவதைக் கண்டு வியந்தனர். பெருமானும்

அந்த இளவரசிக்குத் தான் இருக்கும் இடத்தைக் கனவில் அறிவித்தார். பின்னர் அவ்விளவரசி அப்பெருமானை நாள் தோறும் மல்லிகை மலர்களால் அர்ச்சனை செய்தாள், அதனால் மல்லிகார்ச்சுனம என்ற பெயர் ஏற்பட்டது என்றும் சொல்வர்.

## திருக்கோயில் அமைப்பு

கோயில் பார்வைக்கு மிடுக்கான தோற்றத்துடன் உள்ளது தலைமை வாயில் கிழக்கு நோக்கி உள்ளது. உள்ளே புகுந்தவுடன் அழகிய மண்டபம்; நடுவில் கல்லால் ஆன மிகப்பெரிய நந்தி உருவம்; நந்தி அற்புதமான வேலைப்பாடுகளை உடையது. சுவாமி திருமுன்னிற்கும் மேற்கே அன்னை திருக்கோயில் அமைந் துள்ளது.

கோயில் அமைந்துள்ள மலையை ஒட்டி கிருஷ்ணா நதி ஓடுகிறது. மிகுந்த பாறைகள் இருபுறமும் உள்ளன. ஆற்றிற்குச் சென்று குளித்து பூசைசெய்ய நல்ல இயற்கையான துறை உள்ளது. அணை கட்டுவதற்கேற்ற அமைப்பு இருந்ததால், அணை கட்டி நீரைத் தேக்கி, மின்சாரம் எடுக்கின்றனர் பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்துகின்றனர். ஆற்றிலிருந்து பருபப்பநாதன் கோபுரத்தைக் காண்பது ஒரு கண்கொள்ளக் காட்சி. அக் காட்சியைக் கண்டவர்தம் பிறவித்தனை அறும் என்பர். வீரசைவ மரபினர் இத்தலத்தை மிகவும் பாராட்டிக் கொண்டாடவர். அவர்கள் இதனை பூலோக கைலாசசம் என்பர்.

கண்ணுக்கு எட்டிய வரை காடுதான்; மிக அழகாக அமைந் தது. மானும் மரையினமும் ஏனைய விலங்குகளும் பறவைகளும் காணக் கிடைக்கும் இக்காட்சியே மனதிற்கு இன்பத்தைத் தரு கிறது. திரு.வி.க அவர்கள் கூறியவாறு முருகன் (அழகு) இங்கே களிநடம் புரிகின்றான். இந்த எழிலில் ஈடுபட்ட சுந்தரர், மானும் மரையினமும் என்ற பதிகத்தில் காட்டுகிறார். திருப்பணிக்கென பெருமளவில் நிலம், பூமி, பொருள்கள் ஆகியன பெருமக்கள் பலரால் வழங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.ட்

## திருவருட் குறிப்பு

விநாயகர், முருகன் போன்ற தருமேனிகள் எல்லாம் அழகுற வெள்ளி ஆபரணங்கள் பூட்டி கண்கொள்ளாக் காட்சியாக உள்ளன. பருப்பநாதன் மிகப் பெரிய வெள்ளி விமானத்தின் கீழ் காட்சியளிக்கிறார். பெருமானுக்கு எல்லாத் திருமுழுக்கும் ஆட்டி புத்தாடை அணிவித்து வழிபட்டோம். அன்னையின் ஆலயம் மிகவும் அழகான சிற்ப வேலைப்பாட்டுடன் உள்ளது. அம்மையின் அழகு மிக அற்புதமானது. வழிபாடு திருப்பயணம் நிறைவு செய்ய வேண்டி ஆலயத்தின் ஒருபுறம் அமர்ந்தோம். அமர்ந்த சற்று நேரரத்திற்கெல்லாம் வழிபாட்டிற்கான மேள ஒலியும் மணி ஒலியும் எழவே, பேசமுடியாது எனப் புறப்பட்டு அம்மையின் திருக்கோயிலிலிருந்து படியிறங்கி இடபக்கமாகச் சென்றோம். அங்கு சென்றால் இறைவன் திருவருளை நினைத்து நினைத்து உருக வைத்தது. ஆம். திருக்கோயிலில் பன்னிரு சோதிலிங்கங் கள் அமைக்கப்பட்ட மண்டபம். நானும் அன்பர்களும் பெரிதும் நெகிழ்ந்தோம் அம்மன் ஆலயத்து ஒலியில்லையானால் அங் கிருந்தே புறப்பட்டு இருப்போம். ஆனால் இறறைவன் திருவருட் குறிப்பு என் பயணத்தை என் சந்நிதியிலேயே நிறைவு செய்யுங்கள் என்பது போல் அமைந்தது. இதனை சகோதரர் முத்துசாமி அவர்கள் நெகிழ்ச்சியுடன் பேசினார். நான் பயணத்தில் பங்கு கொண்டு ஒத்துழைத்த அனைவருக்கும் இறையருளுக்கும் வணக்கமும் நன்றியும் கூறி இராமநாதனை வழிபடும் நாள் குறித்து அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நாளில் அமிமாமல்லேசுரர் ஆலயத்தில் வழி பாடு செய்து புறப்பட்டு திருபப்பெருந்துறை, திரு உத்தர கோசமங்கை வழிபட்டு இராமேச்சுரம் சென்றடைந்தோம். இனி இராமேச்சுர வரலாற்றினை நினைவூட்டுவது என் கடமையாகும். இதோ அத்திருக்கோயில் வரலாறு:

இராவணனைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டு இராம பிரானால் எழுந்தருளிவித்துக் கட்டபெற்ற திருக்கோயில்

இராமேச்சுரம். இவ்வரலாற்றை 'தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன், பூவியலும் முடி பொன்றுவித்த பழிபோயற, ஏவியலும் சிலையண்ணல் செய்த இராமேச்சரம்' என்று ஞானசம்பந்தப் பெருமானும், கோடி மாதவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம், 'விடவே சக்கரத்தால் எறிந்து பின் அன்புகொண்டு, தேடி மால் செய்த கோயில்' என்று நாவரசரும், 'சேதுவின்கண் செங்கண்மால் பூசை செய்து சிவபெருமான் தனைப்பாடி' என்று சேக்கிழாரும் குறிப்பிட்டுள்ளனர்.

இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகங்கள் இரண்டும் திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றும் ஆக மூன்று பதிகங்கள் உள்ளன.

இத்தலத்தைப் பற்றி, ''மறவாள் இலங்கை பிற மகனை உதைத்த பழியால் மருண்டு, அரியன்று அறவான் நேமியளித்த வனை அருச்சித்து அகன்ற அணிநகர்'' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புரராணத்தில் அருச்சனைப் படலத்தில் குறிப்பிடுகின்றார். தாயுமானவப் பெருந்தகை அம்மையைப் பற்றி அற்புதமான பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ள இப்பகுதி மதுரையிலிருந்து சுமார் 110 கி.மீ. தொலைவில் உள்ளது. இராமேச்சுரம் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில் கோயில் அமைந்துள்ளது.

இறைவன் - இராமநாதன்
இறைவி - மலைவளர் காதலி

கோயில் அமைப்பு : இத்தலம், வங்காளக் குடாக்கடலில் உள்ள ஒரு தீவு. இத்தீவை இந்தியாவினின்றும் பிரிப்பது பாம்பன் கால்வாய் இக்கால்வாய்க்கு மின் ஆற்றலால் இயங்கக் கூடிய ஒரு பாலம் உள்ளது இதனிடையே கப்பல் போக வேண்டுமாயின், பாலத்தின் நடுப்பகுதியை மேலே தூக்கி விடுவார்; கப்பல் சென்ற பின் மீண்டும் இறக்கி விடுவர். அதில் புகைவண்டி செல்லும். இக்கோயில் மிகவும் எழிலானது. மேனாட்டவர்கள் தென்னிந்தியா,

வந்தால், இங்கு வராமலல் போவதில்லை வட இந்ததியர்கள் விரும்பி வருகின்றனர்.

ஆலயம் மிகப் பெரியது. நான்கு வாயில்களைக் கொண்டது. மிக நீண்ட பிரகாரங்களுக்குள்ளன. உலகிலேயே மிக நீண்ட பிராகாரம் இங்குதான் அக்காலப் பொறியியல் நுணுக்கத்தை மேல்நாட்டவரும் வியந்து பாராட்டுகின்றனர். வடக்குப் பிராகாரத்தில் ஒரு மண்டபம் உள்ளது. அதன் நீளம் 4000 அடி, அகலம் 21 அடி, உயரம் 30 அடி திருமாளப் பத்தி மேடை 5 அடி. அதன்மீது வரிசையாகத் தூண்கள் உள்ளன. தூண்களும் மிகப் பெரியன. தூண்களில் சுண்ணாம்பினால் சித்திர வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருந்ததாகத் தெரிகிறது. மண்டபத்தின் இருபுறங்களிலும் கதிரொளி உள்ளே வருவது காண்பார். கண்களை ஈர்க்கும் அரிய காட்சி.

கிழக்கு வாயில்புறம் இராமபிரானுடைய அவை உள்ளது. பல்வேறு சித்திரங்களும், சிற்பங்களும் காணபப்படுகின்றன. இராமபிரான் தன் தேவியுடன் இருந்து சிவபூஜை செய்யும் காட்சிகளும் உள்ளன.

**புராண வரலாறு**

தன் தேவி இலங்கையில் இராவணனுடைய காப்பில் உள்ளாள் என்பதறிந்த இராமன், நளன் என்னும் குரங்கு வீரன் துணையால் சேதுவில் பாலம் அமைத்து, இலங்கைக்கு குரங்குப் படையுடன் சென்று இராவணனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு, சோதிலிங்கம் அமைத்து வழிபட எண்ணினான். அனுமனைக் கயிலைக்கு அனுப்பி லிங்கம் கொண்ட வரப் பணித்தான். அனுமன் திரும்ப காலதாமதம் ஆனபடியால் சீதா பிராட்டி மணலில் செய்து அமைத்த சிவலிங்கத்தை நிறுவி சிவ பூசை செய்தான். இடையில் அனுமன் இராமன் ஆணைப்படி சிவலிங்கம் கொண்டு வந்தான். தான் கொண்டு வரும் முன்பே

சிவலிங்கம் நிறுவப்பட்டு பூசை நடந்ததைக் கண்ட அனுமன் பெரிதும் வருந்தினான். தான் அரிதில் முயன்று கொண்டு வந்தும் அது பயன்படாமல் போகிறது என்று எண்ணிச் சினமும் அடைந் தான். அவன் வருவதை அறிந்த இராமபிரான். மணல் லிங்கத்தை எடுத்துவிட்டு, அனுமன் கொண்டு வந்த லிங்கத்தை வைக்கம்படி கூறினார். உடனே மகிழ்ந்து தன்வாலினால், அம்மணல் லிங் கத்தை அகற்ற முயன்றார். அந்தோ அனுமன் வால் சடடென அறுந்தது; மயக்கமுற்று வீழ்ந்தான். லிங்கம் இம்மியும் நகர வில்லை. இராமநாதன் திருமேனியில் அதன் அடையாளமாக மூன்று ரேகைகள் உள்ளன.

பின்னர், இராமன் அனுமனுக்கு மூர்ச்சை தெளிவித்து அவன் கொண்டு வந்த லிங்கத்தையும அருகில் நிறுவி, தான் வழிபபட்ட இராமநாதனை வழிபடுவதற்கு முன், அனுமன் கொண்டு வந்த காசிசவிசுவநாதர் என்ற மூர்த்தியையும் வழிபடும் மரபினை உண்டாக்கினார். இப்போதும் இரண்டு சிவலிங்கங்களும் உள்ளன. அனுமன் சிறந்த சிவனடியார் என்பதும் ஈண்டு குறிப் பிடத்தக்கது.

மற்றொரு புராண வரலாறும் இங்கு பேசப்படுகிறத. தன் தேவியை மீட்க எண்ணி இராமன், குரங்குப்படையுடன் தென் கடல் எல்லையை அடைகிறான். இராவணனுடைய வல்லமை யைக் கேட்ட இராமன் மிகவும் கலங்குகின்றான். அருந்த நீர் கொண்டு வரும்படி ஆணையிட்டான். நீர் கொண்டு வரப்பட்டது. எனினும் தான் சிவபூஜை செய்யாமல் சிறிது நீரும் அருந்தவே இல்லை என்ற நியமம் நீரையே பெருமானுக்கு முழுக்காட்டினார். அவன் அன்புக்கு மகிழந்த பெருமான் இலங்கை சென்று வாகை சூட திருவருள் பாலித்தார் அந்த லிங்கமே இராமநாதன் (இராம மேசம்) எனப்படுகிறது.

வரலாற்று நிகழ்ச்சி மாறுபட்டாலும், இராமன் வழிபாடு செய்த மூர்த்தி, என்பதில் மாறுபாடில்லை என்பது நோக்கத் தக்கது.

இராமன், இலக்குமணன், சுக்ரீவன், அங்கதன், சாம்பவான், கந்தமாதனன், பாண்டவர் முதலியோர் பெயர்களால் தனித் தீர்த்தங்கள் உள்ளன. பொதுவாகக் கோடி தீர்த்தம், சிவதீர்த்தம், சர்வதீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் சிறப்பு.

**சிறப்பு**

காசிப் பயணம் மேற்கொள்பவர் பயணம் நிறைவுற்ற பின்னர், இராமேச்சுரப் பயணமும் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் காசிப் பயணத்தின் முழுப்பயனும் கிட்டும் என்பது நம்பிக்கை. எனவே காசிப்பயணத்தை முடித்து, காசி நீரைக் கொண்டு வந்து இராமநாதனை முழுக்காட்டுவர்.

தென்னிந்தியர் காசியைப் போற்றுவது போல வட இந்தியர் இத்தலத்தைப் போற்றித் திருப்பயணம் வருகின்றனர். மக்கட் பேறு இல்லாதவர். கடலில் மூழ்கி இராமநாதனைத் தரிசித்தால், மக்கட்பேறு கிட்டும்.

தேசிய ஒற்றுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வடக்கே கயிலையும் தென்கோடியில் இராமேச்சுரமும் அமைந்துள்ளன.

இத்திருக்கோயிலைப் பன்னெடுங்காலமாக சேதுபதி மன்னர் பரம்பரையில் வந்தவர்கள் பேணி வளர்த்தனர். இப்போது அறநிலையத் துறைப் பொறுப்பில் இருந்தாலும், மன்னர் பரம் பரையினரே அறங்காவலர் குழுத் தலைவராக இருந்து வரு கின்றனர். அவர்கள் இம்மூர்த்தியிடம் அளவிலாத ஈடுபாடு கொண்டவர்கள்.

இலங்கைக்குச் செல்ல இராமபிரான் அணைகட்டிய இடம் 'சேது' அங்கே இராமன் தன் வில்லின் முனையால் தோண்டிய

தீர்த்தம் 'தனுஷ்கோடி' இராமேச்சுரத்தில் இருந்து 20 கி.மு. தொலைவில் உள்ள இத்தலத்தில் நீராடிய பின்னரே இராமேச்சுரம் செல்லல் மரபு. நீடு தனுக்கோடியினை நினைத்தாலும், புகழ்ந் தாலும் நேர்கண்டாலும் வீடு பெறல் எளிதாகும் என்று சேது புராணத்தில் புகழப்பட்ட இத்தலம் 20 ஆண்டுகட்கு முன்னர் ஏற்பட்ட புயலால் முழுதும் சிதைந்தது. இப்போது அங்கு செல் வாரில்லை.

வழி : இத்திருக் கோயிலுக்குச் செல்ல திருச்சியிலிருந்தும் மதுரையிலிருந்தும் புகைவண்டி வசதியும் பேருந்து வசதியும் நிறைய உள்ளன.

நான் பலமுறை இராமேச்சுரம் சென்றாலும் நான் அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கியது இல்லை. அறையிலேயே குளித்து முடித்து விடுவேன். இம்முறை திரு ஆர்.எம்.இராமசாமி, திரு ஏ.ஏ.சுப்பிரமணிய முதலியார், திருஸ்பைடர் பழனிச்சாமி, திரு.சிதம்பரம் ஆகியோர் விரும்பிய வண்ணம் நானும் அன்பரும் கடல் நீராடி அனைத்துத் தீர்த்தங்களிலும் நீராடி முடித்தோம்.

ஆத்மார்த்த வழிபாடு முடித்து பாராயணத்தோடு ஆலயத்தை நோக்கி வழழிபடச் சென்றோம். அங்கு இராமநாதரர், அநு மலிங்கம், சோதிலலிங்கம் என மூனறு லிங்கங்கள் உண்டு. சோதிலிங்கத்தின் பின்புறம் தீப ஒளி காட்டினால் முன்புறம் சோதி தெரியும். அப்பெருமானுக்கும் திருமுழுக்கு வழிபாடு செய்து அனைவரும் போற்றித் திருத்தாண்டகம் கூறி வழிபட்டோம். இராமநாதருக்கும் கங்கைநிர் விட்டு வழிபட்டு மலைவளர் காதலி யாம் அன்னை பராசக்தியையும் வழிபட்டு குற்றாலம் சென்று குற்றால நாதரை வழிபட்டு 12 சோதிலிங்கத் திருப்பயணத்தை நிறைவு செய்தோம்.

இப்பன்னிரண்டு சோதிலிங்கங்களில் இராமேச்சுரம் தவிர ஏனைய பதினொன்றும் மலைமுகட்டிலேயே உள்ளது அதிசயமாக

உள்ளது. அடிமுடி தேடிய வரலாற்றை அடிப்படையாக்க் கொண்டு அமைந்துள்ளது. இராமேச்சுரம் நீங்கலாகப் பதினொரு இடங்களில் பெருமானை நாமே திருமேனி தீண்டித் திருமுழுக் காட்டி வழிபட்டு வர முடிந்தது. தமிழகத்தில் அந்த நிலையில்லை. பண்டைத் தமிழகத்தில் அவரவரே வழிபடும் முறை இருந்தது. அதனை நம் திருமுறைகளில் காணலாம். அப்பரடிகள், ''பூவொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்'' எனக் குறிப் பிட்டார். வட மாநிலங்களைப் போலவே தமிழகத்திலும் அன்பர் கள் பெருமான் திருமேனி தீண்டி திருமுழுக்காட்டி அர்ச்சித்து வழிபடும் முறை வரவேண்டும். அதற்குத் திருவருள் துணை புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து பன்னிரண்டு சோதிலிங்கங்களின் திருப்பயணத்தை நிறைவு செய்தோம்.

## நிறைவு

# 12 ஜோதிர்லிங்கத் திருப்பயணத்தில் பங்கு-கொண்ட அன்பர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.ஜி. ஆறுமுகம் | 65 | 90. சத்தி மெயின்ரோடு வீரப்பன் சத்திரம், ஈரோடு - 4. போன் 225235 |
| 2. | திமதி ஏ. மீனாட்சி | 52 | ,, ,, |
| 3. | திரு.கே. நாகராசன் | 50 | ,, ,, |
| 4. | திரு.ஏ. செல்வாம்பிகை | 35 | ,, ,, |
| 5. | திரு.எ.கோபாலன் | 69 | 5/3 ஏ.கே.எஸ்.சி.ஹைஸ்கூல் ரோடு, திருப்பீர் - 4. போன் : 426681 |
| 6. | திருமதிஎஸ்.தனபாக்கியம் | 52 | க/பெ. (லேட்) எஸ்.எஸ். சுப்பிரமணியம், 33, என்.ஜி.ஜி.ஒ. காலனி, முதல்வீதி ராஜாகவுண்டர் தோட்டம், ஈரோடு. போன் : 252662, 262662 |
| 7. | திருமதி. பி.லீலாவதி | 55 | க/பெ. (லேட்) பஞ்சாட்சாம் 349 பிரப்ரோடு ஈரோடு, போன். 259990 |
| 8. | திரு. ஏ.ராமகிருஷ்ணன் | 48 | 21, வாமலை விதி டெலிபோன் பவன் எதிரில் ஈரோடு - போன்251119 |
| 9. | திருகவி.வெ.பழனியப்பன் | 52 | நெ.1.வாடியார் தெரு, தேவகோட்டை - 630302 |
| 10. | திருமதி பழ. மெய்யம்மை | 49 | ,, ,, |
| 11. | திருமதி பாப்பாத்தி | 56 | க/பெ, ராமசாமி, 39/8 மடிகாரர் காலனி அண்ணா நகர், வெட்டுக் காட்டுவலசு, ஈரோடு |
| 12. | திரு ஆறுமுகம் | 68 | 47, அண்ணாவிதி, சூரம்பட்டி ஈரோடு - 638009 போன் : 270162 |

| | | | |
|---|---|---|---|
| 13. | திருமதிசியாமளாஆறுமுகம் | 58 | 47, அண்ணாவிதி, சூரம்பட்டி ஈரோடு - 638009 போன் : 270162 |
| 14. | திரு சி. சிவராமன் | 74 | நெ.1, குறுந்தொகை தெரு, செந்தமிழ் நகர், சிவகங்கை |
| 15. | திரு.கே.I. சம்பந்தம் | 61 | 9, பிருந்தாச்சாரி வீதி, ஈரோடு - 1 போன். 254110 |
| 16. | திருஈ.கே.பி.கௌரிசங்கர் | 31 | 158 பிருந்தாச்சாரி வீதி ஈரோடு - 1 போன் : 255524 |
| 17. | திரு.என்.பிரசன்னவெங்கடேஷ் | 26 | 230அக்ரஹாரவீதி, ஈரோடு - 1. 216905 |
| 18. | திரு. வஜ்ரவேல் | 62 | 14/30 வாசுகிவிதி, ஈரோடு - 2 |
| 19. | திருமதி சாவித்திரி | 56 | ,, ,, |
| 20. | திருமதிபொன்மனிதேவி | 62 | ஆசிரியை நடுப்பாளையம் சித்தோடு |
| 21. | பரமசிவம் | 32 | மனோகர் டிராவல்ஸ், 1433 ஸ்வஸ்திக் காம்ப்ளக்ஸ் ஈரோடு |
| 22. | திரு.தங்கவிஸ்வநாதன்அய்யா | 62 | 60 கண்ணகி விரி ஈரோடு |
| 23. | திருமதி வி. மல்லிகா | 54 | ,, ,, |
| 24. | திருமதி வி. பன்மொழி | 30 | தலைமை ஆசிரியர் தொ.பெ.இ.சிவம் தேவக்கேட்டை சேலம் |
| 25. | திருமதி வசந்தா | 50 | ,, ,, |
| 26. | திருமதி திலகவதி | 50 | ,, ,, |
| 27. | திருமதி அமிர்தம் | 50 | நடராஜா டிரான்ஸ் பேட் |
| 28. | திருமதிடி.ஜெயலட்சுமி | 58 | ,, ,, |
| 29. | திருமதிஎம்.கண்ணம்மாள் | 55 | ,, ,, |
| 30. | திருமதி சாமியாத்தான் | 50 | ,, ,, |
| 31. | திரு. ஷண்முகம் ராஜு | 45 | மலேசியா |
| 32. | திருமதிகிருஷ்ணவேணி சண்முகம் | 39 | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 33. | திருமதிலோகநாயகிராஜு 40 | மலேசியா | | |
| 34. | திரு. ராமகோதலிங்கம் | 71 | ,, | |
| 35. | திருமதிலெட்சுமிராமநாமி | 51 | ,, | |
| 36. | செல்வி ஈ.சரஸ்வதி | 41 | ,, | |
| 37. | மேடம். நேசமணி அம்பலலவாணர் | | | |
| 38. | திருமதி. அனுராத அம்பலவாணர் | 55 | ,, | |
| 39. | திரு. கிருஷ்ணபிள்ளை சுப்பிரமணியம் | 60 | ,, | |
| 40. | திரு.சிங்காரம்சீனிவாசன் | 79 | ,, | |
| 41. | திருமதி ஆர்.எம்.தெய்வ | 68 | ,, | |
| 42. | திருமதி. இந்திராணி டி.எல்.பாவாபியா | 53 | ,, | |
| 43. | திரு. சோமசாய்ஹான் ராமன் | 53 | ,, | |
| 44. | திருமதி.செல்லஅமிர்தம் | 63 | ,, | |
| 45. | கே.சிவகாமி | 60 | ,, | |
| 46. | மேடம் மாரிமுத்து சுந்தரேசன் | 59 | ,, | |
| 47. | திருமதி அன்னம்மா முனுசாமி | 47 | ,, | |
| 48. | திருமதி கல்யாணி மேடம் | 58 | 84 ராயபுரம் மெயின்ரோடு | திலபூர் |
| 49. | திருவிஸ்வநாதன் | 64 | ,, | ,, |
| 50. | திரு சுபத்திரா தேவி | 54 | ,, | ,, |
| 51. | திரு V.N. திருநாவுக்கரசு | 56 | 67 4வது அகில் மேடு 6வது | ஈரோடு |
| 52. | திருA.குருசாமி | 58 | 13 திருவள்ளுவர் வீதி சூம்பட்டி | ஈரோடு |
| 53. | திருமதி G. கௌசல்யா | 50 | ,, | ,, |

| | | | |
|---|---|---|---|
| 54. | திரு P.முருகேசன் | 53 | 3NGGO காலனி 8வது வீதி ஈரோடு |
| 55. | திருமதி M.கல்யாணி | 48 | ,, ,, |
| 56. | திரு K.M.முருகேசன் | 64 | 10 வாசுகி விதி கோட்டை ஈரோடு |
| 57. | திருமதி M. சுப்புலட்சுமி | 58 | ,, ,, |
| 58 | திரு K.நாச்சிமுத்து | 66 | 251 தாய்நகர் வீரப்பன்பாளையம் ஈரோடு |
| 58. | திருமதி N. சுசீலா | 61 | ,, ,, |
| 60. | ராமசாமி | 62 | குகன்குடில் 90/161A திரு.விகநகர் New Teachers Colony Erode |
| 61. | திருமதி வசந்தா.M | 62 | 40, பெருமாள் கோவில் வீதி ஈரோடு |
| 62. | EK பாலுசாமி | 54 | சதன் 48 4வது தெரு ஈரோடு |
| 63. | T.P.ரத்தினம் | 58 | தில்பூர் |
| 64. | P.ராமாயம்மாள் | 69 | 56 பெரியார்நகர் ஈரோடு-1 |
| 65. | S. மாசிலாமணி | 47 | 10 கிருஷ்ண வீதி வீரப்பணி சத்திரம் ஈரோடு |
| 66. | V. ஜெகதாம்பாள் | 51 | 281, ஜான்ஸி நகர் சத்தகம் ஈரோடு |
| 67. | குமாரசாமி | 71 | 40 மாசிலாமணி 10 கிருஷ்ணவிதி ஈரோடு |
| 68. | அண்ணாமலை | 60 | ,, ,, |
| 69. | மரகதம் | 63 | C/o48 தெரு வீதி ஈரோடு - 1 |
| 70. | கலியபெருமாள் | | மலேசியா |
| 71. | மாரியாயி | | மலேசியா |
| 72. | ரோஜா | | மலேசியா |